

குருசடிப் பங்கின் வரலாறு
P. லீனஸ் ராஜ்

# குருசடிப் பங்கின் வரலாறு

P. லீனஸ் ராஜ்

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | **குருசடிப் பங்கின் வரலாறு**<br>P. லீனஸ் ராஜ் |
| முதல் பதிப்பு | : | 2021 டிசம்பர் |
| படிகள் | : | 1000 |
| வகை | : | வரலாறு |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| அச்சிட்டோர் | : | நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>67/1, கோர்ட் ரோடு, நாகர்கோவில்.<br>போன் : (04652) 233853, 402373 |
| பக்கங்கள் | : | xxvi + 236 |
| விலை | : | ₹. 300/- |
| கிடைக்குமிடம் | : | 1) P. லீனஸ் ராஜ்<br>வழக்கறிஞர்,<br>165A2, ராஜ் பவன்,<br>குருசடி, நாகர்கோவில் - 629004,<br>கன்னியாகுமரி மாவட்டம்.<br>Cell No. : 94435 08585<br><br>2) நாஞ்சில் புக் ஸ்டால்<br>67/1, கோர்ட் ரோடு, நாகர்கோவில்.<br>போன் : (04652) 233853, 402373 |



திருமதி **கொ. மனோன்மணி நாடாச்சி**
என்ற **றோணிக்கம்**
W/o. F. ஸ்டான்லி முடுதோம்



திரு. **S. பன்னீர் செல்வம்**
S/o. F. ஸ்டான்லி முடுதோம்

*குருசடிப் பங்கு பற்றிய பல தகவல்களை எனக்குச்*
*சொல்லித்தந்து இந்நூல் உருவாக வித்திட்ட*
*என் பாட்டி இறைவனடிச் சேர்ந்த*
**திருமதி கொ. மனோன்மணி நாடாச்சி என்ற றோணிக்கத்திற்கும்**

*என் தந்தை இறைவனடிச் சேர்ந்த*
**திரு. S. பன்னீர் செல்வத்திற்கும்**
*இந்நூலை காணிக்கையாக்குகிறேன்.*

# DIOCESE OF KOTTAR

**Most. Rev. Nazarene Soosai** Th.D., D.D.
*Bishop of Kottar*

Bishop's House, P.B. No.:17,
Asaripallam Road, Nagercoil - 629 001.
Kanniyakumari District,
Tamil Nadu, India.
Off : +91 - 4652-278343,
279152, 279933
Per : + 91 - 4652-278868
E-mail : nazarene13@gmail.com




## வாழ்த்துரை

வரலாறு என்பது காலத்தின் கண்ணாடி. நடந்தவைகளைக் காலம் கடந்த பின்னும் தலைமுறைகள் கடந்தும் கடத்துகின்ற ஊடகம். எழுதப்படாத வரலாறு மறக்கப்பட்டது மட்டுமல்ல; மரணித்து விட்டதாகவே கருத வேண்டும். எனவே தான் வரலாறு எழுதப்படுவதன் தேவை மானுடத்திற்கு மிகவும் முக்கியமாகிறது. இந்தியாவின் மிகச் சிறந்த வரலாற்றியலாராக கருதப்படும் ரொமிலா தாப்பர் கூறுவது போல, "நிகழ்காலத்தை அறிந்து வருங்காலம் நோக்கி நகர விரும்பும் எச்சமூகமும் கடந்த காலத்தைக் கண்டிப்பாகத் தெரிந்திருக்க வேண்டும்." திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் கர்தினால்களோடு சிஸ்டைன் சிற்றாலயத்தில் முதல் திருப்பலியை நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் தன் மறையுரையில் "திரு அவைத் தன் வேர்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டியது இக்காலத்தின் அவசரத் தேவை" என அழைப்பு விடுத்தார். எனவே, வரலாறு இனவரைவியலை, வாழ்வியலை, இயங்கியலைப் பதிவு செய்திருப்பதால், அதனை அறிந்து கொள்வதன் வழியாக நாம் கடந்த காலத்தில் வேரூன்றி நிகழ்காலத்தில் தடம் பதித்து வரும்காலத்தில் இனிதே பயணிக்க முடியும்.

ஆண்டவர் இயேசுவும் தன் போதனைகளில் பலமுறை இஸ்ரயேல் வரலாற்றில் வாழ்ந்தவர்களையும் வரலாற்று நிகழ்வுகளையும் குறிப்பிட தவறவில்லை. தன் நிகழ்காலத்து மக்களுக்குக் கடந்த காலத்தைய யோனாவையும் சாலமோனையும் குறிப்பிட்டு மனம் திரும்ப அழைப்பு விடுப்பது (லூக் 11:29-32) வரலாற்றை அறிவதன் முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது. அவ்வாறே வரலாற்றில் வாழ்ந்த ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, லோத்தின் மனைவி, மோசே, தாவீது, எலியா, எலிசா எனப் பலரைப் பற்றியும் இயேசு குறிப்பிடுகின்றார். இவ்வாறு வரலாற்றைப் பதிவு செய்வதும் உரையாடுவதும் நினைவுறுத்துவதும் எக்காலமும் எப்போதும் தேவையான ஒன்றாகிறது.

மேற்கூறியதன் பின்புலத்தில் வழக்குரைஞர் லீனஸ் ராஜ் அவர்களின் 'குருசடி பங்கின் வரலாறு' எனத் தலைப்பிடப்பட்ட இப்புத்தகம் தனிச்சிறப்பு பெறுகிறது. நம் கோட்டாறு மறைமாவட்டத்தில் மிகப் பழமையானப் பங்குகளாக கருதப்படும் பல பங்குகள் தங்கள் பங்கின் வரலாற்றைப் பதிவிட தவறிய சூழலில், பழமையான பங்குகளின் ஒன்றான குருசடி பங்குப் பற்றிய இவ்வரலாற்று ஆவணம் அத்தகைய பல பங்குகளுக்கு முன்னோடியாகவும், அதே வேளையில் தங்கள் பங்கின் வரலாற்றைப் பதிவிடவும் அறிந்திடவும் தூண்டுவதாகவும் அமையும் என நம்புகின்றேன். பிற பங்குகள் பலவற்றுக்கு இல்லாத பல தனிச்சிறப்புகள் குருசடி ஆலயத்திற்கும் பங்கிற்கும் உண்டு

என்பதனைத் தற்போதைய தலைமுறையினருக்குத் தெரியாது என்பதைக் காரணமாகக் கொண்டு இந்நூல் பயணிக்கிறது. அவ்வாறு பஞ்சவங்காடு என முந்தைய காலத்தில் அழைக்கப்பட்ட குருசடி பங்கின் வரலாற்றுத் தடங்களை ஓலைக்கூரை வேய்ந்த சிற்றாலயம் இம்மண்ணில் கட்டப்பட்ட 1790 ஆண்டு முதல் சூலை 15, 2021 வரை மிகத் துல்லியமாகப் பதிவிட்டிருப்பதால் இப்புத்தகம் வெற்றி பெறுகிறது.

இப்புத்தகத்தில் நிரம்பி வழியும் வரலாற்றுக் குறிப்புகளும் தரவுகளும் வாசிக்கும் நமக்கு ஒருபுறம் வியப்பை ஏற்படுத்த, மற்றொருபுறம் ஆசிரியரின் கடின உழைப்பு மலைப்பை ஏற்படுத்துகிறது. பல நுண்ணிய தரவுகளையும் தேவைப்படும் இடங்களில் நுணுக்கமாகக் கையாண்டு. அவற்றுக்கான விபரங்களை அடிக்குறிப்புகளில் ஆசிரியர் தந்திருப்பது தனிச்சிறப்பு. எளிய தமிழில் கற்பனைக் கலவாமல் வரலாற்று நிகழ்வுகளையும் மாந்தர்களையும் சுவைபட எடுத்துக் கூறுவதால் இப்புத்தகத்தை ஆர்வத்தோடு எவரும் வாசித்திட முடிகிறது. வழக்குரைஞர் லீனஸ் ராஜ் அவர்களின் பெருமுயற்சியாலும் கடின உழைப்பாலும் உருவாகியுள்ள இவ்வரலாற்றுப் புத்தகம் குருசடி பங்கிற்கு அவர் வழங்குகின்ற அரிய கொடை அல்லது செல்வம் என்றே சொல்வேன். காலத்தையும் கடந்து உரக்கப் பேசும் உயரிய ஆவணமாக இனி இது திகழும். தன் பளுவான பணிகளின் நடுவிலும் தான் பிறந்து வளர்ந்த மண்ணின் மகத்தான வரலாற்றுப் பெருமையைக் கல்லில் வடித்த கவினுறுச் சிற்பம்போல் பலர் அறிய படைத்தளித்திருப்பதை நாம் எவ்வளவு பாராட்டினாலும் தகும். இன்னும் அவரது அயரா உழைப்பினால் திருஅவையும் தமிழ்ச் சமுதாயமும் பயனுறட்டும் எனவும் எழுத்துப் பணியினால் தமிழ்க்கூறும் நல்லுலகுப் பயன்பெறட்டும் என அன்போடு ஆசிக்கின்றேன்; உளமார வாழ்த்துகின்றேன்.

கிறிஸ்துவின் மனநிலையில்

**† ஆயர் நசரேன் சூசை**
கோட்டாறு மறைமாவட்டம்

CHURCH OF ST. JUDE

**Fr. L. THARSIUS RAJ,** M.A., B.Ed., B.L.
*Parish Priest*
Cell : **94435 79538**

ERACHAKULAM
Pin : 629 902,
Tamil Nadu,
S.India.

# வாழ்த்துரை



**மிகவும் அன்பு மிக்கவர்களே,**

*அன்பான வணக்கமும் வாழ்த்துக்களும்!*

கோட்டாறு மறைமாவட்டத்தில் மூத்த இறைமக்கள் பலரும் குருசடிப் பங்கு 'பஞ்சவங்காடு' என்று அழைக்கப்பட்டதை நன்கு அறிந்திருக்கிறார்கள். பஞ்சவங்காட்டில் பிறந்து, வளர்ந்து, மறைமாவட்டத்தின் சட்ட ஆலோசகராகவும், கன்னியாகுமரி மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞராகவும் பணியாற்றும் திரு. P. லீனஸ் ராஜ் தனது பிறந்த மண்ணுக்குப் புகழ் சேர்க்கின்ற விதமாக 'குருசடிப் பங்கின் வரலாறு' என்ற அருமையான நூலொன்றை நமக்குத் தந்திருக்கிறார். பல ஆண்டுகள் கடினமாக உழைத்ததின் பலனே இந்த நூல் என்றால் அது மிகையாகாது. இந்த நூலைப் படிப்போர் அனைவரும் இதன் ஆசிரியரை வெகுவாக பாராட்டுவார்கள் என்பது எனது நம்பிக்கை.

இந்த நூலின் ஆசிரியர் குருசடிப் பங்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக கடந்து வந்த பாதையை நமக்குத் திரையிட்டுக் காட்டுகிறார். பஞ்சவங்காட்டில் கிறிஸ்தவம் யாரால் தோன்றியதை அவர் சுட்டிக்காட்டுகிறார். இப்பகுதியில் முடுதோம்களும் சபையாரும் ஆற்றியப் பணி அளப்பரியது என்பதை இந்நூலை படிக்கும் அனைவரும் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள். பங்குப் பேரவைக் காலத்தில் பங்குத்தந்தையர்களும் இறைமக்களும் எவ்வாறு இணைந்து பணியாற்றினார்கள் என்பதைத் திறம்பட பட்டியலிடுகிறார். பங்கில் பணியாற்றும் திருத்தூதுக் கழகங்கள், பக்தசபைகள், இயக்கங்கள் பங்கிற்கு எவ்வாறு உறுதுணையாக இருந்தது என்பதை ஆசிரியர் விளக்குகின்றார். இறுதியில் நூற்றாண்டின் போது ஆலயத்தைப் புதிப்பிப்பதற்கு மக்கள் செய்த தியாகத்தை அழகுற எடுத்துரைக்கிறார்.

முட்டத்தின் முதல் குரு அருள்பணி ரபேல் இயேசுதாசன் எனது தாத்தா (தந்தையின் தாய் மாமன்) குருசடிப் பங்கில் உதவிப் பங்குத்தந்தையாக பணியாற்றியிருக்கிறார் என்பதை அறிந்து மகிழ்கிறேன். பள்ளிக்கூடம் தோன்றுவதற்கு அவர் ஆற்றியப் பணியை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். நானும் மூன்று ஆண்டுகள் இந்தப் பங்கில் திறம்பட பணியாற்றியிருக்கிறேன் என்பது எனக்கு நிறைவைத்தருகிறது. இறைப்பாதம் சென்ற எனது அண்ணனும் தான் வழங்கிய நேரடிப் போட்டியால் இந்த வரலாற்று நூலில் இடம் பெற்றிருக்கிறார். இதற்கு அடிப்படை காரணமாக இருந்த ஆசிரியருக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குருசடிப் பங்கின் வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்கு இந்த நூல் ஒரு களஞ்சியம். எனக்குத் தெரிந்த அளவு குருசடிப் பங்கிற்கு அனைத்து வரலாற்றுக் குறிப்புக்களையும் தாங்கிவரும் ஒரே நூல் இதுதான். நூற்றாண்டுகளுக்கு முன்புள்ள தரவுகளையும், ஆவணங்களையும், நீதிமன்ற தீர்ப்புக்களையும் தேடிக்கண்டுப்பிடித்து நமது பார்வைக்கு முன் வைக்கிறார். இந்த நூலை எழுதுவதற்குத் துணை நின்ற ஏடுகளைப் பார்க்கின்றபோது இதன் ஆசிரியர் நூறு சதவீதம் அக்கறை எடுத்து இந்த நூலை நிறைவுச் செய்திருக்கிறார். குருசடிப் பங்கின் வரலாற்றைப் பொறுத்தளவில் தினை அளவு அல்ல, பனை அளவுக்கு மேலாக நன்மை செய்திருக்கிறார். ஆசிரியர் நம்மையெல்லாம் மேலோக்கிப் பார்க்கச் செய்கிறார். இவர் பணியை நிறைவாகப் பாராட்டுகிறேன். இன்னும் இது போன்று நிறைய நூற்களை எழுத வேண்டுமென அவரை வாழ்த்துகிறேன். இந்நூலை அனைவரும் வாங்கி படித்துப் பயன்பெற அன்புடன் வேண்டுகிறேன். 'ஒரு நல்ல நூல் ஆயிரம் நண்பர்களுக்குச் சமம்' என்பதை மறந்து விடாதீர்கள்.

இவண்

**அருள்பணி. முனைவர். லி. தார்சியுஸ் ராஜ்**

**Fr. PERPETUAL**
Parish Priest



**St. Antony of Padua**
Kurusady,
Nagercoil,
Kanyakumari District
Tamil Nadu, INDIA. Pin.: 629 004
Cell : 9677720856
E-mail : perp@rediffmail.com

*Date : 18-11-2021*

# வாழ்த்துரை



திருவாளர் P. லீனஸ் ராஜ், அரசு குற்றவியல் வழக்கறிஞர், கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் குருசடி பங்கு மகன் "குருசடி பங்கின் வரலாறு" என்ற நூல் எழுதியுள்ளது மிகுந்த மகிழ்ச்சி. கடந்த 230 ஆண்டுகளாக குருசடி ஊரில் தோற்றம், வளர்ச்சி மற்றும் பங்கின் முன்னேற்றத்தை மிக ஆழமாக ஆவணங்கள், தரவுகள், வாய்மொழிச் செய்திகள், பாரம்பரியக் கதைகள், நாட்குறிப்புகள், நிலகையேடுகள், நீதிமன்ற வழக்குகள், ஆண்டு மலர்கள், வரலாற்றுக் கட்டுரைகள், அறிக்கைகள் அனைத்தையும் ஆதாரமாக்கி நயம்பட எழுதியுள்ளார்கள். நூலை வாசிக்கும் போது இப்பங்கின் பரிணாம வளர்ச்சி மற்றும் பல பரிமானங்கள் தெளிவாகின்றன. நமது மூதாதையர்களின் ஈகைகள், தியாகங்கள், புனித அந்தோனியார் மீது பக்தர்களுக்கு இருந்த அதீத பற்று புலனாகின்றன. இப்போது நமது கையில் நமது ஊரின், பங்கின் வளர்ச்சி உள்ளது என்பது இந்த நூல் நமக்கு தரும் சவால், பங்கு மக்கள் அனைவரும் வாசிக்க வேண்டிய பயனுள்ள புத்தகம், ஆசிரியரின் இந்த அரிய உழைப்பு பாராட்டப்பட வேண்டியது.

இறையாசீரோடு.

அருட்பணி. பேர்பெச்சுவல்




தேதி : 11-11-2021

# வாழ்த்துரை

**அன்புடையீர் வணக்கம்!**



கோட்டாறு மறைமாவட்டத்திலுள்ள பழம்பெரும் ஆலயங்களில் குருசடிப் புனித அந்தோனியார் ஆலயமும் ஒன்று. நான் தமிழ்நாடு அரசின் அமைச்சர் மற்றும் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது அப்பகுதி மக்களின் குறைகளை கேட்பதற்காகவும், அரசின் நலத்திட்டங்களை தொடங்கி வைப்பதற்காகவும் குருசடி ஆலய வளாகத்திற்கு பலமுறை வந்துள்ளேன். கலைநயமிக்க இந்த ஆலயத்தைப் பார்த்து நான் பெருமைப்பட்டுள்ளேன்.

சுமார் 250 ஆண்டுகளுக்கு மேலான தொன்மை வாய்ந்த இவ்வாலயத்தின் வரலாற்றைத் தொகுத்து “குருசடிப் பங்கின் வரலாறு” என்ற தலைப்பில் நூலை எழுதி அரசு வழக்கறிஞர் திரு. P. லீனஸ் ராஜ் அவர்கள் வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். சுமார் 10 ஆண்டுகள் மிகவும் சிரமப்பட்டு பல இடங்களுக்கு சென்று ஆவணங்களைத் திரட்டி இந்நூலை எழுதியுள்ளார். அவருடைய விடாமுயற்சியை பெரிதும் பாராட்டுகிறேன். மேலும் குருசடிப் பங்கு மற்றும் அதன் முன்னாள் கிளைப்பங்குகளின் வரலாற்றையும் இந்நூலில் ஆசிரியர் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார். இவர் மேலும் பல நூல்களை எழுத வேண்டும் என்று என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!.

அன்புடன்,

[signature]

**என். சுரேஷ்ராஜன்**

**ம. அற்புதமேரி**
W/o. (late) S. பன்னீர் செல்வம்
165A/0, மனோன்மணி பவனம்,
குருசடி, நாகர்கோவில் - 629004.

# வாழ்த்துரை



**அன்புடையீர்,**

எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது அருமை மகன் P. லீனஸ் ராஜ் நாங்கள் நேசிக்கும் எங்கள் பங்கு கடந்து வந்த பாதையை அனைவருக்கும் தெளிவுப்படுத்த ‘குருசடிப் பங்கின் வரலாறு’ என்ற நூலை வெளியிடுவது கண்டு பெருமையடைகிறேன். இந்த நூல் வெளிவருவதற்கு எங்களுக்கு அருள் கூர்ந்த எல்லா வல்லவரான இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். இந்நூலைப் படிப்போர் அனைவரும் எனது மகனைப் பாராட்டும் போது எனக்குத் திருவள்ளுவரின் ஒரு குறள் நினைவுக்கு வருகிறது.

**ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக் கேட்டத் தாய்** *(குறள் 69)*

உண்மைதான். எனது மகன் நூல் வெளியிட்ட அரியச்செயலால் நான் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன். இது எனக்குக் கிடைத்த மாபெரும் பேறாக கருதுகிறேன். எனது மகனை மனதார பாராட்டுகிறேன். மேலும் பல நல்ல சாதனைகளைப் படைக்க பெரிதும் விரும்பி வாழ்த்துகிறேன். எனது மகனின் சேவை தொடரட்டும். இவ்வாறு எனது மகன் அவனது தாத்தா F. ஸ்டான்லி முடுதோமின் பண்புகளையும் திறமைகளையும் பெற்றிருக்கிறார் என்பதை தெளிவுபட நிருபித்திருக்கிறார். இது குறித்து எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

எனது கணவரின் தந்தை திரு. F. ஸ்டான்லி குருசடிப் பங்கில் முடுதமாக பணியாற்றியிருக்கிறார். எனது மகன் P. லீனஸ் ராஜ் சிறுவனாக இருக்கும் போது அவனது தாத்தாவை முடுதமாகப் பார்த்திருக்கிறான். அவருடைய தந்தையும் என் கணவரின் தாத்தாவும் ஆகிய திரு. D. பிரான்சிஸ் முடுதமாக பணியாற்றியபோது தனது நாட்குறிப்பேட்டில் பல குறிப்புக்களை எழுதி வைத்திருந்தார். எனது மகன் அதையெல்லாம் ஆர்வமாக எடுத்துப் படிப்பான். ‘விளையும் பயிர் முளையிலே தெரியும்’ என்றாற்போன்று எனது மகன் எதிர்காலத்தில் சாதனைகளைப் படைப்பான் என்ற கனவு எனக்கும் எனது கணவர் திரு. S. பன்னீர் செல்வத்திற்கும் இருந்தது. அது இன்று நிறைவேறியது கண்டு மிகவும் மகிழ்கின்றேன். பேருவகை கொள்கிறேன்.

இந்த நூலைப் படிப்போர் அனைவரும் குருசடிப் பங்கின் வரலாற்றை நன்கு அறிந்துக் கொள்வார்கள். நமது பங்கு என்ற உணர்வுடன் அனைவரும் இந்த நூலை வாங்கிப் படிக்குமாறு மிகவும் அன்புடன் வேண்டுகிறேன்.

இவண்
அன்புடன்
**ம. அற்புதமேரி**
*(ஓய்வு பெற்ற ஆசிரியை)*

# அறிமுகவுரை



கோட்டாறு மறைமாவட்டத்தில் உள்ள குருசடி எனும் ஊர் உயர்தரமான ஒரு கத்தோலிக்கப் பங்கு ஆகும். அதன் மையமாகத் திகழ்வது சீர்மிகு இரு கோபுரங்களுடன் உயர்ந்தோங்கி நிற்கும் புனித அந்தோனியார் கோயில். அதன் உள் நுழைந்ததும் பார்வையை ஈர்ப்பது பக்தியைத் தூண்டும் பாங்கான திருவுருவங்களுடன் வனப்புற வடிவமைக்கப்பட்டுள்ள எழில்மிகுத் திருப்பீடப் பகுதி. இப்போது உள்ள கோயில் கட்டி முடிக்கப்பட்டு 110 ஆண்டுகளே ஆகின்றது என்றாலும் இங்கு கிறித்தவத்தினுடைய தொடக்கம் இருநூற்றி ஐம்பது ஆண்டு காலத்திற்கு முன்னையத் தொன்மை வாய்ந்தது.

சுற்றிலும் உள்ள ஊர்களிலிருந்த நாடார்கள் மீனவப் பெண்கள் இங்கு நட்டுவைத்திருந்த சிலுவையை வணங்க வந்து, காலப்போக்கில் இங்குக் குடியிருந்ததால் இங்கு வளர்ந்தது கிறித்தவம். இன்றுவரை அது சாதி ஒற்றுமை நிலவும் தளமாகவே திகழ்கிறது. முதலில் இங்கு வாழ்ந்த இந்து சகோதரர்கள் இனாமாகவும் விலைக்கும் தந்த பல ஏக்கர் நிலங்களைக் கொண்டுள்ள இப்பங்கு பல்சமய நல்லிணக்கத் திற்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இதை மையமாகக் கொண்டு வளர்ந்த 26 கிறிஸ்தவ ஊர்கள் இன்று 17 தனிப்பங்குகளாகித் தளைத்தோங்குகின்றன. அதிலும் தான் தனிப் பங்கு ஆவதற்கு முன்பே சிலத் தனிப் பங்குகளுக்குத் தாயாகிவிட்ட தனிச் சிறப்பும் இப்பங்கிற்கு உண்டு. அத்தகைய தன் முன்னாள் கிளைப்பங்குகளுக்குத் தன் பெயரில் இருந்தச் சொத்துக்களிலிருந்துத் தாராளமாகத் தந்த பெருமையும் இதற்கு உண்டு.

கோபுரக் கோயில் கட்டுவது, கொடிமரம் நாட்டுவது, குருசடி அமைப்பது, ஆடம்பர விழாக்கள் கொண்டாடுவது, பக்திப் பரவசங்கள் நிகழ்த்துவது எனும் மரபுப் பாணிச் சமயச் செயல்பாடுகளுடன் இங்குள்ள கிறித்தவ சமூகம் நின்றுவிடவில்லை. மாறாக, ஒரு காலத்தில் ஏழு கல்விக்கூடங்களைக்கொண்ட கல்விக்கோட்டமாகத் திகழ்ந்த இது இன்றும் ஒரு மகளிர் கல்லூரி, மேல்நிலைப் பள்ளி என்பவற்றின் தாயகமாக விளங்குகிறது. மேலும், ஆதரவற்ற சிறார் காப்பகம், பல்வேறு அன்பிரக்கப் பணிகள் என்பவற்றின் மையமாகவும் இது திகழ்கிறது. இத்தனை சிறப்புகள் இருப்பினும் இப்பங்கின் தனிப்பெருமையாக நான் கருதுவது இதன் பல வளர்ச்சித் திட்டங்களை முன்னின்று செயல்படுத்தியவர்கள் அன்றைய முடுதோம்களும் இன்றைய பொதுநிலைத் தலைவர்களும் என்பதே. இதுவே இப்பங்கும் ஏனைய எல்லாப் பங்குகளும் இனிவரும் காலங்களிலும் தடம்பதிக்க வேண்டிய முன்னேற்றப் பாதை ஆகும்.

இவ்வாறு ஏனைய பங்குகளுக்கும் பாதை காட்டக்கூடிய முற்போக்கான குருசடி பங்கின் வரலாற்றை இந்நூலின் வடிவில் நமக்கு வரைந்தளித்துள்ளவர் திரு. P. லீனஸ் ராஜ். அவர் குருசடிப் பங்கின் மண்ணின் மைந்தரும் அதன் முன்னாள் முடுதோம் திரு. D. பிரான்சிஸின் கொள்ளுப் பேரனும் ஆவார். குமரி மாவட்ட முன்னணி வழக்குரைஞராகிய இவர் அண்மையில் குமரி மாவட்ட அரசு குற்றவியல் வழக்குரைஞராகப் பொறுப்பேற்றுள்ளார். இவர் படைத்தளிப்பது செவிவழிச் செய்திகளும் கற்பனையும் கலந்த புராணம் அல்ல. மாறாக, இது ஆவணங்களின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்ட தரவுகளைத் தொகுத்தளிக்கும் வரலாற்றுக் கருவூலம். இந்த ஆவணங்களைத் தேடிக் கண்டுபிடிக்க இவர் செய்துள்ள பயணங்கள் பல, முயற்சிகள் பெரியன, எதிர்கொண்ட சிக்கல்கள் கடினமானவை, வெற்றிகள் போற்றுதற்கு உரியவை. இவரது இந்த அரியப் படைப்பிற்காக இவரை நான் உளமாரப் பாராட்டுகிறேன். இதற்காகக் குருசடி மக்கள் இவருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளனர்.

ஏனையப் பங்குகளிலும் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் நம் முன்னோர்களின் முயற்சிகளே நம் முகவரிகள். அவர்கள் பதித்துச் சென்ற தடங்களே நாம் முன்னேறிச் செல்ல நமக்குப் பாதை காட்டுபவை. ஆம், கடந்தகால நினைவுகள் இன்றி எதிர்காலக் கனவுகள் இல்லை. நேற்றைய வரலாற்றை மறந்து விட்டவர்கள் நாளைய வாழ்வை இழந்து விட்டவர்களே. சாதனைகள் பல படைத்துள்ள குருசடி மக்களுக்கு என் வாழ்த்துக்கள். அவற்றைச் சரித்திரமாகப் பதிவுசெய்துள்ள இந்நூலாசிரியர் P. லீனஸ் ராஜிக்கு மீண்டும் என் பாராட்டுக்கள்.

**அருள்பணி. முனைவர். தே. அல்போன்சு**

# என்னுரை

கோட்டாறு மறைமாவட்டத்திலுள்ள பழம்பெரும் ஆலயங்களில் ஒன்று நமது குருசடிப் புனித அந்தோனியார் ஆலயம். எனினும் மற்றப் பழைமையான ஆலயங்களுக்கு இல்லாத பல தனிச் சிறப்புகள் நமது ஆலயத்திற்கு உள்ளன. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று நமது ஆலயத்தின் கிளைப் பங்குகள் தோவாளை, அகஸ்தீஸ்வரம் மற்றும் இரணியல் ஆகிய மூன்று தாலுகாக்களில் பரவியிருந்தது ஆகும். மற்றொன்று நமது ஆலயத்தின் பெயரில் சுமார் 58 ஏக்கர் நிலங்கள் இருந்துள்ளன. இவற்றில் பெரும்பாலான சொத்துக்கள் நமது பாதுகாவலர் மீதுள்ள நம்பிக்கையில் பலரால் தானமாகக் கொடுக்கப்பட்டவை. கோட்டாறு மற்றும் குழித்துறை மறைமாவட்டங்களைச் சார்ந்த வேறு எந்தப் பங்குக்கும் இந்த அளவு சொத்துக்கள் கிடையாது. நமது ஆலயத்திற்குச் சொந்தமானதாக இருந்த பல சொத்துக்களில் தற்போது அரசு அலுவலகங்களும், அரசுக் குடியிருப்புகளும், கல்வி நிலையங்களும் மற்றும் அருள்சகோதரிகள் இல்லங்களும் உள்ளன. நமது ஆலயத்தின் பெருமைகள் தற்போதைய தலைமுறையினரில் பெரும்பான்மையினருக்குத் தெரியாது. தற்போதைய தலைமுறையினரும், பிற்கால சந்ததிகளும் நமது பங்கின் வரலாறு மற்றும் பெருமைகளைத் தெரிந்துகொள்ளும் விதமாக நூல் ஒன்றை எழுதி வெளியிட வேண்டும் என்ற ஆசை இயல்பாகவே என் உள்ளத்தில் எழுந்தது. இந்த ஆசை எப்போது நமது பங்கு நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியதோ அன்றே ஒரு தீர்க்கமான முடிவாக உருவெடுத்தது. அன்றிலிருந்து எனது நூலுக்குத் தேவையான தகவல்களைத் தொகுக்கவும், ஆவணங்களைக் கண்டுபிடிக்கவும் அயராது உழைத்தேன்.

எனது மூதாதையர்களான திருவாளர்கள் S. தேவசகாயம், D. தேவசகாயம், D. பிரான்சிஸ் F. டேவி, F. ஸ்டான்லி ஆகியோர் நமது ஆலயத்தில் சுமார் 102 ஆண்டுகள் முடுதோம் களாகப் பணியாற்றியுள்ளனர். இவர்களது பணிக் காலத்தில் நடைபெற்ற பல வளர்ச்சிப் பணிகள் பற்றி எனது தந்தை திரு. S. பன்னீர் செல்வமும் எனது பாட்டி திருமதி கொ. மனோன்மணி நாடாச்சி என்ற றோணிக்கமும் சொல்லி எனக்குத் தெரியும். இத்தகவல்கள் இந்நூலை எழுதுவதற்கு மிகவும் உதவி புரிந்தன. இந்தத் தகவல்களின் அடிப்படையில் ஆவணங்களையும் திரட்டியுள்ளேன். இந்நூலை எழுதுவதற்கு எனது பாட்டனார் திரு. D. பிரான்சிஸ் முடுதோம் எழுதி வைத்திருந்த நாட்குறிப்பேடுகளும். பாதுகாத்து வைத்திருந்த ஆவணங்களும் பெரிதும் துணை புரிந்தன. அவை எனக்கு வெகுவாக வழிகாட்டின. அவரது குறிப்பேடுகளைப் படிக்கும்போது அந்தக் காலத்திலேயே D. பிரான்சிஸ் முடுதோம் ஆங்கிலத்தில் சரளமாக எழுதுவதற்கும் பேசுவதற்கும் திறமைப் பெற்றிருக்கிறார் என்பதை எண்ணும்போது மிகவும் பெருமையாக இருந்தது. D. பிரான்சிஸ் முடுதோம் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் சட்டமன்ற உறுப்பினராகவும் மற்றும் பல்வேறு அரசுப் பொறுப்புகளில் இருந்தும் மக்கள் பணியாற்றியுள்ளார். என்னுடைய தாத்தா (தந்தையின் தந்தை) திரு. F. ஸ்டான்லி முடுதோம் 18.03.1981 அன்று இறந்தார். அவர் இறக்கும் போது எனக்கு வயது ஏழு ஆகும். அவர் முடுதோமாகப் பணியாற்றியதை நேரில் பார்த்துள்ளேன். அவருக்கு குருசடிப் பங்கில் மிகுந்த மதிப்பும் மரியாதையும் இருந்தன. அதுபோல மறவன்குடியிருப்பைச் சார்ந்த திரு. M. ஆன்றனி முடுதோம் என் தாத்தாவுடன் இணைந்து முடுதோமாகப் பணியாற்றியதையும் நேரில் பார்த்துள்ளேன். அவருக்கும் நமது பங்கில் நல்ல மதிப்பும் மரியாதையும் இருந்தன. நானும் நான்கு முறை பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையில் உறுப்பினராக இருந்துள்ளேன். இதன்மூலம் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் பணிகள் பற்றி என்னால் சிறப்பாக எழுத முடிந்தது.

இந்நூலில் மொத்தம் 10 அலகுகள் உள்ளன. முதல் அலகில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கத்தோலிக்கக் கிறிஸ்தவம் தோன்றி வளர்ந்ததுபற்றி சிறப்பாகக் கொடுத்துள்ளேன். இரண்டாவது அலகில் கோட்டாறு மறைமாவட்டத்தின் தோற்றம்பற்றி விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன். மூன்றாவது அலகில் பஞ்சவங்காடு வரலாற்றைத் தெளிவாகத் தொகுத்துள்ளேன். நான்காவது அலகில் பஞ்சவங்காட்டில் கிறிஸ்தவம் தோன்றியதைச் சற்று விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன்.

ஐந்தாவது அலகில் பங்குப் பணியில் முடுதோம்களும் சபையாரும் என்ற தலைப்பின் கீழ் பங்குத்தந்தையரும், முடுதோம்களும் மற்றும் சபையாரும் செய்தப் பணிகளை ஆன்மீகப் பணி, சமூகப் பணி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள், கல்விப்பணி ஆகிய குறுந்தலைப்புகளில் விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன். ஆறாவது அலகில் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் செயல்பாடுகளைத் தெளிவாகத் தந்துள்ளேன். ஏழாவது அலகில் கோட்டாறு மறைமாவட்டமும் குருசடிப் பங்கும் என்ற தலைப்பில் நமது பங்கு தனிப் பங்காக உயர்த்தப்பட்டது குறித்தும் மற்றும் நமது பங்கின் பொருளாதார வளர்ச்சியைக் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன். எட்டாவது அலகில் திருத்தூதுக் கழகங்கள் (பக்த சபைகள்), இயக்கங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றைப்பற்றிச் சிறப்பாக விளக்கியுள்ளேன். ஒன்பதாவது அலகில் ஆலய நூற்றாண்டு விழாவையும் அதனை முன்னிட்டு நடைபெற்ற ஆலயச் சீரமைப்புப் பணிகளையும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளேன். பத்தாவது அலகை முடிவுரை என்ற தலைப்பில் எழுதியுள்ளேன்.

இந்நூலை எழுதுவதற்குத் தேவையான தரவுகளைக் கடந்த 10 ஆண்டுகளாக சேகரித்துள்ளேன். இக்காலகட்டத்தில் பல இடையூறுகளும் நிகழ்ந்தன. நான் தேடிச்சென்ற தரவுகளைப் பெறுவதற்கு நிறைய முயற்சிகள் செய்ய வேண்டியிருந்தது. சில தரவுகள் கிடைக்கவில்லை. சில தரவுகளின் நகல்கள் கிடைக்கவில்லை. தரவுகளைத் திரட்டுவதற்காக சில இலட்சங்கள் செலவு செய்துள்ளேன். என்னுடைய அயரா முயற்சியாலும், கடின உழைப்பாலும் இந்த நூலுக்குத் தேவையான ஆவணங்களைப் பெற்று இந்நூலில் பொருத்தமான இடங்களில் தந்துள்ளேன். இந்த ஆவணங்கள் அனைத்துமே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையும் அளவிடதற்கு அரிய மதிப்புமிக்கவையும் ஆகும். இந்த ஆவணங்களைத் திரட்டுவதற்காகக் கொல்லம் மறைமாவட்ட ஆவண காப்பகத்திற்குச் சென்றுள்ளேன். திருவனந்தபுரத்திலுள்ள கேரள அரசின் ஆவண காப்பகத்திற்குச் சென்று தேவையான ஆவணங்களை பெற்றுள்ளேன். அரசு அலுவலகங்களிலிருந்து சொத்து சம்மந்தமான ஆவணங்களின் நகல்களை மிகவும் சிரமப்பட்டுப் பெற்றுள்ளேன்.

இந்நூலை மிகுந்தக் கவனத்துடன் எந்த விதமான வரலாற்றுப் பிழையும் ஏற்படாதவாறு எழுதியுள்ளேன். இந்நூலைப் படிக்கும்போது குருசடிப் பங்கின் வரலாற்றை நன்கு தெரிந்து கொள்ளலாம். குருசடி மற்றும் அதன் முன்னாள் கிளைப் பங்குகளைச் சார்ந்தவர்கள் இந்நூலைப் படிக்கும்போது குருசடிப் பங்கின் தனிச் சிறப்பை நன்குப் புரிந்துகொள்வார்கள். நமது மண்ணில் ஓலைக் கூரையிலான சிற்றாலயம் கட்டப்பட்ட ஆண்டான 1790 முதல் 15.07.2021 வரையுள்ள காலகட்டத்திற்குட்பட்ட வரலாற்று நிகழ்வுகளை இந்நூலில் தொகுத்துள்ளேன்.

இந்நூலை மிகச் சிறப்பாக வெளியிடுவதற்கு எல்லா வகையிலும் உதவி செய்த இறைவனுக்கு என் முதற்கண் நன்றி.

என்னுடைய நூலுக்குத் தேவையான ஆவணங்களை மறைமாவட்ட ஆவண காப்பகத்திலிருந்து எடுப்பதற்கு உதவி செய்த கோட்டாறு மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு டாக்டர். பீட்டர் ரெமிஜியுஸ் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி.

கொல்லம் மறைமாவட்ட ஆவண காப்பகத்தில் தேவையான ஆவணங்களின் நகல்களைத் தந்த கொல்லம் மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு ஸ்டான்லி ரோமன் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி. கொல்லம் மறைமாவட்டத்திற்கு என்னுடன் வருகைத் தந்த அப்போதைய கோட்டாறு மறைமாவட்ட செயலர் அருள்பணி முனைவர் G. பெலிக்ஸ் அவர்களுக்கு என் இதயப்பூர்வமான நன்றி.

என்னுடைய நூலுக்கு ஆழமான கருத்தைப் பொதிந்து ஆசியுரை வழங்கிய கோட்டாறு மறைமாவட்ட ஆயர் மேதகு டாக்டர் நசரேன் சூசை அவர்களுக்கு என் மனதார நன்றி.

இந்த நூலைச் சிறப்பாக வடிவமைப்பதற்கு அவ்வப்போது பல ஆலோசனைகளை வழங்கி பல திருத்தங்கள் செய்து எனக்கு வழிகாட்டிகளாக இருந்து செயல்பட்டு வாழ்த்துரையும் வழங்கியுள்ள அருள்பணி. முனைவர் தே. அல்போன்சு மற்றும் நமது முன்னாள் பங்குத்தந்தை அருள்பணி முனைவர் L. தார்சியுஸ் ராஜ் அவர்களுக்கு எனது உளம் கனிந்த நன்றி.

இந்த நூலுக்குச் சிறப்பான ஆசியுரை வழங்கிய நமது பங்குத்தந்தை அருள்பணி. M. பெர்பெச்சுவல் ஆன்றனி அவர்களுக்கு மனமார்ந்த நன்றி. இந்த நூலுக்கு சிறப்பான வாழ்த்துரை வழங்கிய முன்னாள் அமைச்சர் திரு. N. சுரேஷ்ராஜன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி.

இந்த நூலுக்குத் தேவையான பல ஆவணங்களைத் தந்து உதவிய எனது பெரியப்பா திரு. S. பிரான்சிஸ் மற்றும் சித்தப்பா திரு. A. இல்டபோன்ஸ் ஆகியோருக்கு நன்றி. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை அலுவலகத்தில் ஆவணங்களைப் பார்வையிடுவதற்கு உதவிபுரிந்த பொருளாளர் திரு. S. A. ரெத்னதாஸ் அவர்களுக்கு நன்றி. மேலும் பல தகவல்களைச் சொல்லித் தந்த குருசடி ஊரைச் சார்ந்த திருமதி M. ரோசம்மாள் அலெக்சாண்டர் அவர்களுக்கு நன்றி.

இந்நூலுக்குச் சிறப்பான வாழ்த்துரை வழங்கிய எனது தாயார் திருமதி ம. அற்புதமேரி ஆசிரியைக்கு நன்றி. இந்நூலை உருவாக்கு வதற்குப் பல வழிகளில் உதவிய என் மனைவி திருமதி M. S. ஆனி விஜிலா மற்றும் அன்பு மகள் L. ஆன்றனி வெனிட்டா மற்றும் உறவினர்கள் நண்பர்களுக்கும் நன்றி. நான் கேட்டவுடன் தங்கள் புகைப்படங்களைத் தந்து உதவிய அனைவருக்கும் நன்றி. புகைப் படங்களைச் சேகரிக்க உதவிய திருவாளர்கள் F. அமிர்தராஜ். A. புஷ்பராஜ் ஆகியோருக்கு நன்றி. என்னுடைய நூலை முழுவதும் கவனமாகப் படித்து, மொழித் திருத்தம் செய்த சகோதரி திருமதி R. அனிதா யூனிஸ் தேவகிருபைக்கு மிகுந்த நன்றி. மேலும் தட்டச்சு செய்த நண்பர் திரு. S. பகவதி கண்ணுபிள்ளை அவர்களுக்கு நன்றி. இந்நூலை அருமையாக அச்சிட்டுள்ள நாகர்கோவில், நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ் அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றி.

இந்நூலானது குருசடிப் பங்கு மக்களுக்கு மட்டுமின்றி வரலாற்று ஆர்வம் உள்ள அனைவருக்கும் ஒரு பொற்களஞ்சியமாக அமையும். இந்நூல் நம் முன்னோர்கள் குருசடிப் பங்கிற்கு ஆற்றிய பணிகளைப் பிரதிபலிக்கும் நல்லதொரு காலக்கண்ணாடியாக இருக்கிறது. இன்றைய காலக்கட்டத்தில் நமது பங்கு எந்த இலக்கோடு பயணிக்கிறது என எடுத்துரைக்கும் நூலாக இருக்கிறது. இந்நூலை படித்துப் பயன்பெற உங்கள் ஒவ்வொருவரையும் அழைக்கிறேன்.



**P. லீனஸ் ராஜ்,** B.Com., B.L.
Public Prosecutor,
Kanyakumari District.

குருசடி,
01.12.2021

# உள்ளடக்கம்...

1. கன்னியாகுமரி மாவட்டத்தில் கத்தோலிக்கக் கிறிஸ்தவத்தின் தொடக்கம் ........ 1

2. கோட்டாறு மறைமாவட்டத்தின் தோற்றம் ........ 7

3. பஞ்சவங்காடு வரலாறு ........ 11

4. பஞ்சவங்காட்டில் கிறிஸ்தவம் ........ 14

5. பங்குப் பணியில் முடுதோம்களும் சபையாரும் ........ 30

i) ஆன்மீகப் பணி ........ 40

ii) சமூகப்பணி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் ........ 49

iii) கல்விப் பணி ........ 68

6. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையும் பணிகளும் ........ 139

7. கோட்டாறு மறைமாவட்டமும் குருசடிப் பங்கும் ........ 173

8. திருத்தூதுக் கழகங்கள் (பக்த சபைகள்), இயக்கங்கள் மற்றும் நிறுவனங்கள் ........ 198

i) நமது பங்கில் முன்காலத்தில் செயல்பட்டு, தற்போது செயல்படாத அமைப்புகள் ... 198

ii) அன்பியங்கள் ........ 201

iii) திருத்தூதுக் கழகங்கள் ........ 202

iv) இயக்கங்கள் ........ 205

v) பணிக்குழுக்கள் ........ 207

vi) மறைக்கல்வி ........ 209

vii) நிறுவனங்கள் ........ 211

viii) இதர அமைப்புகள் ........ 214

9. ஆலய நூற்றாண்டு விழா ........ 219

10. முடிவுரை ........ 227

துணைநின்ற ஏடுகள் ........ 231

# பங்கில் பணியாற்றிய பங்குத்தந்தையர்



அருள்பணி. ரிச்சர்டு ரொசாரியோ
08-05-1940 - 16-02-1947



அருள்பணி. அம்புறோஸ் பெர்னாண்டஸ்
16-02-1947 - 21-09-1951



அருள்பணி. D.C. ஆன்றனி
21-09-1951 - 21-01-1961



அருள்பணி. பெனடிக்ட் J.R. அலெக்சாண்டர்
21-01-1961 - 18-05-1961



அருள்பணி. R. அந்தோனிமுத்து
18-05-1961 - 20-04-1971



அருள்பணி. V. சூசைமரியான்
14-05-1971 - 24-05-1973



அருள்பணி. M. டைனீசியஸ்
24-05-1973 - 21-05-1974




அருள்பணி. A. கபிரியேல்
21-05-1974 - 24-05-1979



அருள்பணி. S.M. மரியதாசன்
24-05-1979 - 24-05-1984



அருள்பணி. M. பெஞ்சமின்
24-05-1984 - 29-05-1990



அருள்பணி. A. ஜோசப் ராஜ்
29-05-1990 - 17-05-1992



அருள்பணி. S. வின்சென்ட்
17-05-1992 - 21-05-1997



அருள்பணி. A.M. ஹிலரி
21-05-1997 - 23-05-2001



அருள்பணி. S. சேகர் மைக்கிள்
23-05-2001 - 24-05-2003



அருள்பணி.
M. பெஞ்சமின் லடிஸ்லாஸ்
24-05-2003 - 06-05-2008



அருள்பணி. W. ஜார்ஜ் வின்சென்ட்
06-05-2008 - 14-06-2013



அருள்பணி. L. தார்சியுஸ் ராஜ்
14-06-2013 - 03-06-2016



அருள்பணி. பிரான்சிஸ் M. போர்ஜியா
03-06-2016 - 10-07-2021



அருள்பணி.
M. பெர்பெச்சுவல் ஆன்றனி
10-07-2021 -

# பங்கில் பணியாற்றிய முடுதோம்கள்

## வடபகுதி முடுதோம்கள்



**திரு. D. பிரான்சிஸ் முடுதோம்** Ex. M.L.A.
S/o. திரு. D. தேவசகாயம் முடுதோம்

**பிறப்பு** : 15-09-1873
**பணிக்காலம்** : 1904 - 1947
**இறப்பு** : 17-01-1947



**திரு. F. ஸ்டான்லி முடுதோம்** Ex. M.C.
S/o. திரு. D. பிரான்சிஸ் முடுதோம்

**பிறப்பு** : 22-03-1910
**பணிக்காலம்** : 1948-1981
**இறப்பு** : 18-03-1981



**திரு. F. டேவி முடுதோம்**
S/o. திரு. D. பிரான்சிஸ் முடுதோம்

**பிறப்பு** : 17-02-1902
**பணிக்காலம்** : 1947
**இறப்பு** : 16-08-1968

## தென்பகுதி முடுதோம்கள்



**திரு. அ. ம. ஞானப்பிறகாசம் முடுதோம்**

**பிறப்பு** : 13-11-1031 M.E.
**பணிக்காலம்** : 1899-1904
**இறப்பு** : 1109 M.E.



**திரு. G. மரியந்தோனி முடுதோம்**

**பிறப்பு** : 22-04-1871
**பணிக்காலம்** : 1904-1952
**இறப்பு** : 14-07-1952



**திரு. M. மரிய லூயிஸ் முடுதோம்**
S/o. திரு. G. மரியந்தோனி முடுதோம்

**பிறப்பு** : 04-05-1898
**பணிக்காலம்** : 1952 - 1959
**இறப்பு** : 04-05-1959



**திரு. M. ஆன்றனி முடுதோம்**
S/o. திரு. G. மரியந்தோனி முடுதோம்

**பிறப்பு** : 05-05-1905
**பணிக்காலம்** : 1959-1985
**இறப்பு** : 20-09-1994

# பங்கில் பணியாற்றிய கணக்குப்பிள்ளைகள்



திரு. T. S. உத்தரிய முத்து
இராமன்புதூர்
1925 - 1962

திரு. G. பெர்னார்டின்
1962 - 1970



திரு. A. ஏசுதாசன்
1970 - 1977



திரு. S. தாசன்
1977 - 1985

# பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை துணைத்தலைவர்கள்



திரு. S. பிலிப்
1985 - 1988, 1997



திரு. M. மரியந்தோனி
1988 - 1991



திரு. M. மைக்கிள் ஆன்றனி
1991 - 1994



திரு. A. தேவதாசன்
1994 - 1995



திரு. J. சிறில் ஆர்க்காஞ்சல் செல்வராஜ்
1995 - 1996



திரு. M. ஞானமுத்து
1996 - 1997



திரு. M. கிரகோரி ஜேசுரெத்தினம்
1997 - 2000



திரு. M. கிரகோரி
2000 - 2003, 2012 - 2015



திரு. A. விக்டர் முத்தையா
2003 - 2006



திரு. M. ரஸ்கின் பீட்டர்
2006 - 2009



திரு. D. அமலராஜா Ex.M.C
2009 - 2012, 2015 - 2018



திரு. D. மரிய ஜாண் கென்னடி
2018 - 2021



திரு. F. அமிர்தராஜ்
2021 -

# உபதேசியார்கள்



திரு. M. சூசை
1937 - 1965



திரு. S. தனிஸ்லாஸ்
1965 - 1993



திரு. S. ஜோசப் ஆன்றனி
1993 - 2003



திரு. P. லூயிஸ் ஜாண்
2003



திரு. S. ஜேசுரெத்தினம்
2003 -

# கோவிலாய்கள்



செல்வி D. மார்டினம்மாள்
1960 - 1962



திருமதி D. மரிய பிறகாசி
1962 - 1965



திருமதி T. ஞானபிறகாசி
1965 - 1992



திருமதி A. சூசன்னாள்
1992 - 2008



திருமதி S. றோஸ்மேரி
2008 - 2016



செல்வி சரோஜா
2016 -

# குருசடி மண்ணில் மலர்ந்த அருள்பணியாளர்கள்



**அருள்பணி. M. மரிய கிரகோரி**

பிறப்பு : 25-05-1925
குருப்பட்டம் : 13-03-1948
இறப்பு : 17-01-1976



**அருள்பணி. A. வியாகுலமுத்து சூசை அருள் சொர்ணராஜ்**

பிறப்பு : 28-03-1947
குருப்பட்டம் : 07-05-1975
இறப்பு : 16-05-1984



**அருள்பணி.**
**V. M. அருள் ஜேசு ராபின்**
புனித கிளாரட் துறவுஅவை



**அருள்பணி.**
**J. சதீஸ் குமார் ஜாய்**
கோட்டாறு மறைமாவட்டம்



**அருள்பணி.**
**R. A. அமலதாசு தென்சிங்**
கோட்டாறு மறைமாவட்டம்.



**அருள்பணி.**
**S. ஆன்றனி மெகலன்**
லண்டன்



**அருள்பணி.**
**R. A. S. கிளிட்டஸ்**
மரியாயின் ஊழியர் துறவுஅவை



**அருள்பணி.**
**D. ஆன்றனி ஜெயக்கொடி**
கோட்டாறு மறைமாவட்டம்



**அருள்பணி. D. அருள் யூஜின் ராய்**
கோட்டாறு மறைமாவட்டம்



**அருள்பணி. லியோன்**
சலேசியன் துறவுஅவை,
மும்பை



**அருள்பணி. ஜெரி வின்செண்ட்**
கோட்டாறு மறைமாவட்டம்



**அருள்பணி. M. ஆன்றனி பெர்க்மான்ஸ்,** S.J.
இயேசு சபை, திருச்சி



**அருட்பணி. P. ஏஞ்சல் நிர்மல் தர்ஷன்**
கப்புச்சிய துறவுஅவை.

# குருசடி மண்ணில் மலர்ந்த அருள்சகோதரிகள்



Sr. **S. வின்னிபிரட்**
புனித அன்னாள் துறவுஅவை,
சென்னை



Sr. **S. சலேட் மேரி**
புனித அன்னாள் துறவுஅவை,
திருச்சி



Sr. **மரிய மதலேனம்மாள்**
புனித அன்னாள் துறவுஅவை,
சென்னை



Sr. **A. எல்ரெட்**
கார்மல் துறவுஅவை



Sr. **S. சிறிய புஷ்பம் (சின்ன ராணி)**
திருச்சிலுவை அருள்சகோதரிகள் துறவுஅவை



Sr. **M. ஆக்னெஸ் குளோரி**
திருஇருதய அருள்சகோதரிகள்
துறவுஅவை



Sr. **M. மேரி நிர்மலா ஜெஸ்டின்**
அமல உற்பவத்
துறவுஅவை



Sr. **S. செல்மா மேரி**
புதுவை, தூய இதய
மரியன்னையின்
பிரான்சிஸ்கன்
சகோதரிகள் துறவுஅவை



Sr. **S. ஸ்டெபனா மேரி**
புதுவை, தூய இதய
மரியன்னையின் பிரான்சிஸ்கன்
சகோதரிகள் துறவுஅவை



Sr. **K. அமலோற்பவம் (அமல்)**
திருஇருதய அருள்
சகோதரிகள்
துறவுஅவை



Sr. **D. ஹெலன் நிர்மலா**
இரக்கத்தின் மருத்துவ
அருள்சகோதரிகள்
துறவுஅவை



Sr. **J. வினிப்ரட் ஜோதி**
திருஇருதய
அருள்சகோதரிகள்
துறவுஅவை



Sr. **P. அனிஷ் பிரியா**
காணிக்கை அன்னை
துறவுஅவை



Sr. **C. அஸ்வினி**
திருஇருதய
அருள்சகோதரிகள்
துறவுஅவை


# நகர்மன்ற உறுப்பினர்கள்



திரு. F. ஸ்டான்லி முடுதோம்
1952 - 1955, 1955 - 1959



திரு. M. M. பிலிப்
1959 - 1964, 1964 - 1969



திரு. S. தேவசகாயம்
1969 - 1974



திரு. S. கிரேஸ் நேவிஸ் பிராஸ்பர்
1986 - 1991



திருமதி. S. கிறிஸ்டின் அமலி
1996 - 2001




திருமதி. A. ஷீலா ராஜன்
2001 -2006



திரு. D. அமலராஜா
2006 - 2011




திருமதி. M. மேரி பிரின்சி லதா
அமலராஜா
2011 - 2016



குருசடிப் பங்கின் வரைபடம்
வ
நாகர்கோவில்
---- பங்கின் எல்லை
புன்னைநகர் சந்திப்பு
வட்டக்கரை பங்கு
புன்னைநகர் பங்கு
இராஜாக்கமங்கலம் ரோடு
HOLYCROSS COLLEGE
மேலசூரங்குடி
குருசடி சந்திப்பு
CONVENT
கொடிமரம்
மேற்கு தெரு
சமூக நலக்கூடம்
கல்லறைத் தோட்டம்
வடக்குக்கோணம் பங்கு
வடக்குக்கோணம்
கீழ்க் கோணம் சந்திப்பு
குருசடி ஆற்றங்கரை சாலை
அனந்தன்நகர் பங்கு
தென்னந்தோப்புகள்
NOT TO SCALE

1

# கன்னியாகுமரி மாவட்டத்தில் கத்தோலிக்கக் கிறிஸ்தவத்தின் தொடக்கம்



புனித தோமையார்

கிறிஸ்தவ மதம் தோன்றிய முதலாம் நூற்றாண்டிலேயே தற்போதைய கன்னியா குமரி மாவட்டத்தை உள்ளடக்கிய பகுதிகளில் கிறிஸ்தவம் காலூன்றியுள்ளது. கி.பி. 52ஆம் ஆண்டில் புனித தோமையார் மலபாரில் வந்து ஏழு ஆலயங்களைக் கட்டிய தாகவும் அவற்றுள் ஒன்று திருவிதாங்கோட்டில் உள்ள பழமையான ஆலயம் என்றும் கூறப்படுகிறது. தோமையார் காலத்திற்குப் பிறகு தொடர்ந்த நூற்றாண்டுகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கிறிஸ்தவம் எந்த நிலையில் இருந்தது, வளர்ந்தது என்பதுபற்றிய நம்பகத் தன்மையுடைய வரலாற்று தகவல்கள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் கன்னியாகுமரி அருகேயுள்ள சின்ன முட்டம் பகுதியில் அண்மைக் காலத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளிலிருந்து 1494ஆம் ஆண்டில் அப்பகுதியில் கிறிஸ்தவ ஆலயம் இருந்ததாக அறிய முடிகிறது.[1]

**பரவர்கள் மதமாற்றம்**

ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கான கடல்வழியை 1498ஆம் ஆண்டு வாஸ்கோ ட காமா கண்டுபிடித்தார். அதன் பிறகு தென் இந்தியாவில் கிறிஸ்தவம் வேகமாகப் பரவ ஆரம்பித்தது. முத்துக் குளித்துறையிலுள்ள (தூத்துக்குடியின் கடலோரப் பகுதி) பரவர்கள் இஸ்லாமிய வணிகர்களால் கொடுமைப்படுத்தப் பட்டனர். எனவே பரவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள கொச்சியிலுள்ள போர்ச்சுக்கீசியர்களின் உதவியை நாடினர். பரவர்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினால் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று உறுதியளித்ததைத் தொடர்ந்து, 1535ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அனைத்து ஊர்களிலுமுள்ள 85 பட்டங்கட்டிமார்கள் (தலைவர்கள்) கொச்சி சென்று கோவா மறைமாவட்டத்தின் முதன்மை அருள்பணியாளர் (Vicar General) மைக்கிள் வாஸ் என்பவரிடம் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டனர். அடுத்த ஆண்டு கொச்சியின் பங்குத்தந்தையும் மற்றும் நான்கு அருள் பணியாளர்களும் முத்துக் குளித்துறை கடற்கரை கிராமங்களுக்கு வந்து 20,000 பேருக்குத் திருமுழுக்கு கொடுத்து அவர்களை கிறிஸ்தவர்கள் ஆக்கினர்.[2] அவர்கள் வாழ்ந்த அனைத்து பகுதிகளும் கன்னியாகுமரி மறைபரப்புத் தளத்திற்குக்கீழ் கொண்டு வரப்பட்டன.

**முக்குவர் குல மக்களின் மதமாற்றம்**

புனித சவேரியார் கி.பி. 1542ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் நாள் கிழக்கத்திய நாடு களுக்கான திருத்தந்தையின் பிரதிநிதியாக கோவாவிற்கு வந்தார். பின்னர் அவர் கடல் வழியாக மணப்பாட்டிற்கு வந்து அங்குத் தங்கி பணியாற்றினார். ஏற்கனவே கி.பி. 1537ஆம் ஆண்டு திருவிதாங்கூர் மன்னர் அருள்பணி.

1. J.R. Narchison & others, *Called To Serve : A Profile of the Diocese of Kottar* (Nagercoil : Assisi Press, 1983) p. 5
2. J.M. Villavarayan. *The Diocese of Kottar: A Review of its Growth,* 1956, p. 15

மைக்கிள் வாசுக்கு மீனவர்களை மதமாற்றம் செய்ய அனுமதி அளித்திருந்தார்.[3] மேலும் வடுகர் படை வேணாட்டின் மீது படையெடுத்த போது, புனித சவேரியார் வடசேரி மேட்டில் நின்று சிலுவையை உயர்த்திக் காட்டி வடுகர் படைத் தலைவனிடம் போரின் விளைவுகளை விளக்கிக் கூறி, அவர்களைப் பின்வாங்கச் செய்தார். இதனால் சவேரியார் மன்னரின் நன்மதிப்பைப் பெற்று, கிறிஸ்தவ மதத்தை வேணாட்டிலும் போதிக்க உரிமையைப் பெற்றுக் கொண்டார். சவேரியார் மீனவர்களின் ஒரு பகுதியினரான பரவர்குல மக்கள் பலரை மதம் மாறச் செய்தார். பின்னர் முக்குவர்களையும் மனம் திரும்பச் செய்யும் பணியில் ஈடுபட்டார்.[4] 1533ஆம் ஆண்டு திருத்தந்தை மூன்றாம் பவுல் கோவா மறைமாவட்டத்தை நிறுவிக் கீழ்த்திசை நாடுகள் அனைத்தையும் அதன்கீழ் கொண்டு வந்தார்.[5] ஆனால் இந்தியாவின் முதல் மறைமாவட்டம் கொல்லம்தான். 9-8-1329 அன்று அப்போதைய திருத்தந்தை இருபத்தி இரண்டாம் ஜாண் (Pope John XXII) கொல்லம் மறைமாவட்டத்தை நிறுவி ஜோர்டானுஸ் கற்றலானியை (Jordanus Catalani) ஆயராக நியமித்தார். அவர் 1336ஆம் ஆண்டு மும்பையில் இஸ்லாமியரால் கொல்லப்பட்டார். பின்னர் பிரான்சிஸ்கன் துறவுஅவையைச் சார்ந்த ஜாண் டி மரிங்நொல்லி (John De Marignolli) 1338ஆம் ஆண்டு கொல்லம் ஆயராகத் திருநிலைப் படுத்தப்பட்டார். அவர் சீனாவிற்கான தூதராகவும் திருத்தந்தை 12 ஆம் பெனடிக்டால் நியமிக்கப் பட்டார். மரிங்நொல்லி ஐரோப்பாவிற்குத் திரும்பிச் செல்லும் வழியில் 23.3.1346 அன்று கொல்லத்திற்கு வந்து ஒரு வருடத்திற்கு மேல் அங்குத் தங்கியிருந்தார். அவர் கன்னியாகுமரிக்கு வந்து செதுக்கப்பட்ட ஒரு கல் தூணை நிறுவினார். பின்னர் பல ஆண்டுகளுக்குக் கொல்லத்திற்கு ஆயர் நியமிக்கப்படாமல் இருந்தது. 1533ஆம் ஆண்டு கோவா மறைமாவட்டம் நிறுவப்பட்டபோது, கொல்லம் கோவா மறைமாவட்டத்தின் ஒரு பகுதியானது.[6]


புனித சவேரியார்

### 1616ஆம் ஆண்டில் கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை[7]

1. தேங்காப்பட்டணம் - 800
2. இனயம் - 500
3. பெரிய மிடாலம் - 313
4. சின்னமிடாலம் - 314
5. வாணியக்குடி - 115
6. குறும்பனை - 270
7. குளச்சல் - 437
8. புதூர் - 207
9. கடியப்பட்டணம் - 872
10. தோப்பு - 340
11. முட்டம் - 244
12. இராஜாக்கமங்கலம் - 640
13. பெரியகாடு - 460
14. பள்ளம் - 370
15. மணக்குடி - 660
16. கோவளம் - 513
17. கன்னியாகுமரி - 364

மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்கள் அனைத்தும் கடற்கரை கிராமங்களாகும்.

### நாடார்கள் மதமாற்றம்


தென்திருவிதாங்கூர் மக்களில் பெரும் பான்மையோர் நாடார் குலத்தவர். ஆரம்பத்தில் இவர்களை மதமாற்றம் செய்ய இயலவில்லை. ஆனால் 1697ஆம் ஆண்டிலிருந்து நாடார்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாற ஆரம்பித்தனர். கோட்டாறில் பங்குதந்தையாக இருந்த ஜூன்

3. *ibid.* p. 15
4. *கோட்டாறு மறைமாவட்டப் பொன்விழா மலர், 1930-1980* (நாகர்கோவில்: அசிசி அச்சகம், 1980) ப. 2-3
5. *ibid.* p. 2
6. கொல்லம் மறைமாவட்டம் தன்னுடைய வலைதளத்தில் வெளியிட்டுள்ள *கொல்லம் மறைமாவட்டத்தின் வரலாறு.*
7. *கோட்டாறு மறைமாவட்டப் பொன்விழா மலர், 1930-1980,* ப. 2

மெய்னார்டு இந்திய சந்நியாச உடை அணிந்து நாயர்கள் மத்தியில் நற்செய்தியை அறிவித்து அவர்களில் சிலரை மதமாற்றம் செய்தார்.[8] ஆனால் அவர் நாடார்கள் மத்தியில் சகஜமாகப் பழகி வருவதைக் கண்ட நாயர் குல மக்கள் கிறிஸ்தவ மதத்தை விட்டு விலகினர். ஆகவே இனிமேல் ஆதிக்க சாதியினர் மத்தியில் அருள்பணி செய்பவர் மற்ற சாதியினருடன் பழகக்கூடாது என முடிவு செய்யப்பட்டது. எனவே மதுரையிலிருந்து அருள்பணி. பெர்னார்டு டி ஸா அனுப்பப்பட்டார். அவர் வடக்கன்குளத்தில் தமது தலைமைப் பீடத்தை நிறுவி மருங்கூரில் ஓர் ஆலயத்தைக் கட்டினார். 1699ஆம் ஆண்டு கோட்டாறிலிருந்து 8 கி.மீட்டர் தொலைவிலுள்ள மருங்கூரில் மலபார் மறைபரப்புத் தளமொன்று நிறுவப்பட்டது. அருள்பணி. பெர்னார்டு டி ஸாவுடன் பணியாற்றி வந்த அருள்பணி. சவேரியோ போர்சீஸ் திருவனந்தபுரத்தையடுத்த நேமத்தில் ஒரு மறைபரப்புத் தளத்தை ஆரம்பித்தார். நாடார் குல மக்கள் வடக்கன்குளம், மருங்கூர் மற்றும் நேமத்திற்குச் சென்றுத் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர்.[9]

இந்து மதத் தலைவர்கள் கிறிஸ்தவ மதத்தை தழுவிய நாடார்களுக்குப் பல கொடுமைகளை இழைத்தனர். ஆலயங்கள் அழிக்கப்பட்டன. ஆசாரிபள்ளத்தில் முடிவுபெறாத ஆலயமொன்று 1705இல் தீக்கிரையாக்கப் பட்டது. எனினும் மக்களில் பலர் கிறிஸ்தவ நம்பிக்கையில் உறுதியாக நின்றனர். மக்களின் உறுதியைக் குலைப்பது கடினமென உணர்ந்த இந்து மதத் தலைவர்கள் மன்னனிடம் சென்று, தோப்பிலுள்ள (பிள்ளைத்தோப்பு) கிறிஸ்தவ மதத் தலைவர்களிடம் போர்க்கருவிகள் உள்ளன என்றும், அவர்கள் திருவிதாங்கூரைத் தாக்க எண்ணம் கொண்டு ஆங்கிலேயருக்கு உதவி செய்கிறார்கள் என்றும் பல பொய்களைக் கூறினர். மன்னன் பெரும் சினம்கொண்டு தோப்பில் அமைந்த மறைபரப்புத் தளத்திலுள்ள ஆலயம், மறைக்கல்விக் கூடம் முதலியவற்றைத் தகர்த்தெறிந்தான். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் மறைபரப்புத்தளம் குளச்சலுக்கும், பின்னர் இராஜாக்கமங்கலத்துக்கும் மாற்றப்பட்டது.[10]

### அருளாளர் தேவசகாயம்



1741ஆம் ஆண்டு அருள்பணி. ஜான் பாப்டிஸ்ட் புட்டாரி தனது பணிமையத்தை நேமத்திலிருந்து வடக்கன்குளத்திற்கு மாற்றினார். இவரே மன்னர் மார்த்தாண்ட வர்மா அரண்மனையில் உயர்பதவி வகித்த நீலகண்டபிள்ளைக்குத் திருமுழுக்குக் கொடுத்து தேவசகாயம் என்ற பெயரைச் சூட்டியவர். நாயர் குலத்தைச் சார்ந்த தேவசகாயம் மதம் மாறியதால் சினம் கொண்ட மன்னர் அவருக்கு மரண தண்டனை விதித்தார். மூன்று வருடங்கள் பல சிறைச்சாலைகளில் அடைத்து வைத்து பல துன்பங்களுக்கு அவர் உட்படுத்தப்பட்டார். பின்னர் 14.01.1752இல் ஆரல்வாய்மொழி காற்றாடி மலையில் மறைசாட்சியாகக் கொலை செய்யப்பட்டார். அவருடைய உடலின் எஞ்சிய பாகங்கள் கோட்டாறு புனித சவேரியார் பேராலயத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.[11] தேவசகாயம் மறைசாட்சியாகக் கொலை செய்யப்பட்டது நாடார்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி பலரை கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக்கொள்ளச் செய்தது. நாடார்கள் மத்தியில் தேவசகாயம் என்ற பெயர் பிரபலமாக இருப்பதற்கு இதுவே காரணமாகும்.

1765ஆம் ஆண்டிற்கான கொச்சி மறைமாவட்டத்தின் புள்ளிவிவரப்படி திருவிதாங்கூர் அரசாங்கத்தின் கீழ் உள்ள

8. *ibid.* p. 5
9. *ibid.* p. 6
10. *ibid.* p. 6
11. J.M. Villavarayan, *The Diocese of Kottar,* p. 23,24

பகுதிகளில் உள்நாடுகளில் உள்ள கிறிஸ்தவக் கிராமங்கள், ஆலய பாதுகாவலர் பெயர் மற்றும் மக்கள் தொகை ஆகியவை தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளன.[12] அவையாவன,

| | கிறிஸ்தவ ஊர் பெயர் | பாதுகாவலர் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|---|
| 1. | முஞ்சிறை | மரியன்னை | 225 |
| 2. | வருத்தட்டு | புனித சவேரியார் | 155 |
| 3. | குழித்துறை | புனித மிக்கேல் | 202 |
| 4. | உண்ணாமலைக்கடை | மரியன்னை | 98 |
| 5. | ஆற்றூர் | புனித அந்திரேயா | 91 |
| 6. | சுழியால் | புனித அந்திரேயா | 173 |
| 7. | புத்தன்கடை | புனித வியாகப்பர் | 143 |
| 8. | இரவிபுதூர்கடை | மரியன்னை | 113 |
| 9. | பழையகடை | புனித அந்திரேயா | 143 |
| 10. | முதுதுக்குறிச்சி | புனித தாமஸ் | 54 |
| 11. | புதுமட்டான்குறிச்சி | புனித தாமஸ் | 25 |
| 12. | திக்கணம்கோடு | புனித அந்தோனியார் | 60 |
| 13. | மேக்காமண்டபம் | மரியன்னை | 149 |
| 14. | பத்மநாபபுரம் | மரியன்னை | - |
| 15. | உதயகிரி | மரியன்னை | - |
| 16. | இரணியல் | புனித தாமஸ் | 134 |
| 17. | தலக்குளம் | புனித பேதுரு | 27 |
| 18. | திருநயினார்குறிச்சி | புனித அந்தோனியார் | 31 |
| 19. | ஆளூர் | புனித நிக்கோலாஸ் | - |
| 20. | வீராணி | மரியன்னை | - |
| 21. | வடசேரி | மரியன்னை | - |
| 22. | முத்தாண்டதூர் | புனித செபஸ்தியார் | - |
| 23. | ஆண்டியாபுரம் | புனித அந்திரேயா | - |
| 24. | தாழக்குடி | மரியன்னை | - |
| 25. | புலிக்குறி | புனித சூசையப்பர் | - |
| 26. | திருவிதாங்கோடு | புனித தாமஸ் | - |
| 27. | கோட்டாறு | புனித பிரான்சிஸ் சவேரியார் | - |

போர்ச்சுக்கீசிய மொழியில் எழுதப்பட்ட மேற்குறிப்பிட்ட ஊர்களின் பெயர்களில் சில அந்த ஊர்களின் தற்போதைய பெயருக்கு மாறுபட்டு உள்ளன. சில ஊர்களில் மக்கள் தொகையும் குறிப்பிடப்படாமல் உள்ளது. மேற்குறிப்பிட்ட ஊர்கள் பெரும்பாலும் உள்நாட்டு மீனவர்கள் குடியிருக்கும் ஊர்களாகும். மேற்குறிப்பிட்ட ஊர்களின் அருகில் குடியிருந்த மிகச் சிறிய எண்ணிக்கையிலான கத்தோலிக்க நாடார்கள் தாங்கள் திருமுழுக்குப் பெற்ற வடக்கன்குளம், மருங்கூர் மற்றும் நேமம் போன்ற மறைபரப்புத்தளங்களுடன் இணைந்திருந்தனர்.

12. *J.R. Narchison, Called to Serve,* p. 28, 29

ஏனெனில் 1765ஆம் ஆண்டு கத்தோலிக்க நாடார்களுக்கென்று ஆசாரிபள்ளம் போன்ற சில ஊர்களில் மட்டுமே சிறிய ஆலயம் இருந்தது. மற்ற ஊர்களில் நாடார்களுக்கென்று தனியாக ஆலயம் இல்லை. 1765ஆம் ஆண்டின் புள்ளி விவரத்தில் ஆசாரிபள்ளம் இடம் பெறவில்லை. மதுரை மறைபரப்புத்தளத்துடன் இணைந்திருந்ததால் மேற்கண்ட பட்டியலில் ஆசாரிபள்ளம் இடம் பெறாமல் இருந்திருக்கலாம்.

இக்காலகட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தின் உள்நாட்டுப் பகுதிகளை மதுரை மறைபரப்புத்தளத்தைச் சார்ந்த இயேசு சபை அருள்பணியாளர்கள் கவனித்து வந்தனர். இந்நிலையில் போர்ச்சுகீசியர்களுக்கும் இயேசு சபையினருக்குமிடையே ஏற்பட்ட பிரச்சனைகள் காரணமாக 1773ஆம் ஆண்டு திருத்தந்தை பதினாறாம் கிளமென்ட்டால் (Pope Clement XIV) இயேசு சபையினரின் அனைத்து செயல்பாடுகளும் நிறுத்தி வைக்கப்பட்டன. இதனால் 1773முதல் 1838ஆம் ஆண்டு வரை இயேசு சபையினர் பணி செய்த பகுதிகளில் மறைபரப்பு பணிகளைப் பிரான்சிஸ்கன் துறவுஅவையைச் சார்ந்த அருள்பணியாளர்கள் கவனித்து வந்தனர். 1800ஆம் ஆண்டு வாக்கில் இயேசு சபைக்கு மீண்டும் முழுமையாகச் செயல்படத் திருத்தந்தை அங்கீகாரம் வழங்கினார். எனினும் நமது பகுதியில் இயேசு சபையினர் மறைபரப்புப் பணிகளில் ஈடுபடவில்லை. 1838ஆம் ஆண்டு முதல் கார்மல் துறவுஅவை அருள்பணியாளர்களால் நமது பகுதியில் மறைபரப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1842ஆம் ஆண்டு கோட்டாறு ஆலயம் கார்மல் துறவுஅவையின் கைக்கு வந்தது.[13]

1847ஆம் வருடத்தின் புள்ளி விவரப்படி தென் திருவிதாங்கூரில் உள்ள பங்குகளும் அதன் கீழிருந்த ஊர்களும் மற்றும் மக்கள் தொகையும் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப் பட்டுள்ளன.[14]

| பங்குகள் | முக்கியமான சில ஊர்கள் | ஊர்கள் | மக்கள் |
|---|---|---|---|
| 1. காரங்காடு | இரணியல், மாங்குழி, முளகுமூடு, மணலிக்கரை, புத்தன்கடை, மாத்திரவிளை, ஆலஞ்சி, பழையக்கடை, முள்ளங்கனாவிளை, திருவிதாங்கோடு | 127 | 7873 |
| 2. கோட்டாறு | இராமனாதிச்சன்புதூர், மாத்தால், குருசடி, மேல்-கீழ் ஆசாரிப்பள்ளம், மாடத்தட்டுவிளை | 87 | 6515 |
| 3. வேங்கோடு | புதுக்கடை, களியக்காவிளை, குழித்துறை, பாறசாலை | 55 | 2780 |
| 4. குளச்சல் | புதூர், கோடிமுனை | 4 | 2566 |
| 5. கன்னியாகுமரி | கோவளம், மணக்குடி | 4 | 2536 |
| 6. புத்தன்துறை | பள்ளம், இராஜாக்கமங்கலம் | 6 | 2484 |
| 7. பிள்ளைத்தோப்பு | முட்டம், கடியப்பட்டணம் | 6 | 2458 |
| 8. தேங்காப்பட்டணம் | இனயம், புத்தன்துறை | 4 | 1698 |
| 9. குறும்பனை | மிடாலம், வாணியக்குடி | 5 | 1384 |


13. J.M. Villavarayan, *The Diocese of Kottar*, p. 27, 28
14. J.M. Villavarayan, *The Diocese of Kottar,* p. 25 to 27

மேற்கண்ட பட்டியலின்படி கோட்டாறு பங்கின்கீழ் குருசடி மற்றும் சில ஊர்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**கொச்சி மறைமாவட்டம்**

04.02.1557 அன்று கோவா உயர் மறைமாவட்டமாக உயர்த்தப்பட்டபிறகு அதே தேதியில் கொச்சி மறைமாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது. திருவிதாங்கூர், முத்துக்குளித்துறை, கோட்டாறு ஆகிய பகுதிகள் கொச்சி மறைமாவட்டத்தின்கீழ் செயல்பட ஆரம்பித்தன. பின்னர் 24.04.1838 அன்று திருத்தந்தை 16ஆம் கிரகோரி கொச்சி மறைமாவட்டத்தை ரத்து செய்து மலபார் மறைவட்டம் (Vicariate of Malabar) என்று பெயர் மாற்றினர். இதில் கொச்சி மறைமாவட்டத்தின் பகுதிகள் மற்றும் கொல்லம் ஆகியவைகள் சேர்க்கப்பட்டன. பின்னர் மலபார் மறைவட்டம் மூன்று மறைவட்டங்களாக (வராப்புழை, மங்களூர், கொல்லம்) 12.05.1845 அன்று தற்காலிகமாகப் பிரிக்கப்பட்டது. அப்போது கொல்லம் மறைவட்டம் கன்னியாகுமரியிலிருந்து பம்பை ஆறு வரை பரவியிருந்தது. கொல்லத்தைக் கவனிக்கும் பொறுப்பு தற்காலிகமாகக் கார்மல் துறவுஅவையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.[15] 23.06.1886இல் திருத்தந்தை மூன்றாம் லீயோ வராப்புழை மறைவட்டத்திலிருந்து சில பகுதிகளைப் பிரித்துக் கொச்சி மறை மாவட்டத்தை மீண்டும் ஏற்படுத்தி, அதைக் கோவா உயர் மறைமாவட்டத்தின்கீழ் கொண்டு வந்தார். 15.3.1853 அன்று இறுதியாகக் கொல்லம் தனி மறை வட்டமாகப் பிரிக்கப்பட்டது. அப்போது கொல்லத்திற்கு என்று தனி ஆயர் நியமிக்கப்படவில்லை. மேதகு பெர்னார்டின் பச்சிநெல்லி (Rt. Rev. Bernardine Baccinelli of St. Teresa, OCD) திருத்தந்தையின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுக் கொல்லம் மறைவட்டத்தை வழி நடத்தினார்.

1866முதல் 1870வரை மேதகு மரிய எப்ரேம் காரேலோன் OCD (Most. Rev. Marie Ephrem Garrelon of Sacred Heart OCD) என்பவர் திருத்தந்தையின் பிரதிநிதியாக இருந்து கொல்லத்தை வழிநடத்தினார். அவரைத் தொடர்ந்து மேதகு. இல்டபோன்சஸ் போர்னா OCD (Most. Rev. Ildephonsus Borgna OCD) என்பவர் 1871முதல் 1883 வரை திருத்தந்தையின் பிரதிநிதியாக இருந்து கொல்லத்தை வழிநடத்தினார்.



மேதகு மரிய எப்ரேம் காரேலோன் OCD



மேதகு. இல்டபோன்சஸ் போர்னா

பின்னர் 1883 முதல் 1886வரை மேதகு பெர்டினாண்ட் ஒஸி திருத்தந்தையின் பிரதிநிதியாக இருந்து கொல்லம் மறைவட்டத்தை வழிநடத்தினார். பின்னர் 01.09.1886 அன்று கொல்லம் தனி மறைமாவட்டமாக உயர்த்தப்பட்டு அதன் முதல் ஆயராக மேதகு பெர்டினாண்ட் ஒஸி நியமிக்கப்பட்டார். ஆயர் பெர்டினாண்ட் ஒஸியின் மறைவிற்குப் பிறகு ஏற்கனவே கொல்லம் மறைமாவட்டத்தின் வாரிசு ஆயராக இருந்த மேதகு அலோசியஸ் மரிய பென்சிகர் 14.09.1905 அன்று கொல்லம் ஆயராக பொறுப்பேற்றுக் கொண்டார்.[16]



மேதகு பெர்டினான்ட் ஒஸி

15. *ibid*

16. *கொல்லம்* மறைமாவட்டம் தன்னுடைய வலைதளத்தில் வெளியிட்டுள்ள *கொல்லம்* மறைமாவட்டத்தின் வரலாறு

# 2

# கோட்டாறு மறைமாவட்டத்தின் தோற்றம்

**இறைஊழியர் ஆயர் அலோசியஸ் மரிய பென்சிகர்**

கொல்லம் மறைமாவட்ட ஆயராக சுவிட்சர்லாந்து நாட்டைச் சார்ந்த அலோசியஸ் மரிய பென்சிகர் 14.09.1905 அன்று பொறுப்பேற்றார். அதன் பிறகு தென்திருவிதாங்கூரில் கத்தோலிக்க மதம் வேகமாக வளரத் துவங்கியது. ஏனெனில் ஆயர் அலோசியஸ் மரிய பென்சிகர் தென்திருவிதாங்கூர் (கோட்டாறு மற்றும் குழித்துறை மறைமாவட்டப் பகுதிகள்) மக்களை மிகவும் நேசித்தார். அனைத்துப் பங்குகளையும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை சந்தித்தார். நமது பகுதியில் பல ஆலயங்கள், பள்ளிக்கூடங்கள் கட்ட நிதிஉதவி செய்தார். இதற்கு நிதி திரட்டுவதற்காக மூன்று முறை ஐரோப்பாவிற்குச் சென்றார்.[1] நமது குருசடிப் புனித அந்தோனியார் ஆலயம் கட்டவும் ஆயர் பென்சிகர் நிதி உதவி செய்தார். ஒவ்வோர் ஆண்டும் கோட்டாறு புனித சவேரியார் பேராலயத் திருவிழாவில் கலந்து கொண்டார். கோட்டாறு மறைமாவட்டம் உருவாகுவதற்கு முக்கியக் காரணம் ஆயர் அலோசியஸ் மரிய பென்சிகர் ஆவார். 1907ஆம் ஆண்டு அசிசி வளாகத்தில் 'புனித பிரான்சிஸ் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி' என்ற பெயரில் ஓர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை ஆயர் பென்சிகர் ஆரம்பித்தார். அதன் மூலம் பல ஆசிரியர்கள் உருவாக்கப்பட்டு நமது பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறைகள் நீக்கப்பட்டன. பின்னர் அது 1947ஆம் ஆண்டு புனித பிரான்சிஸ் நடுநிலைப் பள்ளியாக மாற்றப்பட்டது.[2] 1922ஆம் ஆண்டு இராமன்புதூரில் கார்மல் ஆங்கில உயர்நிலைப் பள்ளி ஆயர் பென்சிகர் அவர்களால் துவக்கப்பட்டது. தற்போது அது மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப் பட்டுள்ளது. ஆயர் பென்சிகர் வாழும்போதே மக்கள் அவரை ஒரு புனிதராகவே பார்த்தனர். அப்போதைய திருவிதாங்கூர் மன்னர் ஸ்ரீமூலம் திருநாள் மகாராஜா “பேராயர் பென்சிகர் என்னுடைய சமஸ்தானத்தில் மிகப் புனிதமான மனிதர்” (Archbishop Benziger is the holiest man in my Kingdom) என்று பிரகடனம் செய்தார்.[3] 17.08.1942 அன்று மேதகு ஆயர் பென்சிகர் இறந்தார். ஆயர் பென்சிகரை திருத்தந்தை பிரான்சிஸ் 21-10-2018 அன்று “இறை ஊழியர்” என்று அறிக்கையிட்டுள்ளார்.


ஆயர் அலோசியஸ் மரிய பென்சிகர்

**ஆயர் லாறன்ஸ் பெரைரா**

26.05.1930 அன்று அப்போதைய திருத்தந்தை பதினொன்றாம் பயஸ் அவர்களின் “Ad Pastorale Ministerium” என்ற ஆணை ஏட்டின்படி கோட்டாறு மறைமாவட்டம் உருவானது.[4] மேலும் 26.05.1930 தேதியிட்ட

1. *கோட்டாறு மறைமாவட்டப் பொன்விழா மலர், 1930-1980*, ப. 9, 10
2. J.M. Villavarayan, *The Diocese of Kottar,* p. 57
3. Marieli Benziger, *Arch Bishop Benziger - Carmelite in India* (Altadona, California, 1977) p. 281
4. J.M. Villavarayan, *The Diocese of Kottar,* p. 34


ஆயர் லாறன்ஸ் பெரைரா

“ Commission Humilitati Nostrae” எனும் இன்னொரு ஆணை ஏட்டின்படி அருள்பணி. லாறன்ஸ் பெரைரா கோட்டாறு மறைமாவட்டத்தின் முதல் ஆயராக நியமிக்கப்பட்டார்.[5] கோட்டாறு புனித சவேரியார் ஆலயம் தலைமை ஆலயமாக உயர்த்தப்பட்டது. ஆரம்ப காலத்தில் கோட்டாறு பங்குத்தந்தை இல்லத்தில் ஆயர் தங்கியிருந்தார். பின்னர் 1935ஆம் ஆண்டு கார்மல் மேல்நிலைப் பள்ளி வளாகத்திலுள்ள கட்டிடத்திலிருந்து ஆயர் செயல்பட்டார்.[6] பின்னர் ஆசாரிபள்ளம் சாலையில் தற்போதைய ஆயர் இல்லம் கட்டி முடிக்கப்பட்டு 06.01.1937 அன்று திறக்கப்பட்டது.[7] தற்போதைய ஆயர் இல்லம் கட்டுவதற்கு வரைபடம் தயாரித்தவர் திருவனந்தபுரத்தைச் சார்ந்த பொறியாளர் திரு. ராபர்ட் பெர்னாண்டஸ் ஆகும்.[8] கட்டிடம் கட்டிய ஒப்பந்தக்காரர் புன்னைநகரைச் சார்ந்த திரு. கபிரியேல் மேஸ்திரி ஆவார். பின்னர் 05.01.1938 அன்று ஆயர் லாறன்ஸ் பெரைரா மறைந்தார். ஆயர் லாறன்ஸ் பெரைரா தன்னுடைய பணிக் காலத்தில் 14 பங்குகளை உருவாக்கினார். அவற்றுள் நமது குருசடி பங்கும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆயர் தாமஸ் ரோச் ஆஞ்ஞிசாமி S.J.

திருத்தந்தை பதினொன்றாம் பயஸ் அவர்கள் 05.01.1939 அன்று இயேசு சபை குருவான அருள்பணி. T. R. ஆஞ்ஞிசாமியை கோட்டாறு மறைமாவட்ட ஆயராக நியமித்தார்.[9] பின்னர் 29.10.1939 அன்று உரோமையில் வைத்து T. R. ஆஞ்ஞிசாமி திருத்தந்தை பன்னிரெண்டாம் பயசால் ஆயராகத் திருநிலைப் படுத்தப்பட்டார்.[10] ஆயர் ஆஞ்ஞிசாமியின் பணிக்காலத்தில் 30.05.1952 அன்று ஆயர் இல்ல வளாகத்தில் புனித அலோசியஸ் இளம் குருமடம் திறக்கப்பட்டது.[11] மேலும் சுங்கான்கடையில் புனித சவேரியார் பொறியியல் கல்லூரி அமைந்துள்ள குன்று சுமார் ரூ. 1,00,000/- க்கு விலைக்கு வாங்கப்பட்டது. ஆயர் ஆஞ்ஞிசாமி நமது மறை மாவட்டத்திற்கென்று ஓர் அச்சகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நீண்ட காலமாக முயற்சி செய்தார். பின்னர் கொல்லத்தில் கப்புச்சின் துறவுஅவைக் குருக்கள் நடத்திவந்த அசிசி அச்சகத்தை அதே பெயருடன் விலைக்கு வாங்கினார். முதலில் நாகர்கோவிலில் ஒரு வாடகை வீட்டில் அது செயல்பட்டது. பின்னர் 1947ஆம் ஆண்டு புனித பிரான்சிஸ் பள்ளி வளாகத்திற்கு அது மாற்றப்பட்டது.[12] “தென் ஒலி” மாத இதழ் 1948ஆம் ஆண்டு ஆயர் ஆஞ்ஞிசாமியால் ஆரம்பிக்கப்பட்டது.[13] கோட்டாறு சமூக சேவை சங்கமும் 1963ஆம் ஆண்டு ஆயர் ஆஞ்ஞிசாமியால் தொடங்கப்பட்டது. ஆயர் ஆஞ்ஞிசாமி 17.02.1971இல் ஓய்வு பெற்று 07.05.1974 அன்று இறைவனடிச் சேர்ந்தார்.


ஆயர் தாமஸ் ரோச் ஆஞ்சிசாமி SJ

### ஆயர் மரியானூஸ் ஆரோக்கியசாமி


ஆயர் மரியானூஸ் ஆரோக்கியசாமி

ஆயர் ஆஞ்ஞிசாமி ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து கும்பகோணம் மறைமாவட்டத்தைச் சார்ந்த அருள்பணியாளர் மரியானூஸ் ஆரோக்கியசாமி 26.11.1970 அன்று ஆயராக நியமிக்கப்பட்டார். பின்னர் 17.02.1971இல் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டு அன்றைய தினமே கோட்டாறு ஆயராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.[14]

அவர் நமது மறை மாவட்டத்தில் 16 பணிக் குழுக்களை ஏற்படுத்தினார். ஆயர் இல்ல வளாகத்தில் அருள் வாழ்வு இல்லம், புனித சேவியர் மேய்ப்புப்பணி நிலையம் ஆகியவற்றை ஏற்படுத்தினார். முட்டத்தில் சுமார் 50 ஏக்கர் நிலம் மறைமாவட்டத்தின் பெயருக்கு விலைக்கு வாங்கப்பட்டது. 1982ஆம் ஆண்டு ஏற்பட்ட

5. *ibid.* p. 34
6. J.R. Narchison, *Called to Serve*, p. 51
7. *ibid.* p. 51
8. *ibid.* p. 51
9. *ibid.* p. 57
10. *ibid.* p. 59
11. J.M. Villavarayan, *The Diocese of Kottar*, p. 46
12. J.R. Narchison, *Called to Serve*, p. 78
13. *ibid.* p. 78
14. *ibid.* p. 195

மண்டைக்காடு கலவரத்தில் பல ஆலயங்கள் தாக்கப்பட்டன. கிறிஸ்தவர்கள் பலர் தாக்கப் பட்டனர். கடற்கரை ஊரான பள்ளம் வன்முறை யாளர்களால் சூறையாடப்பட்டது. ஆயர் ஆரோக்கியசாமியும் தவத்திரு. குன்றக்குடி அடிகளாரும் மற்ற மதத் தலைவர்களும் மாவட்டத்தில் பல இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு அமைதி திரும்பச் செய்தனர். இதன் விளைவாக திருவருட்பேரவை என்ற அமைப்பு அவரைத் தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டது.[15] மறைமாவட்டத்தின் தன்னிறைவுத் திட்டத்திற்காக அசிசி வளாகத்தில் சேவியர் கட்டிடம், வளனார் அரங்கம் போன்றவைகள் கட்டப்பட்டன. பின்னர் 1987ஆம் ஆண்டு ஆயர் ஆரோக்கியசாமி மதுரை உயர் மறைமாவட்ட பேராயராக நியமிக்கப்பட்டார்.

## ஆயர் லியோன் தர்மராஜ்


ஆயர் லியோன் தர்மராஜ்

ஆயர் ஆரோக்கியசாமி மதுரை உயர் மறை மாவட்டத்திற்கு மாற்றலாகிச் சென்றபிறகு, கோட்டாறு மறைமாவட்டம் கோவளம் பங்கைச் சார்ந்த அருள்பணியாளர் லியோன் தர்மராஜ் அவர்களைக் கோட்டாறு மறைமாவட்டத்தின் நான்காம் ஆயராகத் திருத்தந்தை இரண்டாம் ஜாண் பால் 14.11.1988 அன்று நியமித்தார். அவர் 06.01.1989 அன்று உரோம் நகரில் திருத்தந்தை இரண்டாம் ஜாண் பால் அவர்களால் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அதன் பிறகு கோட்டாறு ஆயராக 05.02.1989 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.[16] ஆயர் லியோன் தர்மராஜ் அவர்களால் 1996ஆம் ஆண்டு சுங்கான்கடையில் புனித சவேரியார் பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டது. முட்டம் கல்வியியல் கல்லூரியும் தொடங்கப்பட்டது. ஏற்கனவே நாகர்கோவில் அசிசி வளாகத்தில் செயல்பட்டு வந்த புனித ஜோசப் மெட்ரிக்குலேஷன் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டு ஆயர் இல்ல வளாகத்தில் உருவாக்கப்பட்ட புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. மறைமாவட்டத்தின் வருவாயைப் பெருக்கும் நோக்கத்தோடு கார்மல் பள்ளி மற்றும் ஆயர் இல்ல வளாகத்தில் வணிக வளாகம் ஏற்படுத்தினார். மேலும் ஆரல்வாய்மொழியில் இரண்டு காற்றாலைகள் (wind mill) ஏற்படுத்தினார். கோட்டாறு மறைமாவட்டத்தை இரண்டாகப் பிரித்து குழித்துறை மறைமாவட்டம் உருவாக்க தொடக்கப் பணிகளையும் செய்தார். மறைசாட்சி தேவசகாயத்திற்குப் புனிதர் பட்டப் பணிகளையும் தொடங்கினார். பின்னர் திடீரென்று உடல்நலக் குறைவு ஏற்பட்டு 14.01.2007இல் இறையில் துயில் கொண்டார்.

## ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ்


ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ்

ஆயர் லியோன் தர்மராஜ் இறந்த பிறகு, ஏற்கெனவே கும்பகோணம் மறைமாவட்ட ஆயராக இருந்த மேதகு பீட்டர் ரெமிஜியுஸ் கோட்டாறு மறைமாவட்டத்தின் ஐந்தாவது ஆயராக நியமிக்கப்பட்டு, 24.08.2007 அன்று கோட்டாறு ஆயராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.[17] மறைசாட்சி தேவசகாயம் அருளாளர் அறிவிப்புப் பெருவிழாக் கொண்டாட்டம் 02.12.2012 அன்று கார்மல் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் சுமார் 4,50,000 மக்கள் கலந்து கொண்டனர்.[18] திருத்தந்தை பிரான்சிஸ் கோட்டாறு மறைமாவட்டத்திலுள்ள முளகுமூடு, திருத்துவபுரம் ஆகிய மறைவட்டங்களைப் பிரித்து குழித்துறை மறைமாவட்டத்தை ஏற்படுத்தினார். குழித்துறை மறைமாவட்டத்தின் ஆயராக அருள்பணி. ஜெரோம்தாஸ் வறுவேல் S.D.B. நியமிக்கப்பட்டார். அருள்பணி ஜெரோம்தாஸ் வறுவேலின் ஆயர் திருநிலைப்பாடு 24.02.2015 அன்று சித்திரங்கோட்டில் நடைபெற்றது. ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ் மற்றும் இரு ஆயர்கள் அருள்பணி. ஜெரோம்தாஸ் வறுவேலை ஆயராகத் திருநிலைப்படுத்தினார்கள். ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ் அவர்களின் ஆயர் திருநிலைப்பாட்டின் வெள்ளி விழா 2014ஆம் ஆண்டு கொண்டாடப் பட்டது. அதன் நினைவாக நாகர்கோவில் கார்மல்

---

15. *History of the Diocese of Kottar* (Published in the Diocese of Kottar - Website)
16. *History of the Diocese of Kottar* (Published in the Diocese of Kottar - Website)
17. *History of the Diocese of Kottar* (Published in the Diocese of Kottar - Wetwsite)
18. *முத்திபேறு பெற்ற மறைசாட்சி தேவசகாயம்பிள்ளை வரலாற்று மலர்,* 02.12.2012, கோட்டாறு மறைமாவட்டம், ப. 210

நகரில் ஏற்கனவே செயல்பட்டு வந்த சேவியர் மறைப்பணி பயிற்சி நிலையத்தை புனித அலோசியஸ் இளம் குருமடத்திற்கு மாற்றி விட்டு, அந்தக் கட்டிடத்தில் பிஷப் ரெமிஜியுஸ் CBSE என்ற பள்ளி 03.06.2015 அன்று துவங்கப்பட்டது. அவர் 20-05-2017 அன்று ஆயர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

**ஆயர் நசரேன் சூசை**


ஆயர் நசரேன் சூசை

திருத்தந்தை பிரான்சிஸ் கோட்டாறு மறைமாவட்டம் இராஜாக்கமங்கலம்துறை பங்கைச் சார்ந்த அருள்பணி. நசரேன் அவர்களைக் கோட்டாறு மறைமாவட்டத்தின் ஆறாவது ஆயராக 20-05-2017 அன்று நியமித்தார்.[19]

29.06.2017 அன்று ஆயர் இல்ல வளாகத்தில் அருள்பணி. நசரேன் ஓய்வுபெற்ற ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ் மற்றும் இரு ஆயர்களால் திருநிலைப் படுத்தப்பட்டு, அன்றைய தினமே கோட்டாறு ஆயராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஆயர் நசரேன் பொறுப்பேற்ற பிறகு பொதுநிலையினருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. 14.07.2019 அன்று ஆயர் இல்ல வளாகத்தில் உள்ள புனித ஜோசப் மெட்ரிக் பள்ளியில் வைத்து மறைமாவட்ட அளவில் முதல் முறையாகப் பொதுநிலையினர் தினவிழா கொண்டாடப்பட்டது. இதில் ஏராளமான பொதுநிலையினர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. ஆயர் நசரேனால் பள்ளிகளின் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது. இதனால் ஆயர் ஞாயிறு பங்கு சந்திப்புக்குச் செல்லும்போது அப்பங்கில் பள்ளிக்கூடம் இருந்தால் இரவில் அந்தப் பங்கில் தங்கி விட்டு அடுத்த நாள் அப்பங்கில் உள்ள பள்ளியைச் சந்திக்கிறார். இந்த நடைமுறை முற்காலத்தில் இருந்ததுதான். பின்னர் சில காலம் இல்லாமல் இருந்தது. தற்போது ஆயர் நசரேன் மீண்டும் அதைத் துவங்கியுள்ளார். ஆயர் இல்ல வளாகத்திலுள்ள ஆயர் ஆரோக்கியசாமி அருள்வாழ்வு இல்லம் சுமார் 90 இலட்ச ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு 11.02.2020 அன்று ஆயர் நசரேன் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டது.[20] ஆயர் இல்ல வளாகத்தின் முன்வாயிலருகே இருந்த புனித அந்தோனியார் குருசடி இடிக்கப்பட்டு புதிய குருசடி கலைநயத்துடன் கட்டப்பட்டு 21.07.2020 அன்று ஆயர் நசரேனால் புனிதப்படுத்தப்பட்டது.[21] கோட்டாறு மறைமாவட்டத்தின் பொருளாதாரத் தன்னிறைவு திட்டத்தின் ஒரு அங்கமாக “மகிழ்” மரச்செக்கு தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய், நல்லெண்ணெய் போன்றவை தயாரித்து நியாயமான விலையில் விற்பனைச் செய்ய முடிவு செய்யப்பட்டது. இதற்காக மகிழ் சமூகசேவை சங்கம் என்ற நிறுவனம் பதிவு செய்யப்பட்டது. 10.11.2020 அன்று மறைமாவட்ட ஆயர் நசரேன் சூசை மணவிளையில் அமைந்துள்ள இந்த எண்ணெய் ஆலையை மந்திரித்து எண்ணெய் உற்பத்தியைத் தொடங்கி வைத்தார்.[22] மறைமாவட்டத்தின் வருவாயை பெருக்கும் நோக்கோடு திருநெல்வேலி மாவட்டம் இருக்கன்துறையில் 1 ஏக்கர் நிலம் மறைமாவட்டத்தால் விலைக்கு வாங்கி ரூபாய் 1,55,00,000 செலவில் காற்றாலை அமைக்கப்பட்டுள்ளது. மறைமாவட்டத்தின் வருவாய் மற்றும் செலவினங்களின் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும் என்பதற்காக மறைமாவட்டத்தின் நிதிநிலை அறிக்கையை மறைமாவட்ட மேய்ப்புப்பணிப் பேரவையிலும், அருள்பணியாளர்கள் பொதுக்குழு கூட்டத்திலும் வாசிக்கும் முறையை ஆயர் நசரேன் சூசை அறிமுகப்படுத்தியது மறைமாவட்ட மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. 1984ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பொதுநிலையினர் பணிக்குழுவின் செயலராக ஆண்கள் மட்டுமே நியமிக்கப்பட்டு வந்தனர். தற்போது முதல் முறையாக தென்தாமரைக்குளம் பங்கைச் சார்ந்த செல்வி K. மர்சலின் ரஜீலா பொதுநிலையின் பணிக்குழு செயலராக ஆயர் நசரேன் சூசையால் நியமிக்கப்பட்டுள்ளது அனைவரின் பாராட்டைப் பெற்றுள்ளது. தொடர்ந்து மறைமாவட்டம் ஆயர் நசரேன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

19. *History of the Diocese of Kottar* (Published in the Diocese of Kottar - Website)
20. ஆயர் ஆரோக்கியசாமி அருள் வாழ்வு இல்லம், *கல்வெட்டு*, நாள் 11.2.2020
21. புனித அந்தோனியார் குருசடி, ஆயர் இல்ல வளாகம், *கல்வெட்டு*, நாள் 21.07.2020
22. *Kottar News Letter* 2020 December, p. 35

# 3 பஞ்சவங்காடு வரலாறு

குருசடி மற்றும் மந்தங்காடு ஆகிய பகுதிகள் ஆரம்ப காலத்தில் பஞ்சவங்காடு என்று அழைக்கப்பட்டன. தற்போதும் குருசடி புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா விளம்பரங்களில் பஞ்சவங்காடு என்று குறிப்பிடப்படுகிறது. எனவே குருசடிப் பங்கு வரலாற்றைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் பஞ்சவங்காடு வரலாறை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**பஞ்சவங்காடு - பெயர்க் காரணம்**

திருவனந்தபுரத்திலிருந்து திருச்செந்தூர் வரை செல்லும் சாலை மங்கம்மாள் சாலை எனப்படும். அந்தச் சாலை பஞ்சவங்காட்டைத் தொட்டுத் தென்பகுதியில் கிழக்கு மேற்காகச் சென்றது. இந்தச் சாலை 90 அடி அகலம் உடையது. தற்போது பீச் ரோடு சந்திப்பிலிருந்து குருசடி புனித அந்தோனியார் ஆலய நுழைவாயில் வரையிலுமுள்ள சாலையே முற்காலத்தில் மங்கம்மாள் சாலையாகும். மேலும் ஆலய வளாகத்தில் தெற்குப்பகுதி வழியாக அந்தச் சாலை சென்றது. தற்போது பல இடங்களில் அந்தச் சாலை இருந்த தடயம் எதுவும் இல்லை. தற்போது மங்கம்மாள் சாலையில் தெற்குத்தெருவில் உள்ள சில வீடுகளும், ஆலய கிணறும் பள்ளத்துத் தெருவில் உள்ள வீடுகளும் உள்ளன.

குருசடி புனித அந்தோனியார் ஆலயம் வெளியிட்டுள்ள ஜூபிலி 2000 சிறப்பு மலரில் திரு. எஸ். பன்னீர்செல்வம் எழுதியுள்ள கட்டுரையில் ஐந்து வகையான மரங்கள் அடர்ந்து வளர்ந்த பகுதியாக இப்பகுதி இருந்ததால் பஞ்சவங்காடு என்று அழைக்கப் பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.[1] இந்தப் பகுதியில் உள்ள கிராமங்களின் பெயர்கள் மந்தங்காடு, கூத்தங்காடு, எறும்புக்காடு, புன்னக்காட்டுவிளை என்றிருந்ததால் இப்பகுதி பஞ்சவங்காடு என்று அழைக்கப்பட்டது என்ற செவிவழிச் செய்தியும் உள்ளது. ஆனால் மேற்கண்ட கிராமங்கள் தோன்றுவதற்கு முன்பே பஞ்சவங்காடு தோன்றியுள்ளது.

பஞ்ச பாண்டவர்கள் 12 ஆண்டுகள் காட்டில் வாழ்ந்து நாடு திரும்பினர். பதிமூன்றாவது ஆண்டு இவர்கள் பல மாறு வேடங்களில் வாழ்ந்தனர் என்றும் பஞ்சவர்கள் 13ஆவது ஆண்டில் இங்கு வந்து வாழ்ந்ததால் மரங்கள் அடர்ந்த இந்தக் காட்டிற்குப் பஞ்சவங்காடு என்று பெயராயிற்று என்று *பஞ்சவங்காடு வரலாறு* என்ற புத்தகத்தில் அதன் ஆசிரியர் திரு. ஸாரதி ஸெல்வராஜ் கூறுகிறார்.[2] திருச்சிலுவைக் கல்லூரியின் பொன்விழா ஆண்டு மலரிலும் குருசடி ஊர் முற்காலத்தில் பஞ்சவங்காடு என்று அழைக்கப்பட்டதாகவும், மகாபாரதத்தில் சொல்லப்பட்டுள்ள பஞ்ச பாண்டவர்கள் இங்கு வந்து வாழ்ந்ததால் இப்பகுதி பஞ்சவங்காடு என்று அழைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது.[3]

1. *ஜூபிலி 2000 சிறப்பு மலர், குருசடிப் புனித அந்தோணியார் தேவாலயம்,* ப. 13
2. மனோன்மணி ஸாரதி ஸெல்வராஜ், *பஞ்சவங்காடு வரலாறு* (நாகர்கோவில் : நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், 2002). ப.11
3. *Golden Jubilee Souvenir 1965-2015, Holy Cross College (Autonomous)* (Nagercoil : Printpoint, 2015) p. 40

எனினும் இந்த பகுதிக்குப் பஞ்சவங்காடு என்று பெயர் வரக் காரணம் எது என உறுதியாக அறிய முடியவில்லை.

**பஞ்சவங்காட்டின் எல்லைகள்**

பஞ்சவங்காடு சுமார் 90 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். இதன் எல்லைகள் கிழக்கு : வட்டக்கரை செல்லும் சாலையில் (மங்கம்மாள் சாலை) பிரகாசம் தெரு முன்பிருந்து நேர்வடக்காகக் கூத்தன்காடு பேருந்து நிறுத்தம் முன்புள்ள சுவாமி விவேகானந்தா தெரு வரை.

தெற்கு : வட்டக்கரை செல்லும் சாலையில் பிரகாசம் தெரு முன்பிருந்து மேற்காகக் குருசடி புனித அந்தோனியார் ஆலய வளாக நுழைவாயில் வரை அமைந்துள்ள சாலையும் ஆலய வளாகத்தில் தெற்குத்தெருவில் உள்ள வீடுகளுக்குப் பின்புறமாக குருசடி ஆற்றங்கரை வரை செல்லும் மழைநீர் பாய்ந்தோடும் ஓடை வரை.

மேற்கு : ஆற்றிற்கு கிழக்குப் பக்கம் குருசடி ஆலயக் கல்லறைத் தோட்டத்திற்குப் பின்பக்கம் இருந்து நேர்வடக்காகக் காமராஜர் சாலை வரை

வடக்கு : காமராஜர் சாலை (திருஇருதய அருள்சகோதரிகள் இல்லச் சாலை)

**நில உரிமைகள்**

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் மற்ற சமஸ்தானங்கள் அல்லது ஜமீன் போன்று அல்லாமல் சற்று வித்தியாசமாக மக்களுக்கு நிலங்கள்மீது உரிமை வழங்கப்பட்டது. திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மா கொல்லம் ஆண்டு 5.6.925 (18.01.1750 AD) அன்று தன்னுடைய சமஸ்தானம் முழுவதையும் திருவனந்தபுரம் பத்மனாபசுவாமிக்கு தானமாக எழுதிக் கொடுத்தார்.[4] பின்னர் பத்மனாப சுவாமியின் அடிமையாக இருந்து சமஸ்தானத்தை ஆட்சி செய்தார். இதனால் நிலம் அனைத்தும் பத்மனாபசுவாமிக்குச் சொந்தமானதாகும். இந்த நிலங்களைப் பண்டாரப் பாட்டம், பண்டார ஒற்றி, இனாம், பண்டார ஜென்மம் போன்ற பல வழிகளில் நாயர், பிராமணர், வெள்ளாளர் போன்ற சாதிகளைச் சார்ந்த மக்களுக்கு அரசால் கொடுக்கப்பட்டது. அவர்களிடமிருந்து நாடார்களும் மற்ற சாதியினரும் விலைக்கு வாங்கினர். நமது பஞ்சவங்காட்டில் உள்ள சுமார் 90 ஏக்கர் நிலம் கிருஷ்ணன்கோவிலைச் சார்ந்த ஒரு பிராமணருக்கு பண்டார ஒற்றியாகக் கொடுக்கப்பட்டது. அவருடைய பெயரை அறிய முடியவில்லை. பஞ்சவங்காட்டில் மேற்குப் பகுதியில் உள்ள 45 ஏக்கர் நிலம் பண்டார ஒற்றி 192லும், கிழக்குப்பகுதியில் உள்ள 45 ஏக்கர் நிலம் பண்டார ஒற்றி 193லும் உள்பட்டதாகும். தற்போதும் பஞ்சவங்காட்டிலுள்ள சொத்து ஆவணங்களில் இந்தப் பண்டார ஒற்றி எண்களைக் காணமுடியும். பஞ்சவங்காட்டின் தெற்குப்பகுதியான மங்கம்மாள் சாலையின் தெற்குப்பக்கம் உள்ள நிலங்கள் செட்டியார் சமுதாய மக்களுக்கு உரிமைப்பட்டதாக இருந்தது.

**பண்டார ஒற்றி**

பண்டார ஒற்றி என்பது அதன் பெயரிலிருந்தே தெரிவதுபோல் அடமானத்தின் தன்மை உடையது. அரசு மக்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையைக் கடனாகப் பெற்றுக்கொண்டு, அதற்கு ஏற்ப குறிப்பிட்ட அளவு நிலங்களை ஒற்றியாகக் கொடுக்கும். கடனாக அரசுக்குக் கொடுத்த தொகைக்கு ஒரு சிறிய தொகை வட்டியாகக் கணக்கிடப்படும். பண்டார ஒற்றி வகையில் கிடைத்த நிலத்திற்கு அரசுக்கு செலுத்த வேண்டிய தீர்வைத் தொகையில் வட்டித் தொகையைக் கழித்து மீதமுள்ள தொகையைத் தீர்வையாகச் செலுத்த வேண்டும். நிலத்தின்மீது உள்ள ஒற்றி உரிமையை விற்கும்போது ஒற்றித் தொகையில் 25% கழிக்கப்பட்டு அதன் வட்டித் தீர்வையுடன் சேர்க்கப்பட்டது. இந்த நடைமுறை ஒற்றி விலக்கம் எனப்படும். இவ்வாறாக ஒவ்வொரு கைமாற்றத்தின் போதும் 25% ஒற்றித் தொகை கழிக்கப்பட்டு நான்காவது முறையாகக் கைமாற்றம் செய்யும்போது முழுக் கடன்

4. M.Gopalakrishnan, *Kanyakumari District Gazetteer* (Madras: Madras Printers Industrial Co-operative Society, 1995) p. 86

தொகையும் இல்லாமல் போய் நிலம் பண்டாரப் பாட்டம் வகைக்கு மாற்றப்படும். அதன் பிறகு முழுத் தீர்வைத் தொகையையும் செலுத்த வேண்டும்.[5]

சொத்து கைமாறும்போது நிலவரி கூடுவதால் மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். இதனால் மக்கள் சொத்துக்கள் கைமாறியதை அரசுக்குத் தெரியப்படுத்தாமல் முன் உரிமையாளர் பெயரிலேயே நிலத் தீர்வை செலுத்தி வந்தனர். பின்னர் 1886ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட புதிய நிலவரித் திட்டத்தின்போது ஒற்றி விலக்கம் என்னும் நடைமுறை ஒழிக்கப்பட்டு இந்நிலங்கள் பண்டார பாட்டம் என்னும் தலைப்புக்கு மாற்றப்பட்டன.[6]

**பஞ்சவங்காட்டிற்கு நாடார்களின் வருகை**

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி அருகே உள்ள ஒரு கிராமத்தைச் சார்ந்த நைனார் நாடாரும் அவருடைய தம்பி ரெங்கநாதன் நாடாரும் பஞ்சவங்காட்டை முதன் முதலில் விலைக்கு வாங்கினார்கள்.[7] ஆனால் குருசடி புனித அந்தோனியார் ஆலயம் வெளியிட்டுள்ள ஜூபிலி 2000 சிறப்பு மலரில் திரு. எஸ். பன்னீர்செல்வம் எழுதியுள்ள கட்டுரையில் அவ்விரு சகோதரர்களும் திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரின் தென்புறம் அமைந்துள்ள கலந்தபனை என்ற ஊரிலிருந்து குடிபெயர்ந்து வந்து பஞ்சவங்காட்டை விலைக்கு வாங்கினர் என்று குறிப்பிடுகிறார்.[8] பஞ்சவங்காட்டை விலைக்கு வாங்கிய இந்து நாடார்கள் எந்தப் பகுதியிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் என்பதற்கு ஆவணச் சான்று எதுவும் கிடைக்கவில்லை. கலந்தபனையில் அருள்மிகு ஐந்து வீட்டு சுவாமியைக் குல தெய்வமாக வணங்குபவர்கள் யாரும் இல்லை. எனவே அண்ணனும் தம்பியும் உடன்குடி அருகே இருந்து வந்தவர்கள் என்ற கூற்று உண்மையாக இருக்கலாம். தமது தோட்டத்திற்குள் மாடு நுழைந்து மேய்ந்து கொண்டிருந்ததைப் பார்த்து கல்லால் எறிந்து விரட்டும்போது தவறி கர்ப்பிணிப் பெண்மீது பட்டு அவர் இறந்து விட்டார். இதனால் தங்கள்மீது வழக்கு வரும் என்று அஞ்சி அண்ணன் தம்பி இருவரும் மங்கம்மாள் சாலை வழியாகத் திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்குள் வந்தனர். தங்கள் குல தெய்வமான ஐந்து வீட்டு சுவாமிக்கு நேர்ச்சையாக தாங்கள் வளர்த்த ஆட்டுக் கிடாவையும் அழைத்து வந்தனர். தங்கள் குல தெய்வத்தை மனதில் நினைத்துக் கொண்டு இந்த ஆட்டுக்கிடா எந்த இடத்தில் படுக்கிறதோ அந்த இடத்தில் குடியிருக்க வேண்டுமென்று முடிவு செய்தனர். ஆட்டுக்கிடா மங்கம்மாள் சாலையோரம் உள்ள தம்மத்துக்கோணத்தில் படுத்தது. எனவே தம்மத்துக்கோணத்தில் இருவரும் தங்கினர். பின்னர் அந்த இடம் தங்குவதற்குச் சரியில்லை என்பதைத் தங்கள் குலதெய்வம் சில அறிகுறிகள் மூலம் உணர்த்தியதால் தம்மத்துக்கோணத்திற்கு ஒரு கிலோ மீட்டர் கிழக்கே உள்ள பஞ்சவங்காட்டிற்கு வந்து அதன் உரிமையாளரான பிராமணரைச் சந்தித்து சுமார் 90 ஏக்கர் பரப்பளவுள்ள பஞ்சவங்காட்டை விலைக்குக் கேட்டனர். பிராமணரும் சம்மதித்து அந்நிலத்தை அவர்களுக்கு விற்பனை செய்தார். இதனால் பஞ்சவங்காடு இந்து நாடார்களின் கைக்கு வந்தது. இந்த விற்பனை எந்த ஆண்டு நடைபெற்றது என்பதை அறிய முடியவில்லை. பஞ்சவங்காடு நாடார்களின் கைக்கு வந்ததால், ஏற்கெனவே பிராமணருக்காகப் பஞ்சவங்காட்டை மேற்பார்வை செய்து வந்த இரண்டு வெள்ளாளர் குடும்பத்தினர் தங்கள் சொந்த ஊரான இராமபுரத்திற்குத் திரும்பினர்.[9]

5. *Travancore Land Revenue Manual, Vol. III Code of Instrucation.* p. 10
6. *ibid.* p. 10
7. மனோன்மணி ஸாரதி ஸெல்வராஜ், *பஞ்சவங்காடு வரலாறு,* ப. 18
8. *ஜூபிலி 2000 சிறப்பு மலர்,* குருசடி, ப. 13
9. மனோன்மணி ஸாரதி ஸெல்வராஜ், *பஞ்சவங்காடு வரலாறு,* ப. 22

# 4 பஞ்சவங்காட்டில் கிறிஸ்தவம்

பஞ்சவங்காட்டை நயினார் நாடாரும் அவருடைய தம்பி ரெங்கநாதன் நாடாரும் விலைக்கு வாங்கியதாக முந்தைய அத்தியாயத்தில் கண்டோம். மேற்குறிப்பிட்ட அண்ணன் தம்பியின் நேரடி வாரிசுகள்தாம் மந்தங்காட்டைச் சார்ந்த இந்து நாடார்களும் மற்றும் மந்தங்காட்டைப் பூர்வீகமாகக் கொண்டு கிறிஸ்தவ மதத்தைத் தழுவி தற்போது குருசடிப் பங்கைச் சார்ந்துள்ள சில குடும்பங்களும் ஆகும். நயினார் நாடாரும் அவருடைய தம்பியும் தங்கள் குல தெய்வமான அருள்மிகு ஐந்து வீட்டு சுவாமிக்கு ஒரு கோயில் அமைத்து பஞ்சவங்காட்டில் வாழ்ந்து வந்தனர். பஞ்சவங்காடு இந்து நாடார்களுக்குப் பாத்தியப்பட்டதால் இங்குக் கிறிஸ்தவர்கள் யாரும் குடியிருக்கவில்லை. பஞ்சவங்காட்டைத் தொட்டு தென்புறமாகச் சென்ற மங்கம்மாள் சாலையில் அரசாங்கத்தால் கிணறு ஒன்று தோண்டப்பட்டது. மேலும் கிணற்றின் அருகே சாலை ஓரத்தில் சாலையில் பயணிப்போர் தங்கி இளைப்பாற சாலை மண்டபமும் அரசால் கட்டப்பட்டது. அந்தக் கிணறு தற்போதும் ஆலய வளாகத்தில் ஆலயத்தின் தென்புறம் பள்ளத்துத் தெருவிற்குத் திரும்பும் இடத்தின் கிழக்குப் பகுதியில் உள்ளது. சாலை மண்டபம் தற்போது இல்லை. இப்பகுதியில் தண்ணீர் வசதி இருந்ததால் இங்கு மீன் சந்தை கூடியது. தற்போதைய ஆலய வளாகத்தின் கிழக்கு நுழைவாயிலில் அமைந்துள்ள நூற்றாண்டு விழா வளைவின் அருகில் தினமும் மீன் சந்தை கூடியது (அந்தச் சந்தைதான் 1966ஆம் ஆண்டு முதல் குருசடி வடக்குத்தெருவில் திருமதி மனோன்மணி நாடாச்சிக்குச் சொந்தமான நிலத்தில் இடமாற்றம் செய்யப்பட்டு மனோன்மணி சந்தை என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது). மீன் வியாபாரம் செய்வதற்காகக் கடியப்பட்டணம், பொழிக்கரை, பெரியகாடு போன்ற ஊர்களிலிருந்து பெண்கள் நடந்து, மீன்களைத் தலைச் சுமையாகக் கொண்டு வந்து விற்பனை செய்தனர். சில நாட்களில் மாலை நேரம்வரை இங்கிருந்து விற்பனை செய்தனர். அத்தகைய நாட்களில் வியாபாரம் முடிந்து ஊர் திரும்ப முடியாதபோது மீனவப் பெண்கள் மங்கம்மாள் சாலையோரம் இருந்த சாலை மண்டபத்தில் தங்குவது வழக்கம். மங்கம்மாள் சாலையின் இரு புறமும் பெரிய ஆலமரங்கள் நின்றன. இரவு நேரத்தில் செபம் செய்ய ஒரு சிலுவையை மங்கம்மாள் சாலையோரம் ஆலமரத்தின் அடியில் நட்டனர். மந்தங்காட்டைச் சார்ந்த இந்து நாடார்களிடம் புன்னைக்காய் எண்ணெய் வாங்கி விளக்குக் கொழுத்திச் செபம் செய்தார்கள். தங்களது அச்சத்தைப் போக்க புனித அந்தோனியாரை நினைத்துச் செபம் செய்தனர். அந்த மீனவப் பெண்கள் சிலுவையை நட்ட இடத்தில் நாளடைவில் இராமன்புதூர், புன்னக் காட்டுவிளை, தளவாய்புரம், மறவன்குடியிருப்பு, வடக்குக்கோணம் போன்ற ஊர்களிலிருந்து பலர் வந்து வணங்கத் தொடங்கினர்.[1] ஏனெனில் 1697ஆம் ஆண்டிற்குப் பிறகு உள்நாட்டில் நாடார்கள் பலர் மருங்கூர், நேமம் போன்ற மறைபரப்புத் தளங்களுக்குச் சென்று மனமாற்றம் பெற்று கிறிஸ்தவ மதத்தைத் தழுவியிருந்தனர்.

1. *ஜூபிலி 2000 சிறப்பு மலர்*, குருசடி, ப. 13.

தற்போதும் மந்தங்காட்டைச் சார்ந்த இந்து நாடார்கள் மீன் விற்பனை செய்ய வந்த மீனவப் பெண்கள்தான் பஞ்சவங்காட்டில் முதன் முதலில் சிலுவையை நட்டு வழிபட்டனர் என்று தங்கள் முன்னோர்கள் கூறியதாக கூறுகின்றனர். இப்பகுதியில் முதன் முதலில் குடியேறியவர்கள் மந்தங்காட்டைச் சார்ந்த இந்து நாடார்கள் என்பதால் அவர்கள் மூதாதையர்கள் கூறிய கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதாக உள்ளது.

எனினும் நமது குருசடி புனித அந்தோனியார் ஆலயத்தை புனிதப்படுத்த வருகைத்தந்த அப்போதைய கொல்லம் மறைமாவட்ட ஆயர் அலோசியஸ் மரிய பென்சிகருக்கு 05.01.1911 அன்று நமது ஆலய வளாகத்தில் வைத்துக் கொடுக்கப்பட்ட வரவேற்பின்போது திரு. D. பிரான்சிஸ் முடுதோம் வாசித்து அளித்த வரவேற்புரையில் இவ்விடத்தில் அருள்பணி. அலெக்ஸ் என்பவர் முதன் முதலில் ஓலைக் கூரையிலான சிறிய ஆலயத்தை நம் மூதாதையர்களை வைத்துக் கட்டும்படிச் செய்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (காண்க பக்கம் 26-29). மீனவப் பெண்கள் சிலுவையை எந்த ஆண்டில் நட்டனர் என்பதற்கு எந்த ஆவணச் சான்றும் நமக்குக் கிடைக்கவில்லை. அருள்பணி. அலெக்ஸ் எந்த ஆண்டில் ஓலைக் கூரையிலான ஆலயம் கட்டினார் என்பதும் அந்த ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை. மீனவப் பெண்கள் சிலுவையை நட்ட இடத்தில் இராமன்புதூர், புன்னக்காட்டுவிளை, தளவாய்புரம், மறவன்குடியிருப்பு, வடக்குக்கோணம் போன்ற ஊர்களிலிருந்து மக்கள் வந்து வழிபட்டதால் அந்த இடத்தில் அருள்பணி. அலெக்ஸ் ஓலைக் கூரையிலான ஆலயத்தை நம் முன்னோர்களை வைத்துக் கட்டியிருக்கவேண்டும். மீனவப் பெண்கள் சிலுவையை நட்ட ஆண்டில் குருசடியில் கிறிஸ்தவம் தோன்றியுள்ளது. ஆனால் அந்த ஆண்டைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மீனவப் பெண்கள் சிலுவையை நட்டு எத்தனை ஆண்டுகள் கழித்து அருள்பணி. அலெக்ஸ் ஓலைக் கூரையிலான ஆலயத்தைக் கட்டினார் என்பதையும் அறிய முடியவில்லை. அருள்பணி. அலெக்ஸ் 1779ஆம் ஆண்டுமுதல் 1823ஆம் ஆண்டுவரைத் தொடர்ந்து 44 ஆண்டுகள் கோட்டாறு பங்கில் பங்குத்தந்தையாகப் பணியாற்றி 1823ஆம் ஆண்டு இறந்தார். அவருடைய கல்லறைக் கோட்டாறு புனித சவேரியார் பேராலயத்தில் அமைந்துள்ள விண்ணேற்பு அன்னைச் சிற்றாலயத்தில் உள்ளது. அருள்பணி. அலெக்ஸ் அவர்களின் முழுப்பெயர் அலெக்ஸ் டி சூசா ஆகும். அந்தக் கல்லறையில் அருள்தந்தை அலெக்சுடைய பெயர் போர்ச்சுக்கீசிய மொழியில் Fr. Aleixo de Souza என்று எழுதப்பட்டுள்ளது. அவர் போர்ச்சுக்கல் நாட்டைச் சார்ந்த குருவாக இருக்கலாம் என்று அருள்பணி வில்லவராயர் தன்னுடைய புத்தகத்தில் குறிப்பிடுகிறார்.[2]

மேலஆசாரிபள்ளம் பங்கின் நூற்றாண்டு விழா சிறப்பு மலரில் ஆசாரிபள்ளம் கோவில் விளையிலிருந்த புனித அந்தோனியார் ஆலயம் 1705ஆம் ஆண்டு "பஞ்சவன்காடு" குருசடிக்கு மாற்றப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[3] இதற்கு ஆதாரமாக பேரருள்பணி J. M. வில்லவராயன் எழுதிய "கோட்டாறு மறைமாவட்டம்" என்ற புத்தகம் காட்டப்படுகிறது. ஆனால் பேரருள்பணி. J. M. வில்லவராயன் எழுதிய புத்தகத்தில் ஆசாரிபள்ளத்தில் முடிவு பெறாத ஆலயம் 1705ஆம் ஆண்டு தீக்கிரை யாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர அந்த ஆலயம் பஞ்சவங்காடு குருசடிக்கு மாற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படவில்லை.[4] எனவே ஆசாரிபள்ளத்திலிருந்த புனித அந்தோனியார் ஆலயம் குருசடிக்கு மாற்றப்பட்டது என்ற கூற்றிற்கு ஆதாரமில்லை. கோட்டாறு மறைமாவட்டத்தில் பராமரிக்கப்பட்டு வரும் குருசடிப் பங்குப் பதிவேட்டில் குருசடியில் ஆலயம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு 1790 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அருள்பணி. அலெக்ஸ் 1790ஆம் ஆண்டு கோட்டாறு பங்குத்தந்தையாக இருந்துள்ளதால் 1790ஆம் ஆண்டு குருசடியில் ஓலைக் கூரையிலான ஆலயம் தோற்றுவிக்கப் பட்டது என்பதே வரலாற்று உண்மை எனக் கருத வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

2. J.M. Villavarayan, *The Diocese of Kottar*, p. 26
3. புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம், மேலஆசாரிபள்ளம், *நூற்றாண்டு விழா சிறப்பு மலர்,* ப. 8.
4. J.M. Villavarayan, *The Diocese of Kottar*, p. 21.

**சலவைத் தொழிலாளர்களும் கேரள முதலிகளும் வருகை**

மந்தங்காட்டைச் சார்ந்த இந்து நாடார்கள் பஞ்சவங்காட்டை விலைக்கு வாங்கியப் பின்னர் அவர்களுக்கு வேலை செய்யச் சலவைத் தொழிலாளர்களும் கேரள முதலிகளும் வந்தனர். சலவைத் தொழிலாளர்கள் பஞ்சவங்காட்டில் எந்த இடத்தில் முதலில் குடியிருந்தனர் என்பதை அறிய முடியவில்லை. சலவைத் தொழிலாளர்கள் பஞ்சவங்காட்டிற்கு வந்து சில ஆண்டுகளிலேயே மங்கம்மாள் சாலையின் தெற்குப்பக்கம் குருசடி சந்திப்பு அருகில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை விலைக்கு வாங்கி அங்குக் குடியேறினர். கேரள முதலிகள் குருசடிச் சந்திப்பின் வடக்குப்பக்கம் உள்ள நிலத்தில் குடியிருந்தனர். அந்த நிலம் மந்தங்காட்டைச் சார்ந்த நிலக்கிழார் திரு. C. நாராயணபெருமாள் நாடாருக்குச் சொந்தமானது. அந்த நிலத்தில் தற்போது மனோன்மணி பவனமும், ஸ்டான்லி றைஸ் மில்லும் உள்ளன. ஏறக்குறைய 1920ஆம் ஆண்டில் கேரள முதலிகள் குருசடி ஊரில் கிழக்குப் பக்கம் சுமார் 5 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கி, பின்னர் அங்குக் குடியேறினர். ஆரம்பக் காலத்தில் சலவைத் தொழிலாளர்களும் கேரள முதலிகளும் இந்து சமயத்தைச் சாந்தவர்களாக இருந்தனர். பிற்காலத்தில் சலவைத் தொழிலாளர்கள் அனைவரும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர். கேரள முதலி சமூகத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பாலரும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர். அக்காலத்திலிருந்தே சலவைத் தொழிலாளர்களும் கேரள முதலிகளும் நல்ல வசதியாக வாழ்ந்தனர். சலவைத் தொழிலாளர்களான திருவாளர்கள். எலியாஸ், வஸ்த்தீன் ஆகியோரின் வீடுகளில் கிணறுகள் உண்டு. அதுபோன்று கேரள முதலிகளுக்கும் தனியாகக் கிணறு இருந்தது.

**பஞ்சவங்காட்டில் இரண்டாவது சிறிய ஆலயம் கட்டப்படுதல்**

சிலுவை நடப்பட்டிருந்த இடத்தில் அருள்பணி. அலெக்ஸ் என்பவரால் 1790ஆம் ஆண்டு ஓலைக் கூரையிலான சிற்றாலயம் அமைக்கப்பட்ட இடம் மங்கம்மாள் சாலையோரமாகும். அந்தச் சிற்றாலயம் கோட்டாறு பங்குடன் இணைக்கப்பட்டது. குறுகிய காலத்திற்குள்ளே அங்கு ஒரு சிறிய ஆலயம் செங்கல் மற்றும் சுண்ணாம்புக் கலவையால்



சின்னக் கோவிலின் பழைய தோற்றம்

கட்டப்பட்டது. அந்த ஆலயம்தான் தற்போது கொடி மரத்தின் தென்கிழக்குப் பக்கம் உள்ள சிறிய ஆலயம் ஆகும். ஆனால் குருசடி புனித அந்தோனியார் ஆலயக் குடும்ப கையேட்டில் 1690ஆம் ஆண்டில் சிறிய ஆலயம் கட்டப்பட்டதாகவும், 1705ஆம் ஆண்டு ஓலைக் கூரையிலான ஆலயம் கட்டப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.[5] 2011 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட குடும்பக் கையேடுகளில் மட்டுமே மேற்கண்ட தகவல்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால் இதற்கு எந்த ஆவணச் சான்றும் கிடையாது. ஆனால் 05.01.1911 அன்று கொல்லம் ஆயருக்கு நமது ஆலய வளாகத்தில் வைத்து வாசித்து அளித்த வரவேற்புரையின்படி முதலில் ஓலைக் கூரையிலான ஆலயம் கட்டப்பட்டுள்ளது (காண்க பக்கம் 26 - 29). அதனைத் தொடர்ந்து குறுகிய காலத்திற்குள் செங்கல் மற்றும் சுண்ணாம்புக் கலவையால் சிறிய ஆலயம் கட்டப் பட்டுள்ளது. எனவே குருசடி ஊரில் முதலில் ஓலைக் கூரையிலான சிறிய ஆலயம் கட்டப்பட்டது. சிறிது காலம் கழித்து அங்குச் செங்கல் மற்றும் சுண்ணாம்புக் கலவையால் இன்னொரு சிறிய ஆலயம் (தற்போது கொடிமரத்திற்கு தென்கிழக்கே அமைந்துள்ளது) கட்டப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும். இந்த இரண்டாவது சிறிய ஆலயம் கட்டப்பட்ட ஆண்டைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் 1790ஆம் ஆண்டிற்குப் பிறகு அது கட்டப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. அதை மக்கள் தற்போதும் சின்னக்கோவில் என்றும் அழைக்கின்றனர். தொடக்கக் காலத்தில் குருசு (சிலுவை) நட்டு மக்கள் வழிபட்டதால் இந்தப் பகுதி குருசடி என்று அழைக்கப்பட்டிருக்கலாம். இந்து நாடார்கள் தாங்கள் இருந்தப் பகுதிக்கு மந்தங்காடு என்று பெயரிட்டனர். தொடக்கக் காலத்திலேயே இப்பகுதிக்கு குருசடி என்று பெயரிடப்பட்டதால்தான் நம்மிடம் கிடைத்த ஆலயம் சம்மந்தப்பட்ட எந்த ஆவணத்திலும் பஞ்சவங்காடு என்ற பெயர் காணப்படவில்லை. 1916ஆம் ஆண்டு நமது ஆலயத்தின் பெயரில் வாங்கப்பட்ட விலை ஆவணம் மற்றும் தானப் பத்திரங்களிலும் “மந்தங்காடு குருசடி அர்ச்சிஸ்ட அந்தோணியார் கோவில்” என்றே குறிப்பிடப் பட்டுள்ளது.[6]

### ஆலயத்திற்கு நிலம் தானமாகப் பெறுதல்

இராமன்புதூர், புன்னைநகர், தளவாய்புரம், மறவன்குடியிருப்பு, வடக்குக்கோணம் போன்ற ஊர்களிலிருந்து மக்கள் குருசடியிலுள்ள சிறிய ஆலயத்தில் வந்து வழிபடத் தொடங்கினர் என்று முன்னர் கண்டோம். மேலும் அக்காலகட்டத்தில் பல மக்கள் மனமாற்றம் பெற்று கத்தோலிக்க மதத்திற்கு வந்தனர். இதனால் சிறிய ஆலயம் போதுமானதாக இல்லை. எனவே சொந்த நிலத்தில் பெரிய ஆலயம் அமைக்க ஐரோப்பிய அருள்பணியாளர்கள் திட்டமிட்டனர். ஆலயம் கட்டத் தேவையான நிலத்தை மந்தங்காட்டைச் சார்ந்த இந்து நாடார்களிடம் தானமாகக் கேட்டனர். மந்தங்காட்டைச் சார்ந்த முத்து வயிரவன் சுப்பிரமணியன் நாடாரும், கறுத்தக்குட்டி நாராயண பெருமாள் நாடாரும் கொல்லம் ஆண்டு 978இல் (ஆங்கில ஆண்டு 1803) வட்டத்தட்டுவிளையைத் தானமாகக் கொடுத்தனர் (காண்க பக்கம் 24, 25). வட்டத்தட்டுவிளையில்தான் தற்போதுள்ள பெரிய ஆலயம், ஆலயக் கொடிமரம் ஆகியவைகள் உள்ளன. வட்டத்தட்டுவிளை சுமார் 1.5 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலமாகும். அதன் பிறகு கொல்லம் ஆண்டு 1015இல் (ஆங்கில ஆண்டு 1840) நெடுங்கன்தட்டை குருசடி புனித அந்தோனியார் ஆலயத்திற்கு மந்தங்காட்டைச் சார்ந்த இந்து நாடார்கள் விலைக்கு கொடுத்துள்ளனர். அந்த நெடுங்கன்தட்டுதான் தற்போது வடக்குத்தெரு வீதியாக உள்ளது (காண்க பக்கம் 24, 25). ஏற்கனவே வட்டத்தட்டு

5. *குடும்பக் கையேடு,* புனித அந்தோனியார் ஆலயம், குருசடி, 2021 - 2030, முன் அட்டை.
6. *ஆவண எண்கள் 1760/1091 ME, 1624/1091 ME,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

விளையைத் தானமாகக் கொடுத்ததால் கொல்லம் ஆண்டு 1017 தை மாதம் 1ஆம் தேதி (ஆங்கில ஆண்டு 1842) குருசடிப் புனித அந்தோனியார் ஆலயச் சபையார் மந்தங்காட்டு இந்து நாடார்களுக்கு மொழிமாறா எதிர்க் கச்சீட்டு எழுதிக் கொடுத்தனர் (காண்க பக்கம் 21-23). அதன்படி ஆண்டுதோறும் தேர் ஓட்டம் அன்று இரண்டு கூற்றுக்காரருக்கும் 2 பணம் விலையுள்ளதில் 2 முண்டும் படியும் (பணம்) கொடுப்பதாக எழுதப்பட்டுள்ளது. அதன்படி சொத்தைத் தானமாகக் கொடுத்த இரு நபர்களின் வாரிசுகளில் தலா ஒருவருக்கு ஆலயத் திருவிழாவின் போதுத் தேரோட்டம் அன்று முண்டு (வேட்டி) கொடுத்து மரியாதை செய்து படி கொடுத்தார்கள். அவர்கள் அந்த முண்டால் தலைப்பாகைக் கட்டிக்கொண்டு மரியாதையை ஏற்றுக்கொண்டார்கள். மொழிமாறா எதிர்க் கச்சீட்டில் 1842ஆம் ஆண்டு இராமன்புதூர் திரு. இன்னாசிதாணுவ நாடார் வியாகன், திரு. முத்து இன்னாசி, புன்னக்காட்டுவிளை திரு. அன்பு அந்தோனி, கோணம் திரு. அன்பு அந்தோனி. மறவன்குடியிருப்பு திருவாளர்கள் ஞானப்பிரகாசம் இன்னாசி, சவரிமுத்து தேவசகாயம், தேவசகாயம் சுவாமியடியான், சவரிமுத்து வியாகன் பாக்கியன் மற்றும் சவரிமுத்து ஆகியோரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. சபையார் சார்பில் மொழிமாறா எதிர்க் கச்சீட்டு எழுதிக் கொடுத்தவர் அப்போதைய முடுதோம் தளவாய்புரத்தைச் சார்ந்த திரு. மாதவடியான் இன்னாசி ஆகும். மேற்குறிப்பிட்ட 5 ஊர்களின் பிரதிநிதிகள் சேர்ந்து மொழிமாறா எதிர்க் கச்சீட்டு எழுதிக் கொடுத்துள்ளனர். மேற்கண்ட 5 ஊர்களைத் தவிர மற்ற ஊர்களில் 1842ஆம் ஆண்டு கிறிஸ்தவர்கள் இல்லாமல் இருந்திருக்கலாம் அல்லது அந்த ஊர்கள் 1842ஆம் ஆண்டு குருசடி ஆலயத்துடன் இணைக்கப்படாமல் இருந்திருக்கலாம். வட்டக்கரையில் 1842ஆம் ஆண்டு கிறிஸ்தவர்கள் குடியிருந்தனர். அவர்கள் மேலஆசாரிபள்ளம் புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்துடன் இணைந்திருந்தனர்.[7] எனவே மொழிமாறா எதிர்க் கச்சீட்டில் வட்டக்கரை சார்பில் எவரும் கையெழுத்திடவில்லை. குருசடியிலும் ஆலயம் இருந்ததே தவிர 1842ஆம் ஆண்டு கிறிஸ்தவ மக்கள் குடியிருக்கவில்லை. எனவேதான் மொழிமாறா எதிர்க் கச்சீட்டில் குருசடி ஊர் சார்பிலும் எவரும் கையெழுத்திடவில்லை.

### வட்டத்தட்டுவிளையில் மூன்றாவதாக ஆலயம் கட்டப்படுதல்

வட்டத்தட்டுவிளையில் மூன்றாவதாக ஓர் ஆலயம் கட்டப்பட்டது. அந்த ஆலயம் 1825ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகக் குருசடிப் புனித அந்தோனியார் ஆலயக் குடும்பக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.[8] ஆனால் அந்த ஆலயம் எந்த ஆண்டு கட்டப்பட்டது என்பதற்கு வேறு ஆவணச் சான்று எதுவும் இல்லை. அந்த ஆலயம் கட்டப்படும்போது கொடி மரத்திற்குத் தென்கிழக்கே அமைந்துள்ள சிறிய ஆலயத்தில் சிறிது காலம் வழிபாடு நடைபெற்றது. மூன்றாவதாக கட்டப்பட்ட ஆலயம் தற்போதுள்ள ஆலயத்திற்கு முன்பு கொடி மரத்திற்கு மேற்குப் பக்கமாகக் கட்டப்பட்டது. அந்த ஆலயத்திற்குக் கிழக்குப்பக்கம் அதாவது ஆலய வளாகத்தின் நுழைவாயில் மற்றும் மந்தங்காட்டு அருள்மிகு ஆத்திசுவாமி கோயிலின் பின்பக்கம் உள்ள பகுதி கிழக்குத்தெரு ஆகும். அந்தச் சொத்தின் பெயர் சாலைக்கூடல்தட்டு ஆகும். அந்த நிலம் மந்தங்காட்டைச் சார்ந்த நிலக்கிழார் திரு. சித்திர புத்திர நாடாருக்குப் பாத்தியப்பட்டதாகும் (சித்திர புத்திர நாடார் நமது ஆலய முடுதோம் F. ஸ்டான்லி அவர்களின் மனைவி மனோன்மணி நாடாச்சி என்ற ரோணிக்கத்தின் தாத்தா ஆகும்). அதில் புளியமரம் ஒன்றும் நின்றது. ஆலயத் திருவிழாவின்போது தேர் ஓட்டுவதற்கு வசதியாக அந்தப் புளியமரத்தின் கிளைகள் சித்திரபுத்திர நாடாரால் தறித்துக் கொடுக்கப்பட்டு வந்தது.

7. *கோட்டாறு மறைமாவட்ட பொன்விழா மலர், 1930-1980,* ப. 204

8. *குடும்பக் கையேடு,* புனித அந்தோனியார் ஆலயம், குருசடி, 2021 - 2030, முன் அட்டை

இந்நிலையில் 1885ஆம் ஆண்டு குருசடிப் புனித அந்தோனியார் ஆலயச் சபையாரால் புளிய மரம் முறிக்கப்பட்டது. இதனால் பத்மநாபபுரம் முன்சீப் கோர்ட்டில் O.S.No.1186/1060 ME என்ற எண்ணில் மந்தங்காட்டைச் சார்ந்த திருவாளர்கள். சித்திர புத்திர நாடார் மற்றும் நயினார் சுப்பிரமணியன் நாடாரால் வழக்குத் தொடரப்பட்டது. மொழிமாறா எதிர்க் கச்சீட்டு மேற்கண்ட வழக்கில் ஆஜர்படுத்தப்பட்டது. அந்த மொழிமாறா எதிர்க் கச்சீட்டில் பத்மநாபபுரம் முன்சீப் கோட்டில் 2ம் கிளாஸ் மாஜிஸ்டிரேட் திரு. முத்துகிருஷ்ணன் நாயர் கையொப்பம் செய்துள்ளார் (காண்க பக்கம் 21 - 23). அந்த வழக்கில் சபையாரால் முன்வைக்கப்பட்ட வாதம் என்னவென்றால், வட்டத்தட்டு விளையை 1803ஆம் ஆண்டு தானம் செய்தபிறகு, சித்திர புத்திர நாடாரின் தகப்பனார் நாராயணபெருமாள் நாடாரால் குருசடிப் புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் சாலைக்கூடல்தட்டு, வாய்மொழியாகத் தானம் (oral gift) செய்யப் பட்டது என்பதாகும். இதற்கு மறுமொழியாக மந்தங்காட்டைச் சார்ந்தவர்கள் சாலைக்கூடல் தட்டு வாய்மொழியாகத் தானம் செய்யப்பட வில்லை என்றனர். இரு தரப்பிற்கும் நடந்த சமரசப் பேச்சுவார்த்தையின்படி குருசடிப் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலியின்போது விவிலியத்தில் (Bible) கை வைத்து மேற்கண்ட சொத்து வாய்மொழியாகத் தானம் செய்யப்பட்டது என்று சத்தியம் செய்தால் அச்சொத்தை (சாலைக்கூடல்தட்டு) விட்டுக் கொடுக்கத் தயார் என்று மந்தங்காட்டு மக்கள் தெரிவித்தனர். ஆனால் அந்தச் சத்தியத்தைச் செய்ய யாரும் முன்வரவில்லை. 1885ஆம் ஆண்டு நமது ஆலய முடுதோமாக இருந்தவர்கள் மேலராமன்புதூர் திரு. S. தேவசகாயம் முடுதோம் மகன் திரு. D. தேவசகாயம் மற்றும் மறவன்குடியிருப்பு திரு. மரிய ஆரோக்கியம் ஆகும். அவர்களும் சத்தியம் செய்ய முன்வரவில்லை. அக்காலக் கட்டத்தில் மேலஆசாரிபள்ளம் பெரிய பங்காக இருந்தது. மேலஆசாரிபள்ளம் புனித மிக்கேல் அதிதூதர் ஆலய முடுதோமாக இருந்தவர் பாம்பன்விளையைச் சார்ந்த திரு. வடிவேல் மகன் திரு. மனுவேல் ஆகும். அவர் நிலச்சுவான்தாரர் ஆகும். அவர் இருதரப்புக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார். எனவே சத்தியம் செய்ய அவர் முன்வந்தார். அதன்படி ஒரு ஞாயிற்றுக்கிழமை திருப்பலியின்போது விவிலியத்தில் கை வைத்து வடிவேல் மகன் மனுவேல் சத்தியம் செய்தார். அதனை ஏற்றுக்கொண்ட மந்தங்காடு சித்திரபுத்திர நாடார் சாலைக்கூடல்தட்டைக் குருசடிப் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு விட்டுக் கொடுத்தார்.

நமது ஆலயக் கல்லறைத் தோட்டத்திற்கு முன்புள்ள தென்னந்தோப்புகளும் தெற்குத்தெரு மற்றும் பள்ளத்துத் தெருவிலுள்ள பல வீடுகள் அமைந்திருக்கும் பகுதி பழைய சர்வே எண்.3364 ஆகும். அதன் பரப்பளவு 75 சென்ட் ஆகும். அந்த நிலத்தில் பாதி மந்தங்காட்டைச் சார்ந்த திரு. சித்திர புத்திர நாடார் மகன் திரு. நாராயண பெருமாள் நாடாருக்கும் இன்னொரு பாதி மந்தங்காட்டைச் சார்ந்த திரு. கறுத்தக்குட்டி நாடார், திரு. சுப்பையா நாடார் என்போருக்கும் சொந்தமானதாகும். 1916ஆம் ஆண்டு சுப்பையா நாடார் மகன் திரு. சாமி நாடாரிடமிருந்து பாதி சொத்து ஆலயத்தின் பெயரில் விலைக்கு வாங்கப்பட்டது.[9] மீதிப் பாதியை விலைக்கு வாங்கவில்லை. இன்றும் அச்சொத்து சம்பந்தமான வருவாய்த்துறை ஆவணங்களில் மந்தங்காட்டைச் சார்ந்த திருவாளர்கள். நயினார் கறுத்தக்குட்டி, சுப்பையா நாடார் மற்றும் நாராயண பெருமாள் ஆகியோரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. பின்னர் 1965ஆம் ஆண்டு புதிய சர்வே (Resurvey) நடைபெற்ற போது பழைய சர்வே எண்.3364ல் உள்பட்ட 75 சென்ட் நிலத்திற்கும் நமது ஆலயத்தின் பேரில் பட்டா வழங்கப்பட்டது

9. *ஆவண எண். 1760/1091 ME,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

**தானத்தை (மரியாதையை) மீண்டும் பெற முயற்சி**

கொல்லம் ஆண்டு 1017இல் (ஆங்கில ஆண்டு 1842) குருசடிப் புனித அந்தோனியார் ஆலய சபையார் மந்தங்காட்டு இந்து நாடார்களுக்கு எழுதிக் கொடுத்த மொழிமாறா எதிர்க் கச்சீட்டின்படி கொடுத்து வந்த தானம் (மரியாதை) பின்னாளில் கொடுக்கப்படவில்லை. எனவே 04.06.1115இல் (ஆங்கில ஆண்டு 1940) மந்தங்காட்டைச் சார்ந்த திருவாளர்கள் நாராயண பெருமாள் நாடார் மகன் பெரியநாடார், நயினார் நாடார் மகன் லட்சுமண பெருமாள் நாடார், கறுத்தக்குட்டி நாடார் மகன் வலியபெருமாள் நாடார் மற்றும் நயினார் நாடார் மகன் கறுத்தக்குட்டி நாடாரின் வாரிசுகளும் சேர்ந்து கோட்டாறு மறைமாவட்ட ஆயருக்கு மனு ஒன்றைத் தயாரித்துள்ளனர். அந்த மனு கோட்டாறு மறைமாவட்டத்தின் முத்திரைத் தாளில் எழுதப்பட்டுள்ளது. அக்காலகட்டத்தில் மறைமாவட்ட முத்திரைத்தாளில் எழுதும் விண்ணப்பங்கள் மட்டுமே ஆயரால் பரிசீலிக்கப்படும். இந்நிலையில் 14.08.1940இல் மந்தங்காடு நாராயண பெருமாள் நாடார் மகன் பெரிய நாடார் இறந்து விட்டார். எனவே தானத்தை (மரியாதையை) மீண்டும் பெற எடுக்கப்பட்ட முயற்சிகள் கைவிடப்பட்டன. மேலும் அந்த மனுவை மறைமாவட்ட ஆயரிடம் கொடுக்க வில்லை. அந்த மனு தற்போதும் மந்தங்காட்டைச் சார்ந்த இந்து நாடார்களிடம் உள்ளது. குருசடி புனித அந்தோனியார் ஆலய வரலாற்றில் மந்தங்காட்டு இந்து நாடார்களின் பங்களிப்பை எவராலும் மறுக்க முடியாது.

**பெரிய ஆலயம் கட்டப்படுதல்**

தற்போது உள்ள பெரிய ஆலயத்திற்குக் கிழக்குப்பக்கமும் கொடி மரத்திற்கு மேற்குப் பக்கமுமாக மூன்றாவதாக கட்டப்பட்ட ஆலயமும் நாளடைவில் போதுமானதாக இல்லாததால் பெரிய ஆலயம் (தற்போதைய ஆலயம்) கட்டத் தீர்மானிக்கப்பட்டது. பெரிய ஆலயம் 1889ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு 21 ஆண்டுகள் கட்டுமானப் பணிகள் நடைபெற்று 06.01.1911 அன்று புனிதப்படுத்தப்பட்டது. பெரிய ஆலயம் புனிதப்படுத்தப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பு மூன்றாவதாகக் கட்டப்பட்ட ஆலயம் இடிக்கப்பட்டது.

## புனித அந்தோனியார் கெபி



நமது ஆலய வளாகத்தின் நுழைவாயில் அருகே அமைந்துள்ள புனித அந்தோனியார் கெபி 1950ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

இந்தக் கெபி குருசடி ஊர் மக்களால் கட்டப்பட்டதாகும். இந்தக் கெபி இரண்டு அடுக்குகளைக் கொண்டது. முதல் அடுக்கில் புனித அந்தோனியார் திருவுருவமும், இரண்டாவது அடுக்கில் மரியன்னையின் திருவுருவமும் வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கெபியில் குருசடி ஊர் மக்கள் மட்டுமல்லாமல் இந்துக்களும் மீன்கடைக்கு மீன் வியாபாரம் செய்ய வரும் மீனவர்களும் வழிபடுவது ஒரு சிறப்பு ஆகும்.

# மந்தங்காடு குருசடி அர்ச்சிஸ்ட அந்தோனியார் கோவிலுக்கு தானம் கொடுத்தவர்களுக்கு வெ. கோவிலிலிருந்து எழுதிகொடுத்த மொழிமாறு எதிர் கச்சீட்டு.

1017 ஞ தைமீ 1௳ ஏழுக்கமங்கலம் கிழக்கேப்பற்றில் மந்தங்காட்டில் இருக்கும் மலவனை யூராவ் சொல்டார்களில் முக்குவயிசலன் சுப்பிரமணியனுக்கும், கயத்தக்குட்டி நாராயணப்பெருமாள் முதல்பேருக்கும், மந்தங்காடு, குருசடியில் அர்ச்சிஸ்ட அந்தோனியார் கோவிலைச் சேர்ந்த சபையார்முதலான சாங்களில், சாமன்புதார், இன்னாசிதாறுவக்காடார் வியாகன்முதல்பேரும், முத்து இன்னாசி முதல்பேரும், புன்னைக்காட்டுவிளை, ஆனா அந்தோனி முதல்பேரும், சேர்ணிம். ஞான அந்தோனி முதல்பேரும், மதலன்குடியிருப்பு, ஞானப்பிரகாசம் இன்னாசி முதல்பேரும், மேடையில் கலரிமுத்து தேவசகாயம் முதல்பேரும், தேவசகாயம் சுவாமியடியான் முதல்பேரும், சவரிமுத்து வியாகன் புத்தியன் முதல்பேரும், வெடி சால் [illegible] முதல்பேரும் சேஷம் சபையாரும் தானமாயப் பேர்க்கு மொழிமாறு கச்சீட்டு எழுதிக்கொடுத்தபடி. வெடியார் வளையில் இன்றும் மாக்களில் அர்ச்சிஸ்ட அந்தோனியார் கோவில் பனைக்கு, தெற்றுமேல் தெருவிழி வணக்கும், கூட தானப்பிரமாணமாய் இட்டு வட்டக்கட்டிவிளா சுற்றுக்கு சுற்றுப்பிட்டு. தேர் ஓடுவதறிகா, மேலெழுதிய பூமிட்டுயில் இருக்கின்ற விருகூக் முதிச்ச தாக்க வெளிக்கண்டு தருகா பனைக்கு தானப்பிரமாணமாவிட்டு ஆதாரமும் எழுதித்தக்கு, அ பனைக்குள்ள கரும்ம் வெடியார் தன்னே அனுபோகமும் இருந்த கொள்ளும்படிக்குமானபால். இந்த பனைக்கு தேர் ஓட்டம் அன்று [illegible] கூத்துவக்காரருக்கும் 2 பணம் வில்லுபுள்ளாதிக் கேபிரான்றக்கு, 2, முன்பேர், தேச [illegible] அவகள் வெடிக்கள் கொள்வேமாசமும, இந்தப்படி கொடுத்த வசமில்லையானால் காக்கை எழுதிக்கொடுத்தகாரன் முதல்க்கு யாசிதாரு வாலங்களில் சபையில் இன்றும் யாசிதாருக்குமில் [illegible] கொள்ளக்கடவ காரும் [illegible] தனக்குத்தில் கொடு [illegible] கொள்ளுவேமாகவும்.

இப்படி சம்மதிச்ச இந்த மொழிமாறுக் கச்சீட்டு எழுதிக்கொடுத்தோம் முக்குவயிசலன் சுப்பிரமணியன் உள்ளிட்டாருக்கும் கயத்தக்குட்டி நாராயணப் பெருமாள் முதல் பேருக்கும், சபையாரில் இன்னாசி தாறுவன் காடார் வியாகன் முதல்பேரும், ஞானப்பிரகாசம் இன்னாசி முதல்பேரும், சேஷம் சபையாரும் இப்படிக்கு இந்தக் கச்சீட்டு எழுதின வெடி. கோவில் முதிதம தளவாய்புரத்தில் இருக்கும மாதவடியான் இன்னாசி (ஒப்பு).

இந்த பனைக்கு தானமுள்ள முண்டு கொடுத்து வசமில்லையானால் ஒப்போம் எழுதி வாங்கி இருக்கின்ற ஆதாரம் எடுத்தக் கெடுத்தக் கொள்ளுமாயம் வெடியான் விளையில் இன்றும் வடக்குத் தெருவில் வருன்ன இடைவழி பனை பிறகாரம் போகுன்னதமாயகளுக்குச் சம்மதம்,

2 கூத்துவக்காரருக்கும் பேர் ஒன்றுக்கு, 2 பணத்தில் முன்பேக்கும், பணம் 4-க்கும் வெடியார்கள்,

ஈ சரிஞ்தர்ப்பு ஆராச்சிப கச்சிகள் மந்தங்காட்டில் நாராயணப்பெருமாள் பித்திரபுத்திரன் (ஒப்பு) ஷெடிஷீல் கபிஞன் சுப்பிரமணியன் (ஒப்பு).

ஈ பகர்ப்பு எங்களில் 12-ம் பிறதி 1000-ரூ ஆவிபாதி 21-ஆ [illegible] 22-ஆ ஆராச்சி.

{ பர்பஞுபபுரம் முன்ஸிப்கோட்டில், } 2-ம் கிளாஸ் மஜிஸ்ட்ரேட்டு முத்துகிருஷ்ண ஐயர் (ஒப்பு)

{ 1000-ரூ வக 1180-ம் கம்பர் 12-ம் பிறதி வக்கீல் ஆராச்சி } நூத்தன கோர்ட்டு 2 ம் குமஸ்தா (ஒப்பு)

இப்போது இதற்கு பூரண அவகாசிகள்.

1. நாராயணப்பெருமாள் நாடார், பெரியநாடார், கபிஞர் நாடார் சுப்பிரக்குட்டி நாடார் முதல்பேர்கள்.

2. சுப்ரக்குட்டி நாடார் வலியபெருமாள் நாடார் கபிஞர் நாடார் லெட்சுமணபெருமாள் நாடார்.

மந்தங்காடு,
21—5—1115.

# மேற்படி மொழிமாறா எதிர் கச்சீட்டின் உண்மை நகல்

1017-ளு தை-மீ 1-உ ராஜாக்கமங்கலம் கீழ்கரப்பற்றில் மந்தங்காட்டில் இருக்கும் வலங்கை உயர்வு கொண்டார்களில் முத்துவயிரவன் சுப்பிரமணியனுக்கும், கறுத்தக்குட்டி நாராயணப்பெருமாள் முதல் பேருக்கும் மந்தங்காடு, குருசடியில் அர்ச்சிஸ்ட அந்தோனியார் கோவிலைச் சேர்ந்த சபையார் முதலான நாங்களில், ராமன்புதூர், இன்னாசி தாணுவ நாடார் வியாகன் முதல் பேரும், முத்து இன்னாசி முதல் பேரும், புன்னைக்காட்டுவிளை, அன்பு அந்தோனி முதல் பேரும், கோணம் அன்பு அந்தோனி முதல் பேரும், மறவன்குடியிருப்பு, ஞானப்பிறகாசம் இன்னாசி முதல் பேரும், ஷெயில் சவரிமுத்து தேவசகாயம் முதல்பேரும், தேவசகாயம் சுவாமியடியான் முதல்பேரும், சவரிமுத்து வியாகன் பாக்கியன் முதல்பேரும், ஷெ சவரிமுத்து முதல் பேரும், சேஷம் சபையாரும் தானம் மானம் பேர்க்கு மொழிமாறா கச்சீட்டு எழுதிக் கொடுத்தப்படி, ஷெயார் வகையில் நின்னும் எங்களில் அர்சிஸ்ட அந்தோனியார் கோவில் வகைக்கும், தேர் ஓடும் தெருவீதி வகைக்கும், கூட தானப்பிரமாணமாய் இட்டு வட்டத்தட்டுவிளை சுற்றுக்கு, சுற்றாப்பிட்டு தேர் ஓடுன்னதினும், மேல் எழுதிய புரயிடத்தில் இருக்கின்ன விருக்ஷம் முறிச்சு தந்து வெளிகண்டு தருண்ண வகைக்கு தானப்பிரமாணமாயிட்டு ஆதாரமும் எழுதித்தந்து, ஆ வகைக்குள்ள கரமும் ஷெயார் தன்னே ஆண்டுதோறும் இறுத்து கொள்ளும்படிக்குமாகையால், இந்த வகைக்கு தேர் ஓட்டம் அன்னு ஷெயாரில், 2 கூற்றுக்காரருக்கும், 2 பணம் விலையுள்ளதில் பேரொன்றுக்கு, 2 முண்டும், தேர் ஓடுகிற சமயத்தில் கொடுத்துக் கொள்வோமாகவும், இந்தப் படி கொடுத்து வரவில்லையானால் நாங்கள் எழுதிக் கொடுத்த நாள் முதல்க்கு யாதொரு காலங்களில் சபையில் நின்னும் யாதொரு தர்க்கமங்கிலும் மாற்றிச் சொன்னால் கெங்கைக்கரையில் காறாம் பசுவைக்குத்திக் கொன்ற தோஷம் ஏற்றுக் கொள்ளுவோமாறும்,

இப்படி சம்மதிச்சு இந்த மொழி மாறா கச்சீட்டு எழுதிக் கொடுத்தோம். முத்து வைரவன் சுப்பிரமணியன் உள்ளிட்டாருக்கும் கறுத்தக்குட்டி நாராயணப்பெருமாள் முதல் பேருக்கும், சபையாரில் இன்னாசி தாணுவன் நாடார் வியாகன் முதல் பேரும், ஞானப்பிறகாசம் இன்னாசி முதல் பேரும், சேஷம் சபையாரும் இப்படிக்கு இந்தக் கச்சீட்டு எழுதின ஷெ கோவில் முடுதம் தளவாபுரத்தில் இருக்கும் மாதவடியான் இன்னாசி (ஒப்பு).

இந்த வகைக்கு தானமுள்ள முண்டு கொடுத்து வரவில்லையானால் இப்போள் எழுதி வாங்கி இருக்கின்ன ஆதாரம் எடுத்துக் கொடுத்துக் கொள்ளுமாறும் ஷெயான் விளையில் நின்னும் வடக்குத் தெருவில் வருன்ன இடுவைவழி பதிவு பிறகாரம் போகுன்னது எங்களுக்குச் சம்மதம்.

2 கூற்றுக்காரருக்கும் பேர் ஒன்றுக்கு, 2 பணத்தில் முண்டுக்கும், பணம் 4-க்கும் ஷெயார்கள்.

ஈ சரிபகர்ப்பு ஆஜராக்கிய கச்சிகள் மந்தங்காட்டில் நாராயணப்பெருமாள் சித்திரபுத்திரன் (ஒப்பு) ஷெயில் நயினான் சுப்பிரமணியன் (ஒப்பு)

ஈ பகர்ப்பு எங்களில் 12-ம் பிறதி 1060-ளு ஆனி. மீ 21-உ அபேக்ஷபிறகாரம் 22-உ ஆஜராக்கி,

{ பல்பனாபுரம்
முன்ஸீப்கோட்டில் } 2-ம் கிளாஸ் மஜிஸ்றேட்டு
முத்துகிருஷ்ண நாயர் (ஒப்பு)

{ 1060 ளு வக 1186-ம் நம்பர்
12-ம் பிறதி வக்கீல் ஆஜராக்கி } ஒத்து நோக்கி 2-ம் குமஸ்தா (ஒப்பு)

**இப்போது இதற்குப் பூரண அவகாசிகள்**

1. நாராயணபெருமாள் நாடார் பெரியநாடார், நயினார் நாடார் கறுத்தக்குட்டி நாடார் முதல் பேர்கள்.
2. கறுத்தக்குட்டி நாடார் வலியபெருமாள் நாடார், நயினார் லெக்ஷ்மணபெருமாள் நாடார்.

மந்தங்காடு
21-5-1115.

**மந்தங்காடு திரு. N. பெரியநாடார் மற்றும் மூவர் தானத்தை மீண்டும் பெற கோட்டாறு மறைமாவட்ட ஆயருக்கு கொடுக்க 1940ஆம் ஆண்டு தயாரித்த மனு**

| CH. | CURIA KOTTARENSIS. | ONE |
|---|---|---|
| CH. 1. | | சக். க. |
| சக். | கோட்டாறு மேற்றிராசனக் கச்சேரி. | ஒன்று |



மகா மேன்மைதங்கிய கோட்டாறு
மேற்றிராணியார் ஆண்டவர் அவர்கள் திருச்சமு-
கத்தில் :—

[illegible]
[illegible] மந்தங்காடு [illegible]
நாராயணன் பெருமாள் நாடார் மகன் பெரியநாடார் [illegible]
[illegible] நாடார் மகன் [illegible]
[illegible] திருத்து [illegible]
[illegible]
திருத்து [illegible] நாடார் [illegible]
[illegible]

அர்ஜி :—

எங்கள் முன்னோர்களான ஆதிகாலவரவான்
சாம்பிறமணியனும், திருத்துவபுர நாராயணப்பெரு-
மாளும் கூட்டி மந்தங்காடு [illegible] அர்ச் - அந்தோ-
னியார் கோயில் வகைக்கு [illegible]
[illegible]
[illegible] 1015 [illegible]
[illegible]
[illegible] அர்ச் - அந்தோனியார் கோ-
யிலில் [illegible]
[illegible]
[illegible]
[illegible]

| CH. | CURIA KOTTARENSIS. | ONE |
|---|---|---|
| | CH. 1. / சக். க. | |
| சக். | கோட்டாறு மேற்றிராசனக் கச்சேரி. | ஒன்று |

[illegible]

1. [illegible]
2. [illegible]
3. [illegible]
4. [illegible]

4 - 6 - 115

**நமது ஆலயத்தை புனிதப்படுத்த வருகை தந்த கொல்லம் மறைமாவட்ட ஆயருக்கு நமது ஆலய இறைமக்கள் சார்பாக திரு. D. பிரான்சிஸ் முடுதோம் வாசித்து அளித்த வரவேற்புரை**

# An Address of Welcome

## To His Lordship

## The Right Rev. Dr. Aloyseus Maria Benzigar, O. D. C.,

## Bishop of Quilon.

**May it Please Your Lordship,**

We beg to approach Your Lordship with the following humble address of welcome on the occasion of this Your Lordship's gracious visit in the hope that Your Lordship will be condescendingly pleased to accept the same.

When, in the days of our forefathers, there was no House of God in this place, the Rev. Fr. Alex, who laboured among them, got our forefathers to put up a small church, with thatched roofing. After worshipping in this Church for a short period, they built the small church, namely, the one standing to the south-east of the flagstaff. The christians here used this as a place of worship for sometime when the large church just pulled down was erected. As this church itself was found too small for the growing congregation a new cherch was begun to be constructed in the year 1889 when the Very Rev. Fr. Elias was Vicar of our Parish, the ceremony of laying the foundation of the sacred structure

being conducted by the Very Rev. Fr. Victor, the Vicar-General of our mission. The work of this church has been carried on by our fathers & ourselves all these years earnestly & self-sacrificingly, and now we have the great privilege & pleasure of having Your Lordship's gracious presence to bless the church and open it for divine worship. We cannot sufficiently thank Your Lordship for Your gracious acceptance of our prayer to conduct the ceremonies of this auspicious occasion.

We shall be sadly failing in our duty if we do not seize this opportunity of tendering our heartfelt gratitude to Your Lordship for enabling us with funds to finish the church so early, which would have been impossible in spite of all our self-denying efforts from the very inception of the church.

Among the several Vicars that have been in charge of our parish during the past 21 years, our special thanks are due to our present Vicar, the Very Rev. Fr. Bernardine who actuated by a fervent desire to have the church finished during this year was unceasing in reminding the people of this work and spared no pains in going almost from house to house impressing upon them the urgent necessity of completing the church without further delay.

Once more thanking Your Lordship for Your Lordship's great kindness in graciously responding to our earnest & humble prayer to bless our church and praying to the Almighty to shower on Your Lordship the choicest blessings.

WE BEG LEAVE TO REMAIN,

Your Lordship's Most Humble and Dutiful Children,

THE PARISHIONERS OF THE KURUZADY CHURCH.

5—1—1911.

**நமது ஆலயத்தை புனிதப்படுத்த வருகை தந்த கொல்லம் மறைமாவட்ட ஆயருக்கு நமது ஆலய இறைமக்கள் சார்பாக திரு. D. பிரான்சிஸ் முடுதோம் வாசித்து அளித்த வரவேற்புரையின் தமிழாக்கம்**

## கொல்லம் மறைமாவட்ட ஆயர்
## மேதகு டாக்டர் அலோசியஸ் மரிய பென்சிகர், O.D.C.
## அவர்களுக்கு வரவேற்புரை.

ஆயரே இது உங்களை மகிழ்விப்பதாக,

ஆயரே தாங்கள் அருள்கூர்ந்து இங்கு வருகை தந்திருக்கும் இத்தருணத்தில் நீங்கள் தயவுகூர்ந்து எங்களுடைய பணிவான வரவேற்புரையை ஏற்றுக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் உங்களை அணுகி வருகிறோம்.

எங்களுடைய மூதாதையர்களின் காலத்தில் இந்த இடத்தில் கடவுளின் இல்லம் கட்டப்பட்டிருக்கவில்லை. அப்பொழுது எங்களுடைய மூதாதையர்களோடு பணியாற்றிய அருள்பணி. அலெக்ஸ் அவர்கள் ஓலைக்கூரையிட்ட ஒரு சிறிய ஆலயத்தை அவர்கள் கட்டும்படி செய்தார். அவர்கள் அந்த ஆலயத்தில் சிறிது காலம் வழிபாடு செய்த பிறகு அங்கு இன்னொரு சிறிய ஆலயத்தைக் கட்டினார்கள். கொடி மரத்திற்குத் தென்கிழக்குப் பகுதியில் இருப்பதே அதுவாகும். தற்சமயம் இடிக்கப்பட்டுள்ள பெரிய ஆலயம் கட்டப்பட்டபோது இங்கிருக்கும் கிறிஸ்தவர்கள் அந்த ஆலயத்தில் சிறிது காலம் வழிபாடு செய்தனர். இடிக்கப்பட்ட ஆலயம் வளர்ந்து வரும் சபைக்கு மிகவும் சிறியதாகக் காணப்பட்டதால் 1889ஆம் ஆண்டு அருள்பணி. எலியாஸ் அவர்கள் பங்குத்தந்தையாக இருந்த காலத்தில் இந்தப் புதிய ஆலயம் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. நம்முடைய மறைமாவட்ட முதன்மை அருள்பணியாளர் அருள்பணி. விக்டர் அவர்களால் இப்புனிதக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்ட நிகழ்ச்சி நடந்தது. இந்த ஆலயத்தின் பணிகள் எங்களுடைய மூதாதையர்களாலும் எங்களாலும் பேரார்வத்துடனும், தியாகத்துடனும் செயல்படுத்தப்பட்டது. நீங்கள் இந்த ஆலயத்தை ஆசீர்வதித்து புனிதப்படுத்தி அதை இறைவழிபாட்டிற்காகத் திறந்து வைப்பதற்காக அருள்கூர்ந்து வருகை தந்தமையினால் நாங்கள் மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கிறோம். இந்தச் சிறப்புமிகுத் தருணத்தில் உரிய திருச்சடங்குகளை

நடத்தித்தர வேண்டுமென்ற எங்கள் வேண்டுகோளை கனிவுடன் ஏற்றுக் கொண்டதற்கு உங்களுக்கு போதிய அளவு நன்றி சொல்ல எங்களால் இயலாது.

இந்த ஆலயத்தை இவ்வளவு விரைவாகக் கட்டி முடிக்கத் தாங்கள் எங்களுக்கு செய்த நிதி உதவியைக் குறித்து இதயபூர்வமாக நன்றி சொல்ல இந்த வாய்ப்பை தவறவிட்டால் நாங்கள் எங்களுடைய கடமையிலிருந்து தவறி விட்டோம் என்ற வருத்தத்திற்கு ஆளாவோம். ஏனெனில் இவ்வாலயத்தை கட்டத் தொடங்கியதிலிருந்தே நாங்கள் செய்த தியாக முயற்சிகளால் மட்டும் இது நிகழ்ந்திருக்காது.

கடந்த 21 ஆண்டுகளில் எங்களுடைய பங்கில் பலர் பங்குத் தந்தையாக இருந்த போதிலும் தற்போது பங்குததந்தையாக இருக்கும் அருள்பணி. பொ்னாா்டின் அவா்களைக் குறித்துச் சிறப்பாகச் சொல்லித்தான் ஆகவேண்டும். அவா் இந்த வருடத்திலேயே இந்த ஆலயத்தை கட்டி முடித்து விட வேண்டும் என்ற பேராா்வத்தால் தூண்டப்பெற்று எந்தக் கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் வீடு வீடாகச் சென்று இதைக் குறித்த முக்கியத்துவத்தை அவா்களுக்கு இடைவிடாது நினைவூட்டி இன்னும் கால தாமதம் செய்யாமல் இந்த ஆலயத்தைக் கட்டி முடிப்பதற்கான முக்கியத்துவத்தை எடுத்துரைத்தாா்.

மீண்டும் ஒரு முறை ஆயராகிய உங்களது கனிவு மிகுந்த இந்த வருகைக்காக நாங்கள் மிகுந்த நன்றி செலுத்துகிறோம். எங்களுடைய ஆலயத்தை புனிதப்படுத்தும்படி நாங்கள் தந்த அழைப்பை கனிவுடன் நீங்கள் ஏற்றுக் கொண்டமைக்காக நாங்கள் நன்றி செலுத்துகின்றோம். எல்லாம் வல்ல இறைவன் உங்கள்மீது சிறப்பு ஆசிகளைப் பொழிந்திட வேண்டுகிறோம்.

5.1.1911

விடைபெற வேண்டுகிறேன்,
ஆயராகிய உங்களுக்கு மிகவும் தாழ்மையும்
கடமை உணா்வுள்ள பிள்ளைகளாக இருக்க விழையும்
குருசடி ஆலய இறைமக்கள்

# 5 பங்குப் பணியில் முடுதோம்களும் சபையாரும்

குருசடிப் புனித அந்தோனியார் ஆலய வளர்ச்சியில் சபையாரின் பங்கு முக்கியமானது. அக்காலத்தில் உள்நாட்டுப் பங்குகளுள் முக்கியமான ஒன்று குருசடி ஆகும். ஆலயத்தையும் அதன் சொத்துக்களையும் நிர்வாகம் செய்யும் பொருட்டு "சபையார்" அல்லது "சபைக்கமிட்டி" (Church Committee) என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. சபையார் என்ற அமைப்புக்குப் பங்குத்தந்தைத் தலைவராக இருந்தார். ஒவ்வோர் ஊரிலிருந்தும் ஒருவர் சபைக்கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் படுவார். பின்னர் ஒருவர் ஆயரால் முடுதோமாக நியமிக்கப்படுவார். முடுதோம் என்ற சொல் பேச்சுவழக்கில் மருவி முடுதம் என்றும் பயன்படுத்தப்பட்டது. சென்னைப் பல்கலைக் கழகம் 1982ஆம் ஆண்டு வெளியிட்ட தமிழ்க் கலைக் களஞ்சியத்தில் "முடுதம்" என்றால் "தலைமை" என்று கூறப்பட்டுள்ளது.[1] மேலும் முடுதம் அல்லது முடுதோம் என்பது Major domus என்ற இரண்டு லத்தீன் வார்த்தை களிலிருந்து வந்தது. Major என்றால் main, domus என்றால் house. எனவே இது இல்லத் தலைவரைக் குறிக்கும். Major domus என்றால் head man of the village என்றும் பொருள்படும்.[2] அதாவது கிராமத்தின் தலைமை நிர்வாகி என்பதாகும். ஆன்மீகக் காரியங்களைப் பொறுத்தமட்டில் திருஅவைச் சட்டத்திற்கும் மறைமாவட்ட ஒழுங்கிற்கும் உட்பட்டு பங்குத்தந்தை தன்னுரிமையுடன் செயல்பட்டார். உலகைச் சார்ந்தக் காரியங்களைப் பொறுத்தமட்டில் பங்குத்தந்தையின் வழிகாட்டு தலின்படி முடுதோம்கள் செயல்பட்டார்கள். பங்கின் வருவாய் மற்றும் செலவினங்களைப் பொறுத்தமட்டில் பங்குத்தந்தைக்கும் சபையாருக்கும் முடுதோம்கள் முறையாகக் கணக்குக் காட்ட வேண்டும். மறைமாவட்ட ஆயர் பங்கை சந்திக்க வரும்போது முடுதோம்கள் கணக்குப் புத்தகத்தை ஆயரிடம் ஆய்விற்குச் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் ஆண்டுதோறும் திரட்டுக் கணக்கையும் மறைமாவட்ட ஆயரிடம் சமர்ப்பிக்க வேண்டும். 1961ஆம் ஆண்டு பங்குத்தந்தையாக அருள்பணி. R. அந்தோனிமுத்து பொறுப்பேற்ற போது நமது ஆலயத்தின்கீழ் இருந்த பல கிளைப்பங்குகள் ஏற்கெனவே பிரிந்து சென்றுவிட்டன. எனவே மீதமிருந்தக் கிளைப்பங்குகளிலிருந்து தலா இருவர் வீதம் சபைக் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சபையார் என்ற அமைப்பு இருந்தாலும், ஒவ்வோர் ஊருக்கும் தனித்தனி நிர்வாகம் இருந்தது. அனைத்து ஊர் மக்களும் ஆலய வரியைக் குருசடிப் புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் செலுத்த வேண்டும். அந்தந்த ஊர் மக்கள் ஊர்வரியை அந்தந்த ஊருக்குச் செலுத்த வேண்டும். தொடக்கக் காலத்தில் குருசடி சபைக்கு ஒருவர் முடுதோமாக

1. ச. டேவிட் அப்பாத்துரை, *மறவன்குடியிருப்பு - வேர்களும் விழுதுகளும்* (பாளையங்கோட்டை முத்துலட்சுமி பிரிண்டர்ஸ், 2005) ப. 21.
2. R. Kavitha, (Register No. 5110028, Department of History, South Travancore Hindu College), *Mudtham D. Francis – A Study* (Nagercoil 629002, 2006) p. 62

நியமிக்கப்பட்டார். தொடக்கக் காலத்தில் முடுதோமாக நியமிக்கப்பட்டவர்கள் யார் யார் என்பதை அறிய முடியவில்லை. 1842ஆம் ஆண்டு தளவாய்புரத்தைச் சார்ந்த திரு. மாதவடியான் இன்னாசி முடுதோமாக இருந்தார். ஆனால் எந்த ஆண்டு வரை அவர் முடுதோமாகப் பொறுப்பில் இருந்தார் என்பதை அறிய முடியவில்லை. பின்னர் மேலராமன்புதூர் திரு. S. தேவசகாயம் 1860ஆம் ஆண்டு முடுதோமாக நியமிக்கப்பட்டார். அவர் 1870ஆம் ஆண்டு சித்திரை மாதம் 24ஆம் தேதி (07-05-1870) இறந்தார். அதுவரை அவர் முடுதோமாகப் பணிபுரிந்தார். பின்னர் தளவாய்புரத்தைச் சார்ந்த திரு. சோரீஸ் மரியக்கண் முடுதோமாக நியமிக்கப்பட்டார். 1885ஆம் ஆண்டுமுதல் குருசடிச் சபை நிர்வாக வசதிக்காக வடபகுதி என்றும் தென்பகுதி என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அப்போது குருசடிச் சபையில் 25 ஊர்கள் இருந்தன. 1885ஆம் ஆண்டு மேலராமன்புதூர் திரு. S. தேவசகாயம் முடுதோம் மகன் திரு. D. தேவசகாயம் வடபகுதி முடுதோமாகவும் மறவன்குடியிருப்பு திரு. மரிய ஆரோக்கியம் தென்பகுதி முடுதோமாகவும் நியமிக்கப்பட்டார்கள். 24.01.1899 அன்று திரு. D. தேவசகாயம் முடுதோம் காலமானார். அதனைத் தொடர்ந்து கீழராமன்புதூர் திரு. V. தொம்மையப்பன் வடபகுதி முடுதோமாகவும் மறவன்குடியிருப்பு திரு. அ. ம. ஞானப்பிறகாசம் தென்பகுதி முடுதோமாகவும் நியமிக்கப்பட்டனர். 1903ஆம் ஆண்டு திரு. V. தொம்மையப்பன் முடுதோம் மாற்றப்பட்டு அவருக்குப் பதில் கீழராமன்புதூர் திரு. V. ஞானப்பிறகாசம் முடுதோமாக நியமிக்கப்பட்டார். பின்னர் 01.06.1904 அன்று திரு. அ. ம. ஞானப்பிறகாசமும் திரு. V. ஞானப்பிறகாசமும் மாற்றப்பட்டு மேலராமன்புதூர் திரு. D. தேவசகாயம் முடுதோம் மகன் திரு. D. பிரான்சிஸ் மற்றும் மறவன் குடியிருப்பு ஞானப்பிறகாசம் நாடார் மகன் திரு. G. மரியந்தோனி ஆகியோர் முடுதோம்களாக நியமிக்கப்பட்டனர். திரு. D. பிரான்சிஸ் 17.01.1947இல் தாம் இறக்கும்வரை 43 ஆண்டுகள் முடுதோமாகப் பணியாற்றினார். அதுபோல திரு. G. மரியந்தோனி 48 ஆண்டுகள் முடுதோமாகப் பணியாற்றி 14.07.1952 அன்று இறந்தார். திரு. D. பிரான்சிஸ் முடுதோம் இறந்தபிறகு அவருடைய மூத்த மகன் திரு. F. டேவி ஒரு ஆண்டு முடுதோமாகப் பணியாற்றினார். பின்னர் அவர் மாற்றப்பட்டு திரு. D. பிரான்சிஸின் இரண்டாவது மகன் திரு. F. ஸ்டான்லி 1948ஆம் ஆண்டு முடுதோமாக நியமிக்கப்பட்டு 33 ஆண்டுகள் பணியாற்றி 18.03.1981 அன்று இறந்தார். திரு. G. மரியந்தோனி முடுதோம் இறந்தபிறகு அவருடைய மூத்த மகன் திரு. M. மரிய லூயிஸ் முடுதோமாகப் பணியாற்றி 1959ஆம் ஆண்டு இறந்தார். பின்னர் மரியந்தோனி முடுதோமின் இரண்டாவது மகன் திரு. M. ஆன்றனி 1959ஆம் ஆண்டு முடுதோமாக நியமிக்கப்பட்டு 1985ஆம் ஆண்டுவரைப் பணியாற்றினார். அதன் பின்னர் கோட்டாறு மறைமாவட்ட ஆயர் குருசடிச் சபைக்கு முடுதோமாக யாரையும் நியமிக்கவில்லை. பின்னர் பங்கு மேய்ப்புப் பணிப் பேரவை என்ற அமைப்பை ஏற்படுத்தி அதனிடம் ஆலய நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது.

**பங்கில் பணியாற்றிய முடுதோம்களின் பட்டியல்**

| வரிசை எண் | பெயர் | ஊர் | பணியாற்றிய காலம் |
|---|---|---|---|
| 1. | திரு. மாதவடியான் இன்னாசி | தளவாய்புரம் | 1842 |
| 2. | திரு. S. தேவசகாயம் | மேலராமன்புதூர் | 1860 முதல் 07.05.1870 வரை |
| 3. | திரு. சோரீஸ் மரியக்கண் | தளவாய்புரம் | 1870 முதல் 1885 வரை |

**வடபகுதி முடுதோம்கள்**

| வரிசை எண் | பெயர் | ஊர் | பணியாற்றிய காலம் |
|---|---|---|---|
| 1. | திரு. D. தேவசகாயம் | மேலராமன்புதூர் | 1885 முதல் 24.01.1899 வரை |
| 2. | திரு. V. தொம்மையப்பன் | கீழராமன்புதூர் | 1899 முதல் 1903 வரை |
| 3. | திரு. V. ஞானப்பிறகாசம் | கீழராமன்புதூர் | 1903 முதல் 1904 வரை |
| 4. | திரு. D. பிரான்சிஸ் | மேலராமன்புதூர் | 01.06.1904 முதல் 17.01.1947 வரை |
| 5. | திரு. F. டேவி | மேலராமன்புதூர் | 1947 |
| 6. | திரு. F. ஸ்டான்லி | மேலராமன்புதூர் | 1948 முதல் 18.03.1981 வரை |


**தென்பகுதி முடுதோம்கள்**

| வரிசை எண் | பெயர் | ஊர் | பணியாற்றிய காலம் |
|---|---|---|---|
| 1. | திரு. மரிய ஆரோக்கியம் | மறவன்குடியிருப்பு | 1885 முதல் 1899 வரை |
| 2. | திரு. அ. ம. ஞானப்பிறகாசம் | மறவன்குடியிருப்பு | 1899 முதல் 1904 வரை |
| 3. | திரு. G. மரியந்தோனி | மறவன்குடியிருப்பு | 01.06.1904 முதல் 14.07.1952 வரை |
| 4. | திரு. M. மரிய லூயிஸ் | மறவன்குடியிருப்பு | 1952 முதல் 1959 வரை |
| 5. | திரு. M. ஆன்றனி | மறவன்குடியிருப்பு | 1959 முதல் 1985 வரை |

இதுவரைக்கும் நமக்குக் கிடைத்த ஆவணங்களின்படி மேற்கண்ட 14 பேர்கள் முடுதோம்களாகப் பணியாற்றியுள்ளனர். திருவாளர்கள் S. தேவசகாயம், D. தேவசகாயம் மற்றும் மரிய ஆரோக்கியம் ஆகியோர் முடுதோம்களாகப் பணியாற்றியதாக அவர்களது கல்லறைகள்மீது எழுதப்பட்டுள்ளது. வேறு எந்த ஆவணங்களும் நமக்குக் கிடைக்கவில்லை. முடுதோம்களை நியமிப்பது மறைமாவட்ட ஆயரின் தனிப்பட்ட உரிமையாகும். பங்கு மக்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டு பங்குத்தந்தையால் மூவர் அடங்கிய பெயர் பட்டியல் தயாரிக்கப்படும். பெயர் பட்டியலில் இடம் பெற்றவர்களையோ அல்லது இடம் பெறாதவர்களையோ ஆயர் தன்னுரிமையுடன் நியமித்தார். பெரும்பாலும் முடுதோம் இறந்து விட்டால் அவரது மூத்த மகன் முடுதோமாக நியமிக்கப்பட்டார். முடுதோம்களாக நியமிக்கப்பட பக்தியும், விவேகமும், கல்வியறிவும், நல்ல குடும்பப் பின்னணியும் இருக்க வேண்டும். அக்காலக்கட்டத்திலேயே நமது ஆலயத்துடன் இணைந்திருந்த பல ஊர்களில் ஆங்கில அறிவு பெற்றவர் பலர் இருந்தனர். எனவே 1904ஆம் ஆண்டு முடுதோம்களை நியமிப்பதற்காகப் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும்போது ஐரோப்பிய அருள்பணியாளர்களுடன் இணைந்து பணியாற்ற ஆங்கில மொழி எழுதவும் பேசவும் தெரிந்திருத்தல் வேண்டும் என்ற தகுதியும் நிர்ணயிக்கப்பட்டது. ஆலயத்தின் சொத்துக் களைப் பேணிப் பாதுகாக்கச் சொத்துக்களைப் பற்றிய போதிய அறிவும் இருத்தல் வேண்டும். நமது ஆலய முடுதோம்களான D. தேவசகாயம், D. பிரான்சிஸ், F. டேவி ஆகியோர் நமது ஆலயப் பாடகர் குழுவின் தலைவர்களாக இருந்து ஆர்மோனியம் வாசித்தார்கள். மரியந்தோனி முடுதோம் பாடகர் குழுவில்

சிறந்தப் பாடகராக இருந்தார். மேற்கண்ட நற்பண்புகள் மற்றும் ஆளுமையின் அடிப்படையில் முடுதோம்கள் நியமிக்கப்பட்டனர். இவ்வாறு நியமிக்கப்பட்ட முடுதோம்கள் அனைவரும் கிளைப் பங்குகளைச் சார்ந்தவர்கள் ஆகும். மேலராமன்புதூரைச் சார்ந்த திரு. F. ஸ்டான்லி முடுதோம் மந்தங்காட்டைச் சார்ந்த திருமதி மனோன்மணி நாடாச்சியை 03.05.1930 அன்று கிறிஸ்தவ முறைப்படி திருமணம் செய்து இராமன்புதூரில் குடியிருந்தார். பின்னர் மனோன்மணி நாடாச்சியின் சகோதரன் திரு. N. பெரியநாடார் திருமணமாகாமல் 14.08.1940 அன்று இறந்து விட்டதால் 1940ஆம் ஆண்டு முதல் F. ஸ்டான்லி முடுதோம் மந்தங்காட்டில் குடியிருந்தார். எனவே அவர் 1961ஆம் ஆண்டு குருசடி ஊரில் உறுப்பினராகச் சேர்ந்தார்.

1842ஆம் ஆண்டு ஆலய வளாகத்திலுள்ள சொத்துகளைத் தானமாகவும் விலையாகவும் வாங்கியபோது இராமன்புதூர், புன்னக்காட்டுவிளை, தளவாய்புரம், கோணம் மற்றும் மறவன்குடியிருப்பு ஆகிய ஊர்கள் நமது ஆலயத்துடன் இணைந்திருந்தன என்று முன்னர் கண்டோம். 01.06.1904 அன்று திரு. D. பிரான்சிஸ் மூடுதோமாக நியமிக்கப்பட்டது குறித்துத் தன்னுடைய நாட்குறிப்பேட்டில் ஆங்கிலத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்.


31) Mr D. Francis received Patent from His Lordship Right Rev. Dr Ferdinand Ossi Bishop of Quilon on 1st June 1904 as a Trustee of St Antony's Church Kurusady consisting of 25 villages in the 3 Talukks of Thovala, Agastiswaram and Eraniel

அதன் தமிழாக்கம் வருமாறு

**"திரு. D. பிரான்சிஸ் குருசடி புனித அந்தோனியார் ஆலய முடுதோமாக நியமிக்கப்பட்ட ஆணையைக் கொல்லம் மறைமாவட்ட ஆயர் மேதகு டாக்டர். பெர்டினாண்ட் ஒஸி அவர்களிடமிருந்து 1904 ஜூன் 1ஆம் நாள் பெற்றிருக்கிறார். குருசடி புனித அந்தோனியார் ஆலயமானது தோவாளை, அகஸ்தீஸ்வரம் மற்றும் இரணியல் ஆகிய மூன்று தாலுகாக்களில் உள்ள 25 கிராமங்களை உள்ளடக்கியது."**

அந்த 25 ஊர்கள் எவையெவை என்பதை முதலில் நாம் அறிந்துகொள்ள வேண்டும். நமது ஆலயக் கட்டுமானப் பணி சம்பந்தமாக 21.04.1901 அன்று அப்போதைய கொல்லம் மறைமாவட்ட ஆயர் பெர்டினாண்ட் ஒஸிக்கு நமது ஆலய முடுதோம் திரு. V. தொம்மையப்பன் தலைமையில் குருசடிச் சபையார் கொடுத்த மனுவில் கீழராமன்புதூர், இராமன்புதூர், காட்டுவிளை, புன்னக்காட்டுவிளை, தளவாய்புரம், மேலவடலிவிளை, இடச்சிவிளை, மேலராமன்புதூர், வேதகாரன்குடியிருப்பு, மறவன்குடியிருப்பு, குருசடி, கோணம், அமராதிவிளை, இராமனாதிச்சன்புதூர், ஆரல்வாய்மொழி, சீதப்பால், திட்டுவிளை, செம்பொன்விளை, பிளவக்கல்விளை ஆகிய 19 ஊர்களின் பிரதிநிதிகள் கையொப்பம் இட்டுள்ளனர். அந்த மனுவில் குருசடி ஊர் சார்பாக திரு. S. மரியந்தோனியும், திரு. S. மரிய ஜேசு அடிமையும் கையொப்பம் இட்டுள்ளனர். அந்த மனு 120 ஆண்டுகள் பழைமையானதாக உள்ளதால் செல்லரித்தும், எழுத்துக்கள் அழிந்த நிலையிலும் உள்ளது. இதனால் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதை வாசித்துப் புரிந்துக்கொள்ள முடியவில்லை (பார்க்க பக்கம் 84 - 90). ஏற்கனவே வட்டக்கரை ஊர் மேலஆசாரிப்பள்ளம் பங்குடன் இணைந்திருந்தது என்று முன்னர் கண்டோம். இதற்குக் காரணம் வட்டக்கரையைச் சார்ந்தவர்கள் ஆசாரிப்பள்ளத்தை அடுத்த பள்ளவிளையிலிருந்து இடம்பெயர்ந்து வட்டக்கரையில் குடியேறியவர்கள். எனவே தொடர்ந்து ஆசாரிப்பள்ளம் பங்குடன் இணைந்திருந்தனர். ஆனால் நமது பெரிய ஆலயம் கட்டப்படும்போது வட்டக்கரை நமது ஆலயத்துடன் இணைந்துவிட்டது. மேலும் இராஜாவூர் மிக்கேல் அதிதூதர் ஆலயமும் நமது ஆலயத்துடன் இணைந்திருந்தது. மாத்தால் தூய பிரான்சிஸ் அசிசி ஆலயப் பவள விழா மலரில் குருசடிப் பங்கிலிருந்து அருள்பணியாளர்கள் வந்து இந்தப் பகுதி மக்களை ஆன்மீகத்தில் வளர்த்து வந்தார்கள் என்றும் மாத்தால் நாகர்கோவில் குருசடிப் பங்கின் கிளைப்பங்காக இருந்தது என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.[3] எட்டாமடைப் பங்கின் அன்பிய ஒருங்கிணைப்பு ஆண்டு மலர் 2014இல் குருசடிப் பங்கோடு எட்டாமடைப் பணித்தளமானது பல காலங்கள் இருந்தது என்றும் குருசடிப் பங்குத்தந்தை அருள்பணி. பென்னார்டின் 12 ஏக்கர் நிலம் கோவில் வளர்ச்சிக்காக வாங்கியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.[4] மேலும் நெடுங்கன்விளை என்ற ஊரும் குருசடி ஆலயத்துடன் இணைந்திருந்தது. 1962ஆம் ஆண்டு வரை நெடுங்கன்விளை ஊர் மக்கள் குருசடி ஆலயத்திற்கு வரி செலுத்தியுள்ளனர் (காண்க பக்கம் 91). மேலும் இராமனாதிச்சன்புதூரை அடுத்திருந்த மந்தவிளை ஊரும் நமது ஆலயத்துடன் இணைந்திருந்தது (காண்க பக்கம் 58). திரு. பிரான்சிஸ் முடுதோம் தன்னுடைய நாட்குறிப்பேட்டில் 25 ஊர்களும் தோவாளை, அகஸ்தீஸ்வரம் மற்றும் இரணியல் தாலுகாவிற்கு உள்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார். எனவே எந்தெந்த ஊர்கள் எந்தெந்த தாலுகாக்களில் உள்பட்டது என்பதைக் கீழே குறிப்பிடுகிறேன்.

3. மாத்தால், *தூய பிரான்சிஸ் அசிசி ஆலயம் பவளவிழா மலர், 1936 - 2011* (Nagercoil : Kings Offset Printer) ப. 35
4. எட்டாமடை பங்கு, *அன்பிய ஒருங்கிணைப்பு ஆண்டு மலர்,* 2014, ப. 21

| வ.எண் | ஊர் பெயர் | தாலுகா |
|---|---|---|
| 1. | குருசடி | இரணியல் |
| 2. | வட்டக்கரை | இரணியல் |
| 3. | ஆரல்வாய்மொழி | தோவாளை |
| 4. | சீதப்பால் | தோவாளை |
| 5. | திட்டுவிளை | தோவாளை |
| 6. | செம்பொன்விளை | தோவாளை |
| 7. | பிளவக்கல்விளை | தோவாளை |
| 8. | மாத்தால் | தோவாளை |
| 9. | எட்டாமடை | தோவாளை |
| 10. | கீழராமன்புதூர் | அகஸ்தீஸ்வரம் |
| 11. | இராமன்புதூர் | அகஸ்தீஸ்வரம் |
| 12. | காட்டுவிளை | அகஸ்தீஸ்வரம் |
| 13. | புன்னக்காட்டுவிளை | அகஸ்தீஸ்வரம் |
| 14. | தளவாய்புரம் | அகஸ்தீஸ்வரம் |
| 15. | மேலவடலிவிளை | அகஸ்தீஸ்வரம் |
| 16. | இடச்சிவிளை | அகஸ்தீஸ்வரம் |
| 17. | மேலராமன்புதூர் | அகஸ்தீஸ்வரம் |
| 18. | வேதக்காரன்குடியிருப்பு | அகஸ்தீஸ்வரம் |
| 19. | மறவன்குடியிருப்பு | அகஸ்தீஸ்வரம் |
| 20. | கோணம் | அகஸ்தீஸ்வரம் |
| 21. | மந்தவிளை | அகஸ்தீஸ்வரம் |
| 22. | அமராவதிவிளை | அகஸ்தீஸ்வரம் |
| 23. | இராமனாதிச்சன்புதூர் (தெற்கு) | அகஸ்தீஸ்வரம் |
| 24. | இராஜாவூர் (புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம்) | அகஸ்தீஸ்வரம் |
| 25. | நெடுங்கன்விளை | அகஸ்தீஸ்வரம் |

குருசடி மற்றும் வட்டக்கரை ஆகிய ஊர்கள் தற்போது நீண்டகரை ‘A’ கிழக்குக் கிராமத்தில் உள்ளன. 01.06.1904 அன்று திரு. பிரான்சிஸ் முடுதோம் நாட்குறிப்பு எழுதும்போது மேற்கண்ட இரண்டு ஊர்களும் நீண்டகரை கிராமத்தில் இருந்தன. தற்போதைய நீண்டகரை ‘A’ கிழக்குக் கிராமம் அப்போதைய நீண்டகரை கிராமத்தின் ஒரு பகுதிதான். அக்காலக்கட்டத்தில் நீண்டகரை கிராமம் இரணியல் தாலுகாவில் இருந்தது என்பதை நிரூபிக்கத் தேவையான ஆவணங்கள் சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் கிழிந்த நிலையில் மிக மோசமாக இருந்ததால் அவற்றை நகல் எடுக்க முடியவில்லை. ஆனால் திருவிதாங்கூர் சமஸ்தானத்தால் 01.04.1907 அன்று வெளியிடப்பட்ட அகஸ்தீஸ்வரம் தாலுகாவின் நாகர்கோவில் வருவாய்க் கிராமத்தின் செட்டில்மெண்டு ஆயக்கெட்டு மெம்மோவில் நாகர்கோவில் வருவாய்க் கிராமத்தின் தெற்கு மற்றும் மேற்கு எல்லைகளில் இரணியல் தாலுகா நீண்டகரை கிராமம் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (காண்க பக்கம் 92, 93). மேலும் 1920ஆம் ஆண்டுவரை உள்ள சொத்து ஆவணங்களில் நீண்டகரை கிராமம் இரணியல் தாலுகாவில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1920ஆம் ஆண்டுக்குப் பிறகு இரணியல் தாலுகா ரத்து செய்யப்பட்டு நீண்டகரை கிராமம் அகஸ்தீஸ்வரம் தாலுகாவுடன் இணைக்கப்பட்டது. மீதமுள்ள கிராமங்கள் கல்குளம் தாலுகாவுடன் இணைக்கப்பட்டன.

மேற்கண்ட ஊர்களில் இராமன்புதூர், கீழராமன்புதூர், காட்டுவிளை, மேலராமன்புதூர், இடச்சிவிளை, மேலவடலிவிளை, புன்னக்காட்டு விளை மற்றும் தளவாய்புரம் ஆகிய எட்டு ஊர்களும் வடபகுதியைச் சார்ந்தவை ஆகும். வேதக்காரன்குடியிருப்பு, மறவன்குடியிருப்பு, வட்டக்கரை, குருசடி, கோணம் ஆகிய ஐந்து ஊர்களும் தென்பகுதியைச் சார்ந்தவை ஆகும். மீதமுள்ள ஊர்கள் எந்தப் பகுதியில் இணைக்கப் பட்டிருந்தன என்பதை அறிய முடியவில்லை. வடபகுதி மற்றும் தென்பகுதியிலுள்ள மேற்கண்ட 13 ஊர்களைச் சார்ந்தவர்களே ஆலய நிர்வாகத்தில் அதிக அளவில் பங்கேற்றவர்கள். தற்போது ஆலயங்களை மையப்படுத்திப் பங்கு என்று ஏற்பட்டுள்ளதால் இந்த 25 ஊர்களில் சில ஊர்கள் தனி ஊராக தற்போது இல்லை. சில ஊர்கள் பங்கு எல்லைக்குள் சிறிய பகுதிகளாக உள்ளன. பிளவக்கல்விளை மற்றும் செம்பொன்விளை ஆகிய ஊர்கள் எட்டாமடை பங்குடன் இணைந்துவிட்டன. காட்டுவிளை, இராமன்புதூர், கீழராமன்புதூர் ஆகியவை இணைந்து கார்மல்நகர் பங்காக உள்ளது. மேலராமன்புதூர், இடச்சிவிளை, மேலவடலிவிளை ஆகிய ஊர்கள் இணைந்து மேலராமன்புதூர் பங்காக உள்ளது. மந்தவிளை

ஊர் இராமனாதிச்சன்புதூர் பங்குடன் இணைந்து விட்டது. கோணம் என்பது வடக்குக் கோணம் என்றும் புன்னக்காட்டுவிளை புன்னைநகர் என்றும் வேதக்காரன்குடியிருப்பு வேதநகர் என்றும் ஆரல்வாய்மொழி என்பது தேவசகாயம் மவுண்ட் என்றும் தற்போது அழைக்கப்படுகின்றன. நெடுங்கன்விளை ஊர் எந்தப் பகுதியில் இருந்தது என்றும் எந்தப் பங்குடன் இணைந்துள்ளது என்பதையும் அறிய முடியவில்லை. குருசடியிலிருந்து புன்னைநகர் செல்லும் சாலையில் கூத்தன்காட்டிற்கு கிழக்குப் பக்கம் நெடுங்கன்விளை என்ற ஊர் தற்போது உள்ளது. ஆனால் அந்த ஊர் இந்து நாடார்கள் குடியிருக்கும் பகுதியாகும். ஆனால் நமது ஆலயத்துடன் இணைந்திருந்த நெடுங்கன்விளை ஊர் வேறு பகுதியில் இருந்திருக்க வேண்டும்.

சபையார் என்ற நிர்வாக அமைப்பில் நிர்வாகப் பொறுப்பில் பங்குத்தந்தையும் முடுதோம்களும் மட்டும் இருந்து வந்தனர். ஆலயக் கணக்குகளை முடுதோம்களே பராமாரித்து வந்தனர். 1925ஆம் ஆண்டு சபையாருக்கு ஆலயக் கணக்குகள் எழுத கணக்குப் பிள்ளை அல்லது கணக்கன் (Parish Accountant) என்ற பொறுப்பில் ஒருவரை நியமிக்க முடிவு செய்தனர். இதற்காக 27-12-1925 அன்று கணக்கன் பதவியை ஏற்படுத்த அனுமதி வேண்டிக் கொல்லம் மறைமாவட்ட ஆயருக்கு மனு கொடுத்தனர். அதில் இராமன்புதுரைச் சார்ந்த திருவாளர்கள் ஜேசுஅடிமை கிறாஸ், சந்தியாவு ஜேசுதாசன், இன்னாசிமுத்து ஞானக்கண், T. S. தொம்மையப்பன் நாடார், மாதவடியான் மரியந்தோனி, மரியான் சவரிமுத்து, D. A. தேவசகாயம் நாடார் ஆகியோர் கையெழுத்து இட்டுள்ளனர். முடுதோம்கள் D. பிரான்சிஸ் மற்றும் G. மரியந்தோனி ஆகிய இருவரும் 'நாங்கள் சம்மதிக்கிறோம்' (we agree) என்று எழுதிக் கையொப்பம் செய்துள்ளனர். அதன்பிறகு அப்போதையப் பங்குத்தந்தை அருள்பணி. பயஸ் அவர்கள் தாமும் பரிந்துரை செய்வதாக எழுதிக் கையெழுத்து இட்டுள்ளார் (காண்க பக்கம் 94, 94). அதன்பிறகு இராமன்புதூர் திரு. T. S. உத்தரியமுத்து என்பவர் கணக்குப் பிள்ளையாகப் நியமிக்கப்பட்டார். அவர் 1962ஆம் ஆண்டு வரை கணக்குப் பிள்ளையாகப் பணியாற்றினார். அதன்பிறகு குருசடி ஊரைச் சார்ந்த திரு. G. பெர்னார்டின், அவரைத் தொடர்ந்து குருசடி திரு. A. ஜேசுதாசன் ஆகியோர் கணக்குப் பிள்ளையாகப் பணிபுரிந்தனர். இறுதியாகக் குருசடி ஊர் திரு. S. தாசன் (கார்மல் பள்ளியில் தலைமை எழுத்தராகப் பணியாற்றியவர்) 1985ஆம் ஆண்டுவரை கணக்குப் பிள்ளையாகப் பணியாற்றினார். இவர் 1951 முதல் 1980ஆம் ஆண்டுவரை நமது ஆலயப் பாடகர் குழுவின் தலைவராக இருந்து ஆர்மோனியம் வாசித்தார்.

பங்குத்தந்தைக்கு வழிபாடு காரியங்களில் உதவி செய்ய ஒருவர் சபையாரால் நியமிக்கப் பட்டார். அவர் உபதேசியார் என்று அழைக்கப் பட்டார். தொடக்கக் காலத்தில் யார் யார் உபதேசியார்களாக நியமிக்கப்பட்டனர் என்பதை அறிய முடியவில்லை. ஏறக்குறைய 1870ஆம் ஆண்டு மறவன்குடியிருப்பைச் சார்ந்த திரு. சவரிமுத்து என்பவர் உபதேசியாராக நியமிக்கப்பட்டார். அவருடைய காலத்திற்குப் பின்பு அவரது மகன் திரு. மரிய மிக்கேல் உபதேசியராக நியமிக்கப்பட்டார். திரு. மரிய மிக்கேல் காலத்திற்குப் பிறகு அவரது மகன் திரு. சூசை உபதேசியாராக நியமிக்கப்பட்டார். திரு. சூசை உபதேசியாராகப் பணியாற்றியபோது 1940ஆம் ஆண்டு நமது பங்கிற்குத் தனிப் பங்குத்தந்தை நியமிக்கப்பட்டார். எனவே உபதேசியார் குருசடி ஊரிலே குடியிருக்க வேண்டுமென்று சபையார் முடிவு செய்து, தெற்குத்தெருவில் ஆலயத்திற்குச் சொந்தமான வீட்டில் குடியிருத்தப்பட்டார். திரு. சூசை உபதேசியார் மறைவிற்குப் பிறகு அவரது மகன் திரு. S. தனிஸ்லாஸ் உபதேசியாராகப் பணியாற்றினார். தனிஸ்லாஸ் மறைவிற்குப் பிறகு திரு. S. ஜோசப் ஆன்றனியும் திரு. P. லூயிஸ் ஜாண் ஆசிரியர் ஆகியோர் உபதேசியாராகப் பணியாற்றினர். தற்போது S. தனிஸ்லாஸ் உபதேசியார் மகன் திரு. S. ஜேசு ரெத்தினம் உபதேசியாராகப் பணியாற்றி வருகிறார். இது தவிர குருசடி ஊரைச் சார்ந்தத் திருவாளர்கள் மாசிலாமணி, தொம்மந்தோணி, சவரிமுத்து மகன் சூசைமரியான் மற்றும் மரிய புதலி மகன் சஞ்சோரீஸ் ஆகியோர் நமது கிளைப்பங்குகளில் உள்ள சிற்றாலயங்களில் உபதேசியாராகப் பணியாற்றியுள்ளனர்.

ஆலயத்தில் வழிபாடு நடைபெறும்போது மணி அடிப்பதற்குப் பெண்கள் நியமிக்கப் பட்டனர். அவர்கள் கோவிலாய் என்று அழைக்கப்படுகின்றனர். ஏறக்குறைய 1870ஆம் ஆண்டு குருசடி ஊரைச் சார்ந்த திருமதி. மரிய அந்தோனியாள் (மரியாயி) கோவிலாயாக நியமிக்கப்பட்டார். அதைத் தொடரந்து திருமதி. தொம்ம நாடாச்சி, திருமதி. ஜோசப் அம்மாள், திருமதி. மரிய முத்து, திருமதி. மரியதங்கம், திருமதி. D. மார்ட்டினம்மாள், திருமதி. D. மரிய பிறகாசி, திருமதி. T. ஞானப்பிறகாசி, திருமதி. A. சூசன்னாள், திருமதி. T. ரோகிணி, திருமதி. S. றோஸ்மேரி ஆகியோர் கோவிலாயாகப் பணியாற்றினார்கள். தற்போது செல்வி. சரோஜா கோவிலாயியாகப் பணிபுரிந்து வருகிறார்.

19ஆம் நூற்றாண்டில் சபையாரின் பணிகள் குறித்து எந்த ஆவணமும் நமக்குக் கிடைக்கவில்லை. 01-06-1904 அன்று திரு. D. பிரான்சிஸ் மற்றும் திரு. G. மரியந்தோனி ஆகியோர் முடுதோமாக நியமிக்கப்பட்டனர். 30 ஆண்டுகள் தொடர்ந்து இருவரும் முடுதோமாக இருந்து வந்த நிலையில் 1934ஆம் ஆண்டு முடுதோம்களை மாற்ற வேண்டுமென்று சிலர் முயற்சி செய்தனர். எனவே 01-06-1904முதல் 1934வரை முடுதோம்கள் D. பிரான்சிஸ் மற்றும் G. மரியந்தோனி ஆகியோர் பங்குத்தந்தையருடன் இணைந்து செய்த மிக முக்கியமான பணிகள் என்னென்ன என்பது குறித்து மறவன்குடியிருப்பு திரு. P. வறீது, கீழராமன்புதுார் திரு. C. செல்வநாதன், இடச்சிவிளை திரு. T. S. சவேரியார் அடிமை, புன்னக்காட்டுவிளை திரு. D. அம்புறோஸ் மற்றும் திரு. A. செல்வராயன், இராமன்புதுார் திரு. M. செல்வராயன் மற்றும் திரு. D. சூசை ஆன்றனி, இடச்சிவிளை திரு. J. சவரிமுத்து, கீழராமன்புதுார் திரு. Y. ஜோசப், திரு. M. M. கிரகோரி, தளவாய்புரம் திரு. P. ராஜேந்திரன், கீழராமன்புதுார் திரு. V. ஆசீர்வாததாஸ் மற்றும் இராமன்புதுார் திரு. V. அலெக்ஸ்சாண்டர் ஆகியோர் 25-01-1935 அன்று பங்கு மக்களுக்குத் துண்டுப் பிரசுரம் மூலம் எடுத்துரைத்துள்ளனர். இதனால் முடுதோம்களை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவு கிடைக்கவில்லை. எனவே திரு. D. பிரான்சிஸ் மற்றும் திரு. G. மரியந்தோனி ஆகிய இருவரும் தொடர்ந்து முடுதோம்களாக இருந்தனர். அந்தத் துண்டுப் பிரசுரத்தைப் பார்வையிடும்போது திரு. பிரான்சிஸ் முடுதோமும் திரு. மரியந்தோனி முடுதோமும் பங்குத்தந்தையருடன் இணைந்து 1904 முதல் 1934ஆம் ஆண்டுவரை செய்த சாதனைகளில் சிலவற்றை அறியமுடிந்தது. அவற்றை அப்படியே உங்கள் பார்வைக்கு வைக்கிறேன்.

# புனித யூதா ததேயு கெபி



நமது ஆலயம் புனிதப்படுத்தப்பட்டதன் 50ஆம் ஆண்டின் நினைவாகக் குருசடி வடக்குத்தெருவில் புனித யூதா ததேயு கெபி கட்டப்பட்டு 15.01.1961 அன்று கோட்டாறு மறை மாவட்ட ஆயர் T. R. ஆஞ்ஞிசாமியால் புனிதப்படுத்தப் பட்டது. இந்த கெபி குருசடி ஊரைச் சார்ந்த திரு. S. இராசையா என்பவரின் முயற்சியில் கட்டப்பட்டதாகும். இந்தக் கெபியானது கன்னியாகுமரி மாவட்டத்தில் புனித யூதா ததேயு பெயரில் கட்டப்பட்ட முதல் கெபியாகும். இந்தக் கெபி இரண்டு அடுக்குகளைக் கொண்டது. முதல் அடுக்கில் புனித யூதா ததேயு திருவுருவமும், இரண்டாவது அடுக்கில் இயேசுவின் திருவுருவமும் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வருடமும் புனித யூதா ததேயு திருவிழாவான அக்டோபர் மாதம் 28ஆம் தேதி இந்தக் கெபியில் சிறப்புத் திருப்பலி நடைபெறுகிறது. அதற்கு முந்தைய நாள் மாலையில் மாலை ஆராதனையும் நடைபெறும்.


திரு. S. இராசையா

## மொடுதோமார்கள் கனம் சுவாமிமார்களோடு கூடி செய்த சில நன்மைகள்.

(1) ராமனுதிச்சன்புதூரில் 6½ ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலங்களை தானப்பிரமாணமாக எழுதிவாங்கப்பட்டது.

(2) வடக்குகோணத்தில் சாந்தப்பனுடைய புரயிடத்தை தானப்பிரமாணமாக வாங்கினது.

(3) வட்டக்கரை மொடுதோம் அவர்களின் வஸ்துக்களைத் தானமா எழுதிச்செய்தது.

(4) மிக்கேல் உபாத்தியாயர் வஸ்துக்களை தானப்பிரமாணமாக எழுதினது.

(5) மேலராமன்புதூர் மாதவடியாளிடமிருந்து பெண் பள்ளிக்கூடத்திற்கு ஆவசியமான பூமியை தானமாக எழுதச்செய்தது.

(6) மேலராமன்புதூர் அந்தோனிஞானப்பிரகாசமிடமிருந்து புன்னைப் புரயிடம் தானமாக வாங்கினது.

(7) நாகர்கோவில், ஐக்கோட்டு வக்கீல் ராஜ் டானியல் அவர்களிடத்திலிருந்து கழிந்த மாசத்தில் ஒரு புரயிடம் தானமாக வாங்கினது.

(8) கோயில் கட்டிடம் கூரைவேலை குற்றமில்லாமல் செய்கிறதைப்பற்றி பலமாதிரி அபிப்பிராயபேதங்கள் ஏற்பட்டபொழுது இஞ்சினீயர் வைகுண்டம் ஐயர் அவர்களை வருத்தி இராணிமல்லும், இரும்புவேலையும், தகரக்கூரையுமாக்கத் தீர்மானித்துப் பொம்பாயிலிருந்து கப்பல்வழி இரும்பும் தகரமும் வருத்தியது.

(9) கோயில் கூரை ஒண்ணிக்கும்போது சாமான்களை பணியில்ஏற்ற முடியாததால், ஜாண்குரியன் இஞ்சினீயர் அவர்களை வருத்தி பேச்சிப்பாறையணையிலுள்ள இயந்திரமும், அதில் வேலைசெய்யும் வஸ்தாதுமாரையும் வருத்திப் பணிஏற்றி ஒண்ணித்தது

(10) ஷெட் மற்ற வேலைகள் நடக்கும்போது அபிப்பிராயபேதங்கள் ஏற்பட்டதில், ஜேக்கப்துரை இஞ்சினியர் அவர்களையும் பின் தாணுபிள்ளை இஞ்சினியர் அவர்களையும் கொண்டுவந்து பார்வையிட்டு, ஒழுங்கான முறையில் செய்யப்பட்டது.

(11) கடந்த வருஷத்தில் இப்பொழுது இருக்கிற கோயில் முகப்பை இடித்து மாற்றிப் புதிதாக கட்டவேண்டுமென்று பெருஞ்செலவுசெய்ய ஆலோசனை பெலப்பட்டபொழுது ஜார்ஜ்பிலிப் இஞ்சினியர் அவர்களைக்கொண்டுவந்து பார்வையிடச்செய்து முகப்பு இடிக்காமல் அவர் அபிப்பிராயப்படி மூன்று புறம் குண்டுக்கல் சுவர் கட்டி மண்சுமந்து பெலப்படுத்தியது.

(12) இவைகளெல்லாம் மொடுதோம்மார்களுடைய அபிப்பிராயத்திற்கு இசைந்து நடப்பித்துத் தந்த கனம் பங்குசுவாமிமார்களுக்கும், எங்களுடைய நன்றியைச்செலுத்திக் கொள்ளுகிறோம்.

(13) இராமன்புதூர் காற்மல் இங்கிலீஷ் உயர்தர பாடசாலையை கனம் பென்வலிகர் ஆண்டவரவர்களிடத்தில் மனுப்பண்ணி நடப்புக்கு வருத்தியது.

(14) புன்னைக்காட்டுவிளைப் பாடசாலையைக் கம்பிளீட் பிறைமரி ஸ்கூலாக்கினது.

(15) மறவன்குடியிருப்பு பாடசாலை ஒரு கம்பளீட் வற்னாக்குலர் மெடில் ஸ்கூலாக்கப்பட்டது.

(16) இராமன்புதூரில் பெண் பாடசாலையொன்று ஏற்படுத்தி, மூன்றும் வகுப்புவரைக்கொண்டுவரப்பட்டது.

(17) கோயிலும் பிரமாண்டமான இரு கோபுரங்களும் கட்டிமுடிந்தது.

(18) குருசடி கோயிலுக்குள்ள சாலைவழி (ஓடை) ரெஸ்தாவாக்கப்பட்டது. சல்லி வைப்பதற்கு உத்தரவு கிடைக்கப்பெற்றது.. கூடிய சீக்கிரம் சல்லிவைக்கப்படும்.

(19) கோடு கச்சேரிகளுக்குப்போய் எண்ணிறந்த பணச்செலவு செய்து முடிவுபெறக்கூடிய பல சிவில் கிறிமினல் கேஸ்களை பணச்செலவில்லாமல் தீர்க்கிறது (சிலவருஷங்களுக்கு முன்னதியாக சில நண்பர்கள் குற்றப்படத்தக்கதாகவிருந்த ஓர் சிறைகடத்துக்கேஸ் சமாதானப்படுத்தியது ஓர் உதாரணமாகும்).

(20) குருசடியூரில் மூன்றும் வகுப்புவரையுள்ள பள்ளிக்கூடம் ஏற்படுத்தினது

(21) ஆள் சஞ்சரிப்பதற்கு வசதியில்லாதிருந்த சாவடி, சௌகரிய நிலையில் பெரிதாய் அமைக்கப்பட்டது.

(22) பல வருஷங்களாகத் தவறாது கலகம் விளைந்துவந்த 9-ம் திருநாள் உல்சவத்தை படிப்படியாய் குழப்பமில்லாத ரீதியில் கொண்டுவரப்பட்டது.

(23) சிறிய புரையாயிருந்த மேடையை வசதியான பெரியமேடையாகக்கெட்டினது.

(24) கோயில் சம்பந்தமான வேலைகளைத் தமது சொந்தவேலைகளைப்போல் பாவித்து குறைந்த செலவில் நடத்தி முடிக்கிறது.

இன்னும் இவைபோன்ற பல அரும் பெரும் முயற்சிகள் செய்து நமது சபையை இதுகாறும் ஒரு நிலையில் காப்பாற்றி வந்தார்கள் என்பது இவர்கள் தம் நீடிய கால சர்வீஸிலிருந்து ஒருவாறு மதிக்கலாம்.

முடிவாக, இதுகாறும் கூறிவந்த விஷயங்களிலிருந்து, நியூட்டறல்கட்சி என்று ஆரம்பித்த இவர் மொடுதோமார் சார்பாக நின்று ஏதோ வழவழவென்று கூறி நம் எண்ணத்தை மாற்ற முயலுகிறார். ஓ! இது முடவன் கொம்புத்தேனை இச்சிப்பதை யொக்குமென்று நகைத்து இகழாதீர்கள். யாங்கள் மொடுதோமார்க்கு சார்பு அல்ல, நியாயத்தின் சார்பு என்று அழுத்தமாய் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மொடுதோமார்களை மாற்றவேண்டுமானால் அடியிற்காணும் சில விஷயங்களைக் கவனிக்கும்படியாய், மாற்றவேண்டுமென்ற பாரிசத்தில் நின்றே கேட்டுக்கொள்ளுகிறோம்.

1 ஏகதேசம் 30 வருடகாலமிருந்த இவர்களை இப்போது மாற்றவேண்டுமென்பதற்கு நாம் கைக்கொண்ட நியாயங்கள் என்ன? மாற்றினால் அதனால் வரும் லாபம் என்ன?.

2. அவர்களை மாற்றுவதற்கான அனுமதி நாம் மேலதிகாரிகளிடமிருந்து பெற்றதுண்டா?.

3. இந்த சபையில் அவர்களை மாற்றவேண்டுமென்று கூறும்பாட்டி, மெஜாரட்டியா? மைனர்ட்டியா? அதை வரையறுத்ததுண்டா?.

4. அவர்களை நாம் மாற்றினால் அவர்களுக்குப் பதில் வேறு மொடுதோம்மார்கள் அவசியமா? அவசியமானால் நாம் தெரிந்தெடுப்பது யாரை எல்லாம்? மெஜாரிட்டியாகும் நாம் ஏற்படுத்தும் நபரை வைக்க, சம்மதிக்குமா? அங்ஙனம் சம்மதித்து வேறு இருவரை மொடுதோமாக தெரிந்தெடுத்தால். அவர்களுக்கு தமிழ், மலையாளம் அறியாது நமது கோயிலுக்குவரும் குருக்கள் உத்தியோகஸ்தர் முதலியோரை செவ்வையாக நடத்திவைக்க முடியுமா?.

5. இம் மொடுதோமார்களை 30 வருஷங்களுக்கு அப்பால் நீங்கிக்கொள்ளச் சொல்லவேண்டுமானால் நாம் அதற்குக் கையாடும் முறையென்ன?.

6. இனி மொடுதோமாகவேண்டுமென்ற நபர்களை மேலதிகாரிகளோடு சபையும் ஏற்றுக்கொள்ளுமா அங்ஙனம் அதிகாரத்தோரணையில் உள்ள ஒருவர் தகுந்த காரணத்தோடு நம்மில் முன் வருவாரா?.

கடைசியாக ஒன்றுகூறி சபையாரை வணங்கி விஷயத்தை நிறுத்திக்கொள்ளுகிறோம்.
"ஒன்றுபட்டால் உண்டுவாழ்வே, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்குந் தாழ்வே".

இங்ஙனம்,

குருசடி
25—1—1935

(Sd/-
P. Vareed, மறவன்குடியிருப்பு. (Teacher)
C. Selvanathan, ஊராமன்புதூர்.(School Final)
T. S. Savariaradimai, இடச்சிவிளை. (Teacher)
D. Ambrose, புன்னைக்கட்டுவிளை.(School Final)
A. Selvarayan, ~~ராமன்புதூர்~~ Do
M. Selvarayan, ராமன்புதூர். Do
D. Susai Antony, ராமன்புதூர். Do
J. Xavairimuthu, இடச்சிவிளை. (Teacher)
Y. Joseph, ஊராமன்புதூர். (Student)
M. M. Gregory, ஊராமன்புதூர். (Teacher)
P. Rayenthiran, தளவாபுரம். (Student)
V. Asirvathe Das, ஊராமன்புதூர்.(School Fir
V. Alexander, ராமன்புதூர். (School Final

முடுதோம்களும் சபையாரும் பங்குத்தந்தையருடன் இணைந்து 1842 முதல் 1985 வரையுள்ள காலங்களில் மேற்கொண்ட பணிகளை ஆன்மீகப் பணி, சமூகப் பணி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள், கல்விப் பணி என்று மூன்று தலைப்புகளில் தொடர்ந்து விரிவாகக் காண்போம்.

## 1. ஆன்மீகப் பணி

### 1:1 பெரிய ஆலயம் கட்டியது

சபையாரின் ஆன்மீகப் பணிகளுள் முக்கியமானதாக குருசடி ஊரில் இந்தப் பிரமாண்டமான ஆலயத்தைக் கட்டியதை முதலில் குறிப்பிடலாம். தற்போதுள்ள ஆலயத்திற்குக் கிழக்குப்பக்கமும் கொடிமரத்திற்கு மேற்குப்பக்கமாகவும் ஓர் ஆலயம் இருந்ததாக முந்தைய அத்தியாயத்தில் கண்டோம். அந்த ஆலயம் வளர்ந்து வரும் இச்சபைக்குப் போதுமானதாக இல்லை. இதற்குக் காரணம் 25 ஊர்கள் குருசடி புனித அந்தோனியார் ஆலயத்துடன் இணைந்திருந்ததுதான். எனவே பெரிய மற்றும் விசாலமான ஆலயம் கட்ட சபையாரால் தீர்மானிக்கப்பட்டது. 1889ஆம் ஆண்டு புதிய ஆலயம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. அடிக்கல் நாட்டியவர் கொல்லம் மறைமாவட்ட முதன்மை அருள்பணியாளர் விக்டர். நமது பங்குத்தந்தையாக இருந்தது ஐரோப்பாவைச் சார்ந்த அருள்பணி. எலியாஸ். அப்போது முடுதோம்களாக இருந்தது மேலராமன்புதூர் திரு. D. தேவசகாயம் மற்றும் மறவன்குடியிருப்பு திரு. மரிய ஆரோக்கியம் என்போர். புதிய ஆலயத்திற்கு வரைபடம் வரைந்து ஆலோசனைகள் வழங்கியவர் திருவனந்தபுரத்திலுள்ள ஐரோப்பிய பொறியாளர் ஆகும். அவரது பெயரை அறியமுடியவில்லை. நமது ஆலய முகப்புத் தோற்றம் மற்றும் பக்கவாட்டுச் சுவர்களும் அதில் அமைக்கப் பட்டிருந்த ஜன்னல்கள் ஐரோப்பிய கட்டிடப் பாணியான கோதிக் முறைப்படி உள்ளன. மேற்கூரையானது இராணி மல்லும் தகரக் கூரையுமாக இந்தியப் பாணியில் உள்ளதால் இவ்வாலயம் ஓரளவு கோதிக் முறைப்படி (Semi Gothic) வடிமைக்கபட்டடுள்ளது எனலாம்.

நமது பங்கில் அருள்பணி. எலியாஸ் அவர்களின் பணி மகத்தானது. இவ்வளவு பெரிய ஆலயம் இரட்டைக் கோபுரத்துடன் கட்டப்பட அருள்பணி. எலியாஸ் அவர்களே காரணம். முடுதோம்கள் மற்றும் சபையாரை ஊக்கப்படுத்தி ஆலயப் பணிகளைத் தொடங்கினார். 1892ஆம் ஆண்டு அருள்பணி. எலியாஸ் மாறுதலாகிச் சென்றுவிட்டார். அதனைத் தொடர்ந்து ஐரோப்பியரான அருள்பணி. மார்ட்டின் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார். பின்னர் 1898ஆம் ஆண்டு ஐரோப்பிய அருள்பணியாளர் உபால்டு பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார். ஆனாலும் பொருளாதாரப் பிரச்சினையால் 15 ஆண்டுகள் ஆலயக் கட்டுமானத்தில் பெரியளவில் எந்த விதமான முன்னேற்றமும் இல்லாமல் இருந்தது.

பின்னர் 1903ஆம் ஆண்டு நமது பங்குத் தந்தையாக ஐரோப்பாவைச் சார்ந்த அருள்பணி. எலியாஸ் கர்மேலோ பொறுப்பெடுத்தார். அவர் பங்குத்தந்தையாகப் பொறுப்பெடுத்தபோது முடுதோம்களாக இருந்தவர்கள் கீழராமன்புதூர் திரு. V. ஞானப்பிறகாசம் மற்றும் மறவன் குடியிருப்பு திரு. அ. ம. ஞானப்பிறகாசம் ஆகியோர். பங்குத்தந்தை எலியாஸ் கர்மேலோ ஆலயக் கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்கத் திட்டமிட்டார். அதனால் பங்கு நிர்வாகத்தை மாற்றியமைக்கத் திட்டமிட்டு, 15.05.1904 ஞாயிற்றுக்கிழமை அனைத்து ஊர் மக்களும் இணைந்த பொதுக்குழுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, புதிய முடுதோம்களைத் தேர்தல் மூலம் தெரிந்தெடுத்தார்.[5] அதன்படி மேலராமன்புதூர் திரு. D. தேவசகாயம் முடுதோம் மகன் திரு. D. பிரான்சிஸ் மற்றும் மறவன்குடியிருப்பு திரு. ஞானப்பிறகாசம் நாடார் மகன் திரு. G. மரியந்தோனி ஆகியோர் முடுதோம்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். D. பிரான்சிஸ் முடுதோம் அக்காலத்தில் திருவனந்தபுரத்தில் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் ஆங்கிலம் பயின்றவர். மரியந்தோனி முடுதோமும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக்கூடியவர். பிரான்சிஸ் முடுதோத்திற்கு அப்போது வயது 30. மரியந்தோனி முடுதோத்திற்கு வயது 32. ஆலயக் கட்டுமானப் பணியை நிறைவுசெய்ய இந்த இரண்டு இளைஞர்களும் தகுதி யானவர்கள் என்று பங்குத்தந்தை எலியாஸ்

5. *Diary of D. Francis,* p. 6

கர்மேலோ முடிவு செய்தார். பின்னர் கொல்லம் மறைமாவட்ட ஆயர் மேதகு பெர்டினாண்ட் ஒஸியின் அனுமதியைப் பெற்று 01.06.1904 அன்று மேற்கண்ட இருவரையும் முடுதோம்களாக நியமித்தார் (காண்க பக்கம் 82, 83). அவர் ஆலயப் பணிகளை முன்னெடுத்துச் செய்வதில் அதிக அக்கறை எடுத்தார். அருள்பணி. எலியாஸ் கர்மேலோவின் வேண்டுகோளை ஏற்று மக்கள் கொடுக்க வேண்டிய வரியைக் கொடுத்தனர். அதன் பிறகு ஆலயப் பணிகள் வேகமாக நடைபெற்றன.

ஆலயப் பணிகள் செவ்வனே நடைபெற திருவனந்தபுரத்திலிருந்து பொறியாளர்கள் (Engineers) வரவழைக்கப்பட்டு, அவர்களின் ஆலோசனைப்படியே ஆலயம் கட்டப்பட்டது. அவ்வாறு பொறியாளர்களான திருவாளர்கள் வைகுண்டம் ஐயர், ஜாண் குரியன், தாணுபிள்ளை மற்றும் ஜேக்கப் துரை ஆகியோர் நமது ஆலயக் கட்டுமானப் பணிகளை வந்து பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார்கள். திரு. ஜேக்கப் துரை அப்போது திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் செயற்பொறியாளராக இருந்தார். அவர் ஐரோப்பாவைச் சார்ந்தவர். ஆலயத்தின் மேற்கூரை தகர ஷீட்டுகளால் போடப்பட்டது. பிரான்சிஸ் முடுதோமும், மரியந்தோனி முடுதோமும் பங்குத்தந்தை எலியாஸ் கர்மேலோவும் பம்பாயிலிருந்து (மும்பை) தகர ஷீட்டுகள் வாங்கி, அவை கப்பல் வழியாகக் கொண்டு வரப்பட்டன. ஆலயக் கூரைக்கு மரத்திலான பெரிய உத்திரங்களைச் சுவர்மீது ஏற்றுவதற்குப் பேச்சிப்பாறை அணையிலிருந்து இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டன. பேச்சிப்பாறை அணையின் கட்டுமானம் 1897 முதல் 1906ஆம் ஆண்டுவரை நடைபெற்றது. ஆலயத்தின் சுவர்களில் வண்ணக் கண்ணாடிகளால் பெரிய ஜன்னல்கள் அமைக்கப்பட்டிருந்தன. அன்று மின்சார வசதி இல்லாததால் அருள்பணியாளர்கள் மறையுரை நிகழ்த்தத் தற்போது பெண்கள் அமரும் பக்கத்தில் பீடத்திலிருந்து 5ஆவது தூணின் மேற்பகுதியில் மறையுரை மேடை அமைக்கப் பட்டிருந்தது. அதன்மேல் நின்றுகொண்டு அருள்பணியாளர்கள் மறையுரை நிகழ்த்துவார்கள். அதற்கு வசதியாகத் திறக்கமுடியாதபடி வண்ணக் கண்ணாடிகள் பதித்த ஜன்னல்கள் அமைக்கப்பட்டிருந்தன. பின்னர் 1908ஆம்



ஆலயப் பக்கவாட்டுச் சுவரில் இருந்த வண்ணக் கண்ணாடிகள் பதித்த ஜன்னல்கள்

ஆண்டு அருள்பணி. எலியாஸ் கர்மேலோ ஐரோப்பாவிற்குச் சென்றதையடுத்து, அருள்பணி. பெர்னார்டின் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார்.

அருள்பணி. பெர்னார்டின் அவர்களும் ஐரோப்பாவைச் சார்ந்தவர். அவர் ஆலயக் கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க 25 ஊர்களிலும் உள்ள மக்களை வீடுவீடாகச் சென்று சந்தித்துக் கட்டுமானப் பணிக்கு அவர்கள் கொடுக்கவேண்டிய பணத்தை உடனடியாகக் கொடுக்க வலியுறுத்தினார். மக்களும் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்தனர். ஆலயத்தோடு இணைந்திருந்த 25 ஊர் மக்களும் இணைந்து மிகவும் சிரமப்பட்டு இவ்வாலயம் கட்டப்பட்டது. இந்த ஆலயத்தின் கட்டுமானப் பணிக்கு 25 ஊர் மக்களும் தாராளமாக நிதி உதவிகள் செய்துள்ளனர். இந்த ஆலயம் கடுக்காய் ஊற வைத்து அதைச் சுண்ணாம்பு, பதநீர் மற்றும் மணலுடன் கலந்து செக்கில் ஆட்டிச் சுட்ட செங்கலால் கட்டப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிக்குத் தேவையான செங்கல்கள் ஆலயத்திற்குப் பின்புறம் உள்ள நிலத்திலிருந்து (சமூகநலக் கூடம் அமைந்துள்ள பகுதி) மண் எடுத்துச் செங்கல் சூளை அமைத்துத் தயாரிக்கப்பட்டது. வானுயர்ந்து நிற்கும் இரண்டு கோபுரங்களும் பார்ப்போர் பிரமிக்கும் வண்ணம் கட்டப்பட்டுள்ளன. ஆலயத்தின் நீளம் 146 அடி அகலம் 36 அடி ஆகும். கோபுரத்தின் உயரம் 113 அடி ஆகும். இவ்வாலயக் கட்டுமானப் பணியில் உடல் உழைப்பைக் கொடுத்தவர்களுள் முக்கியமானவர்கள் கார்மல்நகர், மேலராமன்புதூர், தளவாய்புரம், புன்னைநகர், மறவன்குடியிருப்பு, குருசடி, வேதநகர், வட்டக்கரை மற்றும் வடக்குக்கோணம் ஆகிய ஊர்களில் அப்போது குடியிருந்த மக்கள் ஆகும். இப்பகுதியிலுள்ள கத்தோலிக்க நாடார்கள் கொத்தவேலை மற்றும் தச்சு வேலைகளில் தலை சிறந்தவர்கள். அதன் வெளிப்பாடே கலை நயத்துடன் கட்டப்பட்டுள்ள நமது ஆலயம்.



ஆலயத்தின் எழில்மிகு தோற்றம் (1980)

நமது ஆலயத்தைப் புனிதப்படுத்த வருகை தந்த கொல்லம் ஆயர் ஆலோசியஸ் மரிய பென்சிகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து நமது ஆலய முடுதோம் திரு. D. பிரான்சிஸ் அவர்கள் 08.03.1911இல் எழுதிய கடிதத்தில் ஆலயக் கட்டுமானப் பணிக்குக் கீழராமன்புதூர், ராமன்புதூர், காட்டுவிளை, புன்னக்காட்டுவிளை, தளவாய்புரம், மேலவடலிவிளை, இடச்சிவிளை மற்றும் மேலராமன்புதூர் மக்கள் தாங்கள் பல ஆண்டுகளாகச் சேர்த்து வைத்திருந்த மிகப் பெரிய தொகையைக் கொடுத்துள்ளதாகவும், அவர்கள்தாம் குருசடி சபையில் பெரும்பான்மையோர் என்றும் குறிப்பிட்டுள்ளார் (காண்க பக்கம் 96-105). எனினும் கூடுதல் நிதி தேவைப்பட்டதால் கொல்லம் ஆயர் அலோசியஸ் மரிய பென்சிகரிடம் நிதி உதவி செய்யப் பங்குத்தந்தையும் முடுதோம்களும் வேண்டுகோள் விடுத்தனர். ஆயரும் நல்மனதோடு நிதி உதவி செய்தார். ஆயர் எவ்வளவு நிதி உதவி செய்தார் என்பதை அறியமுடியவில்லை. அதன் விளைவாக 1910ஆம் ஆண்டு இறுதியில் ஆலயக் கட்டிடப் பணி முடிவு பெற்றது. நமது ஆலயத்தின் கட்டிடப் பணி 21 ஆண்டுகள் நடைபெற்றது. ஆலயத்தின் வெளிப்புறச் சுவர்கள் மட்டும் பூசப்படாமல் இருந்தன. பின்னர் 06.01.1911 அன்று அப்போதைய கொல்லம் மறைமாவட்ட ஆயர் மேதகு அலோசியஸ் மரிய பென்சிகர் அவர்களால் புதிய ஆலயம் புனிதப்படுத்தப் பட்டது. ஆலயக் கட்டுமானப் பணிக்கு மேஸ்திரியாகச் செயல்பட்டவர்கள் திரு. வியாகப்பன் இன்னாசி மற்றும் மறவன்குடியிருப்பு திரு. பாக்கியநாதன் என்பவர்கள் (காண்க பக்கம் 84 - 90). திரு. வியாகப்பன் இன்னாசி எந்த ஊரைச் சார்ந்தவர் என்பதை அறிய முடியவில்லை. ஆலய மேற்கூரையைத் தாங்கி நிற்கும் உத்திரங்களைச் செய்தவர் (தச்சு வேலை) குருசடி ஊர் திரு. S. மரிய ஜேசுஅடிமை. எனவே அவருக்கு ஆலயத்தின் அருகில் நடுத்தெருவில் வீட்டு மனை கொடுக்கப்பட்டது.[6] இந்த பிரம்மாண்ட ஆலயம் கட்டப்பட்டதற்கு ஐரோப்பிய அருள்பணியாளர் களான எலியாஸ், மார்ட்டின், உபால்டு, எலியாஸ் கர்மேலோ மற்றும் பெர்னார்டின் ஆகியோரின் பணிகள் பாராட்டத்தக்கவை. இவர்களோடு இணைந்து முடுதோம்களும் சபையாரும் சிறப்பாகச் செயல்பட்டனர்.

ஆலயம் புனிதப்படுத்தப்படுவதற்கு முந்தைய நாள் 05.01.1911 அன்று மாலை 4.30 மணிக்கு ஆயர் பென்சிகருக்கு நமது ஆலய வளாகத்தில் வைத்து வரவேற்புக் கொடுக்கப் பட்டது. அந்த வரவேற்புரை ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டு இருந்தது. அதனை வாசித்தவர் திரு. D. பிரான்சிஸ் முடுதோம். ஆலயத்தின் வடக்குப்புறக் கோபுரத்தில் ஒரு பெரிய மணியும், தெற்குப்புறக் கோபுரத்தில் இரண்டு சிறிய மணிகளும் ஏற்கனவே தொங்கவிடப் பட்டிருந்தன. அன்று மாலை 5.30 மணிக்கு ஆயர் ஆலய மணிகளை புனிதப்படுத்தினார். அந்த மணிகள் மூன்றும் வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்டவை. அடுத்த நாள் 06.01.1911 காலை 8.00 மணிக்கு ஆயருக்கு புன்னைநகர் சந்திப்பில் தற்போது யூதா ததேயு கெபி இருக்கும் இடத்தில் இருந்த புனித அந்தோனியார் அரசு உதவி பெறும் பள்ளியின் முன்பு வைத்து வரவேற்புக் கொடுத்து, அவர் ஊர்வலமாகக் குருசடி ஆலய வளாகத்திற்கு அழைத்து வரப்பட்டார். பின்னர் காலை 9.00 மணிக்கு ஆயரால் நம்முடைய ஆலயம் புனிதப்படுத்தப்பட்டு முதல் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அந்தத் திருப்பலியில் அருள்பணி. சில்வா மறையுரை நிகழ்த்தினார். மதியம் 12.00 மணிக்கு அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. பின்னர் மாலை 3.00 மணிக்கு நமது ஆலயக் கல்லறைத் தோட்டத்தை ஆயர் ஆசீர்வதித்தார். அதனைத் தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு நமது ஆலயத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கப்பட்டது. இரவு 7.00 மணிக்கு வான வேடிக்கையும் நடைபெற்றது (காண்க பக்கம் 106, 107). புதிய ஆலயம் புனிதப்படுத்தப் படுவதற்கு சில தினங்களுக்கு முன்பு தற்போதுள்ள ஆலயத்திற்குமுன் இருந்த பழைய ஆலயம் இடிக்கப்பட்டது.

6. மனோன்மணி ஸாரதி ஸெல்வராஜ், *பஞ்சவங்காடு வரலாறு*, ப. 75

1850ஆம் ஆண்டுக்குப் பிறகு நமது ஆலய வளாகத்தில் பல ஊர்களிலும் உள்ள மக்கள் இடம் பெயர்ந்து இங்கு வந்து குடியேறினர். அவர்கள் ஆலய வளாகத்தில் ஆங்காங்கே பங்குத்தந்தை மற்றும் முடுதோம்கள் அனுமதிப் பெற்று வீடுகள் கட்டிக் குடியிருந்தனர். இக்காலக்கட்டத்தில் குருசடி ஊரில் குடியிருந்த சலவைத் தொழிலாளர்கள் அனைவரும் கிறிஸ்தவத்தைத் தழுவினர். கேரள முதலி சமூகத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பாலும் கிறிஸ்தவத்தைத் தழுவினர். இன்றும் ஒரு சில குடும்பங்கள் இந்துக்களாகவே இருக்கின்றனர். பின்னர் ஆலயக் கட்டுமானப் பணியின்போது பல ஊர்களைச் சார்ந்த மக்கள் நோய்வாய்ப்பட்டு நேர்ச்சையாக ஆலயத்தில் வந்து வழிபட்டும் சாவடியில் அசனம் கொடுத்தும் சுகம் பெற்றனர். பின்னர் ஆலய வளாகத்திலேயே ஆங்காங்கே வீடுகள் கட்டித் தங்கியிருந்தனர். 1888ஆம் ஆண்டுமுதல் 1907ஆம் ஆண்டுவரை பழைய சர்வே நடைபெற்றது. 1907ஆம் ஆண்டில் மங்கம்மாள் சாலையில் மழைநீர் செல்லும் ஓடை நீங்கலாக மீதமுள்ள பகுதிகளுக்கும் ஆலயக் கிணறு இருக்கும் பகுதிக்கும் ஆலயத்தின் பெயருக்கு பிரான்சிஸ் முடுதோமும், மரியந்தோனி முடுதோமும் பட்டா பெற்றனர். ஆலயக் கட்டுமானப் பணிகள் முடிந்த பிறகு அப்போதைய பங்குதந்தை பெர்னார்டினும் மற்றும் முடுதோம்களான திரு. D. பிரான்சிஸ் மற்றும் திரு. G. மரியந்தோனியும் ஆங்காங்கே இருந்த வீடுகளை வரைமுறைப்படுத்தித் தெருக்கள் ஏற்படுத்தினர். பின்னர் குருசடி ஆலய வளாகத்திற்குத் தெற்கு, மேற்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் உள்ள நிலங்களை அதன் உரிமையாளர்களிடமிருந்து குருசடி ஊர்மக்கள் விலைக்கு வாங்கினார்கள். சிலர் ஆலய வளாகத்தை விட்டு வெளியேறி தங்கள் சொந்த நிலங்களில் குடியேறினர். 1930 மற்றும் 1940ஆம் ஆண்டுகளில் சில குடும்பங்கள் ஆலய வளாகத்தில் உள்ள தெருக்களில் காலியாக இருந்த இடங்களில் வீடுகள் கட்டிக் குடியேறினர். இதனால் குருசடி முழுமைப் பெற்ற ஊராக மாற்றம் பெற்றது.

நமது ஆலயம் புனிதப்படுத்தப்பட்டபின்பு மழையினால் ஆலயத்தைச் சுற்றியுள்ள மண் கொஞ்சம்கொஞ்சமாக அரித்துச் செல்லப்பட்டது. நாளடைவில் 1934ஆம் ஆண்டு ஆலய முகப்புச் சுவரில் விரிசல் ஏற்பட்டது. இதனால் ஆலய முகப்புச் சுவரை மாற்ற வேண்டுமென்று பலர் கருத்துக் கூறினர். இந்நிலையில் முடுதோம்கள் திரு. D. பிரான்சிஸ் மற்றும் திரு. G. மரியந்தோனி திருவனந்தபுரத்திலிருந்து இன்ஜினியர் திரு. ஜார்ஜ் பிலிப் அவர்களை வரவழைத்தனர். அவர் அப்போது திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் செயற்பொறியாளராக இருந்தார். அவர் ஆலோசனைப்படி ஆலயத்தைச் சுற்றிக் கருங்கற்கலால் சுவர் கட்டி மண் சுமந்து நிரப்பப்பட்டது. பிற்காலத்தில் அந்தச் சுவர்மீது சுற்றுச் சுவர் கட்டப்பட்டது. (ஆலய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அந்த சுற்றுச்சுவர் இடிக்கப்பட்டு புதிதாகக் கட்டப்பட்டுள்ளது). 1940ஆம் ஆண்டு குருசடி தனிப்பங்காக உயர்த்தப் பட்டபோது, குருசடி ஊர் திரு. P. சந்தந்தோனி மேஸ்திரி மற்றும் செக்குமூடு திரு. அந்தோனி ஆகியோர் மேற்பார்வையில் ஆலயத்தின் வெளிப்புறச் சுவர்கள் பூசப்பட்டு ஆலயப் பணிகள் நிறைவுபெற்றன.



**திரு. P. சந்தந்தோனி மேஸ்திரி**

### 1:2 ஆலயத் திருவிழா மற்றும் புனித வாரச் சடங்குகள்

சபையாரின் நிர்வாகத்தின்கீழ் நமது ஆலயம் இருக்கும்போது திருவிழாக்கள் சபையாரால் நடத்தப்பட்டு வந்தன. திருவிழாவை முன்னிட்டு குருசடி மற்றும் கிளைப்பங்கு மக்களிடமிருந்து ஆலயவரி வசூல் செய்யப்பட்டது. திருவிழா காலத்தில் இவ்வரி வசூல் செய்யப்பட்டதால், திருநாள் வரி என்றும் அழைக்கப்பட்டது. அறுகுவிளை ஊரிலிருந்து திருக்கொடியானது நேர்ச்சையாகக் கொண்டு வரப்பட்டது. அறுகுவிளை நமது ஆலயத்தின் கிளைப் பங்காக இருந்ததில்லை. எனினும் ஒவ்வோர் ஆண்டும் கொடியேற்றம் அன்று மாலையில் அவ்வூரினரே திருக்கொடியை நேர்ச்சையாகக் கொண்டுவந்தார்கள். தற்போது அறுகுவிளையிலிருந்து திருக்கொடி கொண்டு வரப்படுவது இல்லை. தொடக்கக் காலத்தில்

நமது ஆலயத் திருவிழா புனித அந்தோனியார் திருவிழாவான ஜூன் மாதம் 13ஆம் தியதி நடைபெற்றது, ஜூன் மாதம் மழைக்காலமாக இருப்பதால் தேரோடும்போது பல இன்னல்கள் ஏற்பட்டதால் ஆலயத் திருவிழா ஜனவரி மாதத்திற்கு மாற்றப்பட்டது. ஆனால் எந்த ஆண்டு முதல் அது ஜனவரி மாதத்திற்கு மாற்றப்பட்டது என்பதை அறிய முடியவில்லை. 1911ஆம் ஆண்டு திருவிழா ஜனவரி மாதம் 6ஆம் தியதி கோடியேற்றத்துடன் துவங்கி யுள்ளது (காண்க பக்கம் 106, 107). திருவிழா நடைபெறும் 10 நாட்களும் கிளைப் பங்குகளிலிருந்து அனைத்து மக்களும் குருசடிக்கு வந்து மாலை வழிபாட்டில் கலந்துகொண்டு இரவே தத்தம் ஊருக்குச் சென்றனர். 1962 முதல் 1965ஆம் ஆண்டு வரை இரண்டாம் வத்திக்கான் சங்கம் நடைபெற்றது. இச்சங்கத்திற்கு முன்புவரை திருவிழா நாட்களில் மாலையில் திருப்பலி நடைபெறாது. மாலை ஆராதனை மட்டுமே நடைபெறும். 1965ஆம் ஆண்டிற்குப் பிறகு மாலையில் திருவிழா திருப்பலி நடைபெற்று வருகிறது.

சபையாரால் திருவிழா நடத்தப்படும்போது 9ஆம் திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்ததாகத் திகழ்ந்தது. கிளைப்பங்குகளில் உள்ள மக்கள் அனைவரும் 9ஆம் திருவிழா மாலையில் வந்து ஆலய வளாகத்தில் போர்வை விரித்து தத்தம் இடத்தைப் பிடித்துக்கொண்டு இருப்பார்கள். ஆலய வளாகத்தில் கலையரங்கத்தின் வடக்குப் பக்கம் ஒரு புளிய மரமும் கொடிமரத்திற்கு வடக்குப் பக்கம் ஒரு புளிய மரமும் லூர்து அன்னை கெபியின் கிழக்குப்பக்கம் ஒரு புளிய மரமும் தற்போது திருமண மண்டபம் அமைந்துள்ள இடத்தில் ஒரு புளிய மரமும் வேறு சில சிறிய மரங்களும் ஆங்காங்கே நின்றன. பலர் புளியமரத்தின் அடியில் தங்கியிருப்பர். பலர் மாட்டு வண்டி அல்லது குதிரை வண்டியில் வந்தார்கள். சிலர் வரும்போதே கட்டுச்சோறு கொண்டுவருவார்கள். சிலர் இங்கு வந்த பிறகு அடுப்புப் போட்டு சமைப்பார்கள். இதற்காக ஆலய வளாகத்தில் ஆங்காங்கே செங்கல்கள் அடுக்கி வைக்கப் பட்டிருக்கும். அதனைப் பயன்படுத்தி அடுப்புகள் போடுவார்கள். சிலர் நமது ஆலய வளாகத்தில் இருக்கும் வீடுகளில் உள்ள வராந்தாக்களிலும் தங்குவார்கள்.[7] மாலை ஆராதனை முடிந்தபிறகு வானவேடிக்கை இருக்கும். சில ஆண்டுகளில் அதிகாலை 4 மணிக்குத் தேரை நிலைநிறுத்திய பிறகும் வான வேடிக்கை இருந்ததுண்டு. இரவு 10 மணிக்குத் தேர் எடுப்பார்கள். நமது ஆலயத்தில் ஒரு பெரிய தேரும் ஒரு சிறிய தேரும் உண்டு. பெரிய தேரை மறவன்குடியிருப்பு மக்களும் சிறிய தேரை தளவாய்புரம் மக்களும் ஆலயத்திற்குத் தானமாகக் கொடுத்தார்கள். எனவே 9ஆம் திருவிழாவில் போது இரவு பெரிய தேரை மறவன்குடியிருப்பு மக்களும், சிறிய தேரை தளவாய்புரம் மக்களும் இழுத்தார்கள். 10ஆம் திருவிழா அன்று குருசடி ஊர் மக்கள் இரண்டு தேர்களையும் இழுத்தார்கள். அந்தத் தேர்கள் காலப்போக்கில் பழுதடைந்ததால் தற்போது புதிய தேர்கள் செய்யப்பட்டுள்ளன. தேர்கள் நிலை நிறுத்துவதற்கு வசதியாக தேர்புரை இருந்தது. ஆலய நூற்றாண்டு விழாவின் போது அந்தத் தேர்புரை இடிக்கப்பட்டுப் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

தேரின் முன்பாகத் திருச்சிலுவையைக் கொண்டு செல்வார்கள். அதனைத் தொடர்ந்து புனித மிக்கேல் அதிதூதர், புனித ஆரோக்கியநாதர், புனித செபஸ்தியார் திருவுருவங்களைத் தட்டுச் சப்பரங்களில் சுமந்து செல்வார்கள். தேரின் முன்பாகப் போட்டிச் சிலம்பாட்டமும் நடைபெறும். தேர் நிலைநிறுத்தப் பட்டதும் அதிகாலை 5 மணிக்குத் திருப்பலி நடைபெறும். திருப்பலியில் கலந்துகொண்டு கிளைப்பங்கு மக்கள் தங்கள் வீடு திரும்புவார்கள். 10ஆம் திருவிழாவில் குருசடி ஊர் மக்களால் இரண்டு தேர்களும் இழுக்கப்படும். 1975ஆம் ஆண்டுகளில் 8ஆம்

7. திரு. M. ஜோசப் ஜேம்ஸ், கீழராமன்புதூர், *நேர்முகப் பேட்டி,* நாள் 08-02-2020



ஆலய நூற்றாண்டு விழாவின்போது இடிக்கப்பட்ட தேர்புரை

திருவிழா அன்றும் குருசடி ஊர் மக்களால் தேர் எடுக்கப்பட்டது.[8] மின்சார வசதியில்லாத அன்றைய காலகட்டத்தில் தீவட்டிகள் வைத்துக் கொண்டு சிலர் ஆங்காங்கே நிற்பார்கள். அந்த வெளிச்சத்தில் தேர் எடுக்கப்படும். பின்னர் சில காலங்கள் கழித்துச் சுமட்டு விளக்குகள் வைத்து தேர் எடுக்கப்பட்டது. கோட்டாறு சவேரியார் பேராலயத்திற்கு அடுத்தபடியாக நமது ஆலயத்திற்குத்தான் மக்கள் அதிகம் வருவார்கள். குறிப்பாக இந்தப் பகுதிகளில் இந்து சகோதரர்கள் அதிகமாக நம்மூர் திருவிழாவில் கலந்துகொள்வது சிறப்பு அம்சமாகும். அதிலும் இந்து சகோதரர்கள் தேரில் வந்து வழிபட்டு காணிக்கைச் செலுத்தும் வழக்கம் குறிப்பிடத்தக்கது. புனித அந்தோனியார் தங்களைத் தேடிவந்துள்ள உணர்வுடன் அவர்கள் வழிபடுகின்றனர்.[9]

புனிதவாரச் சடங்குகள் யாவும் சிறப்பாக நமது ஆலயத்தில் நடைபெறும். கிளைப் பங்குகளில் புனித வாரச் சடங்குகள் நடைபெறாததால் அனைத்து மக்களும் குருசடிக்கு வந்தார்கள். பெரியக் கூட்டமாக இருக்கும். குருத்தோலைத் திருநாள் அன்றும் பெரியக் கூட்டமாக மக்கள் அனைவரும் வந்தார்கள். வழிபாடு முடிந்துத் தத்தம் வீடுகளுக்குச் செல்ல நேரம் அதிகமானதால் ஆலய வளாகத்தில் அனைவருக்கும் கஞ்சிக் காய்த்துக் கொடுத்தார்கள். புனித வெள்ளியன்று பாடுபட்ட இயேசுவின் திருவுருவத்தை மய்யக் கட்டிலில் வைத்து, தேர் ஓடும் வீதிகளில் கொண்டுவருவார்கள். அனைத்து மக்களும் பக்தியுடன் வணங்குவார்கள். ஆயர் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை பங்கைச் சந்திக்க வரும்போது உறுதிபூசுதல் கொடுப்பார். ஒவ்வொரு முறையும் சுமார் 1000 பேர் உறுதிபூசுதல் பெற்றார்கள். நமது பங்கைச் சுற்றியுள்ள கிளைப்பங்குகளைச் சார்ந்தவர்கள் திருமணம் நிறைவேற்ற குருசடிக்கு வர வேண்டும். ஒரே நாள் 7 அல்லது 8 திருமணங்கள் நடைபெற்றன. திருமுழுக்கிற்கும் அனைவரும் குருசடிக்கு வந்தார்கள்.[10]

### 1:3 திருப்பயணிகள் வளாகம் (சாவடி) கட்டியது

நமது பெரிய ஆலயம் கட்டி முடிப்பதுவரை ஆலயத்தின் அருகில் (தற்போது லூர்து அன்னை கெபி இருக்கும் இடத்தில்) சாவடி அமைந்திருந்தது. சாவடி என்பது தற்போது திருப்பயணிகள் வளாகம் என அழைக்கப் படுகிறது. நமது ஆலயம் புனிதப்படுத்தப் பட்டவுடன் ஆலயத்தின் பின்புறம் சாவடி கட்டப்பட்டது. 08.03.1911 அன்று திரு. D. பிரான்சிஸ் முடுதோம் கொல்லம் ஆயர் அலோசியஸ் மரிய பென்சிகருக்கு எழுதிய கடிதத்தில் **“நோயுற்றவர்கள் மற்றும் ஆலயத்திற்கு வருபவர் களுக்காக ஆலயத்தின் அருகில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டிட வேலைகள் மிகவும் வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன”** என்று குறிப்பிட்டுள்ளார் (காண்க பக்கம் 96-105). எனவே 1911ஆம் ஆண்டு புதியச் சாவடி

8. மேலது
9. திரு. T. கனகராஜன், மந்தங்காடு, *நேர்முகப்பேட்டி*, நாள் 08.05.2020
10. திரு. M. ஜோசப் ஜேம்ஸ், கீழராமன்புதூர், *நேர்முகப்பேட்டி*, நாள் 08-02-2020

கட்டப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. ஆனால் எந்த இடத்தில் சாவடி கட்டப்படுகிறது என்பது குறித்து அக்கடிதத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

1938ஆம் ஆண்டு ஆலயச் செலவுகளுக்குப் பணம் தேவைப்பட்டதால் அப்போதைய பங்குத்தந்தை அருள்பணி. அம்புறோஸ் பெர்னாண்டஸிடம் கடன் வாங்கி அதற்கு ஆதாரமாக ஆலயத்தின் பின்புறம் தற்போது திருமண மண்டபம் அமைந்துள்ள இடத்தில் 4¼ சென்ட் நிலத்தை அப்போதைய முடுதோம்கள் D. பிரான்சிஸ் மற்றும் G. மரியந்தோனி ஆகியோர் பங்குத்தந்தைக்குக் குத்தகையாக எழுதிக் கொடுத்துள்ளார்கள். அந்த 4¼ சென்ட் நிலத்திற்கு வடக்கு எல்லையாகச் சாவடிக் கட்டிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[11] எனவே 1938ஆம் ஆண்டு திருமண மண்டபம் இருக்கும் இடத்தை ஒட்டி வடக்குப் பக்கம் சாவடிக் கட்டிடம் இருந்துள்ளது. அக்காலகட்டத்தில் நோயினால் துன்பப்பட்டவர்கள் புனித அந்தோனியாரை வணங்கி நேர்ச்சையாகச் சாவடியில் தங்கி, ஆலயக் கிணற்றில் தண்ணீர் இறைத்து குளித்து சுகம் பெற்றனர். மேலும் நமது மாவட்டத்திலுள்ள பல ஊர்களிலிருந்தும் கடற்கரைக் கிராமங்களிலிருந்தும் மக்கள் குருசடிப் புனித அந்தோனியாரை வணங்கி பல புதுமைகள் நடைபெற்றதால் சாவடியில் ஆடு அல்லது கோழி வெட்டி அசனம் கொடுத்தனர். இதனால் நமது ஆலயத்தின் புகழ் நமது மாவட்டம் முழுவதும் பரவியிருந்தது. 1911ஆம் ஆண்டு கட்டப்பட்ட சாவடிக் கட்டிடம் 1965ஆம் ஆண்டு வாக்கில் இடிக்கப்பட்டு அதே இடத்தில் புதிய சாவடி கட்டப்பட்டது. அந்தச் சாவடியே தற்போது உள்ளது. குருசடி வடக்குத் தெருவில் புனித யூதா ததேயு கெபியின் தென்கிழக்கில் இரண்டு வீடுகள் மேற்குபக்கம் பார்த்து இருந்தன. இந்த வீடுகளை மக்கள் மங்களா என்று அழைத்தனர். நோயுற்றவர்கள் மற்றும் குழந்தைப் பேறுக்காக ஆலயத்திற்கு வருபவர்கள் இந்த வீடுகளை வாடகைக்கு எடுத்து தங்கி சுகம் பெற்றனர். 1986ஆம் ஆண்டு இந்த வீடுகள் இடிக்கப்பட்டுப் பள்ளிக்கட்டிடம் கட்டப்பட்டது.



சாவடிக் கட்டிடம்

11. *ஆவண எண் 631/1113 M.E,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

### 1:4 கல்லறைத் தோட்டம் அமைத்தல்

06.01.1911 அன்று நமது ஆலயத்தை புனிதப்படுத்த வருகை தந்த கொல்லம் மறைமாவட்ட ஆயர் அலோசியஸ் மரிய பென்சிகர் மாலை 03.00 மணிக்கு நமது ஆலயக் கல்லறைத் தோட்டத்தை ஆசீர்வதித்துள்ளார் (காண்க பக்கம் 106, 107). எனவே தற்போதையக் கல்லறைத் தோட்டம் இருக்கும் இடம் ஆலயம் புனிதப்படுத்தப்பட்டதற்குப் பின்பு கல்லறைத் தோட்டமாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். அதற்கு முன்பு ஆலய வளாகத்தில் வேறு இடத்தில் கல்லறைத் தோட்டம் இருந்திருக்க வேண்டும். நமது கல்லறைத் தோட்டத்தில் 1916ஆம் ஆண்டுமுதல் கட்டப்பட்ட கல்லறைகள் உள்ளன. கல்லறைத் தோட்டத்தின் பரப்பளவு 102 சென்ட் ஆகும்.

### 1:5 கிளைப்பங்குகள் பிரிதல்

நமது ஆலயத்துடன் குருசடி உட்பட 25 ஊர்கள் இணைந்திருந்தாலும், நமது ஆலயம் கோட்டாறு பங்கின்கீழ் இருந்தது என்று முன்னர் கண்டோம். எனவே நமது ஆலயத்துடன் இணைந்திருந்த ஊர்கள் சில தனிப்பங்குகளாக உயர்த்தப்பட்ட பிறகும், நமது ஆலயம் கோட்டாறு ஆலயத்துடன் இணைந்திருந்தது. தனிப் பங்குகளாகப் பிரிக்கப்பட்ட பங்குகள் கோட்டாறிலிருந்து மிகத் தொலைவாக இருந்ததால் முன்னுரிமை அடிப்படையில் பிரிக்கப்பட்டன. 25.11.1926 அன்று இராஜாவூர் தனிப்பங்காக உயர்த்தப்பட்டது.[12] இராமனாதிச்சன் புதூர், அமராவதிவிளை, ஆரல்வாய்மொழி (தேவசகாயம் மவுண்ட்) ஆகியன ராஜாவூரின் கிளைப்பங்குகள் ஆகின. 25.07.1936இல் மாத்தால் தனிப்பங்காக உயர்த்தப்பட்டது.[13] சீதப்பால், திட்டுவிளை, எட்டாமடை ஆகியன மாத்தாலின் கிளைப்பங்குகள் ஆகின.

பின்னர் கோட்டாறு மறைமாவட்ட ஆயர் ஆஞ்ஞிசாமியின் 07.09.1955 உத்தரவின்படி இராமன்புதூர், கீழராமன்புதூர், இடச்சிவிளை, வடலிவிளை, தளவாய்புரம் மற்றும் புன்னக் காட்டுவிளை ஆகிய ஊர்கள் 11.09.1955 முதல் குருசடியிலிருந்து நிதி வாரியாகப் பிரிக்கப்பட்டன (Financialy separated) (காண்க பக்கம் 123, 124). அதனைத் தொடர்ந்து மேற்கண்ட ஊர் மக்கள் குருசடிப் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு ஆலயவரி செலுத்தவில்லை. அதன் பிறகு மேற்கண்ட ஊர் மக்களுக்குக் குருசடி சபையில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை. பின்னர் 23.06.1970 அன்று இராமன்புதூர் (கார்மல்நகர்) தனிப் பங்காக உயர்த்தப்பட்டது.[14] புன்னக்காட்டுவிளை அதன் கிளைப்பங்கு ஆகியது. மீதமுள்ள கிளைப்பங்குகள் நமது ஆலயத்துடன் தொடர்ந்து இருந்தன.

### 1:6 ஆலயப் பீடம் மாற்றியமைக்கப்படுதல்

1973ஆம் ஆண்டு நமது பங்குத்தந்தையாக இருந்த அருள்பணி. M. டைனீசியஸ் ஆலயப் பீடத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று சபையாரிடம் தெரிவித்தார். சபையாரும் பீடம் மாற்றியமைக்க சம்மதம் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து பீடம் மாற்றியமைக்கப் பட்டது. ஏற்கெனவே இருந்த பீடத்தில் புனித அந்தோனியாரின் திருவுருவம் பீடத்தின் பின்புறம் நற்கருணை பேழை அருகே வைக்கப் பட்டிருந்தது. மாற்றியமைக்கப்பட்ட பீடத்தில் புனித அந்தோனியார் திருவுருவம் பீடத்தில் வைக்கப்படாமல், பீடத்தின் முற்றத்தில் வடகிழக்கு மூலையில் நான்கு சிறிய தூண்கள் நிறுவப்பட்டு அதன் மேல் அமைக்கப்பட்ட கண்ணாடி கூண்டுக்குள் வைக்கப்பட்டது. இதனால் பங்கு மக்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. இதனால் 1974ஆம் ஆண்டில் ஆலய திருவிழா குறித்தத் தேதியில் நடைபெறாமல் காலதாமதமாக நடைபெற்றது.

---

12. *கோட்டாறு மறைமாவட்டப் பவள விழா மலர், 1930 - 2005,* ப. 196
13. மாத்தால், *தூய பிரான்சிஸ் அசிசி ஆலயம் பவள விழா மலர், 1936 - 2011,* ப. 36
14. *கோட்டாறு மறைமாவட்டப் பவள விழா மலர்,* 1930 - 2005, ப. 200



1973ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்ட ஆலய பீடம்

**1.7 அனந்தன்பாலம் பகுதி மக்களின் மனமாற்றம்**

1971ஆம் ஆண்டு நமது பங்குத்தந்தை R. அந்தோனிமுத்து அனந்தன்பாலம் பகுதியில் வாழ்ந்த சுமார் 25 குடும்பங்களைச் சார்ந்த 13 பேருக்கு குருசடி திருஇருதய துறவுஅவை அருள்சகோதரிகள் உதவியுடன் திருமுழுக்கு வழங்கி இம்மக்களைக் குருசடிப் பங்கின்கீழ் வழிநடத்தி வந்தார்.[15] அனந்தன்பாலம் குருசடிப் பங்கின்கீழ் வந்த 26ஆவது ஊர் ஆகும். தற்போதும் திருஇருதய துறவுஅவை அருள்சகோதரிகள் அப்பங்கில் ஞாயிறு மற்றும் திருநாள்களில் பணியாற்றி வருகின்றனர். தற்போது அனந்தன்பாலம் என்பது 'அனந்தன்நகர்' என்று அழைக்கப்படுகிறது.

## 2. சமூகப் பணி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள்

**2:1 ஆலயப் பஞ்சாயத்து ஏற்படுத்தியது (Church Panchayat)**

திரு. D. பிரான்சிஸ் முடுதோமாகப் பொறுப்பேற்றவுடன் 1904ஆம் ஆண்டு "ஆலயப் பஞ்சாயத்து" என்ற அமைப்பைப் பங்குத்தந்தையின் உதவியுடன் ஏற்படுத்தி அதன் தலைவராக இருந்தார். அவர் சம்பந்தப்பட்ட நபர்களிடம் ஆலயப் பஞ்சாயத்துத் தலைவர் என்ற அடிப்படையில் புகார் மனுவைப் பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டார். திரு. D. பிரான்சிஸ் முடுதோம் 1909ஆம் ஆண்டு முதல் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் ஸ்ரீ மூலம் பாப்புலர் சட்டசபையில் லத்தீன் கத்தோலிக்க நாடார் பிரதிநிதியாக நியமிக்கப் பட்டார். 12 ஆண்டுகள் இப்பொறுப்பில் இருந்தார். மேலும் மூன்று ஆண்டுகள் சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், நாகர்கோவிலில் பஞ்சாயத்து கோர்ட்டு நீதிபதியாக 13 வருடங்கள் பணியாற்றினர். பங்கு மக்கள் மத்தியிலும் கொல்லம் மறை மாவட்டத்திலும் அவருக்கு நல்ல மதிப்பு இருந்தது. எனவே பங்கு மக்கள் அவரிடம்

15. *கோட்டாறு மறைமாவட்டப் பவள விழா மலர்,* 1930 - 2005, ப. 190

தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண மனுக்களைக் கொடுத்தனர். அந்த அமைப்பின் மற்ற உறுப்பினர்களான திரு. G. மரியந்தோனி முடுதோம் மற்றும் தளவாய்புரம் திரு. M. A. ஆபிரகாம் நாடார் துணையுடன் ஆண்டு ஒன்றுக்கு 200க்கு மேற்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரணை செய்து சமாதான முறையில் தீர்வு கண்டனர். இந்தப் பஞ்சாயத்து ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் நமது ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இதனால் ஏழை மக்கள் பலர் நீதிமன்றங்களுக்குச் சென்று அதிகப் பணம் செலவு செய்து தீர்வு காணவேண்டிய பல பிரச்சினைகளுக்கு எளிதாகச் சமாதான முறையில் தீர்வு கண்டனர் (காண்க பக்கம் 108, 109).

## 2:2 ஆலயத்திற்குச் சொத்துக்கள் விலையாகவும் தானமாகவும் வாங்கியது

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கத்தோலிக்க ஆலயங்களில் குருசடி புனித அந்தோனியார் ஆலயத்திற்குத் தனிச்சிறப்பு உண்டு. இதற்குக் காரணம் தோவாளை, அகஸ்தீஸ்வரம் மற்றும் இரணியல் ஆகிய மூன்று தாலுகாக்களிலும் நமது ஆலயத்தின் கிளைப்பங்குகள் இருந்ததும், வேறு எந்த ஆலயத்திற்கும் இல்லாத அளவிற்கு நமது ஆலயத்திற்கு சுமார் 58 ஏக்கர் சொத்துக்கள் இருந்ததும்தான். இவற்றில் பெரும்பாலான சொத்துகள் நமது ஆலயப் பாதுகாவலர்மீது உள்ள நம்பிக்கையில் பல ஊர்களைச் சார்ந்த மக்கள் தானமாகக் கொடுத்ததே ஆகும். நமது மாவட்டத்தில் உள்ள வேறு எந்தக் கத்தோலிக்க ஆலயத்திற்கும் மக்கள் இந்த அளவு சொத்துக்களைத் தானமாக வழங்கியது கிடையாது.

1938ஆம் ஆண்டு அப்போதைய பங்குத்தந்தை அருள்பணி. அம்புறோஸ் பெர்னாண்டஸ் மற்றும் முடுதோம்கள் D. பிரான்சிஸ் மற்றும் G. மரியந்தோனி ஆகியோர் தயாரித்துக் கையொப்பமிட்ட பங்கின் சொத்துக்கள் மற்றும் கடன்கள் பட்டியலை அப்படியே தருகிறேன்.

## ஆயர் அந்தோனிமுத்தும் குருசடிப் பங்கும்

இவர் நமது பங்கில் 1961முதல் 1971 வரை பங்குத்தந்தையாக பணியாற்றியவர். 1936ஆம் ஆண்டு நமது பங்கில் உதவி பங்குத்தந்தையாக பணியாற்றியவர். நமது பங்கில் பணியாற்றிய 10 ஆண்டுகளில் கல்விப் பணிக்கும் ஆன்மீகப் பணிக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தவர். 1965ஆம் ஆண்டு குருசடியில் திருச்சிலுவைக் கல்லூரியை அமைப்பதில் முக்கிய பணியாற்றினார். குருசடியில் திருஇருதய அருள்சகோதரிகள் இல்லம் அமைய காரணமானவரும் இவரே. நமது பங்குத்தந்தையாக இருந்த 10 ஆண்டுகளில் ஆலயச் சொத்துக்களை மிகச் சிறப்பாக பராமரித்தவர். நமது பங்கில் மறைக்கல்வி மன்றத்தை சிறப்பாக நடத்தியவர். அனைத்து மக்களிடம் அன்பாக பழகியவர். பின்னர் வேலூர் மறைமாவட்ட ஆயராக நியமிக்கப்பட்டு 17.04.1971இல் ஆயராக திருநிலைப்படுத்தப் பட்டார். குருசடி ஊர் மற்றும் கிளைப் பங்குகளிலிருந்து 7 பேருந்துகளில் மக்கள் வேலூர் சென்று அவரது திருநிலைப்பாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ஆயராக திருநிலைப்படுத்தப்படுவதற்கு முன்பு 11.04.1971 அன்று அருள்பணி. R. அந்தோனிமுத்துக்கு நமது ஆலய வளாகத்திலுள்ள கலையரங்கத்தில் வைத்து வழியனுப்பு விழா நடைபெற்றது. மேலும் கோட்டாறு மறைமாவட்ட ஆயராக M. ஆரோக்கியசாமி 17.02.1971 அன்று பொறுப்பேற்றார். எனவே புதிய ஆயரான M. ஆரோக்கியசாமிக்கும் அதே விழாவில் குருசடி பங்கு மக்கள் சார்பாக வரவேற்பும் கொடுக்கப் பட்டது. இந்நிகழ்ச்சியில் அப்போதைய முடுதோம்கள் திரு. F. ஸ்டான்லி மற்றும் திரு. M. ஆன்றனி ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். நமது ஊரைச் சார்ந்த அருள்பணி M. மரிய கிரகோரி மற்றும் கிளைப்பங்குகளைச் சார்ந்த சிலரும் வாழ்த்திப் பேசினார்.

| Paguthi | Survey | Ac. | Ct | Tax Rs. | fs | csh | Field or Landed Property | Value Rs |
|---|---|---|---|---|---|---|---|---|
| Nager Coil | 2044 | 3 | 56 | 2 | 12 | 7 | Land | 3560 |
| " | 2053 | | 12 | | 1 | 7 | School | 300 |
| " | 2085 | | 66 | | 18 | 6 | Land | 660 |
| " | 2229 | | 19 | " | 2 | 4 | Kurusady | 190 |
| " | 2266 | | 7 | | | 12 | " | 70 |
| " | 2322 | | 48 | | 20 | 8 | School | 1300 |
| " | 2406 | | 52 | | 7 | 12 | Syber | 1300 |
| " | 2632 | 10 | 25 | 4 | 17 | 4 | Land | 5075 |
| " | 2669 | 1 | 69 | | 13 | 11 | " | 1250 |
| " | 2715 | 2 | 27 | 1 | 21 | 3 | " | 1125 |
| " | 2755 | | 52 | | 5 | 11 | Tope | 1500 |
| " | 2786 | | 63 | | 20 | 4 | Land | 630 |
| " | 2787 | 1 | 20 | 1 | 21 | 0 | " | 1200 |
| " | 2795 | | 38 | | 6 | 2 | " | 380 |
| " | 2838 | | 46 | | 14 | 1 | " | 230 |
| " | 2865 | | 89 | 1 | 12 | 0 | " | 445 |
| " | 2876 | | 26 | | 4 | 8 | " | 260 |
| Pendakara | 3101 | | 16 | | | 6 | " | 90 |
| " | 3105 | | 60 | | 1 | 6 | " | 300 |
| " | 3163 | | 24 | | 6 | 9 | " | 100 |
| " | 3177 | | 39 | | 3 | 8 | " | 195 |
| " | 3212 | 1 | 15 | 1 | 0 | 2 | " | 575 |
| " | 3218 | | 12 | | 3 | 10 | " | 60 |
| " | 3285 | | 52 | | 1 | 12 | " | 260 |
| " | 3253 | . | 92 | | 2 | 7 | " | 460 |
| " | 3292 | | 72 | | 2 | 1 | " | 1340 |
| " | 3357 | 1 | 34 | " | 26 | 3 | " | 1340 |
| " | 3363 | 3 | 83 | 3 | 0 | 14 | Church | 9500 |
| " | 3364 | | 75 | | 3 | 7 | " | 1850 |
| " | 3365 | | 63 | | 5 | 4 | " | 1575 |
| " | 3374 | 1 | 2 | | 3 | 9 | Kurusady | 2550 |
| " | 3253 | | 92 | | 2 | 7 | Land | 2.5.50... |
| " | 6652 | | 13 | | 9 | 8 | Field | 300 |
| Marunkoor | | 7 | " | 22 | " | " | " | 7000 |
| | | 44 | 59 | 44 | 20 | 5 | " | 49520 |

St. Anthonys Church Crusady

Liablitees Dues to former and present Parish Priests and Kanackan

| No | Names | Rs | ch | cash |
|---|---|---|---|---|
| 1 | Very Rev. Fr. Paul | 2525 | 1 | 12 |
| 2 | Very Rev. Fr. John Pereara | 2730 | 0 | 11 |
| 3 | Very Rev. Fr. Ambrose Fernandez | 1289 | 1 | 0 |
| 4 | Kanackan | 961 | 0 | 12 |

Fr. Ambrose Fernandez

D. Francis

G. Marianthony.

மேற்கண்ட பட்டியல்படி அன்று குருசடிப் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு 44 ஏக்கர் 59 சென்ட் நிலம் உள்ளதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. 1938ஆம் ஆண்டு நமது ஆலயத்திற்கு 7505 பணம் 2 சக்கரம் 35 காசுகள் கடன் இருந்துள்ளது.[16] மேற்கண்ட பட்டியலில் நீண்டகரை பகுதி (கிராமம்) சர்வே எண் 3253இல் உட்பட்ட 92 சென்ட் நிலம் இருமுறை எழுதப்பட்டுள்ளது. எனவே சரியான கூட்டுத்தொகை 43 ஏக்கர் 67 செண்ட் ஆகும். மேற்கண்ட சொத்துக்களில் சில நமது ஆலயத்தின் நிதி நெருக்கடியின் காரணமாக விற்பனை செய்யப்பட்டுள்ளன. சில நிலங்களை அரசாங்கம் கையகப்படுத்தியுள்ளது (Land Acquisition). மேலும் சில சொத்துக்களில் அருட்சகோதரிகள் இல்லங்களும் கல்வி நிலையங்களும் மற்றும் அரசு அலுவலகங்களும் அமைந்துள்ளன. அவற்றை விரிவாகக் காண்போம்.

| வ. எண் | வருவாய் கிராமம் (பகுதி) | சர்வே எண் | பரப்பளவு | | சொத்து அமைந்துள்ள இடம் | தற்போது சொத்தின் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | | ஏக்கர் | செண்ட் | | |
| 1. | நாகர்கோவில் | 2044 | 3 | 56 | புன்னைநகர் | R.C. தொடக்கப்பள்ளி, புன்னைநகர் மற்றும் சேர்வைட் கான்வென்ட் |
| 2. | நாகர்கோவில் | 2053 | _ | 12 | புன்னைநகர் சந்திப்பு | புனித யூதா ததேயு கெபி மற்றும் வணிக வளாகம் |
| 3. | நாகர்கோவில் | 2085 | _ | 66 | குருசடி CSI ஆலயத்தின் எதிர்புறம் | தமிழக அரசின் பிற்படுத்தப்பட்டோர் மாணவிகள் விடுதி மற்றும் அதைத் தொட்டு வடக்குப் பக்கம் உள்ள ஒரு சில வீடுகள் |
| 4. | நாகர்கோவில் | 2229 | _ | 19 | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இல்லத்திலிருந்து வடக்குக்கோணம் செல்லும் சாலை அருகில் | விற்பனை செய்யப்பட்டு சில வீடுகள் அமைந்துள்ளன. |
| 5. | நாகர்கோவில் | 2266 | _ | 7 | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இல்லத்திலிருந்து வடக்குக்கோணம் செல்லும் சாலை அருகில் | விற்பனை செய்யப்பட்டு சில வீடுகள் அமைந்துள்ளன. |
| 6. | நாகர்கோவில் | 2322 | _ | 48 | இராமன்புதூர் | சிறுமலர் தொடக்கப்பள்ளி, இராமன்புதூர் |

16. திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நடைமுறையிலிருந்த செலாவணி பணம், சக்கரம், காசு ஆகும். 16 காசுகள் ஒரு சக்கரம். 4 சக்கரம் ஒரு பணம் ஆகும். 7 சக்கரம் ¼ ரூபாய். 14 சக்கரம் ½ ரூபாயாகும். 28 சக்கரம் 1 ரூபாய் ஆகும். 7 பணம் 1 ரூபாய். ஒரு பிரிட்டிஸ் ரூபாய் 28 சக்கரம் ஆகும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7. | நாகர்கோவில் | 2406 | _ | 52 | கீழராமன்புதூர் சந்திப்பு | செயின்ட் ரீட்டாஸ் கான்வென்ட் |
| 8. | நாகர்கோவில் | 2632 | 10 | 25 | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இல்லத்திலிருந்து வடக்குக்கோணம் செல்லும் சாலை அருகே | ISRO காலணி |
| 9. | நாகர்கோவில் | 2669 | 1 | 69 | வடக்குக்கோணம் (அனந்தன் குளத்திற்குக் கிழக்குப் பக்கம் சானலுக்கு மேற்குப் பக்கம்) | விற்பனை செய்யப்பட்டு தென்னந்தோப்பாக உள்ளது |
| 10. | நாகர்கோவில் | 2715 | 2 | 27 | கீழக்கோணம் | மாவட்ட தொழில் மையம் |
| 11. | நாகர்கோவில் | 2755 | _ | 52 | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இல்லத்திலிருந்து வடக்குக்கோணம் செல்லும் சாலை அருகே | விற்பனை செய்யப்பட்டு சில வீடுகள் உள்ளன |
| 12. | நாகர்கோவில் | 2786 | _ | 63 | கீழக்கோணம் | அகில இந்திய வானொலி நிலையம் |
| 13. | நாகர்கோவில் | 2787 | 1 | 20 | கீழக்கோணம் | அகில இந்திய வானொலி நிலையம் |
| 14. | நாகர்கோவில் | 2795 | _ | 38 | கீழக்கோணம் | அகில இந்திய வானொலி நிலையத்தை ஒட்டி கிழக்குப்பக்கம் உள்ள வீடு மற்றும் அதன் கிழக்குப்பக்கம் உள்ள காலி மனை |
| 15. | நாகர்கோவில் | 2838 | _ | 46 | கூத்தன்காடு | அரசு தொழிற்பயிற்சி நிலைய மைதானத்தை ஒட்டிய காலிமனை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16. | நாகர்கோவில் | 2865 | _ | 89 | குருசடி | திருஇருதய அருள்சகோதரிகள் இல்லம் |
| 17. | நாகர்கோவில் | 2876 | _ | 26 | கீழக்கோணம் | அரசு தொழிற்பயிற்சி நிலைய ஊழியர் குடியிருப்பு |
| 18. | நீண்டகரை | 3101 | _ | 16 | குருசடி | காமராஜர் சாலை யோரம் (குட்டித்தட்டு) (விற்பனை செய்யப்பட்டுள்ளது) |
| 19. | நீண்டகரை | 3105 | _ | 60 | குருசடி | ஒற்றைப்பனைவிளை (விற்பனை செய்யப்பட்டுள்ளது) |
| 20. | நீண்டகரை | 3163 | _ | 24 | வட்டக்கரை | வட்டக்கரை முக்குத்தட்டு (வட்டக்கரை ரோடும் ஆயுதப்படை முகாம் ரோடும் பிரியும் பகுதி) |
| 21. | நீண்டகரை | 3177 | _ | 39 | வட்டக்கரை | வட்டக்கரை புனித ஜோசப் ஆலய வளாகம் |
| 22. | நீண்டகரை | 3212 | 1 | 15 | தொல்லவிளை | தொல்லவிளைச் சொத்து |
| 23. | நீண்டகரை | 3218 | _ | 12 | வட்டக்கரை | வட்டக்கரை முதல் தொல்லவிளை செல்லும் சாலையோரம் (ஓடைக்கரை) |
| 24. | நீண்டகரை | 3285 | _ | 52 | வட்டக்கரை | வட்டக்கரை கான்வென்ட் |
| 25. | நீண்டகரை | 3253 | _ | 92 | வட்டக்கரை | வட்டக்கரை சாவடித்தட்டு |
| 26. | நீண்டகரை | 3292 | _ | 72 | வட்டக்கரை | வட்டக்கரை ஓடைத்தட்டு (தற்போது அருள்சகோதரிகளால் விற்பனை செய்யப்பட்டு சில வீடுகள் அமைந்துள்ளன) |
| 27. | நீண்டகரை | 3357 | 1 | 34 | மேலசூரங்குடி | மாதாதோப்பு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 28. | நீண்டகரை | 3363 | 3 | 83 | குருசடி | குருசடிப் புனித அந்தோனியர் ஆலயம் அமைந்துள்ள பகுதியும் ஆலயத்தின் முன்பகுதிகளும் தேரோடும் வீதிகளும், நடுத்தெரு மற்றும் தெற்குதெருவில் உள்ள சில வீடுகளும். |
| 29. | நீண்டகரை | 3364 | _ | 75 | குருசடி | கல்லறைத் தோட்டத்திற்கு முன்பு உள்ள தென்னந் தோப்பு, மற்றும் பள்ளத்துத் தெரு மற்றும் தெற்குத் தெருவில் உள்ள சில வீடுகள் |
| 30. | நீண்டகரை | 3365 | _ | 63 | குருசடி | சாவடி, திருமணமண்டபம் மற்றும் திருமண மண்டபத்தின் பின்புறம் உள்ள வீடுகள் |
| 31. | நீண்டகரை | 3374 | 1 | 02 | குருசடி | கல்லறைத் தோட்டம் |
| 32. | நீண்டகரை | 6652 | _ | 13 | கார்த்திகைவடலி | வயல் |
| 33. | மருங்கூர் | 339 | 7 | 00 | இராமனாதிச்சன்புதூர் | தென்னந்தோப்பு |
| | மொத்தம் | | 43 | 67 | | |

மேற்கண்ட சொத்துக்களைத் தவிர நாகர்கோவில் கிராமத்தில் சர்வே எண் 1027இல் 11 சென்ட் நிலமும், நீண்டகரை கிராமத்தில் கார்த்திகைவடலி முருங்கைஇலை குளம் அருகே சர்வே எண் 6703இல் 67 சென்ட் நிலமும்[17] நாகர்கோவில் கிராமத்தில் கீழராமன்புதூரில் சர்வே எண் 2333இல் 3 சென்ட் நிலமும்[18] நாகர்கோவில் கிராமத்தில் கீழக்கோணத்தில் சர்வே எண் 2722இல் 36 சென்ட் நிலமும் நமது ஆலயத்திற்குச் சொந்தமாக இருந்தன. அவைகள் பல்வேறு காலக்கட்டங்களில் விற்பனைச் செய்யப் பட்டுள்ளன. நீண்டகரை கிராமத்தில் சர்வே எண் 3218இல் 1 ஏக்கர் 12 சென்டில் 1 ஏக்கர் நிலம் ஏற்கனவே விற்பனைச் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சொத்துக்கள் 1938ஆம் ஆண்டுக்கு முன்பே விற்பனை செய்யப்பட்டு விட்டன. எனவே மேற்கண்ட

17. *ஆவண எண் 1624/1091 M.E,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.
18. *ஆவண எண் 631/1113 M.E,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

பட்டியலில் அவை இடம்பெறவில்லை. மேலும் கீழராமன்புதூரில் இராஜாக்கமங்கலம் ரோட்டுக்குத் தெற்குப்பக்கம் நமது ஆலயத்திற்குச் சொந்தமாக 3 சென்ட் நிலமும் அதில் ஒரு வீடும், புன்னைநகர் கல்லறைத் தோட்டத்திற்குக் கிழக்குப்பக்கம் 45 சென்ட் நிலம் இருந்தன. மேலும் வடக்குக்கோணத்தில் புனித அன்னாள் திருமண மண்டபம் அமைந்துள்ள நிலமும் அதனை ஒட்டி உள்ள மொத்தம் 95 சென்ட் தோப்பு, வடக்குக்கோணம் கிணத்தடித் தட்டு 22.5 சென்றும், வடக்குக்கோணம் ஆற்றிற்கு மேற்குப்பக்கம் ஐந்து சென்ட் நிலமும் உண்டு. இவைகள் 1938ஆம் ஆண்டிற்குப்பிறகு நமது ஆலயத்திற்குக் கிரயமாகவோ அல்லது தானமாகவோ பெறப்பட்டுள்ளன. எனவே அந்தச் சொத்துக்கள் மேற்கண்ட பட்டியலில் இடம் பெறவில்லை. பின்னர் 15-05-1967 அன்று ஆரல்வாய்மொழியில் 10 ஏக்கர் 54 சென்ட் நிலம் நமது ஆலயத்தின் பெயரில் விலைக்கு வாங்கப்பட்டுள்ளது.[19] நமது ஆலயத்தைச் சபையார் நிர்வாகம் செய்யும்போது 58 ஏக்கர் 8.5 சென்ட் நிலம் இருந்தது. பங்குப் பேரவைப் பொறுப்பேற்றப் பின்பும் சொத்துக்கள் விலையாகவும் தானமாகவும் பெறப்பட்டுள்ளன. இவற்றைப் பின்னர் விரிவாகக் காண்போம். மேற்கண்ட பட்டியலில் இடம் பெற்றுள்ள சொத்துக்களைத் தானம் கொடுத்தவர்கள் யார் அல்லது விலையாகக் கொடுத்தவர்கள் யார் என்பதை விரிவாகக் காண்போம்.

புன்னைநகர் சந்திப்பில் உள்ள யூதா ததேயு குருசடி மற்றும் வணிக வளாகம் அமைந்துள்ள 12 சென்ட் நிலம் 1884ஆம் ஆண்டு நமது ஆலயத்தின் பெயரில் விலையாக வாங்கப்பட்டது.[20]

குருசடி வடக்குத்தெருவில் இருக்கும் ஒற்றைப்பனைவிளை 60 சென்ட் நிலம் மற்றும் நாகர்கோவில் வில்லேஜில் சர்வே எண் 2722 இல் உள்பட்ட 36 சென்ட் நிலமும் கொல்லம் ஆண்டு 07.12.1073 (ஆங்கில தேதி 21.07.1898) அன்று குருசடி ஊரைச் சார்ந்த திரு. தொம்மையப்பன் மகன் திரு. மாசிலாமணி உபதேசியார் என்பவரிடமிருந்து நமது ஆலயத்திற்கு வேண்டி அப்போதையப் பங்குத்தந்தை அருள்பணி. உபால்டு பெயருக்கு விலைக்கு வாங்கப்பட்டது.

குழந்தைப்பேறு இல்லாத தம்பதியினரே பெரும்பாலும் சொத்துக்களை நமது ஆலயத்திற்குத் தானமாகக் கொடுத்தனர். திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் குழந்தைகள் இல்லாத தம்பதியினரின் சொத்துக்களைப் பொருத்தமட்டில், கணவன் இறந்து விட்டால் மனைவிக்கு ஆயுள் பாத்தியதை (life estate) மட்டுமே இருந்தது. அந்தச் சொத்துக்கள் மனைவியின் காலத்திற்குப் பிறகு கணவரின் உடன்பிறந்த சகோதர சகோதரிகளுக்குக் கிடைக்கும். நமது ஆலயத்திற்குத் தானமாகக் கிடைத்த சில சொத்துக்களைப் பொருத்தமட்டில் கணவர் இறந்த பிறகு மனைவி கணவரின் சொத்துக்களை நமது ஆலயத்திற்குத் தானமாகக் கொடுத்ததால், கணவரின் சகோதரர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அந்த எதிர்ப்புகளைச் சமாளித்தே சொத்துக்கள் தானமாக எழுதி வாங்கப்பட்டன. பின்னர் 21-12-1916 அன்று நடைமுறைக்கு வந்த திருவிதாங்கூர் கிறிஸ்தவ வாரிசுரிமைச் சட்டத்தின்படி (Regulation II of 1092) மனைவிக்கு இறந்து போன கணவரின் சொத்தில் பாதி கிடைத்தது. மீதமுள்ள பாதி கணவரின் சகோதரர்களுக்கு கிடைத்தது. 1916ஆம் ஆண்டிற்குப் பிறகும் கணவர் அல்லது மனைவி இறந்தப் பிறகு உயிருடன் இருந்த கணவனோ அல்லது மனைவியோ அவர்களது உறவினர்களின் எதிர்ப்பையும் மீறிச் சொத்துக்களைத் ஆலயத்திற்கு தானமாக வழங்கியதில் பல பிரச்சினைகளை முடுதோம்களும் சபையாரும் சந்தித்துள்ளனர்.

19. *ஆவண எண் 1784/1967,* சார் பதிவாளர் அலுவலகம், தோவாளை (இந்த ஆவணத்தின்படி 11 ஏக்கர் 14 சென்ட் விலைக்கு வாங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் புதிய சர்வேயின் படி கைவசம் இருந்த 10 ஏக்கர் 54 சென்ட் நிலத்திற்கு மட்டும் நமது ஆலயத்தின் பேரில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது).

20. *ஆவண எண் 3360/1059 M.E,* சார் பதிவாளர் அலுவலகம், அகஸ்தீஸ்வரம் (தற்போது இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலகம்)

### 2:2:1 ஆலய வளாகத்தைத் தானமாகப் பெறுதல்


குருசடிப் புனித அந்தோனியார் ஆலயம் அமைந்துள்ள இடம் மற்றும் ஆலயத்தின் முன்பகுதியை மந்தங்காட்டைச் சார்ந்த இந்து நாடார்களான திரு. முத்துவயிரவன் சுப்பிரமணியன் நாடார், திரு. கறுத்தக்குட்டி நாராயணபெருமாள் நாடார் ஆகியோர் 1803ஆம் ஆண்டு தானமாகக் கொடுத்தனர். இந்த நிலத்தின் பரப்பளவு சுமார் 1 ஏக்கர் 50 சென்ட் ஆகும். எனவே 1842ஆம் ஆண்டு சபையார் சார்பாக முடுதோம் திரு. மாதவடியான் இன்னாசி மந்தங்காட்டைச் சார்ந்த இந்து நாடார்களுக்கு மொழிமாறா எதிர்க் கச்சீட்டு எழுதிக் கொடுத்தார் (காண்க பக்கம் 21-23). அதன்படி ஆலயத் தேரோட்டம் அன்று இரண்டு நபர்களின் வாரிசுகளில் தலா ஒருவருக்கு முண்டு (வேட்டி) கொடுத்து, மரியாதை செய்து, படி கொடுப்பார்கள். ஆனால் தற்போது மேற்கண்ட முத்துவயிரவன் சுப்பிரமணியன், கறுத்தக்குட்டி நாராயண பெருமாள் ஆகியோரின் வாரிசுகளுக்கு மரியாதை எதுவும் கொடுக்கப்படுவது இல்லை.

### 2:2:2 வடகாட்டுவிளை

10 ஏக்கர் 25 சென்ட் பரப்பளவு கொண்ட வடகாட்டுவிளையைத் தளவாய்புரத்தைச் சார்ந்த நமது ஆலய முடுதோம் திரு. சோரீஸ் மரியக்கண் தானமாகக் கொடுத்தார்.[21] தானப் பத்திரம் நமக்குக் கிடைக்கவில்லை. எனவே கூடுதல் விவரங்கள் அறிய முடியவில்லை.

### 2:2:3 இராமனாதிச்சன்புதூர் நிலம்

1938ஆம் ஆண்டு சொத்துக்கள் பட்டியல் தயாரித்தபோது மொத்த சொத்துக்களின் மதிப்பு ரூ.49,520 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் இராமனாதிச்சன்புதூர் நிலத்தின் மதிப்பு ரூ.7,000 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த சொத்தின் பரப்பளவு 7 ஏக்கர் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் காலகட்டத்தில் நமது ஆலயத்திற்கு இருந்த சொத்துக்களில் மதிப்புமிக்கச் சொத்தாக இந்த நிலம் இருந்துள்ளது. இந்த நிலத்தைத் தானமாகக் கொடுத்தது மந்தவிளை ஊர் திரு. தைனேசி



ஆலய முகப்புச் சுவரில் போடப்பட்டிருந்த கல்

மரியானும் திருமதி அன்னமுத்தும் என்றும், சொத்தின் பரப்பளவு 6 ஏக்கர் 75 சென்ட் என்றும் பிரம்மாணத்தில் (தானப் பத்திரத்தில்) சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளை (அடியந்திரங்கள்) வருடாவருடம் நிறைவேற்றுவதற்கு வேண்டி நினைவாக நமது ஆலயத்தின் தலைவாசலுக்கும் தெற்குப்புறக் கோபுரத்திற்கும் இடைப்பட்ட ஆலய முகப்புச் சுவரில் கல் போடப்பட்டிருந்தது. நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆலயச் சீரமைப்பின் போது அந்தக் கல் மறைக்கப்பட்டது. சொத்துத் தானம் கொடுக்கப்பட்ட நாள் 27.10.1909 ஆகும். தானம் கொடுத்த அடுத்த நாள் அந்தக் கல் போடப்பட்டுள்ளது. கல் போடப்பட்ட தேதி 12.03.1085 (கொல்லம் ஆண்டு) ஆகும். அந்தத் தேதி கல்லில் தமிழில் எழுதப் பட்டுள்ளது. அதற்கு இணையான ஆங்கில தேதி 28.10.1909 ஆகும். திரு. தைனேசி

21. மனோன்மணி ஸாரதி ஸெல்வராஜ், *பஞ்சவங்காடு வரலாறு*, ப. 64

மரியானும் திருமதி அன்னமுத்துவும் கணவன் மனைவி ஆவர். இந்தத் தம்பதிக்கு குழந்தைகள் இல்லை.

தான ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள அடியந்திரங்களை அறிய வேண்டுமென்றால் தான ஆவணத்தை ஆய்வு செய்ய வேண்டும். தான ஆவணம் நமது ஆலயத்தில் தற்போது இல்லை. இந்தச் சொத்து சம்பந்தமாக நீதிமன்ற வழக்கும் உண்டு. 01.05.1973 முதல் 30.04.1974 வரை இந்தச் சொத்தில் நெல் பயிரிடும் உரிமையைத் தளவாய்புரத்தைச் சார்ந்த ஒருவர் ஏலத்தில் எடுத்திருந்தார். ஏலம் எடுத்த காலம் முடிந்த பிறகும் அந்தச் சொத்தை அவர் ஆலயத்திற்கு விட்டுக் கொடுக்காமல் அந்தச் சொத்திலிருந்து சட்டப்பூர்வமான வழிமுறைகளைப் பின்பற்றித் தன்னை வெளியேற்றும் வரை தான் அந்தச் சொத்தை அமைதியான முறையில் அனுபவிப்பதற்கு ஆலய நிர்வாகம் எந்தவித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று நாகர்கோவில் முன்சீப் கோர்ட்டில் O.S.No.313/1974இல் ஆலயத்திற்கு எதிராகவும் அப்போதைய முடுதோம் திரு. F. ஸ்டான்லிக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்தார். அந்த வழக்கில் தானப் பத்திரத்தை ஆஜர் செய்து திரு. F. ஸ்டான்லி முடுதோம் ஆலயத்திற்காகச் சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கை நடத்துவதற்கு திரு. F. ஸ்டான்லி முடுதோத்திற்கு கீழராமன்புதூர் திரு. M.M. கிரகோரி ஆசிரியர் மிகவும் உதவியாக இருந்தார். அந்த வழக்கு ஆலயத்திற்கு எதிராகத் தீர்ப்பாகியுள்ளது. நாகர்கோவில் சார்பு நீதிமன்றத்தில் ஆலயத்தின் சார்பில் தாக்கல் செய்த மேல்முறையீடும் (A.S.No.474/1976) தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு சென்னை உயர்நீதிமன்றத்தில் Second Appeal No. 2398/1977 ஆக தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீடும் 02.01.1978 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. பின்னர் இருதரப்புக்கும் தகராறுகள் நடந்தது. சொத்தை ஏலத்தில் எடுத்தவருக்கு குத்தகைத் தொகையையும் செலுத்த முடியவில்லை. அதனைத் தொடர்ந்து நடத்த சமரச பேச்சுவார்த்தையில் சொத்து மீண்டும் ஆலயத்திற்குக் கிடைத்தது. இந்தச் சொத்தில் நெல் பயிரிடுவதற்குப் பாட்டம் கொடுத்ததில் பிரச்சினைகள் வந்ததால், அது தென்னந்தோப்பாக மாற்றப்பட்டது. O.S.No.313/1974 வழக்கின் தீர்ப்பில் 27.10.1909 அன்று திருமதி அன்னமுத்து குருசடி புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் சொத்துத் தானமாக எழுதிக் கொடுத்ததாக நீதிபதி குறிப்பிட்டுள்ளார். எனவே இராமனாதிச்சன்புதூர் வயல் திருமதி அன்னமுத்து என்ற பெண்மணியால் நமது ஆலயத்திற்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். நீதிமன்றத்திலும் அந்தத் தானப் பத்திரம் தற்போது இல்லை. எனினும் சொத்துத் தானம் கொடுத்த திருமதி அன்னமுத்துவின் கணவரான திரு. தைனேசி மரியான் இறந்தவுடன் அப்போதையப் பங்குத்தந்தை அருள்பணி. பெர்னார்டின் கொல்லம் மறைமாவட்ட ஆயருக்குத் தானப் பத்திரத்தில் கூறப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்ற அனுமதி வேண்டி கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் தேதி எழுதப்பட்ட இடம் கிழிந்து போய்விட்டதால் அத்தேதியைக் கண்டுப் பிடிக்க முடியவில்லை (காண்க பக்கம் 110, 111).



திரு. தைனேசி மரியானின் கல்லறை, இராமனாதிச்சன்புதூர்

அந்தக் கடிதத்தில் தானப்பத்திரத்தில் வருடாவருடம் ஆறு ஆடம்பரத் திருப்பலிகள் நடத்த வேண்டுமென்று நிபந்தனை உள்ளதாக அருள்பணி. பெர்னார்டின் குறிப்பிடுகிறார். அவையாவன

1. சகல ஆத்துமாக்களின் தினத்தன்று ஒரு திருப்பலி
2. புது வருடத் தினத்தன்று ஒரு திருப்பலி
3. ஆண்டவரின் திருக்காட்சித் தினந்தன்று ஒரு திருப்பலி.
4. ஆண்டவரின் விண்ணேற்புத் தினந்தன்று ஒரு திருப்பலி.
5. ஆண்டு தோறும் தைனேசி மரியான் இறந்த நினைவு தினந்தன்று ஒரு திருப்பலி.



திருமதி. அன்னமுத்துவின் கல்லறை, இராமனாதிச்சன்புதூர்

6. தற்போது வாழ்ந்துக் கொண்டிருக்கும் தைனேசி மரியான் மனைவி இறக்கும் தினந்தன்று ஒரு திருப்பலி.

மேற்கண்ட நிபந்தனைகள் போக வேறு நிபந்தனைகள் ஏதும் உண்டா என்பதை அறிய முடியவில்லை. எனினும் நமது ஆலயத் திருவிழா கொடியேற்றத்தின்போது இராமனாதிச்சன்புதூரில் உள்ள திரு. தைனேசி மரியான் மற்றும் அவருடைய மனைவி திருமதி அன்னமுத்து கல்லறையில் எண்ணெய்ப் பூசி மாலை அணிவிப்பது வழக்கமாக உள்ளது. இந்த வழக்கமும் ஒரு நிபந்தனையாகக்கூட இருக்கலாம். வருடத்திற்கு ஆறு திருப்பலிகள் நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் சொத்தைத் தானமாக வழங்கியவர்களுக்கு இன்று அவர்கள் பெயரைச் சொல்லித் தனியாக ஒரு திருப்பலிகூட நமது ஆலயத்தில் நடைபெறவில்லை என்பது வருத்தப்பட வேண்டிய விஷயம்.

### 2:2:4 தொல்லவிளைச் சொத்து

வட்டக்கரை திருப்பாப்பு பாக்கியன் தேவசகாயம் நாடார் என்பவர் பெரும் செல்வந்தராக இருந்தார். மக்கள் அவரை வட்டக்கரை நாடான் என்று அழைத்தார்கள். வட்டக்கரை ஊர் தொடக்கத்தில் மேல ஆசாரிப்பள்ளம் பங்குடன் இணைந்திருந்தது என்று முன்னர் கண்டோம். அப்போது திரு. தேவசகாயம் நாடார் மேலஆசாரிப்பள்ளம் பங்கில் முடுதோமாக இருந்தவர். அவரை வட்டக்கரை முடுதோம் என்றும் அழைப்பார்கள். அவருடைய மனைவி பெயர் திருமதி மரியாயி. அவர் புத்தி சுவாதீனம் இல்லாமல் இருந்தார். இந்தத் தம்பதிகளுக்குக் குழந்தைகள் இல்லை. திரு. தேவசகாயம் நாடார் 1913ஆம் ஆண்டு இறந்து விட்டார். தேவசகாயம் நாடாரின் மனைவி திருமதி. மரியாயி குருசடி ஊரைச் சார்ந்த திரு. சவரிமுத்து நாடார் மகன் திரு. மரியந்தோனி நாடாரின் மகள் ஆகும். திரு. தேவசகாயம் நாடாருக்கு பாத்தியப்பட்ட 5 ஏக்கர் 51 சென்ட் நிலத்தை திருமதி மரியாயிக்கு வேண்டி அவர் தகப்பனாரான குருசடி ஊர் திரு. மரியந்தோனி நாடார், வட்டகரை ஊர் திரு. மரிய சவரிமுத்து நாடார் மகன் திரு. குருசுமிக்கேல் நாடார், அவருடைய தம்பி திரு.

சூசைமரியான் நாடாரும் புன்னக்காட்டுவிளை ஊர் திரு. மரியகுருசு நாடார் மகன் திரு. மரிய மிக்கேல் நாடாரும் சேர்ந்து கொல்லம் ஆண்டு 14.06.1091 (ஆங்கில ஆண்டு 27.01.1916) அன்று நமது ஆலயத்திற்குத் தானமாக எழுதிக்கொடுத்தார்கள். தானப் பத்திர எண் 1624/1091 ஆகும். அந்தத் தானப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் பின்வருமாறு

| வ. எண் | சர்வே எண் | பரப்பளவு | |
|---|---|---|---|
| | | ஏக்கர் | சென்ட் |
| 1. | 1027 | __ | 11 |
| 2. | 3212 | 1 | 15 |
| 3. | 3218 | 1 | 12 |
| 4. | 3253 | __ | 92 |
| 5. | 3285 | __ | 52 |
| 6. | 3292 | __ | 78 |
| 7. | 3163 | __ | 24 |
| 8. | 6703 | __ | 67 |
| 9. | | 5 | 51 |

மேற்கண்ட தானப் பிரம்மாணத்தின்படி தொல்லவிளை சொத்து, வட்டக்கரையிலுள்ள ஓடைத்தட்டு, மாந்தட்டு, சாவடித்தட்டு, முக்குத்தட்டு மற்றும் சில சொத்துக்கள் நமது ஆலயத்திற்கு கிடைத்தன. மேற்கண்ட தானப் பிரமாணத்தின்படி சொத்துக்களின் மொத்த மதிப்பு 6300 பணம் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. 7 பணம் என்பது ஒரு ரூபாய் ஆகும். எனவே 6300 பணம் என்பது ரூபாய் 900 ஆகும். மேலும் திருமதி மரியாயிக்கு வீடு வைப்பதற்காக ரூபாய் 265ம், சொத்துக்களில் வேறு நபர்களின் அவகாசத்தை ஒழிப்பிப்பதற்கு 1550 பணமும் ஆலயத்திலிருந்து கொடுக்கப் பட்டுள்ளது. திரு. தேவசகாயம் நாடாரின் மனைவியான திருமதி மரியாயிக்கு ஜீவநாம்சமாக மாதாமாதம் 24 பணம் முடுதோம்கள் பங்குத்தந்தையின் முன்னிலையில் கொடுக்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் எத்தனை ஆண்டுகள் ஜீவநாம்சம் கொடுக்கப்பட்டது என்பதை அறிய முடியவில்லை. அந்தத் தானப் பத்திரத்தில் ஒவ்வொரு வருடமும் திரு. தேவசகாயம் நாடார் இறந்தத் தினமான புரட்டாசி மாதம் 22ஆம் தேதி திருப்பலி நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனை சொல்லப்பட்டுள்ளது.

### 2:2:5 சிறுமலர் தொடக்கப் பள்ளி இருக்கும் நிலம்

மேலராமன்புதூரைச் சார்ந்த திருமதி மாதவடியாள் என்ற பெண்மணி தனக்குச் சொந்தமான 48 சென்ட் நிலத்தை நமது ஆலயத்திற்கு 1927ஆம் ஆண்டு தானமாகக் கொடுத்துள்ளார். அந்த நிலத்தில் 1927ஆம் ஆண்டு 3ஆம் வகுப்பு வரையிலான பெண்கள் தொடக்கப் பள்ளி சபையாரால் தொடங்கப்பட்டது (காண்க பக்கம் 38). அந்தத் தானப் பத்திரம் கிடைக்கவில்லை. எனவே கூடுதல் விபரங்கள் அறிய முடியவில்லை.

### 2:2:6 வடக்குக்கோணம் தோப்பு

வடக்குக்கோணத்தைச் சார்ந்த திரு. சாந்தப்பன் என்பவர் தனக்குச் சொந்தமான 52 சென்ட் நிலத்தை (சர்வே எண்.2755) நமது ஆலயத்திற்குத் தானமாக எழுதிக் கொடுத்துள்ளார் (காண்க பக்கம் 38). ஆனால் அந்தத் தானம் எந்த ஆண்டு நடைபெற்றது என்பதை அறிய முடியவில்லை. அந்தத் தானப் பத்திரம் நமக்கு கிடைக்கவில்லை. அந்தச் சொத்து வடக்குக்கோணத்திலிருந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இல்லம் நோக்கிச் செல்லும் சாலையில் ISRO காலணிக்கு எதிரே உள்ளது. இந்தச் சொத்தை சபையார் பிற்காலத்தில் விற்பனை செய்துவிட்டனர்.

### 2:2:7 கீழக்கோணம் வானொலி நிலையத்தின் கிழக்குப்பக்கம் உள்ள சொத்து

கீழக்கோணம் வானொலி நிலையத்தின் கிழக்குப்பக்கம் இராஜாக்கமங்கலம் சாலையோரம் உள்ள சொத்து 38 சென்ட் பரப்பளவு கொண்டது. அதன் சர்வே எண் 2795. இந்தச் சொத்தை நமது ஆலயத்திற்குத் தானமாக எழுதிக் கொடுத்தவர் நாகர்கோவிலைச் சார்ந்த திரு. பால் டேனியல் மகன் வழக்கறிஞர் திரு. ஜோஸ்வா R. டேனியல்.[22] தானம் கொடுத்த நாள் 08.03.1935. இந்தச் சொத்தின் அப்போதைய மதிப்பு ரூபாய் 100 என்று தானப்

22. *ஆவண எண் 2348/1110 M.E,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜோஸ்வா R. டேனியல் அவர்களின் தந்தை திரு. பால் டேனியல் இறந்தத் தினமான டிசம்பர் மாதம் 15ஆம் தேதி வருடாவருடம் ஒரு திருப்பலி நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.[23]

மேலும் இராமன்புதூரைச் சார்ந்த திரு. மிக்கேல் உபாத்தியாயர் தமக்குச் சொந்தமான சொத்துக்களை நமது ஆலயத்திற்குத் தானமாகக் கொடுத்துள்ளார். உபாத்தியாயர் என்றால் ஆசிரியர் என்று பொருள். அந்தத் தானப் பத்திரம் கிடைக்கவில்லை. எனவே இந்தத் தானம் எந்த ஆண்டு நடைபெற்றது என்பதையும், எந்தெந்தச் சொத்துக்களைத் தானமாகக் கொடுத்தார் என்பதையும் அறிய முடியவில்லை. திரு. மிக்கேல் ஆசிரியர் புன்னைநகர் சந்திப்பில் இருந்த நமது ஆலயத்திற்குச் சொந்தமான புனித அந்தோனியார் அரசு உதவிப் பெறும் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

மேலராமன்புதூர் திரு. அந்தோணி ஞானப்பிரகாசம் என்பவர் புன்னைப் புரயிடத்தை நமது ஆலயத்திற்குத் தானமாகக் கொடுத்துள்ளார். அந்தத் தானம் எந்த ஆண்டு நடைபெற்றது என்பதும், தானம் கொடுக்கப்பட்ட சொத்து எது என்பதையும் அறிய முடியவில்லை. இராமன்புதூர் திரு. மிக்கேல் ஆசிரியர் மற்றும் மேலராமன்புதூர் திரு. அந்தோணி ஞானப்பிறகாசம் ஆகியோர் சொத்துக்கள் தானம் கொடுத்ததாக 25-01-1935 அன்று பங்குமக்கள் சிலரால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (காண்க பக்கம் 38, 39). அந்தச் சொத்துக்கள் எவை எவை என்பதைக் கண்டுபிடிக்கக் கடின முயற்சிகள் எடுத்தும் கண்டுபிடிக்க முடியவில்லை.

**குருசடி புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் சொத்துக்கள் தானமாகக் கொடுத்தவர்களின் பட்டியல்:**

| வ. எண் | சர்வே எண் | பரப்பளவு | | தானம் கொடுத்தவர் பெயர் மற்றும் ஊர் | சொத்து அமைந்துள்ள இடம் | தானம் கொடுத்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|
| | | ஏக்கர் | சென்ட் | | | |
| 1. | 3363 | 1 | 50 | முத்துவயிரவன் சுப்பிரமணியன் நாடார், கறுத்தக்குட்டி நாராயண பெருமாள் நாடார் (மந்தங்காடு) | குருசடிப் புனித அந்தோனியார் ஆலயம் அமைந்துள்ள இடம் | 1803 |
| 2. | 2632 | 10 | 25 | சோரீஸ் மரியக்கண் முடுதோம் (தளவாய்புரம்) | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இல்லத்திலிருந்து வடக்குக்கோணம் செல்லும் சாலையில் உள்ள ISRO காலணி | —— |
| 3. | 339 | 7 | 00 | தைனேசி மரியான் மற்றும் அன்னமுத்து (இராமனாதிச்சன்புதூர்) | இராமனாதிச்சன்புதூர் வயல் | 27.10.1909 |
| 4. | 1027,3163, 3212,3218, 3285,3253, 3292,6703 | 5 | 51 | திருப்பாப்பு பாக்கியன் தேவசகாயம் நாடார் (வட்டக்கரை) | வட்டக்கரை மற்றும் தொல்லவிளை | 27.01.1916 |

23. *Ibid*

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5. | 2322 | — | 48 | மாதவடியாள் (மேலராமன்புதூர்) | சிறுமலர் தொடக்கப் பள்ளி, இராமன்புதூர் | 1927 |
| 6. | 2795 | — | 38 | ஜோஸ்வா R.டேனியல் (வழக்கறிஞர், நாகர்கோவில்) | கீழக்கோணம் அகில இந்திய வானொலி நிலையத்தின் கிழக்குப் பக்கம் | 08.03.1935 |
| 7. | 2755 | — | 52 | சாந்தப்பன் (வடக்குக்கோணம்) | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இல்லத்திலிருந்து வடக்குக் கோணம் வரும் சாலையில் ISRO காலணிக்கு எதிரில் | — |
| 8. | | — | — | மிக்கேல் ஆசிரியர் (இராமன்புதூர்) | — | — |
| 9. | | — | — | அந்தோணி ஞானப்பிரகாசம் (மேலராமன்புதூர்) | — | — |

இதுவரைக்கும் நமக்குக் கிடைத்துள்ள ஆவணங்களின்படி மேற்கண்ட சொத்துக்கள் மட்டுமே நமது ஆலயத்திற்குத் தானமாகக் கிடைத்துள்ளன. மீதமுள்ள சொத்துக்களில் சில தானமாகப் பெறப்பட்டிருக்கலாம். ஆனால் அதற்குரிய ஆவணங்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

## 2:3 சொத்துக்கள் விற்பனை செய்தல் மற்றும் அரசாங்கம் கையகப்படுத்துதல்

நமது ஆலயத்திற்கு நிதி நெருக்கடி ஏற்பட்ட காலகட்டங்களில் சபையாரால் சில சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. சில சொத்துக்களை அரசாங்கம் கையகப்படுத்தி யுள்ளது. சர்வே எண் 1027இல் உட்பட்ட 11 சென்ட் நிலமும், சர்வே எண் 6703இல் உட்பட்ட 67 சென்ட் நிலமும், சர்வே எண் 2333இல் உட்பட்ட 3 சென்ட் நிலமும், சர்வே எண் 2755இல் உட்பட்ட 52 சென்ட் நிலமும் சர்வே எண் 3218இல் உட்பட்ட 1 ஏக்கர் 12 சென்ட் நிலமும் ஏற்கனவே சபையாரால் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய ஆவணங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. சர்வே எண் 2229இல் உட்பட்ட 19 சென்ட் நிலம் சபையாரால் விலைக்குக் கொடுக்கப் பட்டுள்ளது. சர்வே எண் 2226இல் உட்பட்ட 7 சென்ட் நிலம் சபையாரால் விலைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.[24] சர்வே எண் 2669இல் உட்பட்ட 1 ஏக்கர் 69 சென்ட் நிலமும் சபையாரால் விலைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.[25] சர்வே எண் 2085இல் உட்பட்ட 66 சென்ட் நிலத்தில் (குருசடி CSI சர்ச்சுக்கு எதிரே உள்ள நிலம்) 43 சென்ட் நிலத்தைக் கன்னியாகுமரி மாவட்ட பிரிவு தமிழ்நாடு கல்வி அறக்கட்டளைக்கு வேண்டி அதன் தலைவரும் அப்போதையக் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவருமான திரு. சங்கரசுப்பையா IAS பெயருக்குச் செட்டில்மென்றாக அப்போதையப் பங்குத்தந்தை அருள்பணி. கபிரியேல் எழுதிக் கொடுத்துள்ளார்.[26] அந்த நிலத்தில் தற்போது

24. *ஆவண எண் 2462/1962,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.
25. *ஆவண எண் 3453/1962,* சார் பதிவாளர் அலுவலகம், விளவங்கோடு (தற்போது மாவட்ட பதிவாளர் அலுவலகம், மார்த்தாண்டம்)
26. *ஆவண எண் 2874/1976,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

தமிழ்நாடு அரசின் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட கல்லூரி மாணவிகள் விடுதி அமைந்துள்ளது. இச்சொத்து அரசாங்கத்திற்குச் செட்டில்மென்றாக எழுதிக் கொடுக்கப்பட்டதற்கான காரணத்தை அறிய முடியவில்லை.

சர்வே எண் 2795இல் உட்பட்ட 38 சென்ட் நிலத்தில் (வானொலி நிலையத்தைத் தொட்டுக் கிழக்குப் பக்கம் உள்ள நிலம்) சபையார் அனுமதிப் பெற்று திரு. மத்தியாஸ் என்பவர் வீடு கட்டி வாழ்ந்து, அந்தச் சொத்தின் பார்வையாளாராக இருந்தார். 1977ஆம் ஆண்டு குருசடி புனித அந்தோனியார் தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்ட வேண்டியிருந்ததால், மேலஆசாரிபள்ளத்தைச் சார்ந்த திருமதி மரிய ஆஞ்சலி என்பவருக்கு 34 சென்ட் நிலம் விற்பனை செய்யப் பட்டுள்ளது.[27] இந்தச் சொத்தை விற்பனை செய்து கிடைத்தப் பணத்தில் நமது பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டது. அந்தக் கட்டிடத்திற்கு அந்தச் சொத்தை ஆலயத்திற்குத் தானமாகக் கொடுத்த திரு. ஜோஸ்வா R. டேனியல் பெயர் சூட்டப்பட்டது. தற்போது அந்தப் பள்ளிக் கட்டிடம் இடிக்கப்பட்டுவிட்டது.



**ஜோஸ்வா R. டேனியல் பிளாக்**
**(குருசடி, புனித அந்தோனியார் தொடக்கப் பள்ளிக் கட்டிடம்**

34 சென்ட் விற்பனை செய்தது போக மீதி கைவசம் இருந்த 5 சென்ட் இடம் அதன் பார்வையாளரான திரு. மத்தியாசுக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டது.

சர்வே எண் 3163இல் உட்பட்ட 24 சென்ட் நிலத்தில் (வட்டக்கரை முக்குத்தட்டு) கிழக்கணையை 15 சென்ட் நிலத்தை 13.02.1984 அன்று அப்போதையப் பங்குத்தந்தை அருள்பணி. S.M. மரியதாசன் தளவாய்புரத்தைச் சார்ந்த திருமதி மேரி ஜெயா அமலராணிக்கு விற்பனை செய்தார்.[28]

நமது ஆலயத்திற்குச் சொந்தமான சர்வே எண் 2715இல் உட்பட்ட 2 ஏக்கர் 27 சென்ட் நிலம், சர்வே எண் 2786இல் உட்பட்ட 63 சென்ட் நிலம், சர்வே எண் 2787இல் உட்பட்ட 1 ஏக்கர் 20 சென்ட் நிலம், சர்வே எண் 2876இல் உட்பட்ட 26 சென்ட் நிலம் 1965ஆம் ஆண்டு தமிழக அரசின் தொழில்துறைக்காக அரசால் கையகப்படுத்தப்பட்டு, தொழிற்சாலை ஆய்வாளர், நாகர்கோவில், அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த நிலங்களுக்கான இழப்பீடாக ரூ.12,619.87 அரசால் நம் ஆலயத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளது (காண்க

27. *ஆவண எண் 1695/1977,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.
28. *ஆவண எண் 292/1984,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

பக்கம் 112, 113). தற்போது இந்த நிலத்தில் மாவட்ட தொழில் மையம், அகில இந்திய வானொலி நிலையம், அரசின் தொழிற்பயிற்சி மையப் பணியாளர்கள் குடியிருப்பு ஆகியவை அமைந்துள்ளன. 08.03.1965 அன்று மறைமாவட்ட ஆயர் ஆஞ்ஞிசாமி அப்போதையப் பங்குத்தந்தை அருள்பணி. அந்தோனிமுத்துக்கு அரசாங்கத்திடமிருந்து மேற்கண்ட இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ள அதிகாரம் வழங்கியுள்ளார் (காண்க பக்கம் 114, 115).

## 2:4 அருள்பணியாளர் இல்லம் (மேடை) கட்டியது

நமது ஆலயம் புனிதப்படுத்தப்படுவதற்கு முன்பு ஆலயத்தின் அருகில் ஒரு சிறிய மேடை இருந்தது. அது போதுமானதாக இல்லாததால், பெரிய மேடை கட்டப்பட்டது. அந்த மேடை தரைத் தளமும் முதல் தளமும் கொண்டது. தரைத் தளத்தில் சபையாரின் அலுவலகமும், ஆலயத்திலுள்ள திருவுருவங்கள் வைக்கும் அறையும், பக்த சபை மற்றும் இயக்கங்கள் கூட்டம் நடைபெறும் அறைகளும் இருந்தன. முதல் தளத்தில் பங்குத்தந்தையின் அலுவலகமும் பங்குத்தந்தை மற்றும் உதவிப் பங்குத்தந்தை தங்கும் அறைகளுமாக மிகவும் விசாலமாக இருந்தது. கட்டிடத்தின் மேற்கூரை ஒடுகளால் அமைக்கப்பட்டிருந்தது. முதல் தளத்தின் தரையானது மரப்பலகையினால் செய்யப்பட்டது. ஆலயத்தின் வடக்குப்புறக் கோபுரத்தின் மிக அருகில் மிகவும் கம்பீரமானத் தோற்றத்துடன் இந்த மேடை இருந்தது. இந்த மேடை எந்த ஆண்டு கட்டப்பட்டது என்பதை அறிய முடியவில்லை. 1904ஆம் ஆண்டிற்கும் 1934ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட 30 ஆண்டுகளில் முடுதோம்கள் செய்தப் பணியில் இந்த மேடை கட்டப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ள படியால், அந்த 30 ஆண்டுகளில் இது கட்டப்பட்டிருக்க வேண்டும் (காண்க பக்கம் 38, 39). தற்போது இந்த மேடை இடிக்கப்பட்டு புதிய மேடை கட்டப்பட்டுள்ளது.



ஆலயத்தின் மிக அருகாமையில் இருந்த பழைய மேடை

### 2:5 மருத்துவமனை அமைக்க முயற்சி செய்தல்

1900ஆம் ஆண்டுகளில் நாகர்கோவில் ஜோஸ்வா தெருவில் LMS மிஷன் மருத்துவமனையும், புத்தேரியில் இரட்சணிய சேனையினர் (Salvation Army) நடத்திய காதரின் பூத் மருத்துவமனையும் இருந்தன. கன்னியாகுமரி மாவட்டத்தில் வேறு சில பகுதிகளிலும் LMS மிஷன் மருத்துவமனைகள் இருந்தன. கன்னியாகுமரி மாவட்டத்தில் கத்தோலிக்க மக்களுக்கென்று மருத்துவ மனைகள் ஏதும் இல்லை. இதனால் கத்தோலிக்க மக்கள் நோய்வாய்ப்படும்போது அதிகப் பணச் செலவு செய்து LMS மருத்துவமனைக்கும் காதரின் பூத் மருத்துவமனைக்கும் சென்று சிகிட்சைப் பெற்றார்கள். மருத்துவமனைக்குச் செல்ல வசதியில்லாத ஏழைகள் பலர் இறந்து போனார்கள். இந்நிலையில் 11.05.1906 அன்று அப்போதைய கொல்லம் மறைமாவட்ட ஆயர் ஆலோசியஸ் மரிய பென்சிகர் பங்கு சந்திப்புக்காகக் குருசடிக்கு வந்திருந்தார். அவரை வரவேற்று ஆங்கிலத்தில் அச்சிடப்பட்ட வரவேற்புரையை நமது ஆலயத்தின் அப்போதைய முடுதோம் திரு. D. பிரான்சிஸ் வாசித்தார். அந்த வரவேற்புரையில் கத்தோலிக்க மக்களுக்காக நாகர்கோவிலில் ஒரு மருத்துவமனைத் தொடங்கப்பட வேண்டுமென்று ஆயரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது (காண்க பக்கம் 184 - 187). ஆனால் உடனடியாக மருத்துவமனைத் தொடங்க கொல்லம் மறைமாவட்டம் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

1927ஆம் ஆண்டு திருச்சிலுவை அருள்சகோதரிகள் நாகர்கோவில் அரசு மருத்துவமனையில் செவிலியராகப் பணிசெய்ய ஆயர் ஆலோசியஸ் மரிய பென்சிகர் அனுமதியளித்தார். அவர்கள் 1952ஆம் ஆண்டுவரை அங்குப் பணி செய்தனர். பின்னர் 1945ஆம் ஆண்டு ஆசாரிபள்ளம் நெஞ்சக நோய் (Tuberculosis) மருத்துவமனைத் தொடங்கப்பட்டபோதும் அங்கும் திருச்சிலுவை அருள்சகோதரிகள் பணி செய்தனர்.[29] பின்னர் ஆயர் ஆஞ்ஞிசாமி நாகர்கோவில் வெட்டூர்ணிமடத்தில் மறைமாவட்டத்திற்குச் சொந்தமான நிலத்தில் திருச்சிலுவை அருள்சகோதரிகளுக்கு மருத்துவமனை அமைக்க அனுமதிக் கொடுத்தார். அந்த நிலத்தில் அருள்சகோதரிகள் 1959ஆம் ஆண்டு ஹோலிக் கிறாஸ் மருத்துவமனையை அமைத்தனர். தற்போதும் அந்த மருத்துவமனை மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. மறைமாவட்டம் சார்பாக மருத்துவமனை ஏற்படுத்த முதலில் குரல் கொடுத்தது குருசடி புனித அந்தோனியார் ஆலய சபையார் என்றால் மிகையல்ல.

### 2:6 இயேசுவின் திருஇருதய அருள் சகோதரிகள் இல்லம், குருசடி

திருஇருதய அருள்சகோதரிகள் துறவு அவை நிறுவனர் அருள்சகோதரி அன்னை ஸ்கொலாஸ்டிக்கா 1967ஆம் ஆண்டு நம்முடைய அப்போதையப் பங்குத்தந்தை அருள்பணி. R. அந்தோனிமுத்து மற்றும் முடுதோம்களை அணுகிக் குருசடியில் கருணை இல்லம் மற்றும் அருள்சகோதரிகள் இல்லம் அமைக்க நிலம் கேட்டார். அந்த காலக் கட்டத்தில் இந்தத் துறவுஅவை திருஅவையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அப்போது இந்த அருள்சகோதரிகள் இயேசுவின் சிறிய சகோதரிகள் என்று அழைக்கப்பட்டனர். அவர்களுக்கு திருஅவை அங்கீகாரம் இல்லாததால் அவர்களுக்கு நிலம் கொடுக்க சபையாரில் சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். எனினும் பங்குத்தந்தை R. அந்தோனிமுத்தும் முடுதோம்கள் திரு. F. ஸ்டான்லியும் திரு. M. ஆன்றனியும் இந்த துறவுஅவை நமது மறைமாவட்டத்தைச் சாா்ந்த அருள்சகோதரியால் தொடங்கப்படுவதால் நாம் கட்டாயம் இடம் கொடுக்க வேண்டுமென்று உறுதிபட தெரிவித்தனர். மேலும் நமது மறைமாவட்டத்தில் தொடங்கப்படும் இந்தத் துறவுஅவை

29. J.M.Villavarayan, *The Diocese of Kottar,* 1956, p. 48

வெளிநாடுகளுக்கும் ஒருநாள் நிச்சயம் பரவும் என்றும் தெரிவித்தனர். அவர்கள் கூறியதுபோல தற்போது இந்தத் துறவுஅவை பல வெளிநாடு களிலும் பரவியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. பின்னர் மறைமாவட்ட ஆயர் ஆஞ்சிசாமியின் அனுமதி பெற்று நமது ஆலயத்திற்கு சொந்தமான சர்வே எண் 2865இல் உட்பட்ட 89 சென்ட் நிலம் அருள்சகோதரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. தொடக்கத்தில் அருள்சகோதரிகள் நமது ஆலய வளாகத்தி லிருந்த மங்களாவில் தங்கியிருந்தனர். பின்னர் அருள்சகோதரிகள் இல்லமும் கருணை இல்லமும் கட்டப்பட்டு 30.10.1969இல் ஆயர் ஆஞ்ஞிசாமியால் ஆசிர்வதிக்கப்பட்டது.[30] பின்னர் நிலம் ஆலயத்தின் பெயரில் இருந்ததால், அருள்சகோதரிகளுக்குப் பல சிக்கல்கள் ஏற்பட்டதால் 1973ஆம் ஆண்டு அப்போதைய பங்குத்தந்தை அருள்பணி. டைனீசியஸ் அவர்களால் அருள்சகோதரிகளுக்குத் தானமாக கொடுக்கப்பட்டது. தற்போது கூடுதல் நிலம் அருள்சகோதரிகளால் விலைக்கு வாங்கப்பட்டு கருணை இல்லம் மிகச் சிறப்பாக நடத்தப்படுகிறது.

### 2:7 புன்னைநகரில் அருள்சகோதரிகள் இல்லம் அமைக்க முயற்சி செய்தல்

நமது ஆலயத்திற்குச் சொந்தமாகப் புன்னைநகரில் இருந்தப் பழைய சர்வே எண் 2044 இல் உள்பட்ட 3 ஏக்கர் 56 சென்ட் நிலத்தில் கிழக்குப்பக்கம் உள்ள 2 ஏக்கர் நிலம் அருள்சகோதரிகள் இல்லம் அமைக்கவும், பொதுவான சேவைகளுக்கும், தர்ம ஸ்தாபனங்கள் நிறுவ வேண்டியும் விஜயவாடா நகரில் இருக்கும் மாசற்ற மாமரியின் வேதபோதக அருள்சகோதரிகள் துறவு அவைக்கு 17-04-1970 அன்று நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது. நன்கொடை ஆவணத்தை அப்போதையப் பங்குத்தந்தை அருள்பணி. R. அந்தோனிமுத்து எழுதிக் கொடுத்துள்ளார்.[31] ஆனால் அந்தத் துறவுஅவையினர் அந்த நிலத்தில் எந்தப் பொதுச்சேவையும் செய்யாமல் காலி நிலமாக வைத்திருந்தனர். பின்னர் அருள்பணி. பெஞ்சமின் பங்குத்தந்தையாக இருந்தபோது 24-11-1986 அன்று நன்கொடை ரத்து ஆவணம் பதிவு செய்து ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட நன்கொடை ஆவணம் ரத்துச் செய்யப்பட்டது.[32] இதன் மூலம் சொத்து மீண்டும் நமது ஆலயத்திற்குக் கிடைத்தது.

### 2:8 சொத்துக்களைத் தென்னந்தோப்புகளாக மாற்றியது.

நமது ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்களில் ISRO காலணிக்கு எதிரே இருந்த 52 சென்று நிலம் மட்டும் தொடக்கத்தில் தென்னந்தோப்பாக இருந்தது. மீதமுள்ள பெரும்பாலான நிலங்களில் பனை மற்றும் புன்னை மரங்கள் அதிகம் நின்றன. மின்சார வசதி இல்லாத காலத்தில் ஆலய வழிபாடு, திருவிழாக்கள், சாவடி, சிற்றாலயம், மற்றும் ஆலய வளாகத்தில் வெளிச்சத்திற்காக விளக்குகள் பயன்படுத்தப்பட்டன. இதற்காக ஆலய வளாகத்தில் சின்ன கோவில் முன்பும் சாவடிக்கு முன்பும் மற்றும் ஆலயத்திற்கு முன்பும் சுமார் ஐந்து அடி உயரம் உள்ள கல் தூண்கள் நாட்டப்பட்டிருந்தன. தூணின் மேல் பகுதியில் இருக்கும் பள்ளமான பகுதியில் எண்ணை ஊற்றி விளக்காகப் பயன்படுத்தப் பட்டன. இந்த விளக்குகளில் புன்னைக்காய் எண்ணெய் பயன்படுத்தப்பட்டது. எனவே நமது ஆலயத்திற்குச் சொந்தமான புன்னை மரங்களிலிருந்து கிடைத்தப் புன்னைக் காய்களைக் கொண்டு வந்து, ஆலயத்தின் பின்புறம் இருந்தச் செக்கில் ஆட்டி எண்ணைய் எடுத்து விளக்குகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. 1952ஆம் ஆண்டு நமது ஊருக்கு அரசாங்கத்தால் மின்சார வசதி செய்யப் பட்டவுடன் முதலில் ஆலயத்திற்கு மின்சார இணைப்புப் பெறப்பட்டது. இதனால் புன்னக்காய்

30. குருசடி, திருஇருதய அருள்சகோதரிகள் இல்லம், *கல்வெட்டு,* நாள் 30-10-1969
31. *ஆவண எண் 1397/1970,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.
32. *ஆவண எண் 2687/1986,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

எண்ணைத் தேவைப்படவில்லை. எனவே அருள்பணி. D.C. ஆன்றனி பங்குத் தந்தையாக இருந்தபோது வடக்குக் கோணத்தில் சில நிலங்களும் மாதாதோப்பும் தென்னந்தோப்பாக மாற்றப்பட்டன. அருள்பணி. R. அந்தோனிமுத்து பங்குத்தந்தையாக இருந்தபோது வடகாட்டுவிளை மற்றும் வடக்குக் கோணத்தில் உள்ள சில நிலங்களும் தென்னந்தோப்பாக மாற்றப்பட்டன.

### 2:9 சொத்துக்களைப் பராமரித்தல்

சபையார் நமது ஆலயத்தை நிர்வாகம் செய்யும்போது ஆலய சொத்துகளைப் பராமரிப்பதில் முடுதோம்கள் மற்றும் சபையார் சிறப்பாகச் செயல்பட்டுள்ளனர். இராமனாதிச்சன் புதூர் நிலத்தில் நெல் பயிரிடப்பட்டது. ஆரல்வாய்மொழி நிலத்தில் நிலக்கடலை பயிரிடப்பட்டது. சில நிலங்களில் தென்னை விவசாயமும் சில நிலங்களில் புன்னை மற்றும் கொல்லா மரங்களும் நின்றன. எனவே ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் முடுதோம்களும் கணக்குப்பிள்ளையும், சபைக்கமிட்டி உறுப்பினர்களில் சிலரும் இணைந்து சொத்துக்களைப் பார்வையிடுவது வழக்கமாக இருந்தது. தேவைப்படும்போது பங்குத்தந்தையும் சொத்துக்களைப் பார்வையிட்டார். இதனால் ஆலய சொத்துக்களைப் பிறர் ஆக்கிரமிக்காமல் பாதுகாக்கப்பட்டன.

## 3. கல்விப் பணி

நமது ஆலய சபையார் ஆற்றியப் பணிகளில் கல்விப் பணி மிக முக்கியமானது. 150 ஆண்டுகளுக்கு முன்பே கல்வி நிலையங்களை ஏற்படுத்தியதால் குருசடி மற்றும் அதன் சுற்றுவட்டார மக்களும் கல்வியறிவு பெற்றனர். தொடக்கப் பள்ளிகள் மட்டுமல்லாமல் உயர்நிலைப் பள்ளிகளும் ஆரம்பிக்கப்பட்டன. பெண்களுக்கென்று தனியாகப் பள்ளிகளும் தொடங்கப்பட்டன. நமது ஆலயத்திற்குச் சொந்தமாக ஐந்து பள்ளிகள் இருந்தன. அவையாவன

1. R.C. தொடக்கப் பள்ளி, இராமன்புதூர், இருப்பு புன்னைநகர்
2. புனித மரியன்னை தொடக்கப் பள்ளி, மறவன்குடியிருப்பு
3. புனித அந்தோனியார் தொடக்கப் பள்ளி, குருசடி
4. புனித மிக்கேல் தொடக்கப் பள்ளி, வேதநகர்
5. பெண்கள் தொடக்கப் பள்ளி, இராமன்புதூர் (சிறுமலர் தொடக்கப் பள்ளி, இராமன்புதூர்)

### 3:1 R.C. தொடக்கப் பள்ளி, இராமன்புதூர் இருப்பு புன்னைநகர்

நமது பங்கில் முதன்முதலில் தொடங்கப்பட்ட பள்ளி இதுவே. 1865ஆம் ஆண்டு இந்தப் பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டது.[33] அப்போது நமது பங்குத்தந்தை யார் என்பதை அறிய முடியவில்லை. முடுதோமாக இருந்தவர் மேலராமன்புதூர் திரு. S. தேவசகாயம் ஆகும்.

1865ஆம் ஆண்டு இந்தப் பள்ளி எந்த இடத்தில் இருந்தது என்பதை அறிய முடியவில்லை. முதலில் இந்தப்பள்ளி இராமன்புதூரில் இருந்திருக்கலாம். எனவேதான் இப்பள்ளி R.C. தொடக்கப்பள்ளி, இராமன்புதூர் என்று அழைக்கப்பட்டது. பின்னர் 1884ஆம் ஆண்டு புன்னைநகர் சந்திப்பில் யூதா ததேயு கெபி இருக்கும் 12 சென்ட் நிலம் நமது ஆலயத்தின் பெயரில் விலைக்கு வாங்கப்பட்டது.[34] அதன் பிறகு பள்ளிக்கூடம் புன்னைநகர் சந்திப்பிற்கு மாற்றப்பட்டது.

இப்பள்ளியின் பெயர் தொடக்கத்தில் புனித அந்தோனியார் அரசு உதவி பெறும் பள்ளி, இராமன்புதூர் என்று அழைக்கப்பட்டது. 14-12-1913 அன்று தென் திருவிதாங்கூர்

33. R.C. தொடக்கப் பள்ளி, புன்னைநகர், *150ஆவது ஆண்டுவிழா மலர்,* 2015
34. *ஆவண எண் 3363/1059 M.E,* சார் பதிவாளர் அலுவலகம், அகஸ்தீஸ்வரம் (தற்போது இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலகம்).

உரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவ சங்கத்தின் கூட்டம் இப்பள்ளியில் நடைபெற்றது. கத்தோலிக்கச் சங்கத்தின் செயலாளர் திரு. D. பிரான்சிஸ் முடுதோம் தன் கைப்பட எழுதிய அறிக்கைப் புத்தகத்தில் இக்கூட்டம் புனித அந்தோனியார் அரசு உதவி பெறும் பள்ளி, இராமன்புதூரில் நடைபெற்றதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது (காண்க பக்கம் 116 - 118). பின்னர் 1918ஆம் ஆண்டு குருசடியில் தொடங்கப்பட்ட பள்ளிக்குப் புனித அந்தோனியார் பள்ளி என்று பெயரிட்டதால் இப்பள்ளிக்கு R.C. தொடக்கப்பள்ளி, இராமன்புதூர் என்று பெயராயிற்று. 1927ஆம் ஆண்டு இராமன்புதூரில் பெண்களுக்கென்று தனியாகத் தொடக்கப் பள்ளியைச் சபையார் தொடங்கிய பிறகு, இப்பள்ளி R.C. தொடக்கப் பள்ளி புன்னக்காட்டுவிளை என்று அழைக்கப்படலாயிற்று.

தொடக்கத்தில் 1 மற்றும் 2ஆம் வகுப்புகள் மட்டும் நடைபெற்றன. 08.04.1911 அன்று நமது பங்குத்தந்தை அருள்பணி. பெர்னார்டின் அவர்கள் கொல்லம் மறைமாவட்ட ஆயருக்கு எழுதிய கடிதத்தில் இராமன்புதூர் பள்ளியின் கட்டிடம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும், 1911ஆம் ஆண்டு முதல் 3 மற்றும் 4ஆம் வகுப்புகள் தொடங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடுகிறார் (காண்க பக்கம் 125 - 130). எனவே 1911ஆம் ஆண்டு மூன்றாம் வகுப்பும் அடுத்த ஆண்டு நான்காம் வகுப்பும் தொடங்கப்பட்டுள்ளது. பின்னர் 1965ஆம் ஆண்டு பள்ளிக்கூடத்தை புன்னைநகர் சந்திப்பில் இருந்து புன்னைநகர் கல்லறைத் தோட்டத்திற்கு எதிரே தற்போது இருக்கும் இடத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டது. 1965ஆம் ஆண்டு நமது பங்குத்தந்தையாக இருந்த அருள்பணி. R. அந்தோனிமுத்து புன்னைநகரில் நமது ஆலயத்திற்குச் சொந்தமான சர்வே எண் 2044இல் உட்பட்ட 3 ஏக்கர் 56 சென்ட் நிலத்தில் 50 சென்ட் நிலத்தைப் பள்ளிக்கூடத்திற்காக ஒதுக்கிக் கொடுத்தார். புன்னைநகர் ஊர் மக்களால் பள்ளிக்கூட கட்டிடம் கட்டப்பட்டது. அப்போதைய ஆயர் ஆஞ்ஞிசாமியால் 10.05.1964 அன்று பள்ளிக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.[35] அப்போது புன்னைநகர் ஊர்த் தலைவராக இருந்து பள்ளிக்கூடக் கட்டிடப் பணியைத் தொடங்கியவர் பிரபல கட்டிட ஒப்பந்தக்காரர் திரு. M. அந்தோனி சவரிமுத்து ஆகும்.[36] பள்ளிக்கட்டிடம் கட்ட நிதி வசூல் செய்வதற்காகக் கார்மல் பள்ளி வளாகத்தில் “மறைசாட்சி தேவசகாயம் பிள்ளை” வரலாற்று நாடகம் புன்னைநகர் ஊர் மக்களால் நடத்தப்பட்டு பார்வையாளர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்பட்டது. மேலும் திரு. M. அந்தோனி சவரிமுத்துவைத் தொடர்ந்து புன்னைநகர் ஊர்த் தலைவராகப் பொறுப்பேற்ற திருவாளர்கள் V. குருசு மிக்கேல், K. சிலுவைராயன் மற்றும் S. தேவசகாயம் ஆகியோர் பணிக்காலங்களில் பள்ளிக் கட்டிடப் பணிகள் நடைபெற்று 1969ஆம் ஆண்டு முதல் புதிய கட்டிடத்தில் பள்ளிச் செயல்பட்டு வருகிறது.



**திரு. M. அந்தோனி சவரிமுத்து**

### 3:2 புனித மரியன்னை தொடக்கப் பள்ளி, மறவன்குடியிருப்பு

நமது பங்கின் சார்பாக இரண்டாவது தொடங்கப்பட்ட பள்ளி இதுவாகும். இப்பள்ளித் தொடங்கப்பட்ட ஆண்டு எது என்பதை அறியமுடியவில்லை. தொடக்கத்தில் மறவன்குடியிருப்பு ஊர் கிணற்றுக்கு மேற்குப் பக்கம் இருந்த கட்டிடத்தில் பள்ளி செயல்பட்டது. 1908ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தற்போது மாதா மஹால் அமைந்துள்ள இடத்தில் புதிய கட்டிடத்தில் செயல்பட ஆரம்பித்தது. இப்பள்ளி புதிய கட்டிடத்தில் செயல்பட ஆரம்பித்த 1908ஆம்

35. புனித லூர்து அன்னை ஆலயம், புன்னைநகர், நாகர்கோவில், *பொன் விழா சிறப்பு மலர்*, 2005, ப. 5
36. திரு. A. மரிய அமிர்தராஜ், புன்னைநகர், *நேர்முகப்பேட்டி*, நாள் 15.01.2020.

ஆண்டிலிருந்து கணக்கிட்டு 2008ஆம் ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடப் பட்டது.[37] இப்பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்ட அதிகம் உழைத்தவர் நமது ஆலய முடுதோம் மறவன்குடியிருப்பு திரு. G. மரியந்தோனி ஆகும். மறவன்குடியிருப்பு புனித மரியன்னை தொடக்கப் பள்ளியானது 1931ஆம் ஆண்டு நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது.[38] முடுதோம்கள் திரு. D. பிரான்சிஸ் மற்றும் திரு. G. மரியந்தோனி ஆகியோர் இப்பள்ளியைத் தமிழ்வழி (vernacular) நடுநிலைப் பள்ளியாக மாற்றக் கடுமையாக உழைத்துள்ளனர் (காண்க பக்கம் 38, 39). நாளடைவில் சபையாரால் நடுநிலைப்பள்ளியைத் தொடர்ந்து நடத்த முடியாததால் மீண்டும் மறவன்குடியிருப்புப் பள்ளி தொடக்கப் பள்ளியாக மாற்றப்பட்டது. இப்பள்ளி அமைந்திருந்த நிலம் மறவன்குடியிருப்பு ஊருக்குச் சொந்தமானதாகும்.

### 3:3 புனித அந்தோனியார் தொடக்கப் பள்ளி, குருசடி

குருசடி புனித அந்தோனியார் தொடக்கப் பள்ளி 21.05.1918 அன்று தொடங்கப்பட்டது. அப்போது நமது பங்குத்தந்தையாக இருந்த ஐரோப்பாவைச் சார்ந்த அருள்பணி. பயஸ் மற்றும் முடுதோம்கள் திரு. D. பிரான்சிஸ், திரு. G. மரியந்தோனி ஆகியோர்கள் முயற்சியால் இப்பள்ளித் தொடங்கப்பட்டது. தொடக்கத்தில் 1 மற்றும் 2ஆம் வகுப்புகள் மட்டுமே தொடங்கப்பட்டன. 1930ஆம் ஆண்டு 3ஆம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. 12.03.1930 அன்று கொல்லம் மறைமாவட்ட முதன்மை அருள்பணியாளர் பெர்னார்டின் நமது ஆலய பங்குத்தந்தை அருள்பணி. பால் OCD அவர்களுக்கு 3ஆம் வகுப்பை ஆரம்பிக்க அனுமதி அளித்துள்ளார் (காண்க பக்கம் 119, 120). தொடக்ககாலத்தில் ஓலைக் கூரையிலான சிறிய கட்டிடத்தில் பள்ளி செயல்பட்டது.


அருள்பணி. ரபேல் ஜேசுதாசன்

1927ஆம் ஆண்டு 'ட' வடிவத்தில் ஓட்டுக் கூரையிலான புதிய கட்டிடம் கட்டப்பட்டது. அப்போது பங்குத்தந்தை அருள்பணி. பயஸ் கோட்டாறு சவேரியார் ஆலய மேடையில் தங்கி யிருந்தார். முடுதோம்களான திரு. D. பிரான்சிஸ் இராமன் புதூரிலும் திரு. G. மரியந்தோனி மறவன்குடியிருப்பிலும் குடியிருந்ததால் அப்போது உதவி பங்குத்தந்தையாக இருந்த முட்டத்தைச் சார்ந்த அருள்பணி. ரபேல் ஜேசுதாசன் நமது ஊரில் இருந்த மேடையில் தங்கியிருந்து அவருடைய மேற்பார்வையில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது.[39] அருள்பணி. ரபேல் ஜேசுதாசன் நமது ஆலய முன்னாள் பங்குத்தந்தை அருள்பணி. L. தார்சியுஸ் ராஜ் அவர்களின் தாத்தா (அப்பாவின் தாய்மாமன்) ஆகும்.

இப்பள்ளி 1986ஆம் ஆண்டுவரைத் தொடக்கப் பள்ளியாக இருந்தது. அதன் பின்னர் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. தொடக்கக் காலத்தில் பணியாற்றிய ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியரைப் பற்றி அறிய முடியவில்லை. 1937ஆம் ஆண்டு குருசடி ஊர் திரு. A. அருளப்பன் ஆசிரியர் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று 1954ஆம் ஆண்டு தாம் இறக்கும்வரை தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். அருள்பணி. ரிச்சர்டு ரொசாரியோ அவர்கள் பங்குத்தந்தையாக இருந்தபோது முடுதோம்கள் மற்றும் தலைமை ஆசிரியர் திரு. A. அருளப்பன் ஆகியோர் முயற்சியில் நான்காம் வகுப்பு தொடங்கப்பட்டது. நமது பள்ளியில் எந்த ஆண்டு நான்காம் வகுப்பு தொடங்கப்பட்டது என்பதை அறியமுடியவில்லை. அக்காலகட்டத்தில் நான்காம் வகுப்புவரை உள்ள பள்ளி தொடக்கப்

37. மறவன்குடியிருப்பு *புனித மரியன்னை தொடக்கப் பள்ளி நூற்றாண்டு விழா மலர்,* 2008, ப. 2
38. J.M.Villavarayan, *The Diocese of Kottar,* p. 57
39. திரு. L. அமலதாஸ், முட்டம், *நேர்முகப்பேட்டி,* நாள் 02-02-2020 (அருள்பணி. ரபேல் ஜேசுதாசன் அவர்களின் பேரன்)

பள்ளி ஆகும். திருவிதாங்கூர் - கொச்சி அரசாங்கம் 1948ஆம் ஆண்டு தொடக்கப் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்புவரை இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. அதனைத் தொடர்ந்து நமது பள்ளியில் ஐந்தாம் வகுப்பு தொடங்கப்பட்டது. பின்னர் திரு. A. அருளப்பன் ஆசிரியர் இறந்ததை அடுத்து 1954 முதல் 1963 வரை குருசடி ஊர் திரு. ஜேசுஅடிமை தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். அவரைத் தொடர்ந்து 1963ஆம் ஆண்டுமுதல் 1986ஆம் ஆண்டுவரை புன்னைநகரைச் சாா்ந்த திரு. S. தார்சியுஸ் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார்.[40] நமது பள்ளியில் 1 மற்றும் 2ஆம் வகுப்புகள் மட்டும் செயல்பட்டபோது 3 மற்றும் 4ஆம் வகுப்புகளுக்குப் புன்னைநகர் சந்திப்பில் இருந்த பள்ளிக்கூடத்திற்கு மாணவர்கள் சென்றனர். அதன்பிறகு 1922ஆம் ஆண்டு கார்மல் உயர்நிலைப் பள்ளி தொடங்கப்பட்ட பிறகு உயர்க்கல்வி கற்க மாணவர்கள் கார்மல் பள்ளிக்கும் மாணவிகள் சிறுமலர் உயர்நிலைப் பள்ளிக்கும் மற்றும் புனித ஜோசப் கான்வென்ட் உயர்நிலைப் பள்ளிக்கும் சென்றனர்.

### 3.4 புனித மிக்கேல் தொடக்கப் பள்ளி, வேதநகர்

2007ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வேதநகர் தூய மிக்கேல் அதிதூதர் ஆலய அர்ச்சிப்பு விழா மலரில் “1909ஆம் ஆண்டு குருசடிப் பங்குத்தந்தையாக இருந்த மறைதிரு. அம்புரோஸ் இம்மண்ணில் ஒரு கல்விக்கூடம் தேவை என்ற உயரிய நோக்கோடு பள்ளி உருவானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது”.[41] ஆனால் 1909ஆம் ஆண்டு குருசடிப் பங்குத்தந்தையாக இருந்தது அருள்பணி. பெர்னார்டின் ஆகும். அருள்பணி. அம்புரோஸ் பெர்னாண்டஸ் குருசடிப் பங்குத்தந்தையாகப் பணியாற்றியது 1935 முதல் 1940ஆம் ஆண்டுகளிலும் பின்னர் 1947 முதல் 1951 வரையுள்ள ஆண்டுகளிலும் ஆகும். எனவே வேதநகரில் பள்ளிக்கூடம் எந்த ஆண்டு யாரால் தொடங்கப்பட்டது என்பதை அறிய முடியவில்லை. தொடக்கக் காலத்தில் 1 மற்றும் 2ஆம் வகுப்புகள் நடைபெற்றன. நாளடைவில் 5ஆம் வகுப்பு வரையுள்ள தொடக்கப் பள்ளியாகச் செயல்பட்டது. தற்போது உயர்நிலைப் பள்ளியாகப் புதுவை தூய இதய மரியன்னையின் பிரான்சிஸ்கன் சகோதரிகள் துறவுஅவை அருள்சகோதரிகள் பொறுப்பில் இப்பள்ளி செயல்படுகிறது. இப்பள்ளி அமைந்துள்ள நிலம் வேதநகர் ஊருக்குச் சொந்தமானதாகும். இப்பள்ளியை உருவாக்குவதில் வேதநகர் மக்களின் பங்குச் சிறப்பானது.

### 3.5 பெண்கள் தொடக்கப் பள்ளி, இராமன்புதூர் (சிறுமலர் தொடக்கப் பள்ளி, இராமன்புதூர்)

மேலராமன்புதூரைச் சார்ந்த திருமதி மாதவடியாள் என்ற பெண்மணி 1927ஆம் ஆண்டு தமக்குச் சொந்தமான இராமன்புதூரில் உள்ள 48 சென்ட் நிலத்தைக் குருசடிப் புனித அந்தோனியார் ஆலயத்திற்குத் தானமாகக் கொடுத்தார். அதே ஆண்டு பெண்களுக்குத் தனியாக 3ஆம் வகுப்பு வரையுள்ள தொடக்கப் பள்ளி அந்த நிலத்தில் அப்போதையப் பங்குத்தந்தை அருள்பணி. பயஸ் மற்றும் முடுதோம்கள் திரு. D. பிரான்சிஸ் மற்றும் திரு. G. மரியந்தோனி மற்றும் சபையார் முயற்சியால் தொடங்கப்பட்டது. தொடக்கக் காலத்தில் ஆசிரியர்களாகவும் தலைமை ஆசிரியராகவும் பெண்கள் பணிபுரிந்தனர். பின்னர் 4ஆம் வகுப்பும் தொடங்கப்பட்டது. பள்ளியை மேலும் சிறப்பாக நடத்த வேண்டுமென்பதற்காக அருள்சகோதரிகளிடம் பள்ளி நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டுமென்று சபையாரால் தீர்மானிக்கப்பட்டது. பின்னர் மறைமாவட்ட ஆயர் ஆஞ்ஞிசாமி மற்றும் பங்குத்தந்தை ரிச்சர்டு ரொசாரியோ ஆகியோர் முயற்சியில் 1942ஆம் ஆண்டு புதுவை தூய

40. திரு. S. தார்சியுஸ், புன்னைநகர், முன்னாள் தலைமை ஆசிரியர், புனித அந்தோனியார் தொடக்கப் பள்ளி, குருசடி, *நேர்முகப்பேட்டி*, நாள் 02.02.2020

41. வேதநகர், *தூய மிக்கேல் அதிதூதர் ஆலய அர்ச்சிப்பு விழா மலர்*, 20.05.2007, ப. 18

இதய மரியன்னையின் பிரான்சிஸ்கன் சகோதரிகள் துறவுஅவை அருள்சகோதரிகளை அழைத்து வந்து அவர்கள் பொறுப்பில் பள்ளிக்கூடம் ஒப்படைக்கப்பட்டது. அருள்சகோதரி ஒருவர் தலைமை ஆசிரியராக இருந்து பள்ளியை நடத்தினார். அருள்சகோதரிகள் தங்கியிருக்க இடம் கேட்டார்கள். இராமன்புதூர் சந்திப்பில் இருந்த நமது ஆலயத்திற்குச் சொந்தமான 52 சென்ட் நிலத்தில் இருந்தக் கட்டிடத்தில் அப்பகுதியிலுள்ள கத்தோலிக்க இளைஞர்கள் நூலகம் நடத்தி வந்தனர். பங்குத்தந்தை ரிச்சர்டு ரொசாரியோ, முடுதோம்கள் திரு. D. பிரான்சிஸ், திரு. G. மரியந்தோனி மற்றும் கீழராமன்புதூரைச் சார்ந்தவரும் குருசடி சபைக் கமிட்டி உறுப்பினரான திரு. M. M. கிரகோரி ஆகியோர் நூலகத்தைக் காலி செய்து அந்தக் கட்டிடத்தை அருள்சகோதரிகளிடம் ஒப்படைத்தனர். அவர்கள் அதில் தங்கியிருந்து பள்ளியை நடத்தி வந்தனர். நாளடைவில் 5ஆம் வகுப்பும் தொடங்கப்பட்டது.

1954ஆம் ஆண்டு குருசடி ஊரில் பெண்களுக்கான நடுநிலைப் பள்ளி தொடங்க சபையார் முடிவு செய்தனர். எனவே அப்போது நமது ஆலய முடுதோம்களாக இருந்த திரு. F. ஸ்டான்லி மற்றும் மறவன்குடியிருப்பு திரு. M. மரிய லூயிஸ் ஆகியோர் தலைமையில் ஆலயக் கணக்குப்பிள்ளை திரு. T. S. உத்தரிய முத்து, கீழராமன்புதூர் திரு. M. M. கிரகோரி புன்னக்காட்டுவிளை திரு. மரிய செபஸ்தியான், வட்டக்கரையைச் சார்ந்த திரு. D. ஜேசு மரியான், திரு. M. V. வற்கீஸ், மறவன்குடியிருப்பு திரு. P. வறீது, குருசடி ஊரைச் சார்ந்த திரு. ஞா. அந்தோனி மிக்கேல், திரு. M. முடியப்பன், மற்றும் திரு. M. மரியந்தோனி ஆசிரியர் ஆகியோர் 27.06.1954 அன்று மனு ஒன்றை மறைமாவட்ட ஆயருக்குக் கொடுத்தனர் (காண்க பக்கம் 121, 122). அந்த மனுவில் அப்போதையப் பங்குத்தந்தை அருள்பணி. D. C. ஆன்றனியும் கையொப்பம் இட்டுள்ளார். அதன்படி தாங்கள் பெண்கள் நடுநிலைப் பள்ளியைத் தொடங்கத் திட்டமிட்டிருப்பதாகவும், அந்தப் பள்ளியைக் குருசடியிலிருந்து வட்டக்கரை மற்றும் மறவன்குடியிருப்புக்குச் செல்லும் ரோட்டின் வடக்குப்பக்கமும், புன்னக்காட்டுவிளை மற்றும் இராமன்புதூருக்குப் போகும் ரோட்டிற்குத் தெற்குப்பக்கமும் டவுன் பிளானிங் ரோட்டிற்கு மேற்கும் உள்ள பூமியில் கட்ட நிச்சயத்திருக்கிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். (அக்காலகட்டத்தில் வட்டக்கரைச் சாலையையும் புன்னைநகர் சாலையையும் இணைக்கும் விதமாக இந்த நிலத்தின் குறுக்கே ஒரு இணைப்புச் சாலை அமைக்க அரசாங்கம் உத்தேசித்திருந்தது. அந்தச் சாலையை டவுன் பிளானிங் ரோடு என்று குறிப்பிட்டுள்ளார்கள்). அந்த நிலம் வட்டக்கரையைச் சார்ந்தவர்களுக்குச் சொந்தமானதாகும். வட்டக்கரையில் நமது ஆலயத்திற்குச் சொந்தமான நிலம் இருந்ததால் மனைக்கு மனை மாற்றி (Exchange) வாங்கவும் திட்டமிட்டுள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளனர். ஆனால் மறைமாவட்ட ஆயர் இந்த இடத்தில் பெண்கள் நடுநிலைப் பள்ளியைத் தொடங்க அனுமதிக் கொடுக்கவில்லை. எனவே இராமன்புதூரில் ஏற்கெனவே பெண்கள் தொடக்கப்பள்ளி செயல்பட்டு வந்த 48 சென்ட் நிலத்தில் 1955ஆம் ஆண்டு பெண்கள் நடுநிலைப் பள்ளி சபையாரால் தொடங்கப்பட்டது.

இந்நிலையில் கீழராமன்புதூரில் (கார்மல் நகர்) கட்டப்பட்டிருந்த சிறிய ஆலயத்தை விரிவுபடுத்தவும், ஆலயத்தை சுற்றியுள்ள நிலங்களை விலைக்கு வாங்கவும் கீழராமன்புதூரைச் சார்ந்த மக்கள் முடிவு செய்தனர். இதற்காக மக்களிடம் வரி வசூல் செய்யத் திட்டமிட்டபோது குருசடி புனித அந்தோனியார் ஆலயத்திற்கும் ஆலய வரி செலுத்த வேண்டியிருப்பதால் ஏதாவது ஓர் ஆலயத்திற்கு வரி செலுத்த உத்தரவிட வேண்டும் என்று கீழராமன்புதூரைச் சார்ந்த சிலர் மறைமாவட்ட ஆயருக்கு மனு கொடுத்தனர். எனவே 07.09.1955 அன்று ஆயர் ஆஞ்ஞிசாமியால் இராமன்புதூர்,

இடச்சிவிளை, கீழராமன்புதூர், வடலிவிளை, தளவாய்புரம், புன்னக்காட்டுவிளை ஆகிய ஊர்கள் நிதி வாரியாகக் குருசடிப் பங்கிலிருந்து பிரிக்கப்பட்டன. அதன்படி இராமன்புதூர் என்பது தற்போதைய இராமன்புதூர் மற்றும் கீழராமன்புதூரையும் உள்ளடக்கியிருக்கும் என்றும் இடச்சிவிளை என்பது வடலிவிளை மற்றும் தளவாய்புரத்தையும் உள்ளடக்கியிருக்கும் என்றும் புன்னக்காட்டுவிளை என்பது புன்னக்காட்டுவிளை ஊர் வரிதாரர்களை மட்டும் கொண்டது என்றும் உத்தரவிட்டார். இராமன்புதூர் பெண்கள் நடுநிலைப் பள்ளி கட்டுமானத்திற்கு இராமன்புதூர், இடச்சிவிளை மற்றும் புன்னக்காட்டுவிளை ஆகிய ஊர்கள் நிதி உதவி செய்ய வேண்டும். இராமன்புதூர் தொடக்கப் பள்ளிப் பராமரிப்பை ராமன்புதூர் ஊர் ஏற்க வேண்டும். புன்னக்காட்டுவிளை தொடக்கப் பள்ளிப் பராமரிப்பைப் புன்னக்காட்டுவிளை மற்றும் இடச்சிவிளை ஊர்கள் ஏற்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார் (காண்க பக்கம் 123, 124). ஆனால் ஆயரின் உத்தரவுப்படி இராமன்புதூர் பெண்கள் நடுநிலைப் பள்ளிக்கும், பெண்கள் தொடக்கப் பள்ளிக்கும் இராமன்புதூர், இடச்சிவிளை மற்றும் புன்னக்காட்டுவிளை ஊர்கள் நிதி உதவி எதுவும் செய்யவில்லை. அதனால் பள்ளியில் பொறுப்பேற்றிருந்த அருள்சகோதரிகள் மறைமாவட்ட ஆயரைச் சந்தித்து பள்ளியைத் தங்களது துறவுஅவைக்குக் கொடுத்தால் தாங்களே கூடுதல் நிலம் விலைக்கு வாங்கி உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவோம் என்று வேண்டுகோள் வைத்தனர். இதனை ஏற்றுக்கொண்ட ஆயர் பெண்கள் தொடக்கப் பள்ளியையும் பெண்கள் நடுநிலைப் பள்ளியையும் புதுவை தூய இதய மரியன்னையின் பிரான்சிஸ்கன் சகோதரிகள் துறவுஅவையிடம் கொடுக்க முடிவு செய்தார். இந்த நேரத்தில் குருசடி சபையாரிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஒரு பிரிவினர் பள்ளியை அருள்சகோதரிகளின் துறவு அவையிடம் கொடுக்க வேண்டுமென்றும் இன்னொரு பிரிவினர் அருள்சகோதரிகளின் துறவுஅவைக்குக் கொடுக்கக் கூடாது என்றும் கூறினர். இப்பள்ளியை அருள்சகோதரிகளிடம் கொடுத்தால் இம்மாவட்டத்தில் சிறந்த பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக அருள்சகோதரிகளால் மாற்றப்படும். எனவே இப்பள்ளியை அருள்சகோதரிகளின் துறவுஅவைக்கு கொடுக்க வேண்டும் என்று ஆயர் சபையாருக்கு வேண்டுகோள் விடுத்தார். நமது பங்கிலும் கூடுதல் நிலம் வாங்கி பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற நிதிவசதி இல்லை. இறுதியாகப் பங்குத்தந்தை D. C. ஆன்றனியும் முடுதோம்களும் சபையாரும் மறைமாவட்ட ஆயரின் முடிவை ஏற்றுக்கொண்டனர். எனவே மறைமாவட்ட ஆயர் இரண்டு பள்ளிகளையும் 1956ஆம் ஆண்டு அருள்சகோதரிகளின் துறவு அவைக்குக் கொடுத்தார். அருள்சகோதரிகள் தொடக்கப் பள்ளிக்குச் சிறுமலர் தொடக்கப் பள்ளி என்றும் நடுநிலைப் பள்ளிக்குச் சிறுமலர் பெண்கள் நடுநிலைப் பள்ளி என்றும் பெயரிட்டனர். தொடக்கப் பள்ளியை ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலாரும் படிக்கும் பள்ளியாக மாற்றிவிட்டனர். பின்னாளில் பள்ளி இருக்கும் 48 சென்ட் நிலமும் இராமன்புதூர் சந்திப்பில் இருக்கும் 52 சென்ட் நிலமும் (ரீட்டாஸ் கான்வென்ட்) அருள்சகோதரிகள் துறவுஅவைக்கு ஆலய நிர்வாகத்தால் எழுதிக் கொடுக்கப்பட்டது. தற்போது கூடுதல் நிலம் அருள்சகோதரிகளால் விலைக்கு வாங்கப்பட்டு அப்பள்ளியானது மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

தொடக்கக் காலத்தில் நமது பங்குத்தந்தை மேற்கண்ட 5 பள்ளிகளுக்கும் தாளாளராக இருந்தார். பின்னர் சிறுமலர் தொடக்கப் பள்ளி அருள்சகோதரிகளின் துறவுஅவைக்குக் கொடுக்கப்பட்டதால் அருள்சகோதரிகள் தாளாளராக இருந்தனர். அதன்பிறகு கிளைப் பங்குகள் தனிப் பங்குகளாக உயர்த்தப்பட்ட போது அந்தந்தப் பங்குத்தந்தை அந்தந்தப் பள்ளிகளுக்குத் தாளாளராகப் பொறுப்பேற்றார். தற்போது நமது ஆலயத்திற்குச் சொந்தமாகக் குருசடி ஊரில் அமைந்துள்ள பள்ளி மட்டுமே உள்ளது.

**நமது பங்கில் சபையார் பள்ளிகளைத் தொடங்கியதோடு மட்டுமல்லாமல், நமது பங்கு எல்லைக்குள் மறைமாவட்டம் பள்ளி மற்றும் கல்லூரிகளைத் தொடங்கவும் அதிகமாகப் பாடுபட்டுள்ளனர்.** அதனை விரிவாகக் காண்போம்.

### 3.6 கார்மல் மேல்நிலைப் பள்ளி, இராமன்புதூர்

கார்மல் மேல்நிலைப் பள்ளி 1922ஆம் ஆண்டு அப்போதைய கொல்லம் மறைமாவட்ட ஆயர் அலோசியஸ் மரிய பென்சிகரால் கார்மல் ஆங்கில நடுநிலைப் பள்ளியாகத் தொடங்கப் பட்டது.[42] கார்மல் பள்ளித் தொடங்கப்படுவதற்கு முன்பாக நமது பகுதிகளில் தொடக்கப் பள்ளிகள் மட்டுமே இருந்தன. எனவே உயர்க்கல்வி கற்க கல்விக்கூடம் வேண்டும் என்ற எண்ணம் இப்பகுதி மக்களுக்கு இருந்தது. நமது ஆலயம் புனிதபடுத்தப் படுவதற்கு முந்தைய நாளான 05.01.1911 அன்று ஆயர் அலோசியஸ் மரிய பென்சிகருக்கு நம் ஆலயத்தில் சபையார் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது ஆயர் இங்கிருக்கும் மக்களின் பின்தங்கிய கல்வி நிலையைக் குறித்தும் அது அவசர நிலையில் சரி செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார். எனவே ஆலயத்தை புனிதப்படுத்த வருகை தந்த ஆயருக்கு நன்றி தெரிவித்து 08.03.1911 அன்று நமது ஆலய முடுதோம் திரு. D. பிரான்சிஸ் எழுதிய கடிதத்தில் “**எட்டு கத்தோலிக்க கிராமங்களின் கூட்டமைப்பே இராமன்புதூர் என்றும் குருசடிக்கும் கோட்டாறுக்கும் இடையே ஒரு சிறிய பகுதியில் இருக்கிறார்கள் என்றும் குருசடி ஆலயத் திருகுழுமத்தில் பாதிக்கும் மேற்பட்டோர் இந்த இடத்தைச் சார்ந்தவர்கள் என்றும் தென் திருவிதாங்கூரிலேயே மிக அடர்த்தியாக கத்தோலிக்கர் வாழும் இடம் என்றால் அது இதுதான் என்றும் ஆனால் கல்வியிலும், வாழ்வியலிலும் இந்த இடத்தைச் சேர்ந்த மக்கள் மிகவும் பின்தங்கி யிருக்கிறார்கள் என்றும் இராமன்புதூரில் இராஜாக்கமங்கலம் சாலையோரம் 2 ஏக்கர் 80 செண்ட் நிலம் விற்பனைக்கு உள்ளது என்றும் அது ஒரு கத்தோலிக்க பள்ளியைக் கட்டுவதற்குச் சிறந்த இடமாகும் என்றும் குருசடியில் பழைய ஆலயத்தை இடித்ததால் அதன் கூரையில் இருந்த பனை மரக் கட்டைகளைப் பள்ளிக்கூடம் கட்ட பயன்படுத்தலாம் என்றும் எனவே உடனடியாக ஆங்கில உயர்நிலைப் பள்ளியை இராமன்புதூரில் ஆரம்பிக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தார்**” (காண்க பக்கம் 96 - 105). இராமன்புதூரில் ஆங்கில உயர்நிலைப்பள்ளித் தொடங்க வேண்டுமென்று முதன் முதலில் குரல் கொடுத்தவர் திரு. D. பிரான்சிஸ் முடுதோம் ஆகும். திரு. பிரான்சிஸ் முடுதோம் அவர்களின் வேண்டுகோளை ஆய்வு செய்து அறிக்கை அனுப்ப அக்கடிதத்தை ஆயர் அப்போதையப் பங்குத்தந்தை அருள்பணி. பெர்னார்டினுக்கு அனுப்பிவைத்தார். ஆனால் பங்குத்தந்தை பெர்னார்டின் 08.04.1911 அன்று அனுப்பிய பதில் கடிதத்தில் எட்டு கிராமங்களை உள்ளடக்கிய இராமன்புதூரில் D. பிரான்சிஸ் அவர்களின் சகோதரர் ஒருவர் மட்டுமே ஆங்கிலம் கற்கிறார் என்றும் மற்ற மாணவர்கள் கொஞ்சம் கல்வி கற்றவுடன் வேலைக்கு செல்கின்றனர் என்றும் இராமன்புதூர் பள்ளியில் (R.C தொடக்கப்பள்ளி, இராமன்புதூர் இருப்பு புன்னைநகர்) 3 மற்றும் 4ஆம் வகுப்புகள் அந்த ஆண்டு தொடங்கப்பட இருப்பதால் எத்தனை மாணவர்கள் இதில் தொடர்ந்து படிக்கிறார்கள் என்பது தெரியும். எனவே தற்போது இராமன்புதூரில் உயர்நிலைப் பள்ளித் தொடங்க வேண்டிய அவசியமில்லை என்றும் தேவைப்பட்டால் நாகர்கோவிலில் தொடங்கலாம் என்று குறிப்பிட்டார் (காண்க பக்கம் 125-130). இதனால் அந்த 2 ஏக்கர் 80 செண்ட் நிலம் வாங்கப்படவில்லை. இதனால் பள்ளி உடனடியாக ஆரம்பிக்கப்படவில்லை.

பின்னர் நமது ஆலய சபையார், முடுதோம்கள் திரு. D. பிரான்சிஸ் மற்றும் திரு. G. மரியந்தோனி ஆகியோர் தலைமையில் மீண்டும் ஆயருக்கு மனுக்கள் கொடுத்தனர். பின்னர் கொல்லம்

42. J.M.Villavarayan, *The Diocese of Kottar,* p. 58

மறைமாவட்ட ஆயர் நமது சபையாரின் வேண்டுகோளை ஏற்று, தற்போது கார்மல் மேல்நிலைப் பள்ளி இருக்கும் நிலம் சிறிது சிறிதாக கொல்லம் மறைமாவட்டத்தால் விலைக்கு வாங்கப்பட்டது. மறைமாவட்டத்தின் சொந்த நிதியில் மட்டுமே நிலங்கள் வாங்கப்பட்டன. பிரான்சிஸ் முடுதோம் தன்னுடைய கடிதத்தின் இறுதியில் "**இங்கிருக்கும் மக்களிடம் கல்வி சம்பந்தமான காரியங்களைக் கூறி பணம் செலவழிக்கச் சொல்வது சரியாக இருக்காது என்றும் நான் கருதுகிறேன். ஏற்கெனவே அவர்கள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து அவர்களுடைய ஆலயத்தைச் கட்டி முடிப்பதற்காக மிகப் பெரிய தொகையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்**" என்று குறிப்பிட்டுள்ளது மறைமாவட்டத்தின் நிதியில் கார்மல் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது என்பதை உறுதி செய்வதாக உள்ளது. பின்னர் நமது பங்குத்தந்தையாக அருள்பணி. பயஸ் பொறுப்பேற்றபிறகே பள்ளித் தொடங்கப் படுவதற்கானப் பணிகள் வேகமாக நடைபெற்றன. எனினும் நிலம் வாங்கிய பின்னரும் பள்ளிக்கூடக் கட்டிடம் கட்ட போதிய நிதி மறைமாவட்டத்தில் இல்லை. 1913முதல் 1915ஆம் ஆண்டுவரை குழித்துறையில் உள்ள தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கான்கிரீட் பாலம் கட்டப்பட்டது.[43] அதற்கு முன்பு ஆற்றின் குறுக்கே மரப்பாலம் இருந்தது. பின்னர் 1920ஆம் ஆண்டு வாக்கில் மரப்பாலம் ஏலத்தில் விடப்பட்டது. அந்த ஏலத்தில் திரு. D. பிரான்சிஸ் முடுதோம் கொல்லம் மறைமாவட்ட ஆயர் அலோசியஸ் மரிய பென்சிகர் சார்பாகக் கலந்து கொண்டு மரப்பாலத்தை ஏலத்தில் எடுத்தார். பின்னர் மரப்பாலத்தைப் பொழித்துக் கொண்டு வந்து அந்த மரக்கட்டைகளைப் பயன்படுத்தி கார்மல் பள்ளிக்கு 300 அடி நீளமுள்ள ஓட்டுக் கூரையிலான பள்ளிக் கட்டிடம் கட்டப்பட்டது. 1922ஆம் ஆண்டு பள்ளி திறக்கப்பட்டது. 15-06-1922 அன்று கார்மல் ஆங்கிலப்பள்ளி தொடங்கப்பட்டதற்கு கொல்லம் ஆயர் ஆலோசியஸ் மரிய பென்சிகருக்கு நன்றி தெரிவித்து முடுதோம்கள் D. பிரான்சிஸ் மற்றும் G. மரியந்தோனியும் மற்றும் பிரான்சிஸ் முடுதத்தின் மூத்த மகன் திரு. F. டேவி, திரு. செ. வியாகப்பன், திரு. செ. தொம்மை யந்தோணி, திரு. ச. அ. ம. மரிய ஞானப்பிரகாசம் ஆகியோர் கடிதம் எழுதியுள்ளனர் (காண்க பக்கம் 131 - 134). இப்பள்ளி 1932ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. தற்போது மேல்நிலைப் பள்ளியாக சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

எனவே கார்மல் மேல்நிலைப் பள்ளி இராமன்புதுரில் நிறுவப்பட்டு நமது மாவட்ட மக்களுக்கு கல்வி புகட்டி வருகிறது என்றால் அதற்குக் காரணமாக இருந்தவர் கொல்லம் ஆயர் அலோசியஸ் மரிய பென்சிகர் ஆகும். மேலும் கொல்லம் ஆயருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் நமது ஆலயப் பங்குத்தந்தை அருள்பணி. பயஸ் மற்றும் நமது ஆலயச் சபையாரும் முடுதோம்கள் D. பிரான்சிஸ் மற்றும் G. மரியந்தோனி என்றால் மிகையல்ல.

### 3:7 திருச்சிலுவைக் கல்லூரி, குருசடி

கோட்டாறு மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக மேதகு ஆஞ்ஞிசாமி சே.ச 11-06-1939 அன்று பொறுப்பேற்றார். 1964ஆம் ஆண்டு ஆயர் ஆஞ்ஞிசாமியின் ஆயர் திருநிலைப்பாட்டின் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது. வெள்ளிவிழாவின் நினைவாக மறைமாவட்டத்தில் ஒரு கல்லூரி நிறுவ வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. பின்னர் கல்லூரியை எந்த இடத்தில் நிறுவலாம் என ஆலோசிக்கப்பட்டபோது மறைமாவட்ட முதன்மை அருள்பணியாளராக இருந்த அருள்பணி. J. M. வில்லவராயன் கன்னியாகுமரியில் நிறுவ ஆர்வம் காட்டினார். ஆனால், ஆயர் அதை நாகர்கோவில் நகர எல்லைக்குள் நிறுவ முடிவுசெய்தார். இதற்குரிய நிலம் வாங்குவதற்கான பணம் ஜெர்மனி நாட்டைச் சார்ந்த ஒருவர் வழங்கினார்.

43. குழித்துறை பழைய பாலம், *கல்வெட்டு,* 1915

அவருடைய பெயரை அறிய முடியவில்லை. எனவே அப்போதைய குருசடிப் பங்குத்தந்தையாக இருந்த அருள்பணி. R. அந்தோனிமுத்திடம் நிலம் வாங்குவதற்குரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அவர் குருசடிப் பங்கின் முடுதோம்களான F. ஸ்டான்லி மற்றும் M. ஆன்றனி மற்றும் சபையார் உதவியுடன் 22 ஏக்கர் 52.5 சென்ட் நிலத்தை ஆயர் ஆஞ்சிசாமி பெயரில் விலைக்கு வாங்கினார். இந்த நிலம் வட்டக்கரை, தொல்லவிளை மற்றும் மேலச்சூரங்குடி ஆகிய ஊர்களைச் சார்ந்த மக்களிடம் இருந்து விலைக்கு வாங்கப்பட்டது. நிலம் விலைக்கு வாங்குவதில் கார்த்திகைவடலியைச் சார்ந்த ஆவண எழுத்தர் திரு. K. பகவதி நாடார் முக்கிய பங்கு வகித்தார். மந்தங்காடு திரு. P. நயினார் நாடார், குருசடி ஊரைச் சார்ந்தவரும் தொல்ல விளையில் வசிப்பவருமான திரு. K. ஜோசப் தங்கராஜ் ஆகியோர் K. பகவதி நாடாருக்கு உதவினர்.

பின்னர் திருச்சியிலிருந்த திருச்சிலுவை துறவுஅவையின் மாநிலத் தலைவி அருள்சகோதரி மரிய சிசிலியைச் சந்தித்து குருசடியில் கல்லூரியை நிறுவுங்கள் என ஆயர் கேட்டுக் கொண்டபோது, நிலத்தை எங்கள் துறவுஅவையின் பெயரில் தானமாக எழுதித் தந்தால் மட்டுமே கல்லூரியைத் தங்களால் நிறுவ முடியும் என்று திருச்சிலுவைத் துறவு அவை மாநிலத் தலைவி உறுதிபடத் தெரிவித்தார். இதனால் ஆயர் 22 ஏக்கர் 52.5 சென்று நிலத்தையும் திருச்சிலுவைத் துறவு அவைக்கு 14.08.1964 அன்று தானமாக எழுதிக் கொடுத்தார்.[44] பின்னர் கல்லூரி தொடங்குவதற்குரிய பணிகள் தொடங்கின. அப்போது அருள்சகோதரிகள் குருசடியில் பள்ளிக்கூடத்தின் அருகில் இருந்த மங்களாவில் தங்கி இருந்தனர். தொடக்கத்தில் திருச்சிலுவைக் கல்லூரியின் நுழைவாயிலுக்கும், புன்னைநகர் சாலைக்குமிடையே உள்ள இணைப்புச் சாலை கிடையாது. பேருந்துகள் தொல்லவிளை வழியாக கல்லூரிக்குள் வந்தன. எனவே தொல்லவிளையில் உள்ள கல்லூரியின் வாயிலை முன்வாயிலாகக் கொண்டு வந்து, கல்லூரி இருக்கும் இடம் மறவன்குடியிருப்பு என்று நிர்ணயம் செய்ய வேண்டும் என்று குருசடி ஆலயத்தின் தென்பகுதி முடுதோம் மறவன்குடியிருப்பைச் சார்ந்த திரு. M. ஆன்றனி தலைமையில் ஒரு பிரிவினரும், A.R. கேம்ப் ரோட்டில் முன்வாயில் அமைத்து, (தற்போதுள்ள முன்வாயில்) கல்லூரி இருக்கும் இடம் குருசடி என்று இருக்க வேண்டும் என்றும் குருசடி ஆலயத்தின் வடபகுதி முடுதோம் திரு. F. ஸ்டான்லி தலைமையில் இன்னொரு பிரிவினரும் செயல்பட்டனர். பின்னர் கல்லூரி இருக்கும் இடம் குருசடி என்று குருசடி சபையில் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அருள்சகோதரிகள் கல்லூரி தோற்றுவிக்க காரணமாக இருந்த ஆயர் ரோச் ஆஞ்ஞிசாமியின் நினைவாக கல்லூரி வளாகத்திற்கு "ரோச் நகர்" என்று பெயரிட்டனர். 13.06.1965 அன்று அருள்சகோதரிகள் இல்லம் ஆயர் T. R. ஆஞ்ஞிசாமியால் ஆசீர்வதிக்கப் பட்டது.[45] 02.08.1965 அன்று அப்போதைய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கிருஷ்ணசுவாமியால் திருச்சிலுவைக் கல்லூரி திறக்கப்பட்டது.[46] கன்னியாகுமரி மாவட்டத்தில் பெண்களுக்கென தொடங்கப்பட்ட முதல் கல்லூரி இதுவேயாகும். **இக்கல்லூரியைக் குருசடி ஊரில் அமைப்பதற்கு முக்கிய காரணமானவர்கள் பங்குத்தந்தை R. அந்தோனிமுத்துவும் முடுதோம்கள் திரு. F. ஸ்டான்லியும், திரு. M. ஆன்றனியும் என்றால் மிகையாகாது.**

கல்லூரிக்கு நிலம் வாங்க ஒப்படைக்கப்பட்ட பணத்தில் மீதிப் பணத்தைப் பங்குத்தந்தை R. அந்தோனிமுத்து ஆயரிடம் திரும்ப ஒப்படைத்தார். ஆயர் நிலம் வாங்குவதற்காகக்

44. *ஆவண எண் 2758/1964,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.
45. *Golden Jubilee Souvenir 1965 -2015*, *Holy Cross College (Autonomous),* p. 42
46. *Ibid*

கிடைத்த பணம் என்பதால் உங்கள் ஆலயத்துக்கு ஏதாவது நிலம் வாங்குங்கள் என்று திரும்பக் கொடுத்தார். அந்தப் பணத்தையும் மற்றும் கோணத்தில் உள்ள நமது ஆலயத்தின் நிலங்களை அரசு கையகப் படுத்தியதில் கிடைத்தப் பணத்தையும் வைத்து அப்போது குருசடி ஊர் சார்பாக சபைக் கமிட்டியில் உறுப்பினராக இருந்த கீழராமன்புதூர் திரு. M. M. கிரகோரி ஆசிரியர் முயற்சியில் ஆரல்வாய்மொழியில் 10.54 ஏக்கர் நிலம் நமது ஆலயத்தின் பெயரில் பங்குத்தந்தை R. அந்தோனிமுத்துவால் விலைக்கு வாங்கப்பட்டது.


22 ஏக்கர் 52.5 செண்ட் பரப்பளவில் மிகச் சிறப்பாகக் கல்லூரி தொடங்கப்பட்டாலும் புன்னைநகர் செல்லும் சாலையும் வட்டக்கரை செல்லும் சாலையும் சந்திக்கும் பகுதியில் பேருந்துகள் திரும்பிச் செல்ல முடியாது. எனவே கல்லூரிக்குள் பேருந்து செல்ல போதிய சாலை வசதி இல்லாததால் கல்லூரிக்கு வரும் சில பேருந்துகள் நமது ஆலய வளாகத்திற்குள் வந்து திரும்பிச் சென்றன. இது ஒரு குறையாகக் காணப்பட்டது. இதனால் பல சிக்கல்களும் வந்தன. எனவே கல்லூரி முன் வாயிலையும் புன்னைநகர் சாலையையும் இணைக்கும் விதமாக ஒரு இணைப்புச் சாலை அமைக்கக் கல்லூரி நிர்வாகம் திட்டமிட்டது. ஆனால் புன்னைநகர் சாலைக்கும் கல்லூரி வாயிலுக்கும் இடைப்பட்ட நிலத்தின் உரிமையாளரான திரு. K. பகவதி நாடாருக்கும் கல்லூரி நிர்வாகத்திற்கும் கருத்து வேறுபாடு இருந்ததால், நில உரிமையாளர் அந்த நிலத்தைக் கல்லூரி நிர்வாகத்தினருக்கு விற்பனை செய்ய முன்வரவில்லை. 1969ஆம் ஆண்டு கன்னியாகுமரி அருகே உள்ள கல்லுவிளை ஊரைச் சார்ந்த நிலக்கிழாரும் அகஸ்தீஸ்வரம் தாலுகா காங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு. K. N. குருசாமி நாடாரின் மகள் நாகரத்தினம் PUC (Preuniversity Course) படிப்பதற்காகத் திருச்சிலுவைக் கல்லூரியில் சேர்ந்தார். இதனால் அப்போது கல்லூரி முதல்வராக இருந்த அருள்சகோதரி கேசில்டாவிற்கும் K. N. குருசாமி நாடாருக்கும் அறிமுகம் ஏற்பட்டது. எனவே அருள்சகோதரி கேசில்டா குருசாமி நாடாரை அணுகி நிலத்தை விலைக்கு வாங்க ஏற்பாடு செய்தார். நில உரிமையாளர் நிலத்தை K. N. குருசாமி நாடாருக்கு விலைக்குக் கொடுத்தார். பின்னர் K. N. குருசாமி நாடார் கல்லூரிக்கு அந்த நிலத்தை விற்பனை செய்தார். அதனைத் தொடர்ந்து அந்த நிலத்தில் சாலை அமைக்கப்பட்டது.[47] பரந்துவிரிந்த நிலப்பரப்பில் கல்லூரி அமைந்திருந்தாலும், போக்குவரத்து வசதி சரியாக இல்லாததால் இருந்தப் பிரச்சினைகள் இதன் மூலம் தீர்ந்தன. கல்லூரி தொடங்கப்பட்டப் பிறகு அருள்சகோதரிகள் இன்னும் கூடுதல் நிலத்தை விலைக்கு வாங்கினர். தற்போது கல்லூரி வளாகம் 39 ஏக்கர் நிலத்தைக் கொண்டுள்ளது. தற்போது திருச்சிலுவைக் கல்லூரி தன்னாட்சிக் (Autonoumous) கல்லூரியாக மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

**சபையார் சந்தித்த சவால்கள்**

நமது ஆலயச் சபையாரின் நிர்வாகம் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தாலும், நாளடைவில் சில பிரச்சினைகளும் ஏற்பட்டன. 1949ஆம் ஆண்டுக்கு முன்பு கார்மல்நகர் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் ஒரு கெபி மட்டுமே இருந்தது. அப்பகுதியிலுள்ள கத்தோலிக்க மக்கள் அந்தக் கெபியில் ஜெபம் செய்து வந்தனர். 1949ஆம் ஆண்டு இராமன்புதூர், மேலராமன்புதூர், கீழராமன்புதூர், காட்டுவிளை,

47. திரு. K. N. K. ராமதாஸ் காந்தி த/பெ. திரு. K. N. குருசாமி நாடார். கல்லுவிளை, *நேர்முகப் பேட்டி* நாள் 15.03.2020. (திருச்சிலுவைக் கல்லூரியில் புதிய பாடப்பிரிவுகள் தொடங்குவதற்கும், கூடுதல் இருக்கைகள் பெறுவதற்கும் மதுரை பல்கலைக் கழகத்தின் அனுமதியை திரு. K. N. குருசாமி நாடார் பெற்றுக் கொடுத்துள்ளார். எனவே அவருக்கு நன்றி தெரிவித்து 31.07.1969 அன்று கல்லூரி முதல்வர் அருள்சகோதரி கேசில்டா அனுப்பிய கடிதத்தை ராமதாஸ் காந்தி நேர்முகப் பேட்டியின் போது என்னிடம் காண்பித்தார்).

தளவாய்புரம், இடச்சிவிளை, புன்னக்காட்டு விளை மற்றும் மேலவடலிவிளை ஆகிய 8 ஊர்களுக்கும் பொதுவான ஆலயம் அமைக்கக் கார்மல் பள்ளிக்கு எதிரே நிலம் தானமாக அவ்வூர் மக்களால் கொடுக்கப்பட்டது.[48] பின்னர் அந்த நிலத்தில் சிறிய ஆலயம் ஒன்றும் கட்டப்பட்டது. பின்னர் 07-09-1955 அன்று அப்போதைய ஆயர் ஆஞ்ஞிசாமி மேற்கண்ட 8 ஊர்களையும் குருசடிப் பங்கிலிருந்து நிதி வாரியாக பிரித்தார். மேய்ப்புப் பணியைப் பொருத்தமட்டில் மேற்கண்ட 8 ஊர்களும் குருசடிப் பங்கின்கீழ் தொடர்ந்து இருந்து வந்தன. இதனால் மேற்கண்ட 8 ஊர்களும் நாளடைவில் குருசடிப் பங்கிலிருந்து பிரிந்து செல்லும் என்பதால் இனிமேல் வளர்ச்சித் திட்டங்களை எந்தப் பகுதியில் செயல்படுத்துவது என்பதில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. இதனால் 1955ஆம் ஆண்டு முதல் நமது பங்கில் சபையாரால் முன்புபோல வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த முடியவில்லை. 1955ஆம் ஆண்டுக்குப்பிறகு வட பகுதியிலுள்ள மேற்கூறிய 8 கிராமங்களைச் சார்ந்த மக்களுக்கு நமது ஆலய சபையில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை. அவர்கள் குருசடிப் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு 1955ஆம் ஆண்டிற்குப்பிறகு ஆலயவரி செலுத்தவில்லை. அவரவர் ஊரிலுள்ள சிற்றாலயங்களுக்கு மட்டும் வரி செலுத்தினர். அவரவர் ஊருக்கென்று தனித்தனி நிர்வாகமும், கணக்கும் பேணப்பட்டன. எனவே 1955ஆம் ஆண்டுவரைக்கும் குருசடி சபையில் கோலோச்சியிருந்த மேற்கண்ட 8 கிராம மக்களின் அதிகாரம் முடிவுக்கு வந்தது. ஆயரின் மேற்கண்ட உத்தரவின்படி தளவாய்புரம் ஊர் மேலராமன்புதூருடன் இணையவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் தளவாய்புரம் மக்கள் ஆயரைச் சந்தித்து தளவாய்புரம் தனி ஊராகச் செயல்படவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். அதனை ஏற்று தளவாய்புரம் ஊர் தனி ஊராகச் செயல்பட ஆயர் அனுமதி அளித்தார்.[49] எனினும் கீழராமன்புதூரைச் சார்ந்த பல குடும்பங்கள் தொடர்ந்து குருசடி ஊருக்குத் தொடர்ந்து வரி கொடுத்து வந்தனர். 1975ஆம் ஆண்டிற்குப் பிறகே பல குடும்பங்கள் கார்மல் நகர் பங்கில் சேர்ந்தனர். சில குடும்பங்கள் நமது பங்கில் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை ஆரம்பிக்கப்பட்ட பிறகே கார்மல் நகர் பங்கில் சேர்ந்தனர். கீழ ராமன்புதூரைச் சார்ந்த திரு. M. M. கிரகோரி ஆசிரியர் பல ஆண்டுகள் சபைக் கமிட்டியில் குருசடி ஊர் சார்பாகப் பங்கேற்றார். திரு. M. M. கிரகோரி ஆசிரியர் நமது பங்கு வளர்ச்சிக்கு அதிகம் உழைத்தவர்களுள் ஒருவராகும்.


திரு. M.M. கிரகோரி

### குருசடியின் கிளைப்பங்குகள் அடங்கிய நிர்வாகம் கலைக்கப்படுதல்

குருசடிச் சபையில் திரு. F. ஸ்டான்லி முடுதோமும் திரு. M. ஆன்றனி முடுதோமும் கடைசியாக முடுதோமாக நியமிக்கப்பட்டவர்கள். 18.03.1981 அன்று ஸ்டான்லி முடுதோம் இறந்ததையடுத்து வேறு யாரும் அவருக்குப் பதில் முடுதோமாக நியமிக்கப்படவில்லை. இந்நிலையில் 07.01.1984 அன்று மறவன்குடியிருப்பு தனிப்பங்காக உயர்த்தப்பட்டது. வேதநகர் மறவன்குடியிருப்புப் பங்கின் கிளைப் பங்கு ஆனது. அதன் பிறகு மேலராமன்புதூர், தளவாய்புரம், அனந்தன் நகர், வட்டக்கரை, வடக்குக் கோணம் ஆகிய கிளைப்பங்குகள் குருசடிப் பங்கின்கீழ் இருந்தன. பெரும்பாலான கிளைப்பங்குகள் குருசடியிலிருந்து ஏற்கெனவே பிரிந்து சென்று விட்டன. ஏற்கெனவே இருந்த கிளைப்பங்கான மறவன்குடியிருப்பும் வேதநகரும் மற்றும் கிளைப்பங்குகளாக இருந்து வந்த மற்ற ஊர்களும் குருசடி ஆலயத்தின் சொத்தில் உரிமை கோரின. மேலும் ஆலயத்திற்குச்

48. *ஆவண எண் 4756/1124 M.E,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.
49. தளவாய்புரம், *புனித ஜார்ஜியார் புதிய ஆலய அர்ச்சிப்பு விழா சிறப்பு மலர்,* ப. 6

சொத்துக்கள் தானமாகக் கொடுத்தவர்கள் அனைவரும் கிளைப்பங்குகளைச் சார்ந்தவர்கள் என்பதாலும் அவர்கள் சொத்தில் உரிமை கோரினர். அப்போது குருசடி ஆலய நிர்வாகம் மற்றும் சொத்துக்கள் சபையாரின் வசம் இருந்தது. குருசடியில் ஊர் நிர்வாகம் ஒன்றும் இருந்தது. ஊர் நிர்வாகத்தினர் குருசடி ஊர் விவகாரங்களை மட்டும் நிர்வாகம் செய்து வந்தனர்.



திரு. M. மரியந்தோனி ஆசிரியர்

1984ஆம் ஆண்டு குருசடி ஊர் தலைவராக இருந்தது திரு. M. மரியந்தோனி ஆசிரியர் ஆகும். இவர் பல முறை குருசடி ஊர் தலைவராகவும், குருசடி ஊர் சார்பாக ஆலயச் சபைக்கமிட்டி உறுப்பினராகவும் இருந்தவர். இதனால் குருசடிப் பங்கு சம்பந்தமான விவகாரங்களில் அவருக்கு நீண்ட அனுபவம் உண்டு. இந்தப் பிரச்சினையில் குருசடி ஊர் நிர்வாகத்தினர் அதன் தலைவர் திரு. M. மரியந்தோனி ஆசிரியர் தலைமையில் மறைமாவட்டத்தின் ஆயருக்குக் கிளைப் பங்குகளுக்குச் சொத்துக்களைப் பகிர்ந்து கொடுப்பதில் சில பரிந்துரைகளை 20.12.1984 அன்று சமர்பித்தனர் (காண்க பக்கம் 135 - 137). அதன்படி “**குருசடி புனித அந்தோனியார் ஆலயச் சொத்துக்களான வட்டக்கரை ஓடைத்தட்டு 78 சென்று நிலம், வட்டக்கரை மாந்தட்டு 54 சென்ட் நிலம், தொல்லவிலையில் உள்ள 115 சென்ட் நிலம், குட்டித்தட்டு 15 சென்ட் நிலம் ஆயரின் விருப்பம் போல் பயன்படுத்தவும் ஆயர் வசம் ஒப்படைத்தல் மற்றும் மறவன்குடியிருப்புப் பள்ளியும் அது இருக்கும் 31 சென்ட் நிலம், வட்டக்கரை சாவடித்தட்டு 75 சென்ட் நிலம், கோணம் பாலர்பள்ளி சத்துணவு மையம் அமைத்திருக்கும் 25 சென்ட் நிலம், புன்னக் காட்டுவிளை புனித யுதா ததேயு குருசடி இருக்கும் 6 சென்ட் நிலம், புன்னக்காட்டுவிளை ஆரம்பப்பள்ளி இருக்கும் இடத்தில் 50 சென்ட் நிலம் ஆகியவற்றைச் சம்பந்தப்பட்ட ஊர் ஆலயங்களின் பெயரில் எழுதிக் கொடுப்பது என்றும் மேலும் புன்னக்காட்டுவிளை புனித யூதா ததேயு குருசடி அருகில் எஞ்சியுள்ள 6 சென்ட் நிலத்தையும் கூட ஆயர் வசம் ஒப்படைப்பது என்று பரிந்துரை செய்தனர்.**” எனினும் மேற்கண்ட காரியங்களை நிறைவேற்றுவதில் சில நிபந்தனைகளும் குருசடி ஊர் நிர்வாகத்தினரால் விதிக்கப்பட்டன. அவை பின்வருமாறு:

1. குருசடிச் சபைக்கமிட்டியைக் கலைத்தல்.
2. குருசடிச் சபை முடுதம் பதவியை ஒழித்தல்
3. குருசடிப் புனித அந்தோனியார் ஆலயத்தின் பெயரில் உள்ள சொத்துக்களைக் குருசடிப் பங்குத்தந்தையாலும், குருசடி ஊர் மக்களாலும் கண்காணித்தல்.
4. குருசடிப் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா குருசடிப் பங்குத்தந்தையாலும் குருசடி ஊர் மக்களாலேயே நடத்தப்பட வேண்டும்.
5. வழக்கமாகக் குருசடிப் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவின்போது மறவன் குடியிருப்பு, தளவாய்புரம் மக்களால் உரிமைப் பாராட்டித் தேர் எடுப்பதை நிறுத்தல் வேண்டும்.
6. இனிமேல் குருசடி புனித அந்தோனியார் ஆலயச் சொத்து, நிர்வாகம் இவற்றில் பிற கோவில்களைச் சார்ந்த பிற ஊர் மக்கள் உரிமை பாராட்ட அனுமதிக்கக் கூடாது.
7. குருசடிப் புனித அந்தோனியார் ஆலயத் திருநாள் வரி பிற ஊர் மக்களிடம் இருந்து வசூலிப்பதை நிறுத்தல் செய்தல்.
8. இனிமேல் குருசடிப் புனித அந்தோனியார் ஆலயத்தைச் சார்ந்தச் சொத்துக்களின் மேல் கிளைக் கோயில்களாய் இருந்தவைகளும், இருப்பவைகளுமான புன்னக்காட்டுவிளை, கார்மல்நகர், மறவன் குடியிருப்பு, வேதநகர், வட்டக்கரை, கோணம், அனந்தம்பாலம், மேலராமன்புதுர், தளவாய்புரம், கீழராமன்புதூர் வேறு எந்த ஊராரும் உரிமைப் பாராட்ட ஆயர் அனுமதிக்கக் கூடாது.

மேற்கண்ட பரிந்துரைகளில் அப்போதையப் பங்குத்தந்தை அருள்பணி. M. பெஞ்சமின் மற்றும் துணைப் பங்குத்தந்தை அருள்பணி. H. இம்மானுவேல் ராஜ் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். மேலும் குருசடி ஊர் நிர்வாகக் குழுவினர்களான திருவாளர்கள் A. அந்தோணி மிக்கேல், M. கிரகோரி ஆசிரியர், I. ஜேசு ரெத்தினம், S. M. தங்கராஜ், V. தேவசகாயம், F. அமிர்தராஜ், பேராசிரியர் S. பிலிப், D. விக்டர், S. வற்கீஸ் தங்கராஜ் ஆகியோரும் கையொப்பம் இட்டுள்ளனர். இதனால் மேற்குறிப்பிட்ட நான்கு சொத்துக்களைக் கிளைப்பங்குகளுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்காக ஆயர் தன்வசம் எடுத்துக் கொண்டு, கிளைப்பங்குகள் அடங்கிய நிர்வாகத்தை 1985ஆம் ஆண்டு கலைத்தார். இதனால் குருசடிப் பங்கில் பங்குத்தந்தை மற்றும் முடுதோம்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்ற சுமார் 150 ஆண்டுகளுக்கும் மேலான பழைமை வாய்ந்த “சபையார்” என்ற அமைப்பு முடிவுக்கு வந்தது. குருசடி ஊருக்கும் கிளைப்பங்குகளுக்கும் இருந்த சொத்து சம்மந்தமான பிரச்சனையும் முடிந்தது. பின்னர் 1985ஆம் ஆண்டு பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை என்ற அமைப்பைப் பங்குத்தந்தை தலைமையில் ஏற்படுத்தி ஆலயம் மற்றும் அதன் சொத்துக்களை (ஆயர் தன்வசம் ஏற்கெனவே எடுத்த நான்கு சொத்துகளைத் தவிர) நிர்வகிக்கும் பொறுப்பும் அதனிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் மூலம் குருசடி புனித அந்தோனியார் ஆலயம் மற்றும் அதன் சொத்துக்களை நிர்வாகம் செய்யும் உரிமை குருசடி ஊர் மக்களுக்குக் கிடைத்தது.

குருசடி ஊர் நிர்வாகத்தினர் சமர்பித்தப் பரிந்துரைகளில் மறவன்குடியிருப்புப் பள்ளியும் அது இருக்கும் 31 செண்ட் நிலமும் (தற்போது மாதா மஹால் இருக்கும் இடம்) மறவன்குடியிருப்பு ஊருக்கு எழுதிக் கொடுப்பதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. 1908ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரையில் பள்ளி அந்த இடத்தில் செயல்பட்டது. 1938ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட நமது ஆலயத்தின் சொத்து விவரப் பட்டியலில் மேற்குறிப்பிட்ட 31 செண்ட் நிலம் இடம் பெறவில்லை. எனவே இந்த 31 செண்ட் நிலம் நமது ஆலயத்திற்குச் சொந்தமானதா என்ற கேள்வி எழுந்ததால், அச்சொத்தின் வரலாற்றை ஆய்வு செய்தேன். 1930ஆம் ஆண்டு பள்ளிக்குக் கூடுதல் நிலம் தேவைப்பட்டதால் பள்ளியைத் தொட்டு வடக்குக்பக்கம் உள்ள நிலத்தின் உரிமையாளரான மறவன் குடியிருப்பைச் சார்ந்த திரு. V. சின்னப்பன் என்பவரின் நிலம் பள்ளிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.[50] அதற்குப் பதிலாகத் தற்போதைய மறவன்குடியிருப்பு ஆலயக் கொடிமரத்திற்கு வடக்குப் பக்கம் மூன்று வீடுகள் அமைந்துள்ள ஒன்பது செண்ட் நிலம் திரு. V. சின்னப்பனுக்கு மறவன்குடியிருப்பு ஊர் நிர்வாகத்தினரால் 02-05-1106 M.E. (17-12-1930) அன்று எழுதிக்கொடுக்கப்

## அருள்பணி. அம்புரோஸ் பெர்னாண்டஸ்

இவர் நமது பங்கில் இருமுறை பங்குத் தந்தையாக இருந்தவர். கொல்லத்தைச் சார்ந்தவர். நமது பங்கு மக்கள் மீது அளவு கடந்த அன்பு கொண்டவர். நமது பங்கு தனிப் பங்காக உயர்த்த பெரும்பாடுப்பட்டவர். இவர் 1930 முதல் 1955 ஆண்டுவரை நமது மறைமாவட்ட ஆலோசனைக்குக் குழுவில் உறுப்பினராக இருந்து மறைமாவட்டத்திற்குச் சிறப்பாக பணியாற்றியவர்.

50. திரு. C. பர்ணபாஸ் த/பெ. V. சின்னப்பன், மறவன்குடியிருப்பு, *நேர்முகப்பேட்டி*, நாள் 15.04.2020

பட்டுள்ளது.[51] எனவே மறவன்குடியிருப்புப் பள்ளி இருந்த 31 சென்று நிலம் மறவன்குடியிருப்பு ஊருக்குச் சொந்தமானது ஆகும். இதனால் நமது ஆலயத்திற்கு உரிமைப்பட்ட மொத்தச் சொத்து விவரத்தில் மேற்கண்ட 31 சென்ட் நிலத்தை நானும் சேர்க்கவில்லை.

குருசடிப் பங்கைப் பொருத்தமட்டில் பங்கின் வளர்ச்சிக்காகப் பங்குத்தந்தையருடன் இணைந்து முடுதோம்களும் சபையாரும் செய்த நன்மைகள் ஏராளம். முடுதோம்களை மறைமாவட்ட ஆயர் குறிப்பிட்ட காலத்திற்கென்று நியமிப்பதில்லை. பெரும்பான்மையான முடுதோம்கள் தாங்கள் இறக்கும் வரை முடுதோமாகப் பணியாற்றியுள்ளனர். முடுதோம்கள் தங்கள் பணியில் தொடர்வது பங்கு மக்களின் விருப்பத்திற்கு உட்பட்டதல்ல. எனவே சபையாரைக் கலந்து ஆலோசித்துப் பங்குத்தந்தையரின் வழிக்காட்டுதல்களின்படி முடுதோம்கள் மிகச்சிறப்பாகச் செயல் பட்டுள்ளார்கள். மேலும் நமது பங்கில் சபையாரும் முடுதோம்களும் மிகச்சிறப்பாகச் செயல்பட அக்காலகட்டங்களில் பணியாற்றிய அருள்பணியாளர்களின் ஆக்கமும் ஊக்கமும் ஒத்துழைப்பும் முக்கியக் காரணம். அதிலும் குறிப்பாக ஐரோப்பிய அருள்பணியாளர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். ஐரோப்பிய அருள்பணி யாளர்களின் தியாகத்தை நாம் மறக்க முடியாது. எனவேதான் அந்தப் பணிகளை ஆன்மீகப் பணி, சமூகப் பணி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள், கல்விப் பணி என்ற தலைப்புகளில் விரிவாகத் தந்துள்ளேன்.

51. *ஆவண எண் 1525/1106 M.E,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

# லூர்து அன்னை கெபி



பிரான்ஸ் நாட்டிலுள்ள லூர்து நகரில் மரியன்னை பெர்நதத்துக்குச் காட்சி கொடுத்ததன் நினைவாக பல ஆலய வளாகங்களில் லூர்து அன்னை கெபி கட்டப்பட்டது. நமது ஆலயத்தின் அருகில் அமைந்துள்ள லூர்து அன்னை கெபி 22.07.1939இல் கட்டி முடிக்கப்பட்டது. இதனை இலவசமாகக் கட்டிக் கொடுத்தவர் குருசடி ஊரைச் சார்ந்த பிரபல கட்டிட காண்டிராக்டர் மலையன் திருப்பாப்பு என்ற ஸ்தானப்பெயர் கொண்ட தெ. தே. சூசைமரியான். ஆண்டு தோறும் லூர்து அன்னை திருவிழாவான பிப்ரவரி மாதம் 11ஆம் தேதியும், மரியன்னை பிறந்த நாளான செப்டம்பர் மாதம் 8ஆம் தேதியும், மரியன்னையின் அமலோற்பவத் தினமான டிசம்பர் 8ஆம் தேதியும் லூர்து அன்னை கெபியில் சிறப்புத் திருப்பலி நடைபெறுகிறது. மேற்கண்ட மூன்று தினங்களுக்கு முந்தைய நாட்கள் மாலை ஆராதனையும் லூர்து அன்னை கெபியில் வைத்து நடைபெறுகிறது. இந்த சிறப்பு திருப்பலி மற்றும் மாலை ஆராதனையில் நமது பங்கின் கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தைச் சார்ந்த பெண்கள் சிறப்பாகப் பங்கேற்பது குறிப்பிடத்தக்கது.



திரு. தெ.தே. சூசைமரியான்

## திரு. D. பிரான்சிஸ் முடுதோமாக நியமிக்கப்பட்ட ஆணை (01-06-1904)

✝

சே. ம. கு.

திஸ்கால்செயத் கர்மேலித்தர் புறோவின்சாலும்
கோட்டாற்றுப்பங்கு விகாரும் ஆகிய
சங்கைக்குரிய எலியாஸ் கர்மேலோ சுவாமி அவர்கள்
டி. பிறான்சிஸ்-வுக்கு கர்த்தரில் சொஸ்தானம்.

குருசடி அர்ச். அந்தோனியார் கோவிலுக்கு அ. ம. ஞானப்பிரகாசமும் வி. ஞானப்பிரகாசமும் மொத்தோம் மாசயிருந்து தங்கள் அலுவலை ஸ்துத்தியமா யிதுவரை நடத்தி வந்து இப்போது சுவயமே இவ்வலுவலை யொழிந்துகொள்ளுகிறபடியினாலேயும் இவ்வலுவலில் மற்றொருவனை மொத்தோமாக வைக்கவேண்டியபடியினாலேயும், உன்னுடைய பத்தி விவேகங்களை பூர்ணமாய் யறிந்திருக்கிற நாம் டி. குருசடிகோவில் மொத்தோமாக வுன்னை தெரிந்தெடுத்துப் பெயர் சூட்டி ஏற்படுத்துகிறோம். கொல்லம் மேற்றிராணியாராகிய மகா சங்கைக்கும் வணக்கத்துக்கும் உரிய பெற்றினந்துஸ் ஒல்லி அவர்களது கட்டளையின் பேரில் காரியத்தைச் செய்கிறபடியினாலே, அவர்கள்தாமே புன்னை இவ்வலுவலுக்கு ஏற்படுத்தினதுபோலவே இது சம்பந்தித்த அனைவோரும் உன்னைக்கிரமமான மொத்தோமாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கிரகிக்கிறோம், நம்முடைய கையொப்பம் முத்திரையும் வைத்த இப்பிரஸ்தாபனை விதித்ததையும் கொடுக்கிறோம்.

௧௯௦௪-ம் வருஷம் ஜூன்மீ ௧-ை
கோட்டாறு மேடையில் கொடுக்கப்பட்டது.

*Fr. Elias Carmel D. C. Miss. Ap*
*Vicar Provincialis Kottar.*

This is the true copy of the original kept in the Archives of the Diocese of Quilon
+ V. Roman
30/01/2014

STAN... ROMAN
BISHOP OF QUILON

## திரு. G. மரியந்தோனி முடுதோமாக நியமிக்கப்பட்ட ஆணை (01-06-1904)

✠

சே. ம. சு.

நிஸ்காள்செயத் கர்மேலித்[illegible]ர் புறேவின்சாலும்
கோட்டாற்றுப்பங்கு விகாரும் ஆகிய
சங்கைக்குரிய எலியாஸ் கர்மேலோ சுவாமி அவர்கள்
ஜி. மரியந்தோனிக்கு கர்த்தரில் சொஸ்தானம்.

குருசடி அர்ச். அந்தோனியார் கோவிலுக்கு அ. ம. ஞானப்பிரகாசமும் வி. ஞானப்பிரகாசமும் மொற்தோம் மச்சபிருந்து தங்கள் அலுவலை ஸ்துத்தியமாய் இதுவரை நடத்தி வந்து இப்போது சுயமே இவ்[illegible] லொழிந்துகொள்ளுகிறபடியினாலேயும் இவ்வலுவலில் மற்றொருவனை [illegible] வேண்டியபடியினாலே [illegible] கங்களை பூர்த்தியா யறிந்திருக்கிற நாம் ஷை குருசடி கோவி[illegible] உன்னை தெரிந்தெடுத்துப் பெயர் சூட்டி யேற்படுத்துகிறோம். செல்லும் மேற்பிராணியாராகிய [illegible] சங்கைக்கும் வணக்கத்துக்கும் உரிய பெற்றினந்துஸ் ஒஸ்லி அவர்களது கட்டளையின் பேரில் நாமிதைச் செய்கிறபடியினாலே, அவர்கள்தாமே யுன்னை இவ்வலுவலுக்கு ஏற்படுத்தினதுபோலவே இது சம்பந்தித்த அனைவோரும் உன்னைக்கிரமமான மொற்தோமாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கிதானிக்கிறோம், நம்முடைய கையொப்பமும் முத்திரையும் வைத்த இப்பிரஸ்தாபன லிகிதத்தையும் கொடுக்கிறோம்.

௧௯0௪-ம் வருஷம் ஜூன்மீ ௧-உ
கோட்டாறு மேடையில் கொடுக்கப்பட்டது.

*Fr. Elias Carmelo O. C. Miss. Ap.*
*Vicar Provincialis Kottar.*

**குருசடி ஆலய கட்டுமானப் பணி சம்பந்தமாக முடுதோம் திரு. V. தொம்மையப்பன் தலைமையில் 19 ஊர் மக்கள் இணைந்து கொல்லம் ஆயர் பெர்டினாண்ட் ஒஸிக்கு 21-04-1901 அன்று கொடுத்த மனு**

To

His Lordship
The Right Revd. Dr. Ferdinand Ossi
Bishop of Quilon Diocese
&c &c &c &c
Quilon

The humble Petition of the
Parishioners of Saint Antony's Church
Crusady
Most humbly & respectfully showeth
With due respect and profound
submission the undersigned Gnanappen
Thommaiappen Mordon Gnanappen, Sesoovadi
-man & others of Meelaramenpoothoor, Michael
Gnanapragasom Mathavadian Mariamuthu
Gnanappen Kengarom & others of Meelaramen
-poothoor Santhiyagoo Mariamichael and
Sebastian Savarsagayam. Thommaiappen
Chavarimoothoo & others of Ramenpoothoor
Chavariachavarimoothoo Thainasimoothoo
Chavarimoothoo Ignasimoothoo and others
of Sunchivilai. Savasagayam Mordon Francis
& others of Puthuvadalivilay Michael Sesoovadi
-man Chavarimoothoo Arulappen & others of Thalavi
-puram Gnanappragasom & others of Kaun
Levilay, Chavarimoothoo Mariagnanappen Chava
-rimoothoo Santhappen & others of Koonam
Mariathony Rayappen - Savasagayam Mariandasam

and others of Perumkaittoovilai Chavarimootho Marian their old Sachristan Chavarimootho Mariyesroovadian & others of Crusady Arulappen Gnanayagom & others of Tharaven Coodyiruppoo Savarianayagam Anthony & others of Arambolly Dominici Anthony & others of Senbemvilay Thommaiyappen & others of Kattoovilay and the Parishners of Chittovilay, Vathacarcoodyiruppoo Paarathevelay &c. Most humbly kneeling down and praying for Your Lordships holy blessing and beg to submit the following grievances to your Lordships kind & Charitable consideration begging to be pardoned the intrusion of your Lordships most valuable moment.

The humble Petitioners most earnestly beg to bring to your Lordships kind & benevolent notice that no sooner Revd. Father Libold changed his Camp from Kottar & settled at Crusady he commenced to make the same Confusions, disputes and disorders in the Parishes connected at Coorcosady viz. that the Mordons Sachristans & the Mason Gnanappen Ignasy are involved by giving bribes and favourable promise of encouragement of that he will possibly do all the required assistance & support for their future prospect and first of all he made them to address a false Petition to your Lordships showing that the Revd. Father Libold is a honest, able and right Priest for the place, but only the Parishners

of Saint Francis Xaviers' Church of Kottar, makes unnecessary Confusions & disgrace to the Missions &c. but it is on the contrary the Petition is utterly falsehood.

2 After accomplishing the above said, insolent another private verbal agreement have been passed between the Priest & the Mordons, Sachristans and the Mason Gnanapragasam Ignasy that if they endeavour to be induced the Parishners of Coorosady to consent for executing a bill of sale of St Antonys' church and the properties connected with it on Revd Fr Lebold's name any sufficient amount of money & works for their subsistance will be allowed for them but although the ambicious men tried their utmost, it was fruitless

3 Thinking the Parishners were not acquiescedin, for that attempt the Crafty Priest & his above said evil counsellors joining together selected another device of to disorderly spend all the money entrusted in the Priests hand and as well as to realize the Collection of the subscription imposed for the new Francis Church work which is under Construction by commencing some unnecessary new buildings and when the Parishners undergo much difficulties and seems to be frustrated to Complete the new large Church building by want of money they are assured that they could easily make them to be executed the document for the Church and the properties of Saint Antonys Church

4 As there are some hinderance in fulfilling

of eliding their in ... by the houses situated in the ... side of the Carhouse, the Priest, Mordons ... istans and the mason Yagappan Ignasy threat ... the domestic to be transposed their houses. ... as they were disagreed of removing the houses, ... have excited the Asariavagoolam, Schoolmist... ss of the girls school of the place and made her ... ate and given a false Complaint showing ... house holders of her neighbourhood & their helpers ... n away the furnitures of the Schoolmistress to ... and Class the ... of the Eranial Taluge. And the meantime when the Case is under investigation ... Priest left this place and occupied at Aulengy, ... his Shareholders, the Mordons, Sachristans, Mason ... pretending with the disputed householders ... at if they consent to give their houses to the Priest ... will make the Schoolmistress to be compromised ... case.

Further it is easily understand to every individuals of the places that the troubles, confusions and distructions receives from the Priest as well by the Mordons, Sachristans & the mason Yagappan ... nasy, thereupon ... Revd Father Ubolds letter, when Police Station Officer making Yathasth and ... vestigates the matters the Plaintiff has evidently ... her ... that the Priest Revd Father ... bold Called me in the Perochiel house and ... ed over to me an English writing, written ... thout my knowledge and as the Priest, Mordons ... christans and the mason Compelled me I was ... liged to sign it but I do not know the Subjects ... itten therein.

Besides these the Petitioner extremely sorry to ... ate that whose the expenditure of the Ceremony ... rformed in the days of Mondy thursday and ... ood friday are spent from the Church money, ... whereas the subscription of the devoted amount ... ntained at the foot print of the Crucifix on

on [illegible] were defrauded and distributed among the Priest, Mordomos, Sacristans and the [illegible] Ignasy


[illegible] The Petrs also most humbly beg to point out to your Lordships kind notice that there are every sorts of unavoidable difficulties, confusions, dis-tinctions and inconveniences to the Parishioners are introduced only after the Priest settled his station here at [illegible] by [illegible] of the poor Parishioners [illegible] of the Church are indicated [illegible] authorised to the Police men, also [illegible] events most of the people attached with [illegible] are destituted and as they are in [illegible] above disgusted experience they are [illegible] the Calamities of much loss, distress [illegible] providing their daily bread.

8 In conclusion the Petrs most earnestly beg to bring to your Lordship [illegible] that when taking these into consideration [illegible] are sure & certain that [illegible] arrangement & [illegible] reasons of bring [illegible] to the Church [illegible] and also the impiety of the Christians de-pending upon this Priest will [illegible].


9 Therefore the Petrs most humbly and earnestly crave your Lordship will be condescendingly pleased to [illegible] described [illegible] to make [illegible] enquiry on the matters and recall the [illegible] Revd Father Ubolo [illegible] kindly grant another Priest & thus

[illegible] and support the poor sufferers
[illegible] Your Lordship's earliest Convenience
[illegible] we most Submissively Crave
[illegible]
[illegible] For which act of Kindness [illegible]
[illegible] ever pray God Almighty for
[illegible] Lordship's long life, health, wealth
& prosperity

[illegible]



## நெடுங்கன்விளை ஊர் மக்கள் 1962ஆம் ஆண்டு குருசடி புனித அந்தோனியார் ஆலயத்திற்கு வரி செலுத்தியதைக் காட்டும் ஆவணம்



| வருஷம் மாசம் | விபரம் | வரவு ரூ. | ந.பை. | பற்று ரூபா | ந.பை | இருப்பு ரூபா | ந.பை |
|---|---|---|---|---|---|---|---|
| 1962 | | | | | | | |
| [illegible] | 1 [illegible] 1962 [illegible] | | | 1 | — | 1 | — |
| [illegible] 1963 | 30 [illegible] | 1 | — | | | — | — |
| [illegible] | 6 [illegible] 1963 | | | 1 | — | | |
| [illegible] 1964 | 31 [illegible] | 1 | — | | | | |
| [illegible] | 1 [illegible] 1964 | | | 1 | — | | |
| [illegible] 1965 | 31 [illegible] | 1 | | | | | |
| [illegible] | 1 [illegible] 196- | | | 1 | | | |
| [illegible] | 31 [illegible] | 1 | | | | | |
| | 66 | | | 1 | | | |
| | 67 | 1 | | 1 | | | |
| | 68 | 1 | | 1 | | | |
| | 69 | 1 | | 1 | | | |
| | 70 | 1 | | 1 | | | |
| | 71 | 1 | | 1 | | | |
| | 72 | 1 | | | | | |
| | 73 | 1 | | 1 | | | |
| | 74 | 1 | | 2 | | | |
| | 75 | 2 | | 2 | | | |
| | | 2 | | | | | |
| | 1976. R No. 1364 | 2 | | 2. | | | |

## 01-04-1907 அன்று திருவிதாங்கூர் சமஸ்தானம் வெளியிட்ட நாகர்கோவில் வருவாய் கிராமத்தின் நிலவரித்திட்டப் பதிவேடு

திருவிதாங்கூர் ஸமஸ்தானம் பத்மனாபபுரம் டிவிஷன் அகஸ்தீசுவரம் தாலூக்கா 13-மது நம்பர் நாகர்கோவில் பகுதியிலெ ஸெட்டில் மெண்டு ஆயக்கெட்டு மெம்மோ.

1. பகுதியின் பவுண்டரி.—இந்த பகுதியில் வடக்குதிசையில் வடசேரி திருப்பதிசாரம் இந்த பகுதிகளும் கிழக்குதிசையில் தேரூர் வடிவீசுவரம் இந்த பகுதிகளும் தெற்குதிசையில் வடிவீசுவரம் பகுதியும் இரணியல் தாலூக்கா [illegible] பகுதியும் மேற்குதிஸையில் வடசேரி பகுதியும் இரணியல் தாலூக்கா நீண்டகர பகுதியும் ஆகிறது.

2. இறிகேஷன்.—இந்த பகுதியில் கூடி பழய ஆறும் தேரெகாலும் போகிறது. கிருஷிக்கு உபயோகமுள்ளதாயி 9 குளங்கள் உண்டு. அதில் 8 குளம் ஆற்று ஜலம் பாய்கிறதும் 1 குளம் மானுமாரி ஜலம் பாய்கிறதும் ஆகும். ஆற்று ஜலம் பாய்கிற குளங்களுக்கு 270-ஏக்கர் 44-ஸென்றும் மானுமாரி குளத்திற்கு 7-ஏக்கர் 7-ஸென்றும் இந்தப்படி குளங்களுக்கு 277-ஏக்கர் 51-ஸென்று விஸ்தீர்ணம் உள்ளதும் ஆகிறது. ஆற்றுபாசனத்தில் சேர்ந்ததாயி 724-ஏக்கர் 77-ஸென்று நிலமும் மானுமாரி குளப்புரவில் சேர்ந்ததாயி 3-ஏக்கர் 70-ஸென்று நிலமும் உள்ளதும் ஆற்றுபாசனத்திலுள்ள நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு $2\frac{1}{2}$-பணமும் மானுமாரி குளப்புரவு நிலங்கள்க்கு ஏக்கர் ஒன்றுக்கு 1-பணமும் வீதம் வாட்டர் ரேட்டு ஏற்படுத்திட்டுள்ளதும் ஆகிறது.

3. ஏரியா.—இந்த பகுதியில் 2884 ஸர்வெ நம்பர்களுக்கு கிளாஸிபிகேஷன்படி லெட்டர் உள்ப்படெ 5610-நம்பர்கள் உண்டு. மைனர் ஸர்க்கூட்டுகளில் கீழ் நம்பர்கள் கொடுத்துபிரித்த வகயில் கூடுதல் வந்ததாக 54-ஸென்றும் உள்ப்பட பகுதி ஒட்டுக்கு 3064-ஏக்கர் 48-ஸென்றும் அது 4·79 சதுரசிரமயிலும ஆகிறது. புறம்போக்கு வகையில் 531-ஏக்கர் 28-ஸென்றும் அது மொத்தம் விஸ்தீர்ணத்தில் நூற்றுக்கு 17-வீதமும் நிற்கின்றது. அதினுடைய விவரம் அடியில் எழுதியிருக்கின்றது.

| | இன விவரம். | மொத்தம் ஸர்வெ நம்பர். | விஸ்தீர்ணம். | | றிமார்க்கு. |
|---|---|---|---|---|---|
| | | | ஏக்கர். | ஸென்டு. | |
| | புறம்போக்கு ... | 941 | 531 | 28 | |

கிருஷி செய்துவரப்பட்ட பூமியின் விஸ்தீர்ணம் 2533-ஏக்கர் 20-ஸென்றும் அது மொத்தம் விஸ்தீர்ணத்துக்கு 100-க்கு [illegible]-வீதமும ஆகின்றது. அதினுடைய விபரம் அடியில் விவரித்திருக்கிறது.

| | இனம். | மொத்தம் ஸர்வே நம்பர். | விஸ்தீர்ணம். | |
|---|---|---|---|---|
| | | | ஏக்கர். | ஸென்டு. |
| | நிலம் ... | 1285 | 728 | 47 |
| | புரயிடம். ... | 3384 | 1804 | 73 |
| | ஆக... | 4669 | 2533 | 20 |

4. **டிமார்க்கேஷன்.**—இந்த பகுதி 8-கண்டங்களாகவும் 2884-ஸர்வே நம்பர்களாயும் கூடியும் இருக்கிறது.

19.12.1984 புதன்மாலை குருசடி பங்குத்தந்தை அவர்கள் எங்கள் ஊர் கமிற்றி அங்கத்தினர்களையும், நிர்வாகிகளையும் அழைத்து தாங்கள் மேற்குறிப்பிட்ட பொருள்பற்றி ஆயர் இல்லத்தில் எங்கள் பங்குத்தந்தையிடம் அறிவித்துள்ள கருத்துக்களையும் விருப்பங்களையும், கீழ்க்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின்படி ஏற்றுக் கொள்கிறோம்.

மேற்கூறிய பொருள் சம்மந்தப்பட்ட பிரச்சனைக்கு தீர்வுகாண தாங்கள் ஒரு கமிட்டியை நியமித்து அதன் அறிக்கையை தங்களிடம் தாக்கல் செய்ததை பங்குத்தந்தையின் வாயிலாக அறிந்தோம்; வரவேற்கிறோம்.

<u>இந்தப்பிரச்சனைக்கு தாங்கள் விரும்பி கேட்டதும், கூறிய வழிகளும்</u>:

1. உங்கள் விருப்பத்தின்படி புனித அந்தோனியார்கோவில்வகை வட்டக்கரை ஓடைத்தட்டு 78சென்ட்பூமி,
2. வட்டக்கரை மாந்தட்டு 54சென்ட்பூமி.
3. தொல்லவிளையில் 115சென்ட்பூமி....
4. குட்டிதட்டு 15சென்ட்பூமியும் ஆயரின் விருப்பம்போல்பயன்படுத்தவும் ஆகியவற்றை தாங்கள்வசம் ஒப்படைத்தல்.

இவை தவிர.

1. மறவன்குடியிருப்பு பள்ளியும் அது இருக்கும் 31 சென்டு பூமியும்,
2. வட்டக்கரை சாவடிதட்டு 75 சென்டு பூமியும்
3. கோணம் பாலர்பள்ளி, சத்துணவு மையம் அமைந்திருக்கும் 25 சென்டு பூமியும் ..
4. புன்னைக்காட்டுவிளை புனித யூதாததேயு குருசடி இருக்கும் 6சென்டு பூமியும்,
5. புன்னைக்காட்டுவிளை ஆரம்பப்பள்ளி இருக்கும் இடத்தில் 50 சென்டு பூமியும், சம்மந்தப்பட்டவர் கோவில்களின் பெயரில் எழுதிக் கொடுப்பது.

எங்களது விருப்பம்.

இந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காண தாங்கள் விரும்பி கேட்டவற்றையும், கூறிய வழிகளையும் ஏற்றுக் கொள்கிறோம். தவிர புன்னைக்காட்டுவிளை புனித யூதாததேயு குருசடியின் அருகில் எஞ்சியுள்ள புனித அந்தோனியார்கோவில் சொத்தாகிய 6 சென்டு பூமியையும் கூட தாங்கள்வசம் ஒப்படைக்க சம்மதிக்கிறோம்.

தங்களது விருப்பத்தை நிறைவேற்றுவதில் பிணைந்துள்ள நிபந்தனைகள்:

1. குருசடி சபை கமிட்டியை கலைத்தல்
2. குருசடி சபை முழுதும் பதவியை ஒழித்தல்
3. குருசடி புனித அந்தோனியார்கோவில் பெயருக்குள்ள சொத்துக்களை குருசடி பங்குத் தந்தையாலும், குருசடி கோவிலைச்சார்ந்த ஊர் மக்களாலும் கண்காணித்தல்
4. குருசடி புனித அந்தோனியார்கோவில் திருவிழா, குருசடி பங்குதந்தையாலும்,குருசடி கோவிலைச்சார்ந்த ஊர்மக்களாலேயே நடத்தப்படவேண்டும்.

5. வழக்கமாக குருசடி புனித அந்தோனியார் கோவில் திருவிழாவின்போது, மறவன்குடியிருப்பு, தளவாய்புரம் மக்களால் உரிமை பாராட்டி தேர் எடுப்பதை நிறுத்தல் வேண்டும்.

6. இனிமேல் குருசடி புனித அந்தோனியார்கோவில் வகைச் சொத்து, நிர்வாகம் இவற்றில் பிற கோவிலைச்சார்ந்த பிற ஊர் மக்கள் உரிமை பாராட்ட அனுமதிக்கக்கூடாது

7. குருசடி புனித அந்தோனியார்கோவில் திருநாள் வரி, பிற ஊர்மக்களிடம் இருந்து வசூலிப்பதை நிறுத்தல்செய்தல்.

8. இனிமேல் குருசடி புனித அந்தோனியார்கோவிலைச்சார்ந்த சொத்துக்களின்மேல் கிளைக் கோவில்களாக இருந்தவைகளும் இருப்பவைகளுமான புன்னக்காட்டுவிளை, கார்மல்நகர், மறவன்குடியிருப்பு, வேதநகர், வட்டக்கரை, கோணம், அநந்தம்பாலம், மேலஇராமன்புதூர், தளவாய்புரம், கீழ ராமன்புதூரும், வேறு எந்தஊராரும் உரிமைபாராட்ட ஆயர் அனுமதிக்கக்கூடாது.

மேற்குறிப்பிட்ட பிரச்சனைகளை ஆயர் அவர்கள் விரைவில் தீர்த்து தரவேண்டுகிறோம்.

குருசடி,
20.12.1984.

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள,

M. Benjamin
P.P.
Dec. 20, 84
Emmanuel

ST. ANTONY'S CHURCH
KURUSADY
NAGERCOIL-629004
SOUTH INDIA.

S. M. Thankaraj
V. Devasahayam



குடந்தை தந்த குணக்குன்று

கோட்டாற்றுப் புதிய ஆயர்

மேதகு

**M. ஆரோக்கியசாமி**

ஆண்டகைக்கு

வரவேற்பு வாழ்த்து இதழ்



குருசடி பங்குத் தந்தை

வேலூரின் புதிய ஆயர்

மேதகு

**R. அந்தோனிமுத்து**

ஆண்டகைக்கு

வழியனுப்பு வாழ்த்து இதழ்

குருசடி பங்கு மக்கள்

11 - 4 - 1971

# 6 பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையும் பணிகளும்

குருசடிப் புனித அந்தோனியார் ஆலயம் மற்றும் அதன் சொத்துக்களை நிர்வாகம் செய்து வந்த "சபையார்" என்ற அமைப்பு கோட்டாறு மறைமாவட்ட ஆயர் ஆரோக்கியசாமியால் 1985ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது. இதனால் முடுதோம் மற்றும் கணக்குப்பிள்ளை போன்ற பதவிகள் முடிவடைந்தன. 1985ஆம் ஆண்டு மே மாதம் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை என்ற அமைப்பு பங்குத்தந்தைத் தலைமையில் ஏற்படுத்தப்பட்டது. அதுமுதல் ஆலயமும் அதன் சொத்துக்களும் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையால் நிர்வகிக்கப்படுகின்றன. இதில் முக்கியமான அம்சம் என்னவென்றால் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை ஏற்படுத்தப்பட்டபோது குருசடிப் பங்கின்கீழ் மேலராமன்புதூர், தளவாய்புரம், வடக்குக்கோணம், வட்டக்கரை மற்றும் அனந்தன்நகர் ஆகியவை கிளைப் பங்குகளாக இருந்தன. எனினும் கிளைப்பங்கு களுக்குப் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை. இதனால் குருசடி ஊர் மக்களுக்கே ஆலயம் மற்றும் அதன் சொத்துக்களை நிர்வாகம் செய்யும் உரிமை கிடைத்தது.

பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை திருஅவைச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டதாகும். (காண்க: *திருஅவைச் சட்டம்* எண்.536). ஒவ்வொரு பங்கு மேய்ப்புப்பணி பேரவையும் நிறுவப் பட்டவுடன் மறைமாவட்ட ஆயரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையைக் கலைக்கும் அதிகாரமும் மறைமாவட்ட ஆயருக்கு உள்ளது. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையில் எடுக்கப்படும் முக்கியமானத் தீர்மானங்கள் மறைமாவட்ட ஆயரின் ஒப்புதலின்படியே செயலாக்கப்படும். (எடுத்துக்காட்டாக புதுக் கட்டிடங்கள் எழுப்புதல், பங்கின் சொத்துக்களை உரிமை மாற்றம் செய்தல், கடன் வாங்குதல்). பங்கு மேய்ப்புப் பணிப் பேரவை என்பது பேச்சு வழக்கில் பங்குப் பேரவை என்றழைக்கப்படுகிறது.

1982ஆம் ஆண்டுவரை நாடார் சமூகத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே குருசடி ஊரில் உறுப்பினராக இருந்தனர். குருசடி ஊரில் பல தலைமுறைகளாகக் குடியிருந்த சலவைத் தொழிலாளர் சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கும், கேரள முதலி சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கும் திருவருட்சாதனங்கள் குருசடிப் பங்கில் நிறைவேற்றப்பட்டாலும் குருசடி ஊரில் உறுப்பினர்களாக இல்லை. இவ்விரு சமூகத்தினரும் 1982ஆம் ஆண்டு குருசடி ஊர் நிர்வாகத்தினரால் குருசடி ஊரில் உறுப்பினர் களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அதனைத் தொடர்ந்து வேறு சமூகத்தைச் சார்ந்தவர்களும் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டனர். பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையில் சலவைத் தொழிலாளர்களுக்கும், கேரள முதலி சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை ஏற்படுத்தப்பட்டவுடன் குருசடி ஊரில் ஏற்கனவே செயல்பட்டு வந்த ஊர் நிர்வாகமும் முடிவுக்கு வந்தது. இதனால் குருசடி ஊர் மக்கள் ஊர் நிர்வாகத்திற்கு ஊர்வரி செலுத்தும் முறையும் கைவிடப்பட்டது. ஊர் நிர்வாகத்தினர்

வருடந்தோறும் நடத்தி வந்த ஊர்கூடி அசனமும் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையால் நடத்தப்படுகிறது. ஊர் நிர்வாகத்தினர் வசூலித்த திருமணவரியும் முடிவுக்கு வந்தது. மேலும் குருசடி ஊர் மக்களின் அடக்கச் சடங்குகளில் ஊர் நிர்வாகத்தினர் கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்ய இடம் ஒதுக்கீடு செய்யும் நடைமுறையும் முடிவுக்கு வந்தது. மேற்கண்ட பணிகள் அனைத்தையும் தற்போது பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை செய்து வருகிறது. தற்போது பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் துணைத் தலைவரை ஊர்த் தலைவர் போன்று மக்கள் ஏற்றுக்கொள்கின்றனர். பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் தலைவர் நீங்கலாக மீதமுள்ள நிர்வாகிகள் ஜனநாயக முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**முதல் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை (1985 மேமுதல் 1988 மேவரை)**

**நிர்வாகிகள்**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | அருள்பணி. பெஞ்சமின் செபஸ்தியான் |
| துணைத் தலைவர் | - | பேராசிரியர் திரு. S. பிலிப் |
| செயலாளர் | - | திரு. M. கிரகோரி ஆசிரியர் |
| துணைச் செயலாளர் | - | திரு. F. அமிர்தராஜ் |
| பொருளாளர் | - | திரு. S. வற்கீஸ் தங்கராஜ் |

**முக்கியப் பணிகள்**

முதலாவது பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினருக்குப் பல சவால்கள் இருந்தன. இப்பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் நமது ஊரில் செயல்பட்டு வந்த தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தத் திட்டமிட்டனர். எனவே நமது ஆலயத்திற்குச் சொந்தமான புன்னைநகர் பங்கின் கல்லறைத் தோட்டத்திற்கும் கிழக்குப் பக்கம் உள்ள சுமார் 45 சென்ட் நிலம் விற்பனை செய்யப்பட்டது. அந்தத் தொகையைக் கொண்டு பள்ளிக் கூடத்தின் பழைய கட்டிடம் இடிக்கப்பட்டு புதிய கட்டிடம் கட்டும் பணிகள் 15.08.1986 அன்று தொடங்கப்பட்டன.[1] ஏற்கெனவே 20.12.1984 அன்று அப்போதைய குருசடி ஊர்த் தலைவர் திரு. M. மரியந்தோனி ஆசிரியர் தலைமையில் மறைமாவட்ட ஆயரிடம் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் மறைமாவட்ட ஆயர் வசம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்ட நான்கு நிலங்களை நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடியாததால் ஆயர் அந்த நிலங்களைக் குருசடிப் பங்கிடம் திரும்ப ஒப்படைத்து விட்டார். மேலும் அதற்குப் பதிலாக ரூபாய் 5,50,000த்தை நியாயமான காலத்திற்குள் மறைமாவட்ட ஆயரிடம் குருசடிப் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை ஒப்படைக்க வேண்டுமென்றும் அந்தத் தொகை மறவன்குடியிருப்பு, மேலராமன்புதூர், தளவாய்புரம், வேதநகர் மற்றும் அனந்தன்பாலம் ஆகிய ஊர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படும் என்றும் குருசடி ஆலய நிர்வாகம், சொத்து மற்றும் திருவிழா கொண்டாட்டங்களில் கிளை பங்குகளுக்கு எந்த உரிமையும் இல்லையென்றும் 07.11.1986 அன்று உத்தரவிட்டார் (காண்க பக்கம் 166 - 169). இதனால் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் ரூபாய் 5,50,000/த்தை மறைமாவட்ட ஆயரிடம் ஒப்படைக்க வேண்டியதாயிற்று. கிளைப்பங்குகளைச்



புனித அந்தோனியார் மேல்நிலைப் பள்ளி, குருசடி

1. புனித அந்தோனியார் மேல்நிலைப் பள்ளி, குருசடி, *கல்வெட்டு,* நாள் 15.08.1986.

சார்ந்தவர்கள் உடனடியாக பணத்தைக் கேட்டு மறைமாவட்ட நிர்வாகத்திற்கும் நமது பங்குத்தந்தை அருள்பணி. பெஞ்சமின் மற்றும் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை நிர்வாகிகளுக்கும் நெருக்கடிக் கொடுத்தனர். எனவே 10 ஏக்கர் 25 சென்ட் பரப்பளவுள்ள வடகாட்டுவிளையை விற்பனை செய்ய நான்கு நபர்களிடம் 16.07.1987 அன்று ரூபாய் முப்பது இலட்சம் என்று விலை நிர்ணயம் செய்து கிரைய ஒப்பந்தம் செய்யப்பட்டு ரூபாய் இரண்டு இலட்சம் முன்பணமும் பெற்றுக் கொள்ளப் பட்டது.[2] கீழராமன்புதூரில் இராஜக்கமங்கலம் சாலையோரம் இருந்த நமது ஆலயத்திற்குச் சொந்தமான மூன்று சென்ட் நிலமும் அதிலிருந்த வீடும் விற்பனை செய்யப்பட்டன.[3]

கிளைப்பங்குகளுக்குக் கொடுக்க வேண்டிய தொகையில் ரூபாய் 5,00,000/- கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கப்பட்டது. இப்பங்குப் பேரவையினர் சிறப்பாகச் செயல்பட்டு கிளைப் பங்குகளுக்கும் குருசடிப் பங்குக்கும் இடையே உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துள்ளனர். ரூபாய் 50,000/- மட்டும் கொடுக்க வேண்டியிருந்தது. கிளைப்பங்காக இருந்த தளவாய்புரத்திற்குக் கொடுக்கப்பட்ட தொகை தளவாய்புரம் புனித ஜார்ஜியார் ஆலயம் அமைந்துள்ள 40 சென்ட் நிலம் வாங்கப் பயன்படுத்தப்பட்டது.[4]



நமது ஆலயத்தின் எழில்மிகு தோற்றம் (1986)

1986ஆம் ஆண்டு நமது ஆலயத்தின் பவள விழா கொண்டாடப்பட்டது. அதனை யொட்டி ஆலயத்திற்கும் கோபுரங்களுக்கும் வர்ணம் பூசப்பட்டது. அதற்கு முன்பு பல ஆண்டுகளாக ஆலயக் கோபுரங்களுக்கு வெள்ளையடிக்காமல் இருந்தது. இதனால் ஆலயக் கோபுரங்களில் பாசிகள் படர்ந்து இருந்தது. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் ஆலயக் கோபுரத்திற்கும் வர்ணம் பூசி பவள விழா கொண்டாடப்பட்டது. பவள விழாவை முன்னிட்டு "பாமலர்" என்ற சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. நமது ஆலயத்திற்குச் சொந்தமான கிணறு முதன் முறையாக தூர் வாரப்பட்டது.[5]

1988ஆம் ஆண்டு நமது பள்ளி உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது.[6] புன்னைநகர் கல்லறைத்தோட்டத்தின் எதிரே உள்ள நமது ஆலயத்திற்குச் சொந்தமான 3 ஏக்கர் 56 சென்ட் நிலத்தில் புன்னைநகர் பள்ளி அமைந்துள்ள 50 சென்ட நிலம் நீங்கலாக மீதமுள்ள 3 ஏக்கர் 6 சென்ட் நிலம் புனித வியாகுல அன்னை மரியின் ஊழியர் துறவுஅவையின் தலைமை அருள்சகோதரி. லடிஸ்காமேரி பெயரில் சில பகுதிகள் விலையாகவும், சில பகுதிகள் தானமாகவும் கொடுக்கப்பட்டுள்ளன.[7] தற்போது அந்த நிலத்தில் புனித வியாகுல அன்னை மரியின் ஊழியர் துறவுஅவையின் அருள்சகோதரிகள் இல்லம் அமைந்துள்ளது.

2. அருள்பணி. பெஞ்சமின் மற்றும் நான்கு நபர்களும் செய்துகொண்ட கிரய உடன்படிக்கை, நாள் 16.07.1987
3. திரு. B. அந்தோணிமுத்து, கீழராமன்புதூர், *நேர்முகப் பேட்டி,* நாள் 15.05.2020
4. தளவாய்புரம், *புனித ஜார்ஜியார் புதிய ஆலய அர்ச்சிப்பு விழா சிறப்பு மலர்,* 1955-1995, ப. 30
5. திரு. S. வற்கீஸ் தங்கராஜ், குருசடி, *நேர்முகப் பேட்டி,* நாள் 15.03.2020
6. திரு. A. புஷ்பராஜ், குருசடி, *நேர்முகப் பேட்டி,* நாள் 17.03.2020
7. *ஆவண எண். 2776/1986 மற்றும் 257/1987,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்

## இரண்டாவது பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை (1988 மேமுதல் 1991 மேவரை)

### நிர்வாகிகள்

தலைவராக அருள்பணி. M. பெஞ்சமின் செபஸ்தியான் செயல்பட்டார். அவர் 29.05.1990 அன்று மாற்றலாகி சென்றதையடுத்து அருள்பணி. A. ஜோசப்ராஜ் தலைவராக இருந்தார்.

துணைத் தலைவர் - திரு. M. மரியந்தோனி ஆசிரியர்
செயலாளர் - திரு. F. அமிர்தராஜ்
துணைச் செயலாளர் - திரு. V. தேவசகாயம்
பொருளாளர் - திரு. G. ஜேசுரெத்தினம்

### முக்கியப் பணிகள்

இந்தப் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினரின் பணிக்காலத்தில் சிறப்பாகச் செயல்பட்டு புனித அந்தோனியார் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது.[8] இதற்காக வடகாட்டுவிளையை கிரயம் செய்ய ஒப்பந்தம் செய்து கொண்டவர்களிடமிருந்து கிரய ஒப்பந்தத்தில் மேற்குறிப்பு எழுதி நான்கு தவணைகளாக ரூபாய் 2,89,928 நமது பங்குத்தந்தையால் பெற்றுக் கொள்ளப்பட்டது.

07.11.1986 அன்று கோட்டாறு மறைமாவட்ட ஆயர் பிறப்பித்த உத்தரவின்படி புன்னைநகர் சந்திப்பில் புனித யூதா ததேயு கெபி அமைந்துள்ள 12 சென்ட் நிலம் 30.04.1990 அன்று புன்னைநகர் புனித லூர்து அன்னை ஆலயத்திற்குத் தானமாக எழுதிக் கொடுக்கப்பட்டது.[9] நமது ஆலயத்திற்குச் சொந்தமான வட்டக்கரை ஓடைத்தட்டு (78 சென்ட்) நிலம் 24.05.1990 அன்று புனித வியாகுல அன்னை மரியின் ஊழியர் துறவு அவையின் தலைமை அருள்சகோதரி. லடிஸ்கா மேரிக்கு விலைக்குக் கொடுக்கப்பட்டது.[10] நமது ஆலயத்திற்குச் சொந்தமான 54 சென்ட் நிலம் (வட்டக்கரை மாந்தட்டு) 29.05.1990 அன்று புனித வியாகுல அன்னை மரியின் ஊழியர் துறவுஅவையின் தலைமை அருள்சகோதரி. லடிஸ்கா மேரிக்கு விலைக்குக் கொடுக்கப் பட்டது.[11] இந்த நிலத்தில் புனித வியாகுல அன்னைமரியின் ஊழியர் துறவுஅவையின் அருள்சகோதரிகள் இல்லம் (வட்டக்கரை கான்வென்ட்) அமைந்துள்ளது.

19.11.1989 அன்று மேலராமன்புதூர் தனிப்பங்கு ஆகியது.[12] தளவாய்புரம் மற்றும் அனந்தன்நகர் மேலராமன்புதூரின் கிளைப் பங்குகள் ஆகின.

## மூன்றாவது பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை (1991 மேமுதல் 1994 மேவரை)

### நிர்வாகிகள்

அருள்பணி. A. ஜோசப்ராஜ் 19.4.1992 வரை தலைவராக இருந்தார். அவர் மாற்றலாகிச் சென்றதையடுத்து அருள்பணி. S. வின்சென்ட் தலைவராக இருந்தார்.

துணைத் தலைவர் - திரு. M. மைக்கிள் ஆன்றனி
செயலாளர் - திரு. G. மரிய பிரான்சிஸ்
துணைச் செயலாளர்- திரு. S. B. ஜெயக்குமார்
பொருளாளர் - திரு. S. மரிய பன்னீர்தாஸ் லிகோ

### முக்கியப் பணிகள்

குருசடி சி.எஸ்.ஐ. ஆலயத்தின் எதிரே உள்ள நமது ஆலயத்திற்குச் சொந்தமான 66 சென்ட் நிலத்தில் தமிழ்நாடு அரசின் பிற்படுத்தப்பட்ட மாணவிகள் இல்லம் அமைக்க ஏற்கனவே தானமாகக் கொடுக்கப்பட்ட 43 சென்ட் நிலம் போக மீதி கைவசம் இருந்த 20.86 சென்ட் நிலத்தில் இரண்டு வீடுகள் இருந்தன. அந்த வீடுகளில் இரண்டு குடும்பங்கள் வாடகைக்கு இருந்தன. நமது

8. திரு. G. ஜேசுரெத்தினம், குருசடி, *நேர்முகப் பேட்டி,* நாள் 18.03.2020
9. *ஆவண எண். 941/1990,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்
10. *ஆவண எண். 785/1990,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்
11. *ஆவண எண். 797/1990,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்
12. மேலராமன்புதூர், *பரிசுத்த திருக்குடும்ப புதிய ஆலய அர்ச்சிப்பு & தனிப்பங்கு உதய வெள்ளிவிழா மலர்,* ப. 40

ஆலய நிர்வாகத்திற்கும் வாடகைதாரர்களுக்கு மிடையே வீட்டைக் காலி செய்வதில் பிரச்சினை இருந்தது. பின்னர் வாடகைக்கு இருந்தவர் களுக்கே அந்தச் சொத்தை விற்பனை செய்யப் பங்கு நிர்வாகத்தால் முடிவு செய்யப்பட்டது. அதன்படி திரு. V. சந்தான இருதயராஜ் எனபவருக்கு 7.36 சென்ட் நிலம் விற்பனை செய்யப்பட்டது.[13] திருமதி A. ஆன்றனி மாா்கரெட் திவாகர் என்பவருக்கு 4.5 சென்ட் நிலம் விற்பனை செய்யப்பட்டது.[14] மேலும் திருமதி அல்போன்ஸ் யூஜின் என்பவருக்கு 7¼ சென்ட் நிலம் விற்பனை செய்யப்பட்டது.[15] மேலும் மீதமுள்ள 1.75 சென்ட் நிலம் பொதுப்பாதை உபயோகத்திற்கு விடப்பட்டது. மேற்கண்ட மூன்று விலை ஆவணங்களையும் நமது ஆலயத்திற்கு வேண்டி அப்போதைய பங்குத்தந்தை அருள்பணி. A. ஜோசப்ராஜ் 13.12.1991 அன்று எழுதிக் கொடுத்துள்ளார்.

மேலும் வட்டக்கரை சாலைக்கும் A. R. கேம்ப் சாலைக்கும் இடைப்பட்ட வட்டக்கரை முக்குத்தட்டில் உள்ள 24 சென்ட் நிலத்தில் 15 சென்ட் நிலத்தை ஏற்கெனவே 1984ஆம் ஆண்டு அப்போதைய பங்குத்தந்தை அருள்பணி. S. M. மரியதாசன் விற்பனை செய்தது போக கைவசம் இருந்த 7 சென்ட் நிலம் விற்பனை செய்யப்பட்டது.[16] நமது பள்ளிக்குத் தனியாக விளையாட்டு மைதானம் இல்லாமல் இருந்தது. இதனால் மாணவர்கள் மற்றும் நமது ஊர் இளைஞர்களும் ஆலயக் கொடிமரத்தின் அருகே மைதானம் அமைத்து விளையாடினர். இதனால் பல சிக்கல்கள் எழுந்தன. எனவே சாவடிக்குப் பின்புறம் உள்ள நிலத்தை விலைக்கு வாங்கி விளையாட்டு மைதானம் ஏற்படுத்த பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் முயற்சி செய்தனர். அந்த நிலம் மந்தங்காட்டைச் சார்ந்த திரு. C. நாராயண பெருமாள் நாடார் மகள் திருமதி நாகரத்தினம் நாடாச்சிக்கு உரிமைப்பட்டது. நாகரத்தினம் நாடாச்சி இறந்தபிறகு அவரது கணவரான மாலைஅணிந்தான்குடியிருப்பு வைத்தியர் திரு. A. இராம உதய மார்த்தாண்டனுக்கு அந்த நிலம் உரிமைப்பட்டதாக இருந்தது. எனவே நமது ஆலயத்திற்குச் சொந்தமான குருசடி வடக்குத் தெருவில் உள்ள 61.5 சென்ட் நிலமும் (ஒற்றைப்பனைவிளை) மற்றும் மேலச்சூரங்குடியில் உள்ள மாதாதோப்பில் 15 சென்ட் நிலமும், குருசடி திருஇருதய அருள்சகோதரிகள் இல்ல சாலையோரம் இருந்த 15 சென்ட் நிலமும் (குட்டித்தட்டு) திரு. இராம உதய மார்த்தாண்டனுக்குக் கொடுக்கப்பட்டது. இதற்குப் பதிலாக திரு. இராம உதய மார்த்தாண்டனுக்குச் சொந்தமான சாவடிக்குப் பின்புறமுள்ள பழைய சர்வே எண்.3368 மற்றும் 3369ல் உள்பட்ட 88½ சென்ட் நிலம் நமது ஆலயத்திற்குக் கிடைத்தது. இதற்காக நமது ஆலயப் பங்குத்தந்தை அருள்பணி. S. வின்சென்ட் மற்றும் இராம உதய மார்த்தாண்டன் ஆகிய இருவரும் 25.01.1993 அன்று பரிவர்த்தனைப் பத்திரம் (Exchange deed) பதிவு செய்தனர்.[17] தற்போது 88½ சென்ட் நிலம் நமது பள்ளியின் விளையாட்டு மைதானமாகப் பயன்பாட்டில் உள்ளது. நமது ஊர் இளைஞர்களும் இவ்விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும் சாவடிக்கும் விளையாட்டு மைதானத்திற்கும் இடைப்பட்ட 24 சென்ட் நிலம் நமது ஊரைச் சார்ந்த திருமதி மரியதங்கம் ஆசிரியைக்குச் சொந்தமானது ஆகும். விளையாட்டு மைதானத்திற்கு இந்த நிலத்தின் வழியாகத்தான் செல்ல முடியும். எனவே பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் இந்த நிலத்தையும் விலைக்கு வாங்க முடிவு செய்து முழு தொகையையும் கொடுத்தார்கள். ஏற்கெனவே பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினரால் விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களிலிருந்து கிடைத்த பணம் மற்றும்

13. *ஆவண எண். 2521/1991,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்
14. *ஆவண எண். 2522/1995,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்
15. *ஆவண எண். 2523/1991*, மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்
16. திரு. M. மைக்கிள் ஆன்றனி, குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 20.04.2020
17. *ஆவண எண். 115/1992,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்

பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் நடத்திய சிறுசேமிப்பில் கிடைத்த இலாபத்தால் இந்தச் சொத்து வாங்கப்பட்டது. மேலும் விலை ஆவணம் பதிவு செய்வதற்குப் பொருளாதாரச் சிக்கல் இருந்தாலும், பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் பணிக்காலம் முடிவுக்கு வந்ததாலும் விலை ஆவணம் அப்போது பதிவு செய்யப்படவில்லை.[18] ஆலய வளாகத்தை ஒட்டிய சொத்துக்களை விலைக்கு வாங்குவதில் இப்பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுள்ளனர். இப்பேரவையினர் பங்கு மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தச் சிறுசேமிப்புத் திட்டத்தைத் தொடங்கி மிகச் சிறப்பாக நடத்திக் காட்டினார்கள்.

மேலச்சூரங்குடியிலுள்ள சில இந்துக் குடும்பங்களுக்குத் தங்கள் கல்லறைத் தோட்டத்திற்குச் செல்வதற்கான பாதை வசதி இல்லாமல் இருந்தது. இந்துச் சகோதரர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேலச்சூரங் குடியிலுள்ள மாதாதோப்பில் பாதை வழங்கப் பட்டது. இதற்கான ஆவணம் நமது பங்குத்தந்தை அருள்பணி. S. வின்செண்ட் அவர்களால் 16.11.1992 அன்று மேலச்சூரங்குடி ஊர் ஸ்ரீசக்தி வினாயகர் டிரஸ்டுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது.[19]

நமது ஆலயத்திற்குச் சொந்தமான 10 ஏக்கர் 25 சென்ட் பரப்பளவுள்ள வடகாட்டுவிளை நிலத்தை விற்பனை செய்ய நமது பங்கு நிர்வாகம் நான்கு நபர்களிடம் கிரய ஒப்பந்தம் செய்ததை ஏற்கெனவே கண்டோம். மொத்தமுள்ள 10 ஏக்கர் 25 சென்ட் நிலத்தில் சில பகுதிகள் தொழில் பகுதியாக (Industrial area) இருந்ததால் கிரய ஒப்பந்தம் செய்தவர் களுக்குக் குறிப்பிட்ட காலத்திற்குள் மனைப்பிரிவு (Layout) செய்வதற்கு உள்ளூர் திட்டக் குழுமத்தின் (Local Planning Authority) அனுமதி கிடைக்காததால் கிரய ஒப்பந்தப்படி கிரயம் செய்ய முடியவில்லை. இந்நிலையில் இந்திய விண்வெளித் துறையின் திருவனந்தபுரம் திரவ இயக்கத் திட்ட மையக் கட்டுமான பொறியாளரின் வேண்டுகோளை ஏற்று நாகர்கோவிலில் ISRO காலனி ஏற்படுத்த வடகாட்டுவிளையை அரசு கையகப்படுத்த அரசாணை எண்.1017, 29.10.1991 அன்று வெளியிடப்பட்டது.[20] பின்னர் நிலம் கையகப்படுத்தும் அலுவலரான நாகர்கோவில் கோட்டாட்சியரால் முதல் கட்ட விசாரணை நடத்தப்பட்டது. நமது ஆலயத்தின் சார்பில் அருள்பணி. S. வின்செண்ட் விசாரணையில் கலந்து கொண்டார். பங்குத்தந்தை விசாரணையின் போது நமது ஆலயத்திற்கு ரூபாய் 1,27,62,500.00 இழப்பீடாகத் தர வேண்டுமென்று ஆட்சேபனைத் தாக்கல் செய்தார்.[21] சொத்தைக் கிரயம் வாங்க ஒப்பந்தம் செய்த நபர்கள் தாக்கல் செய்த ஆட்சேபணையைக் கோட்டாட்சியர் தள்ளுபடி செய்தார். இறுதியாக நிலத்திற்கு ரூபாய் 43,68,249.00 இழப்பீடு கொடுக்க வேண்டுமென்று 19.08.1993 அன்று உத்தரவு பிறப்பித்தார் (காண்க பக்கம் 170, 171). எனினும் ஏற்கெனவே நமது ஆலயத்திற்கும் கிரய ஒப்பந்தம் செய்து கொண்டவர்களுக்கும் பிரச்சனை இருந்ததால் ரூபாய் 43,68,249.00த்தை நாகர்கோவில் கோட்டாட்சியர் நாகர்கோவில் சார்பு நீதிமன்றத்தில் L.A.O.P.No.49/1993 ஆக வழக்குத் தாக்கல் செய்து ரூபாய் 43,68,249.00த்தை வட்டியுடன் டெப்பாசிட் செய்தார். கிரய ஒப்பந்தம் செய்த நான்கு நபர்களும் தங்களையும் L.A.O.P.NO. 49/1993 இல் தரப்பினராக சேர்க்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்தது. இதனால் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினரால் தொகையை உடனடியாக பெற முடியவில்லை. இதனிடையே இப்பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் பணிக்காலமும் முடிவுக்கு வந்தது.

18. திரு. M. மைக்கிள் ஆன்றனி, குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 20.04.2020
19. *ஆவண எண். 2212/1992,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்
20. *Order in LAOP No.1/1996 of Principal Subordinate Court,* Nagercoil, dated 19.03.2008
21. மேலது

**நான்காவது பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை (1994 மேமுதல் 1997மேவரை)**

**நிர்வாகிகள்**

தலைவர் - அருள்பணி. S. வின்சென்ட்

துணைத் தலைவர் - திரு. A. தேவதாசன் ஓர் ஆண்டு காலம் பணியாற்றினார். அவர் இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து திரு. J. சிறில் ஆர்க்காஞ்சல் செல்வராஜ் ஓர் ஆண்டு காலம் துணைத் தலைவராகப் பணிபுரிந்தார். அவரும் இராஜினாமா செய்ததால் திரு. M. ஞானமுத்து ஓர் ஆண்டு காலம் துணைத் தலைவராகப் பணியாற்றினர்.

செயலாளர் - திரு. V. தேவசகாயம்

துணைச் செயலாளர் - திரு. S. ஜோசப் ஆன்றனி

பொருளாளர் - திரு. F. அமிர்தராஜ்

**முக்கியப் பணிகள்**

முந்தைய பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் முழுக் கிரயத் தொகையும் கொடுத்திருந்த 24 சென்ட் நிலத்தினை நில உரிமையாளர்களான திருமதி மரியதங்கம் ஆசிரியை மற்றும் அவரது மகன்களான திரு. S.J. ஜோசப், திரு. S.M. தங்கராஜ் ஆகியோரிடமிருந்து ஆலயத்தின் பெயரில் விலை ஆவணம் பதிவு செய்து வாங்கப்பட்டது.[22]

குருசடி ஊர் மக்களின் பங்களிப்புடன் ஏற்கெனவே செயல்பட்டு வந்த நூலகக் கட்டிடத்தை இடித்து மாற்றிவிட்டு புதிய கட்டிடம் கட்டப்பட்டது. அக்கட்டிடத்திற்குப் புனித *அந்தோனியார் நல வாழ்வு மையம்* என்று பெயரிட்டு 17.01.1997 அன்று பங்குத்தந்தை அருள்பணி. S. வின்சென்ட் திறந்து வைத்தார்.[23] தற்போது அந்தக் கட்டித்தில் தமிழக அரசின் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. தற்போது நூலகம் வேறு கட்டிடத்தில் செயல்படுகிறது.[24]


தந்போதைய மேடை

நமது பங்கு அருள்பணியாளர் தங்கும் இல்லம் (மேடை) மிகவும் பழுதடைந்திருந்ததால், அந்த மேடை இடிக்கப்பட்டு வெளிநாட்டு பொருளாதார உதவியுடன் புதிய மேடை கட்டப்பட்டு வேலைகள் முழுவதும் முடிவடையாத நிலையில் 3.5.1997 அன்று பங்குத்தந்தை அருள்பணி. S. வின்சென்ட் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.[25] புதிய மேடை கட்டுவதில் இப்பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் சிறப்பாகச் செயல்பட்டுள்ளனர்.

மேலும் வடகாட்டுவிளை நிலத்திற்குக் கிடைத்த இழப்பீட்டுத் தொகை போதாது என்று இன்னும் கூடுதல் இழப்பீட்டுத் தொகையைக் கேட்டு நாகர்கோவில் வருவாய்க் கோட்டாட்சியரிடம் பங்குத்தந்தை அருள்பணி. S. வின்சென்ட் மனு தாக்கல் செய்தார். கோட்டாட்சியர் அந்த ஆட்சேபணை மனுவை நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின்படி மேல் விசாரணைக்காக நாகர்கோவில் சார்பு நீதிமன்றத்திற்கு அனுப்பி அது L.A.O.P.No.1/1996ஆக கோப்பில் எடுக்கப்பட்டது.

கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் டெப்பாசிட் செய்த ரூபாய் 43,68,249.00 வட்டியுடன் சேர்ந்து சுமார் ரூபாய் 65 இலட்சம் நீதிமன்றத்தில் வைப்பீட்டில் இருந்தது. நமது ஆலயத்திற்கும் வடகாட்டுவிளையை விலைக்கு

---

22. *ஆவண எண்.1249/1994,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்
23. புனித அந்தோனியார் நல வாழ்வு மையம், குருசடி, *கல்வெட்டு*, நாள் 17.01.1997
24. திரு. F. அமிர்தராஜ், குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 25.04.2020
25. மேலது

வாங்க ஒப்பந்தம் செய்தவர்களுக்குமிடையே நடந்து வந்த வழக்கைக் கோட்டாறு மறைமாவட்ட நிர்வாகம் தலையிட்டு சமரசத் தீர்வு கண்டது. இரு தரப்புக்கும் 26.04.1997 அன்று சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது.[26] அதன்படி கிரய ஒப்பந்தம் செய்து கொண்டவர்களுக்கு ரூபாய் 18,46,250.00 கொடுக்கப்பட்டது. மீதமுள்ள சுமார் ரூபாய் 47,00,000.00 நமது ஆலயத்திற்கு என்று முடிவு செய்யப்பட்டது. அருள்பணி S. வின்சென்ட் முயற்சியால் இவ்வழக்கு சமாதானமாக முடித்துக் கொள்ளப்பட்டது. எனினும் பங்குத்தந்தை அருள்பணி. S. வின்சென்ட் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்ட தொகையைத் திரும்பப் பெறுவதற்குள் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் பணிக்காலம் முடிவடைந்து விட்டது.

**ஐந்தாவது பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை (1997 மேமுதல் 2000 மேவரை)**

**நிர்வாகிகள்**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | அருள்பணி. S. வின்சென்ட் |
| துணைத் தலைவர் | - | பேராசிரியர் திரு. S. பிலிப் |
| செயலாளர் | - | திரு. M. கிரகோரி ஜேசுரெத்தினம் |
| துணைச் செயலாளர் | - | திரு. A. ஆரோக்கியதாஸ் டைட்டஸ் |
| பொருளாளர் | - | திரு. C. ஜஸ்டின் ராசையா |

பேரவை பொறுப்பேற்ற ஒரு மாதத்திற்குள் அருள்பணி S. வின்சென்ட் மாற்றமடைந்ததால் அருள்பணி. ஹிலரி A. M. தலைவராகப் பணியாற்றினார். மேலும் சில மாதங்களுக்குள் துணைத் தலைவர் இராஜினாமா செய்ததால் செயலாளராக இருந்த திரு. M. கிரகோரி ஜேசுரெத்தினம் துணைத் தலைவராகவும், திரு. G. M. ஆன்றனி செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டு மற்ற நிர்வாகிகளுடன் தொடர்ந்து பணியாற்றினர்.

மீண்டும் பொருளாளர் திரு. C. ஜஸ்டின் ராசையா இராஜினாமா செய்ததால் செயலாளராக இருந்த திரு. G. M. ஆன்றனி பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனால் திருமதி மேரி சாந்தாபாய் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். துணைச் செயலாளராக திரு. A. வற்கீஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**முக்கியப் பணிகள்**

முந்தைய பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினரால் கட்டப்பட்டு வேலைகள் முடிவு பெறாமல் இருந்த அருள்பணியாளர் இல்லத்தின் வேலைகளை இப்பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் தம் பணிப் பொறுப்பு காலத்தில் முடித்தனர். மேலும் வடகாட்டுவிளை நிலத்தை அரசு கையகப்படுத்தியதன் மூலம் சுமார் ரூபாய் 47,00,000/- கிடைத்தது. அந்தப் பணத்தில் உயர்நிலைப் பள்ளியாக இருந்த பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் பொருட்டு பள்ளியின் கிழக்குப் புற கட்டிடத்தில் முதல் தளம் கட்டப்பட்டு "ஆயர் அந்தோனிமுத்து ஹால்" என்றுப் பெயர் சூட்டப்பட்டது. ஆயர் அந்தோனிமுத்து ஹாலை பங்குத்தந்தை அருள்பணி. ஹிலரி திறந்து வைத்தார்.[27]

2000 ஜூபிலி ஆண்டை முன்னிட்டு ஜூபிலி 2000 சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. நமது பங்கு மக்கள் மற்றும் பக்தர்களின் வசதிக்காக லூர்து அன்னை கெபி அருகே புத்தகம் மற்றும் புனிதப் பொருட்கள் விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. புத்தக நிலையம் தற்போதும் நமது ஊர் இளைஞர்களால் மிகச் சிறப்பாக நடத்தப்படுகிறது. செவ்வாய் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் திறக்கப்பட்டு விற்பனை சிறப்பாக நடைபெறுகிறது.[28]

2000-2001 கல்வியாண்டில் உயர்நிலைப் பள்ளியாக இருந்த நமது பள்ளி மேல்நிலைப்

26. அருள்பணி. S. வின்சென்ட் மற்றும் நான்கு நபர்கள் செய்து கொண்ட சமாதான உடனடிக்கை நாள் 26.04.1997
27. திரு. C. ஜஸ்டின் ராசையா, குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 26.04.2020
28. மேலது

பள்ளியாக உயர்த்தப்பட்டது. 1999-2000 கல்வியாண்டு முதல் திருஇருதய துறவுஅவை அருள்சகோதரிகள் பொறுப்பில் பள்ளி ஒப்படைக்கப்பட்டது.[29]

கோட்டாறு மறைமாவட்ட ஆயர் மேதகு ஆரோக்கியசாமி 07.11.1986 அன்று பிறப்பித்த உத்தரவுப்படி, கிளைப்பங்குகளுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்காகக் குருசடிப் பங்கு நிர்வாகம் ரூபாய் 5,50,000 செலுத்த வேண்டும். அதன்படி ரூபாய் 5,00,000 ஏற்கெனவே ஆயர் இல்லத்தில் செலுத்தப்பட்டிருந்தது. மீதமுள்ள ரூபாய் 50,000/-த்தை இப்பங்கு மேய்ப்புப் பணிப் பேரவையினர் ஆயர் இல்லத்தில் செலுத்தினர். எனவே கிளைப்பங்குகள் எவற்றிற்கும் குருசடி ஆலய நிர்வாகம், சொத்து, மற்றும் திருவிழா கொண்டாட்டங்களில் எந்த உரிமையும் இல்லை என்று 07.11.1986 அன்று கோட்டாறு மறைமாவட்டத்தின் அப்போதைய ஆயர் ஆரோக்கியசாமி பிறப்பித்த உத்தரவை உறுதி செய்து ஆயர் லியோன் தர்மராஜ் 11-09-1998 அன்று உத்தரவு பிறப்பித்தார் (காண்க பக்கம் 172).

குருசடி ஊர் மக்கள் திருமணம் மற்றும் இதர நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு தங்கள் வீடுகளுக்கு முன்பு தென்னை ஓலையினால் பந்தல் அமைத்து நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். நாளடைவில் பலருக்குப் பந்தல் அமைக்க இடம் இல்லாததாலும், பந்தல் அமைப்பது பெரும் பொருட்செலவு என்பதாலும் சமூகநலக் கூடம் ஒன்றை நமது ஊரில் ஏற்படுத்த வேண்டுமென்று மக்கள் உணர்ந்தனர். எனவே வடகாட்டுவிளை நிலத்தை அரசு கையகப்படுத்தியதால் கிடைத்த பணத்தில் புனித அந்தோனியார் சமூகநலக் கூடக் கட்டிடத்திற்கு 08.03.2000 அன்று அருள்பணி. ஹிலரி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. தொடர்ந்து சமூகநலக் கூட கட்டிடப்பணி நடைபெற்று வந்தது. கட்டிடம் கட்டப்படும் நிலத்தின் வழியே பாதை உரிமை கோரி இரண்டு நபர்கள் தொடர்ந்த நீதிமன்ற வழக்குகள் இருந்த நிலையில் அதே நிர்வாகம் தொடர்ந்தால் எளிதாக இருக்கும் என்பதால் மேய்ப்புப்பணிப் பேரவையின் பணிக்காலம் மூன்று மாதம் மறைமாவட்ட ஆயரால் நீட்டிக்கப்பட்டது. சமூகநலக் கூடக் கட்டுமானத்திற்கு எதிராக நாகர்கோவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட O.S.No.211/1999 வழக்கில் நமது ஆலயத்திற்கு வேண்டி அப்போதைய துணைத் தலைவர் திரு. M. கிரகோரி ஜேசுரெத்தினம் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார். இவ்வழக்கை அடுத்து வந்த இரு பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினரும் தொடர்ந்து சிறப்பாக நடத்தினர். மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஆலயத்திற்கு எதிராக இவ்வழக்குத் தீர்ப்பாகியது. பின்னர் நாகர்கோவில் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் A.S.No.37/2001இல் மேல்முறையீடு செய்யப்பட்டது. அதில் ஆலயத்திற்குச் சாதகமாக தீர்ப்பு வந்தது. சமூகநலக்கூடம் கட்டுவதில் உள்ள பிரச்சினைகளை இப்பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் ஊர்மக்கள் உதவியுடன் சிறப்பாகக் கையாண்டனர். எனினும் நீட்டிக்கப்பட்ட பணிக்காலத்திற்குள்ளும் பாதியளவு பணியே நிறைவுப் பெற்றது. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் பணிக்காலமும் அத்துடன் முடிவடைந்தது.

**ஆறாவது பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை (2000 ஆகஸ்ட் முதல் 2003 ஆகஸ்ட் வரை)**

தலைவராக சிறிது காலம் அருள்பணி. A.M. ஹலரியும் அவரைத் தொடர்ந்து அருள்பணி. S. சேகர் மைக்கிளும் தலைவராக இருந்தார்கள்.

| | |
|---|---|
| துணைத் தலைவர் | - திரு. M. கிரகோரி ஆசிரியர் |
| செயலாளர் | - திரு. V. ராபின்சன் |
| துணைச் செயலாளர் | - திரு. M. ஜேசு மரிய ராஜன் |
| பொருளாளர் | - திரு. A. ஆரோக்கியதாஸ் டைட்டஸ் |

29. மேலது

**முக்கியப் பணிகள்**

முந்தைய பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் விட்டுச் சென்ற சமூகநலக் கூடக் கட்டிடப் பணிகளைத் தொடர்ந்து செய்தனர். இறுதியில் பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டது. எனவே ஊர் மக்களிடம் நன்கொடை பிரிக்கப்பட்டது. மேலும் ஊர் மக்களிடம் ரூ. 3000 வீதம் வசூலிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. இச்சான்றிதழை சமர்ப்பித்து சமூகநலக் கூடத்தில் ஒரு நாள் நிகழ்ச்சியை இலவசமாக நடத்திக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது. ஊர் மக்கள் பலர் இத்திட்டத்தில் சேர்ந்து சான்றிதழ் பெற்றுக் கொண்டனர். இப்பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் சிறப்பாகச் செயல்பட்டு நிதி நெருக்கடியை சமாளித்தனர். இறுதியாக 07.04.2002 அன்று அப்போதைய கோட்டாறு மறைமாவட்ட முதன்மைப் பணியாளர் E. ஜாண் குழந்தையால் சமூகநலக் கூடம் திறந்து வைக்கப்பட்டது.[30] சமூகநலக் கூடத்தின் முக்கியமான நன்கொடையாளர்கள் பெயர் பட்டியல் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.[31]

அதன் விபரம்

| | |
|---|---|
| M. மரிய வியாகப்பன் கிரகோரி | - ரூ. 25,501.00 |
| S. அருள்ஜோதி சைமன் | - ரூ. 18,000.00 |
| R. லாரன்ஸ் முத்தையா ஆல்பர்ட் | - ரூ. 14,150.00 |
| S. சேவியர் சைமன் | - ரூ. 12,000.00 |
| J. சிலுவைராயன் மனோகரன் | - ரூ. 11,000.00 |
| S. காமராஜ் செல்லம் | - ரூ. 11,000.00 |
| K. K. ஜோஸ் ஜாண்சன் | - ரூ. 11,000.00 |
| M. ரெத்தினம் ஜேம்ஸ் | - ரூ. 11,000.00 |
| J. பால் ஆசிரியர் | - ரூ. 10,101.00 |
| K. மரிய ஜாண் ஜோசப் | - ரூ. 10,000.00 |
| J. மைக்கேல் சிறில் செல்வராஜ் | - ரூ. 10,000.00 |
| M. ரெஸ்கின் பீட்டர் | - ரூ. 10,000.00 |
| Dr. சுப்பையா | - ரூ. 10,000.00 |
| M. ராஜன் | - ரூ. 10,000.00 |



புனித அந்தோனியார் சமூகநலக் கூடம்

இப்பங்கு மேய்ப்பப்பணிப் பேரவையினர் வடகாட்டுவிளையை அரசு கையகப்படுத்தியதற்காக கிடைக்க வேண்டிய கூடுதல் இழப்பீட்டை பெற தாக்கல் செய்யப்பட்ட L.A.O.P.No.1/1996 வழக்கை வேகமாக நடத்தினர். இவ்வழக்கில் நமது பங்குத்தந்தை அருள்பணி. S. சேகர் மைக்கிள் நமது ஆலயத்திற்காக சாட்சியமளித்தார்.

**ஏழாவது பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை (2003 ஆகஸ்ட்முதல் 2006 ஆகஸ்ட்வரை)**

***நிர்வாகிகள்***

| | |
|---|---|
| தலைவர் | - அருள்பணி. M. பெஞ்சமின் லடிஸ்லாஸ் |
| துணைத் தலைவர் | - திரு. A. விக்டர் முத்தையா |
| செயலாளர் | - திரு. R. ஜார்ஜ் |
| துணைச் செயலாளர் | - திரு. S. ஜெயபாண்டியன் |
| பொருளாளர் | - திருமதி G. S. பரிமள செல்வி |

30. புனித அந்தோனியார் சமூகநலக் கூடம், *கல்வெட்டு*, நாள் 07.04.2002
31. புனித அந்தோனியார் சமூகநலக் கூடம், *நன்கொடையாளர்கள் பட்டியல், கல்வெட்டு*

**முக்கியப் பணிகள்**

நமது ஆலய வளாகத்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு வசதியாக கலையரங்கம் இல்லை. எனவே ஆலயத் திருவிழா நாட்களில் பந்தல் அமைத்து திருவிழா நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 2004ஆம் ஆண்டு திருவிழாவின்போது கலையரங்கில் தீ விபத்து ஏற்பட்டது. எனவே பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் கலையரங்கம் அமைக்க முடிவு செய்தனர். இதற்காக ஊர் மக்களிடம் நன்கொடைகள் வசூலிக்கப்பட்டன. குருசடி ஊரைச் சார்ந்த திருவாளர்கள் D. கென்னடி, A.V.M. ராஜன், M. மரியந்தோனி ஆசிரியர், M. கிரகோரி, S. சேவியர் சைமன், G. ஜேசு ரெத்தினம் ஆகியோர் தலா ரூபாய் 10,000 நன்கொடை அளித்தனர். இதனால் கலையரங்கம் சிறப்பாகக் கட்டி முடிக்கப்பட்டது. புனித அந்தோனியார் கலையரம் 25.12.2004 அன்று பங்குத் தந்தை அருள்பணி. பெஞ்சமின் லடிஸ்லாசால் திறந்து வைக்கப்பட்டது.[32]




இராமனாதிச்சன்புதூர் பங்கிலிருந்து தங்கள் ஆலயக் கல்லறைத் தோட்டத்திற்குப் போதிய இடமில்லை என்றும் குருசடிப் புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் சொந்தமாக இராமனாதிச்சன்புதூரில் இருக்கும் நிலத்தில் கல்லறைத் தோட்டத்திற்கு இடம் வேண்டுமென்று இராமனாதிச்சன்புதூர் பங்கு மக்கள் வேண்டுகோள் விடுத்தனர். இதனைப் பரிசீலனை செய்த பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் 15 சென்ட் நிலத்தை தெற்கு இராமனாதிச்சன்புதூர் புனித ஆரோக்கியநாதர் ஆலயத்திற்கு 02.11.2006இல் தானமாகக் கொடுத்தனர். அந்த நிலம் தற்போது தெற்கு இராமனாதிச்சன்புதூர் ஆலயக் கல்லறைத் தோட்டமாகப் பயன்பாட்டில் உள்ளது.[33]

குருசடி திருஇருதய துறவுஅவை அருள்சகோதரிகள் இல்லத்தின் பின்புறம் இருக்கும் நமது ஆலயத்திற்குச் சொந்தமான 46 சென்ட் நிலத்திற்குப் பாதை இல்லாமல் இருந்தது. எனவே பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் பக்கத்து நிலத்தின் உரிமையாளர் திருமதி அருள் பியாட்ரிஸ் என்பவரிடம் பேசி 8 அடி அகலப் பாதையை வாங்கினர். இதற்குப் பதிலாக அந்நபருக்குச் சொந்தமான தொல்லவிளையில் இருந்த நிலத்திற்குச் செல்வதற்கு நமது ஆலயத்திற்குச் சொந்தமான தொல்லவிளை நிலத்தின் வழியாக 12 அடி அகலப் பாதை வழங்கப் பட்டது. இதற்காகப் பங்குத்தந்தை அருள்பணி. பெஞ்சமின் லடிஸ்லாஸ் மற்றும் திருமதி அருள் பியாட்ரிஸ் ஆகியோர் 18.10.2004 அன்று பாதை ஒப்பந்தப் பத்திரம் பதிவு செய்து கொண்டனர்.[34] இதனால் பாதை இல்லாமல் இருந்த 46 சென்ட் நிலத்திற்குப் பாதை கிடைத்தது.

1965ஆம் ஆண்டு நடைபெற்ற புதிய சர்வேயில் நமது ஊரில் யூதா ததேயு குருசடி அமைந்துள்ள வடக்குத்தெரு முழுவதும் புறம்போக்காக வகைப்படுத்தப்பட்டது. இதனை எதிர்த்து பங்கு நிர்வாகம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணை நிலவரித் திட்ட

32. புனித அந்தோனியார் கலையரங்கம், குருசடி, *கல்வெட்டு,* நாள் 25.12.2004
33. *ஆவண எண். 3556/2006,* சார் பதிவாளர் அலுவலகம், இடலாக்குடி
34. *ஆவண எண். 2811/2004,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்

அலுவலரால் தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே மந்தங்காட்டைச் சார்ந்த இந்து நாடார்களுக்குச் சொந்தமான கல்லறைத்தோட்டத்திற்கு வடக்குத் தெரு வீதியைப் பாதையாக பயன்படுத்த மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறை முயற்சி செய்தது. இதனால் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் சூசையப்பர் தெருவில் உள்ள சில நல் உள்ளங்களைச் சந்தித்துப் பேசி பாதையை விரிவுப்படுத்தினர். இப்பிரச்சினையில் பங்கு மேய்ப்புப் பணிப்பேரவையினர் சிறப்பாகச் செயல்பட்டு மந்தங்காடு கல்லறைத் தோட்டத்திற்கு பாதை வசதி செய்து கொடுத்து பிரச்சினைக்குச் சுமூக தீர்வு கண்டனர்.[35]

புதுக்குடியிருப்பு பங்கைச் சார்ந்த திரு. D. ஜேசுதாஸ் சந்திரா என்பவர் கொடுத்த ரூபாய் ஒரு லட்சத்தை வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்து அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை ஏழை மாணவர்களின் உயர் கல்விக்கு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.[36] 31.5.2004 அன்று நமது கிளைப்பங்காக இருந்த வடக்குக்கோணம் தனிப் பங்காகியது.[37] 9.6.2006 அன்று வட்டக்கரை தனிப் பங்காகியது.[38]


திரு. D. ஜேசுதாஸ் சந்திரா

**எட்டாவது பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை (2006 ஆகஸ்ட்முதல் 2009 ஆகஸ்ட்வரை)**

***நிர்வாகிகள்***

தலைவராக அருள்பணி M. பெஞ்சமின் லடிஸ்லாசும், அவரைத் தொடர்ந்து அருள்பணி. W. ஜார்ஜ் வின்சென்டும் தலைவராகப் பணியாற்றினர்.

துணைத் தலைவராக திரு. M. ரஸ்கின் பீட்டர் செயல்பட்டார். சுமார் 2½ ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் அவர் இராஜினாமா செய்ததையடுத்து திரு. D. அமலராஜா துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 6 மாதங்கள் பணியாற்றினார்.

| | |
|---|---|
| செயலாளர் | - திரு. G. ஜேசுரெத்தினம் |
| துணைச் செயலாளர் | - திரு. M. ஜேசு மரிய ராஜன் |
| பொருளாளர் | - திருமதி K. லில்லிமேரி தேவதாசன் |

**முக்கியப் பணிகள்**

குருசடி புனித அந்தோனியார் தொடக்கப் பள்ளி ஓட்டுக் கூரையிலான கட்டிடத்தில் செயல்பட்டு வந்தது. கட்டிடம் மிகவும் பழுதடைந்து இருந்தது. கல்வித்துறை அதிகாரிகளும் புதிய கட்டிடம் கட்ட பள்ளி நிர்வாகத்தை அறிவுறுத்தினர். எனவே பங்குத் தந்தை அருள்பணி. பெஞ்சமின் லடிஸ்லாஸ் முயற்சியில் ஆயர் இல்லம் மூலம் வெளிநாட்டிலிருந்து கிடைத்த சுமார் ரூபாய் 18,00,000.00த்தில் புதிய பள்ளிக் கட்டிடம் கட்டப்பட்டது. அது 03.01.2009 அன்று அப்போதைய கோட்டாறு மறைமாவட்ட ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.[39]

அருள்பணி. S. வின்சென்ட் வடகாட்டுவிளை நிலத்திற்கு கூடுதல் இழப்பீடு கேட்டு தாக்கல் செய்த L.A.O.P.No.1/1996 வழக்கில் 19.03.2008 அன்று தீர்ப்பு வந்தது. அதன்படி கூடுதல் இழப்பீடாக ரூபாய் 41,64,513த்தை 9% வட்டியுடன் வழங்க நாகர்கோவில் வருவாய்க் கோட்டாட்சியர் அறிவுறுத்தப்பட்டார்.[40]

அதுவரை பங்குத்தந்தையின் இல்லத்தில் செயல்பட்டு வந்த பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை அலுவலகத்திற்குத் தனியாக அலுவலகம்

35. திரு. R. ஜார்ஜ், குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 26.04.2020
36. மேலது
37. தூய அன்னாள் ஆலயம், வடக்கு கோணம், *50 ஆவது ஆண்டு பொன்விழா மலர்,* 1964 - 2014, ப. 19
38. வட்டக்கரை, புனித சூசையப்பர் ஆலயம் *பவள விழா மலர்,* 1942 - 2017, ப. 41
39. புனித அந்தோனியார் தொடக்கப் பள்ளி, குருசடி, *கல்வெட்டு,* நாள் 03.01.2009
40. *Order in LAOP No.1/1996 of Principal Subordinate Court,* Nagercoil, dated 19.03.2008


புனித அந்தோனியார் தொடக்கப் பள்ளி, குருசடி

அமைக்கப்பட்டு 02.08.2009 அன்று அப்போதையப் பங்குத்தந்தை அருள்பணி. W. ஜார்ஜ் வின்செண்ட் அவர்களால் திறக்கப்பட்டது.[41]

ஆரல்வாய்மொழியிலுள்ள நமது ஆலயத்திற்குச் சொந்தமான 10 ஏக்கர் 54 செண்ட் நிலத்திற்கு அதைத் தொட்டு மேற்கு பக்கம் இருந்த ஆழமான ஓடைதான் பாதையாக இருந்தது. நமது நிலத்திற்கு எதிரே உள்ள இடத்தில் சத்தியம் பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டபோது ஓடை போக மீதமுள்ள புறம்போக்கு நிலத்தையும் மற்றும் நமது ஆலயத்திற்குச் சொந்தமான 28.166 செண்ட் நிலத்தையும் சேர்த்து 30 அடி அகலப் பாதை நமது ஆலய நிர்வாகத்திற்குத் தெரியாமல் சத்தியம் கல்வி அறக்கட்டளையால் ஏற்படுத்தப் பட்டது. இதனால் நமது ஆலய நிர்வாகத்திற்கும் சத்தியம் கல்வி அறக்கட்டளைக்கும் பிரச்சினை ஏற்பட்டது. நமது நிலத்திற்கும் 30 அடி அகலப் பாதை கிடைத்ததால் இப்பிரச்சினையில் சமரசத் தீர்வு ஏற்பட்டது. பின்னர் இதற்காக 11.08.2009 அன்று நமது பங்குத்தந்தை அருள்பணி. W. ஜார்ஜ் வின்செண்டும் சத்தியம் கல்வி அறக்கட்டளையும் 28.166 செண்ட் நிலத்தில் பாதை அவகாச ஒப்பந்தப் பத்திரம் பதிவு செய்து கொண்டனர்.[42] தற்போது நமது சொத்திற்கு தார்ச் சாலை பாதையாக உள்ளது. இந்த விவகாரத்தில் மேய்ப்புப்பணிப் பேரவையினர் மிகச் சிறப்பாகச் செயல்பட்டனர்.

கார்மல்நகர் பங்கின் கிளைப்பங்காக இருந்த புன்னைநகர் நிர்வாக வசதிக்காக 20.04.2004 முதல் குருசடி பங்கின் கிளைப் பங்காக மாற்றப்பட்டது. அதுமுதல் நமது பங்குத்தந்தை புன்னைநகருக்குப் பொறுப்பாக இருந்தாலும், புன்னைநகர் மக்களின் ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்ற அருள்பணியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு புன்னைநகரில் தங்கியிருந்தார். 23.11.2008 அன்று புன்னைநகர் தனிப்பங்காக உயர்த்தப்பட்டது.[43]

**ஒன்பதாவது பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை (2009 ஆகஸ்ட்முதல் 2012 ஆகஸ்ட்வரை)**

***நிர்வாகிகள்***

| | | |
|---|---|---|
| தலைவர் | - | அருள்பணி. W. ஜார்ஜ் வின்செண்ட் |
| துணைத் தலைவர் | - | திரு. D. அமலராஜா |
| செயலாளர் | - | திருமதி Y. ஆல்பின் ராணி |
| துணைச் செயலாளர் | - | திரு. J. ஆன்றோ கிங்ஸ்லி |
| பொருளாளர் | - | திரு. A. ஆரோக்கியதாஸ் டைட்டஸ் |

**முக்கியப் பணிகள்**

இப்பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினரின் மூன்று ஆண்டு காலப் பணிக்காலத்தில் நமது ஆலயத்தின் நூற்றாண்டு விழா 2011ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ரூபாய் இரண்டு கோடி மதிப்பீட்டில் ஆலயம் சீரமைக்கப்பட்டது. இதற்காக ஆலய சீரமைப்புக் குழு ஒன்று பங்குத்தந்தை அருள்பணி. W. ஜார்ஜ் வின்செண்ட் தலைமையில் ஏற்படுத்தப்பட்டது. துணைத் தலைவராகப் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவைத்

41. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை அலுவலகம், குருசடி, *கல்வெட்டு,* நாள் 02.08.2009
42. *ஆவண எண்.1385/2009,* சார் பதிவாளர் அலுவலகம், தோவாளை.
43. புனித லூர்தன்னை ஆலயம், புன்னைநகர், நாகர்கோவில் - 4. *தனிப்பங்கு தொடக்க விழா மலர், 23.11.2008*

துணைத் தலைவர் திரு. D. அமலராஜாவும், செயலாளராக திரு. S. A. ரெத்தினதாசும், துணைச் செயலாளராகப் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவைச் செயலாளர் திருமதி Y. ஆல்பின் ராணி, பொருளாளராக திரு. S. மனோகரன் ஆகியோர் பொறுப்பேற்றனர். சீரமைப்புப் பணிகள் செவ்வனே நிறைவுப் பெற்று ஆலயம் 01.01.2011 அன்று கோட்டாறு மறைமாவட்ட ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ் அவர்களால் புனிதப் படுத்தப்பட்டது. ஆலயச் சீரமைப்புப் பணிகளில் இப்பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் சிறப்பாகச் செயல்பட்டனர். ஆலய சீரமைப்பு மற்றும் நூற்றாண்டு விழா குறித்து இன்னும் பல தகவல்களை "ஆலய நூற்றாண்டு விழா" என்ற தலைப்பின் கீழ் விரிவாகக் காண்போம்.

வடக்குக்கோணம் பங்கிற்குக் கோட்டாறு மறைமாவட்ட ஆயரின் 07.11.1986 தேதியிட்ட உத்தரவுப்படி 25 சென்ட் நிலம் கொடுக்கப் பட்டது. அந்த நிலத்தில் திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது. திருமண மண்டபத்தின் பயன்பாட்டிற்காகக் கூடுதல் நிலம் கேட்டு வடக்குக்கோணம் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் குருசடிப் பங்கு மேய்ப்புப்பணி பேரவையிடம் வேண்டுகோள் வைத்தனர். பின்னர் கோட்டாறு மறைமாவட்ட ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ் இரு பங்கு நிர்வாகிகளையும் அழைத்துப் பேசி 2.83 சென்ட் நிலத்தைக் குறைந்த விலைக்கு விற்பனை செய்யக் கேட்டுக் கொண்டார். அதன்படி 2010ஆம் ஆண்டு வடக்குக்கோணம் பங்கிற்கு 2.83 சென்ட் நிலம் நிலத்தின் வழிகாட்டு மதிப்பிற்கு (Guideline value) விற்பனை செய்யப்பட்டது. இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட 2.83 சென்ட் நிலத்திற்கு வடக்குப்பக்கம் தனி நபர் ஒருவருக்கும் சுமார் 2 சென்ட் நிலம் விற்பனை செய்யப்பட்டது.


நமது ஆலயத்திலுள்ள சிறிய தேர்

2011ஆம் ஆண்டு ஆலய நூற்றாண்டு திருவிழா தேரோட்டத்தின்போது சிறிய தேர் பழுதாகிவிட்டது. உடனடியாகப் பங்கு மக்களால் தேர் தற்காலிகமாகச் சரி செய்யப்பட்டு தேரோட்டம் நடைபெற்றது. எனவே பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் புதிய தேர் செய்து, 2012ஆம் ஆண்டு திருவிழாவின் போது அது ஓட்டப்பட்டது.[44]


நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டிடம்

44. திரு. D. அமலராஜா, குருசடி, *நேர்முகப்பேட்டி*, நாள் 30.04.2020


திருமதி. J. ஹெலன் டேவிட்சன்

குருசடி ஊரைச் சார்ந்த திருமதி J. ஹெலன் டேவிட்சன் 2009முதல் 2014ஆம் ஆண்டுவரை கன்னியாகுமரி நாடளுமன்ற உறுப்பினராக இருந்தார். இவருடைய தொகுதி மேம்பாட்டு நிதி யிலிருந்து ரூபாய் 5,00,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு புனித அந்தோனியார் தொடக்கப் பள்ளிக்கு ஒரு கட்டிடம் கட்டப்பட்டது. அந்தக் கட்டிடம் 12.07.2011 அன்று திருமதி J. ஹெலன் டேவிட்சன் அவர்களால் திறந்து வைக்கப் பட்டது.[45]

07-11-1986 தேதியில் கோட்டாறு மறைமாவட்ட ஆயரின் உத்தரவுப்படி நமது ஆலயத்திற்குச் சொந்தமான வட்டக்கரையிலுள்ள சாவடித் தட்டு வட்டக்கரை ஊருக்குக் கொடுக்கப்பட்டது. வட்டக்கரையைச் சார்ந்த பல குடும்பங்கள் அதில் வீடு கட்டி வாழ்ந்து வந்தனர். வட்டக்கரை பங்குத்தந்தையின் வேண்டுகோளுக்கிணங்க அந்தந்த வீட்டு உரிமையாளர்கள் பெயரில் அந்தந்த வீட்டு மனை எழுதிக் கொடுக்கப்பட்டது.[46]

2012 ஆம் ஆண்டு பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் பெரும்பான்மையான உறுப்பினர் களும், துணைத்தலைவரும் ராஜினாமா செய்ததால் கோட்டாறு மறைமாவட்ட ஆயர் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையையும் பங்கு நிதிக் குழுவையும் கலைத்து உத்தரவிட்டார். பின்னர் புதிய நிதிக்குழுவையும் ஆயர் நியமித்தார்.[47]

**ஆயரால் நியமிக்கப்பட்ட நிதிக் குழுவின் நிர்வாகிகள் வருமாறு**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | அருள்பணி. W. ஜார்ஜ் வின்செண்ட் |
| துணைத் தலைவர் | - | திரு. S. கிரேஸ் நேவிஸ் பிராஸ்பர் |
| செயலாளர் | - | திரு. G. புஷ்பராஜ் |
| பொருளாளர் | - | திருமதி R. மேரி பென்சிபாய் |

புதிய நிதிக்குழு உறுப்பினர்கள் 5 மாதங்கள் தங்கள் பணியைச் செவ்வனே செய்து அடுத்த பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையிடம் பொறுப்புக்களை ஒப்படைத்தனர்.

**பத்தாவது பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை (2012 ஆகஸ்ட்முதல் 2015 ஆகஸ்ட்வரை)**

தலைவராக அருள்பணி. W. ஜார்ஜ் வின்செண்ட் பணியாற்றினார். அவர் 16.06.2013 அன்று மாறுதலாகிச் சென்றார். பின்னர் அருள்பணி. L. தார்சியுஸ் ராஜ் பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்று, பங்கு மேய்ப்புப்பணிப் பேரவைத் தலைவராகப் பணியாற்றினர்.

| | | |
|---|---|---|
| துணைத் தலைவர் | - | திரு. M. கிரகோரி ஆசிரியர் |
| செயலாளர் | - | திரு. J. ஆன்றோ கிங்ஸ்லி |
| துணைச் செயலாளர் | - | திரு. A. வற்கீஸ் |
| பொருளாளர் | - | திருமதி M. டூஸ்லின் மெல்ற்றி |

45. மேலது
46. *ஆவண எண்.1770/2010,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்
47. *ஆயரின் உத்தரவு No. Gen-9/2012, 14.03.2012*

**முக்கியப் பணிகள்**

ஒவ்வோர் ஆண்டும் திருவிழாவில் முதல் நாள் ஏற்றப்படும் திருக் கொடியானது திருவிழா முடிந்த அடுத்த நாள் திங்கள்கிழமை காலையில் இறக்கப்படுவது வழக்கமாக இருந்தது. அருள்பணி. W. ஜார்ஜ் வின்சென்ட் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையைக் கலந்து ஆலோசித்து 10ஆம் திருவிழா மாலையில் கொடியை இறக்கத் திட்டமிடப்பட்டது. அதன்படி 2013ஆம் ஆண்டு முதல் 10ஆம் திருவிழா மாலையில் கொடி இறக்கப்படுகிறது.[48]

கொல்வேல் பங்கில் புதிய ஆலயம் கட்ட குருசடி பங்கு மக்களிடையே நிதி வசூல் செய்ய பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் அனுமதியளித்தனர். கொல்வேல் பங்கு மக்கள் நமது பங்கில் நமது பங்குத்தந்தை அருள்பணி. W. ஜார்ஜ் வின்சென்ட் அவர்களின் முயற்சியில் ரூ.1,99,000 வசூல் செய்தனர்.[49]

வடகாட்டுவிளையை அரசு கையகப் படுத்தியதின் விளைவாக நமது ஆலயத்திற்குக் கிடைக்க வேண்டிய கூடுதல் இழப்பீட்டுத் தொகையைப் பெற அருள்பணி. W. ஜார்ஜ் வின்சென்ட் நீதிமன்றத்தில் நிறைவேற்றுகை மனு எண் 124/2011 தாக்கல் செய்து பணத்தைப் பெற முயற்சிகள் செய்தார். இந்நிலையில் அவர் மாறுதலாகிச் சென்ற பிறகு பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்ற அருள்பணி. L. தார்சியுஸ் ராஜ் துரித முயற்சிகள் மேற்கொண்டு 21.09.2013 அன்று ரூபாய் 63,31,968.00த்தை நீதிமன்றத்திலிருந்து பெற்றுக்கொண்டார். வழக்கு நடத்திய வழக்கறிஞருக்கு ரூபாய் 5,00,000.00 கட்டணமாகக் கொடுக்கப்பட்டது.[50] ரூபாய் 58,31,968.00 நமது பங்கிற்குக் கிடைத்தது. சொத்திற்காகக் கிடைத்த பணம் என்பதால் இந்தப் பணத்தை வைத்து சொத்து வாங்க வேண்டுமென்று பங்கு மக்கள் பங்குத் தந்தையைக் கேட்டுக்கொண்டனர். பின்னர் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினரைக் கலந்து ஆலோசித்து மறுகால்தலைவிளையில் (நீண்டகரை 'A' மேற்கு கிராமத்தில்) 1 ஏக்கர் 12½ சென்ட் தென்னந்தோப்பு நமது ஆலயத்தின் பெயரில் 25.02.2015 அன்று ரூபாய் 58,34,680.00க்கு விலைக்கு வாங்கப்பட்டது.[51] இப்பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு ஆலயத்தின் பெயரில் சொத்து வாங்கியுள்ளனர்.

2014ஆம் ஆண்டு ஆலயத் திருவிழாவில் தேரோட்டம் அன்று பெரிய தேரானது பழுதடைந்ததால் புதிய தேர் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. பங்கு மக்களிடம் இதற்காக நன்கொடை வசூலிக்கப்பட்டது. பின்னர் சுமார் ரூபாய் 10,00,000.00 செலவில் பெரிய தேர் புதிதாகச் செய்யப்பட்டு 2015ஆம் ஆண்டு



நமது ஆலயத்திலுள்ள பெரிய தேர்

48. திரு. M. கிரகோரி, குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 30.04.2020
49. *ஆயர் பங்குச் சந்திப்பு அறிக்கை,* நாள் 28.08.2016, ப. 4
50. அருள்பணி. L. தார்சியுஸ் ராஜ், *நேர்முகப்பேட்டி,* நாள் 15.05.2020
51. *ஆவண எண். 540/2015,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்

திருவிழாவின் போது ஒட்டப்பட்டது.[52] நமது ஆலயத்திலிருந்த ஜெனரேட்டர் போதுமானதாக இல்லாமல் இருந்தது. எனவே தேர் செய்வதற்கு வேண்டிய தொகைக்கு அதிகமாக வசூலான தொகையில் ஜெனரேட்டர் மாற்றப்பட்டு புதிய ஜெனரேட்டர் வாங்கப்பட்டது.[53] இதனால் தற்போது ஆலயம் முழுவதும் தடையின்றி மின்சாரம் கிடைக்கிறது.

நில ஆக்கிரமிப்பைத் தடுக்கும் பொருட்டு மேலச்சூரங்குடியிலுள்ள மாதா தோப்பைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் கட்டப்பட்டது.[54]

நமது பங்குத்தந்தை அருள்பணி. L. தார்சியுஸ் ராஜ் முயற்சியில் சகாயபுரம் பங்கின் கிளைப் பங்கான காமராஜர்புரத்தில் புதிய ஆலயம் கட்ட நமது பங்கு மக்களால் ரூ.1,30,000 நன்கொடையாக வழங்கப்பட்டது.[55]

நமது ஆலய வளாகத்திலுள்ள சிற்றாலயத்தில் பழுதுகள் ஏற்பட்டன. எனவே சிற்றாலயத்தைப் புதுப்பிக்கப் பங்கு மேய்ப்புப் பணிப் பேரவையினர் திட்டமிட்டனர். குருசடி ஊரைச் சார்ந்த திரு. S. ஆன்றனி டைட்டஸ் நிலோபர் தன்னுடைய சொந்தச் செலவில் மிக அழகாக அதனைப் புதுப்பித்தார். புதுப்பிக்கப்பட்ட சிற்றாலயத்தைப் பங்குத்தந்தை அருள்பணி L. தார்சியூஸ் ராஜ் 24.12.2014 அன்று புனிதப்படுத்தினார்.


திரு. S. ஆன்றனி டைட்டஸ் நிலோபர்

2014ஆம் ஆண்டு முதல் நமது பங்கில் திருமணமாகி 25 மற்றும் 50ஆம் ஆண்டுகளை கொண்டாடும் தம்பதிகளைத் திருக்குடும்ப விழா அன்று ஞாயிறு திருப்பலியில் அழைத்து கௌரவப்படுத்தும் நிகழ்ச்சி குடும்ப நல பணிக்குழுவுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2014ஆம் ஆண்டு முதல் 10ஆம் திருவிழா திருப்பலி நிறைவடைந்தவுடன் பாம்பன்விளை கப்புச்சின் துறவுஅவை அருள்பணியாளர்களை வைத்து புனித அந்தோனியாரின் திருப்பண்டம் முத்தம் செய்ய பக்தர்களுக்குக் கொடுக்கும் நடைமுறை ஏற்படுத்தப்பட்டது. இதனால் நமது ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. இந்நிகழ்ச்சிக்கு நமது பங்கில் செயல்படும் புனித வின்சென்ட் தே பவுல் சபையினர் பெரிதும் உதவி செய்கின்றனர்.

### பதினொன்றாவது பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை (2015 ஆகஸ்ட்முதல் 2018 ஆகஸ்ட் வரை)

#### நிர்வாகிகள்

தலைவராக ஒரு ஆண்டு காலம் அருள்பணி. L. தார்சியுஸ் ராஜ் அவர்களும், அவர் மாறுதலாகிச் சென்ற பிறகு பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்ற அருள்பணி. பிரான்சிஸ் M. போர்ஜியாவும் பணியாற்றினர்.

துணைத் தலைவர் - திரு. D. அமலராஜா

செயலாளர் - திரு. M. ஜாண்சன் பால்ராஜ்

துணைச் செயலாளர்- திரு. S. கிங்ஸ்லி ஜெகன் ஆன்றனி

பொருளாளர் - திருமதி K. லில்லிமேரி தேவதாசன்

#### முக்கியப் பணிகள்

2014ஆம் ஆண்டு குருசடிப் புனித திருச்சிலுவை கல்லூரி வளாகத்திற்குள் மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் பள்ளியை (CBSE) அருள்சகோதரிகள் ஆரம்பித்தனர். இந்தப் பள்ளியைத் தொடங்கத் திருச்சிலுவை அருள்சகோதரிகள் துறவுஅவையின் அப்போதைய தலைமை அருள்சகோதரி யூஜின் டிசாசோ அனுமதி கொடுத்து அடிக்கல்லையும் நாட்டினார். நமது பங்கைச் சார்ந்த 30 குழந்தைகள் உள்பட மொத்தம் 132 குழந்தைகள் இப்பள்ளியில் சேர்ந்து படித்தனர். இந்நிலையில் 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பள்ளி நிர்வாகம் பெற்றோர்களை அழைத்து தங்கள் சபையின் மேலிடம் கல்லூரி வளாகத்திற்குள் பள்ளி செயல்படக்கூடாது

52. அருள்பணி. L. தார்சியுஸ் ராஜ், *நேர்முகப்பேட்டி*, நாள் 15.05.2020
53. மேலது
54. மேலது
55. *ஆயர் பங்குச் சந்திப்பு அறிக்கை*, நாள் 28.08.2016, ப. 4

என்று முடிவு செய்துள்ளது என்றும் எனவே வரும் கல்வியாண்டு முதல் பள்ளி செயல்படாது என்றும் கூறினர். இதனால் பிரச்சனைகள் ஏற்பட்டது. பின்னர் நமது பங்கைச் சார்ந்த குழந்தைகளின் பெற்றோர் நமது பங்குத்தந்தை அருள்பணி. L. தார்சியுஸ் ராஜ் அவர்களிடம் புகார் மனு கொடுத்தனர். 03.01.2016 அன்று நடைபெற்ற பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் அவசரக் கூட்டத்தில் பள்ளியைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று திருச்சிலுவை அருள்சகோதரிகள் துறவுஅவைத் தலைமை சகோதரிக்கும், மறைமாவட்ட ஆயருக்கும் பங்குத்தந்தை கடிதம் எழுத வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் இப்பிரச்சினையைக் கையாள பங்குத்தந்தையின் தலைமையில் ஒரு சிறப்புக் குழு ஏற்படுத்தப் பட்டது. இதில் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவைத் துணைத் தலைவர் திரு. D. அமலராஜா மற்றும் செயலாளர் திரு. M. ஜாண்சன் பால்ராஜ் மற்றும் பேரவை உறுப்பினர்கள் திருவாளர்கள் P. லீனஸ் ராஜ், A. புஷ்ப ராஜ், M. ஆன்றனி ஜெலாஸ்டின், S. ராஜன், D. சேவியர், S. எட்வின் சார்லஸ், A. லீயோன், K. ஜோசப் தங்கராஜ் மற்றும் Y. ஆல்வின் ஆகியோர் இடம் பெற்றனர்.[56] தீர்மானத்தின்படி பங்குத்தந்தை கடிதம் எழுதினார். திருச்சிலுவை அருள்சகோதரிகளை இக்குழுவினர் நேரில் சந்தித்துப் பள்ளியைத் தொடர்ந்து நடத்த வலியுறுத்தப்பட்டது. மறைமாவட்ட ஆயரும் திருச்சிலுவை அருள்சகோதரிகள் துறவு அவையின் தலைமை சகோதரியிடம் பேசினார். திருஅவைச் சட்டத்தின்படி துறவுஅவை தனி அதிகாரத்துடன் செயல்படும் அமைப்பாகும். எனவே திருச்சிலுவை அருள்சகோதரிகள் தங்கள் முடிவில் மாற்றம் செய்யாமல் பள்ளி மூடப்பட்டது. குருசடிப் பங்கில் உள்ள மாணவ மாணவியருக்குத் தரமான கல்வி பெறுவதற்குக் கிடைத்த வாய்ப்பு பறிபோனதை நினைத்து பங்கு மக்கள் வருத்தப்பட்டனர்.[57]

நமது கல்லறைத் தோட்டத்திற்கான பாதையில் நான்கு சக்கர வாகனம் செல்ல முடியாமல் இருந்தது. எனவே பாதை விரிவாக்கம் செய்யப்பட்டு, கல்லறைத் தோட்டத்திற்குள்ளேயும் பாதை நீட்டிக்கப்பட்டது.


புதுப்பிக்கப்பட்ட சின்னக்கோவில்


திரு. D. மரிய ஜாண் கென்னடி

2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் புதுப்பிக்கப்பட்ட சிற்றாலயத்தின் முன்பு பக்தர்கள் வழிபாடு செய்ய வசதியாக தகர ஷீட்டுகளால் முன் மண்டபம் அமைக்கப்பட்டது. இதனைத் தன் சொந்த நிதியில் அமைத்துக் கொடுத்தவர் திரு. D. மரிய ஜாண் கென்னடி ஆகும்.

வடகாட்டுவிளை சொத்து சம்மந்தமாக நீதிமன்றத்திலிருந்து கிடைத்த பணம் ரூபாய் 63,31,968.00 போக இன்னும் வட்டித் தொகையாக ரூபாய் 1,04,00,528.00 வரவேண்டியுள்ளது என்று அருள்பணி. L. தார்சியுஸ் ராஜ் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.[58] அந்த மனு தற்போதும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. நமது ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை திருப்பலி நிறைவேற்ற வேண்டுமென்ற மக்களின் கோரிக்கையை ஏற்று, அருள்பணி. L. தார்சியுஸ் ராஜ் அவர்களால் தொடங்கப்பட்டு, தற்போதும் அது நடைமுறையிலிருக்கிறது.[59]

56. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை, குருசடி, *தீர்மானம்,* நாள் 03.01.2016
57. திரு. D. அமலராஜா, குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 15.05.2020
58. அருள்பணி. L. தார்சியுஸ் ராஜ், *நேர்முகப்பேட்டி,* நாள் 15.05.2020
59. மேலது

அருள்பணி L. தார்சியுஸ் ராஜ், 2015ஆம் ஆண்டு மே மாதம் முதல் மறைமாவட்ட திருமண நீதிமன்றத்தில் நீதிபதி பொறுப்பைக் கூடுதலாகக் கவனித்து வந்தாலும், 2016ஆம் ஆண்டு மே மாதம் முதல் நீதிபதியாக முழு நேரமும் கவனிக்க வேண்டியிருந்ததாலும், புனித சவேரியார் சட்ட உதவி மைய இயக்குனர் பொறுப்பையும் கவனிக்க வேண்டியிருந்ததாலும், நமது பங்கிலிருந்து 03.06.2016 அன்று மாற்றப்பட்டார். பின்னர் அருள்பணி. பிரான்சிஸ் M. போர்ஜியா பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்றார்.

நமது பங்குத்தந்தை அருள்பணி. பிரான்சிஸ் M. போர்ஜியா முயற்சியில் திக்குறிச்சி பங்கின் கிளைப்பங்கான கல்லுப்பாலத்தில் புதிய ஆலயம் கட்ட நமது பங்கு மக்களால் 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ரூ.1,52,340 நன்கொடையாக வழங்கப்பட்டது.[60]

நமது ஆலயக் கொடிமரம் மிகவும் பழைமை வாய்ந்ததாகும். இந்தக் கொடிமரம் எப்போது நாட்டப்பட்டது என்பதை அறிய முடியவில்லை. தற்போது உள்ள ஆலயம் கட்டப்படுவதற்கு முன்பே இக்கொடிமரம் உள்ளது. இது ஒரே கல்லினால் செதுக்கப்பட்டதும் 25 அடி உயரம் கொண்டதும் ஆகும். அதற்கு மேலே 25 அடி உயரம் கொண்ட ஒரே மரத்திலான பிள்ளைக் கொடிமரம் இணைக்கப்பட்டிருந்தது. அதற்கு மேல் 3 அடி உயரமுள்ள சிலுவை வைக்கப் பட்டிருந்தது. பிள்ளைக் கொடிமரமானது திருவிழாக் காலங்களில் உயர்த்தியும் மற்றக் காலங்களில் தாழ்த்தியும் வைப்பதற்கு வசதியாக இருந்தது. இக்கொடிமரத்தின் அடிப்பகுதியில் நான்கு பக்கமும் புனித தோமையார் காலத்து வடிவிலான குருசானது செதுக்கப்பட்டிருந்தது. இக்கொடிமரம் பழுதடைந்ததால் அதை மாற்றிப் புதிய கொடிமரம் அமைக்கத் திட்டமிடப்பட்டது. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையில் பங்குத்தந்தை அருள்பணி. பிரான்சிஸ் M. போர்ஜியா தலைமையில் இதற்காக ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. அதில் திருவாளர்கள் D. மரிய ஜாண் கென்னடி, S. எட்வின் சார்லஸ், S. ராஜன், Y. ஆல்வின், P. சிம்சன், M. ஜேசு மரிய ராஜன், J. அருள்தாசன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுடன் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை நிர்வாகிகள் இணைந்து செயல்பட்டனர்.[61] பங்கு மக்களிடம் நன்கொடை வசூலிக்கப்பட்டன. சுமார் 18 இலட்சம் ரூபாய் செலவில் 57 அடி உயரமான புதிய கொடிமரம் பழைய கொடிமரம் இருந்த அதே இடத்தில் அமைக்கப்பட்டு 05.01.2018 அன்று கோட்டாறு மறைமாவட்ட ஆயர் மேதகு நசரேன் சூசையால் புனிதப்படுத்தப்பட்டது.[62] புதிய கொடிமரம் அமைப்பதில் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை நிர்வாகிகளும், சிறப்புக் குழுவினரும் சிறப்பாகச் செயல்பட்டனர். பழைய கொடிமரம் சிற்றாலத்தின் முன்பு நாட்டப்பட்டுள்ளது.


புதிய கொடிமரம்

ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று பங்கு

60. *ஆயர் பங்குச் சந்திப்பு அறிக்கை,* நாள் 28.08.2016, ப. 4 - 5
61. திரு. D. அமலராஜா, குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 15.03.2020
62. குருசடி, புனித அந்தோனியார் ஆலயக் கொடிமரம், *கல்வெட்டு,* நாள் 05.01.2018

மேய்ப்புப்பணிப் பேரவையில் பங்குத்தந்தை அருள்பணி. பிரான்சிஸ் M. போர்ஜியா தெரிவித்தார். பேரவை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அதனை ஏற்றுக்கொண்டு, அத்திட்டத்திற்கான விதிமுறைகளை வகுக்க ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. விதிமுறைகள் வரையறுக்கப்பட்ட பிறகு அத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. மேலும் ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் கிடைக்கும் காணிக்கை அத்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஆலயத்தில் இருந்த சிறிய நகைகள் பலவற்றை விற்பனை செய்து, அந்தத் தொகை இத்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பலர் பயன்பெற்று வருகின்றனர்.[63] திருமண உதவி மட்டுமல்லாமல், ஏழை மக்களுக்கு மருத்தவ செலவுகளுக்காகவும் பண உதவி அத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்டு வருகிறது.

**பன்னிரண்டாவது பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை (2018 ஆகஸ்ட்முதல் 2021 ஆகஸ்ட் வரை)**

**நிர்வாகிகள்**


தலைவராக அருள்பணி. பிரான்சிஸ் M. போர்ஜியா செயல்பட்டார். அவர் 10.07.2021 அன்று மாறுதலாகிச் சென்றார். பின்னர் அருள்பணி. M. பெர்பெச்சுவல் ஆன்றனி பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்று பங்கு மேய்ப்புப்பணி பேரவைத் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

| | |
|---|---|
| துணைத் தலைவர் | - திரு. D. மரிய ஜாண் கென்னடி |
| செயலாளர் | - திருமதி டெய்சி மதன் |
| துணைச் செயலாளர் | - திரு. E. ஜாண்சன் |
| பொருளாளர் | - திரு. S. A. ரெத்னதாஸ் |

**முக்கியப் பணிகள்**

நமது ஆலயத்தில் இருந்த சிறிய மின்விசிறிகளால் போதிய காற்றோட்ட வசதி இல்லையென்று பங்கு மக்கள் உணர்ந்தனர். எனவே சிறிய மின்விசிறிகளை மாற்றி விட்டு, இரண்டு பெரிய மின்விசிறிகளைப் பொருத்தினர். இதற்கு மொத்த செலவு ரூபாய் 4,34,780.00 ஆகும். இதற்காக பங்கு மக்களிடம் நன்கொடையும் வசூலிக்கப்பட்டது. பங்கு மக்களிடமிருந்து ரூபாய் 2,46,900.00 வசூலிக்கப்பட்டது. மீதமுள்ளத் தொகை ரூபாய் 1,87,880.00 பங்கு நிதியிலிருந்து கொடுக்கப்பட்டது.[64]

குருசடி ஊரைச் சார்ந்த திரு. M. காவல் அந்தோணிமுத்து மகன் திரு. K. மரிய ஜாண் ஜோசப் தனக்குச் சொந்தமான நாகர்கோவில் தெற்குக் கிராமம் புதிய சர்வே எண்.J5/9-2ல் 1 செண்ட் 125 சதுர லிங்ஸ் மனையையும் அதிலிருக்கும் நான்கு அடுக்குகள் கொண்ட கெபியையும் நமது ஆலயத்திற்குத் தானமாகக் கொடுக்க விரும்புவதாகத் தாமாக முன்வந்து 2015ஆம் ஆண்டுமுதல் 2018ஆம் ஆண்டு வரை பொறுப்பிலிருந்த பங்கு மேய்ப்புப்பணிப் பேரவைக்கு மனு செய்தார். உடனடியாகத் தானப் பத்திரம் எழுதி வாங்கப்படவில்லை. அடுத்து வந்த இப்பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் பொறுப்பேற்றவுடன் திரு.



திரு. K. மரிய ஜாண் ஜோசப் தானமாகக் கொடுத்த கெபி

63. திரு. D. அமலராஜா, குருசடி, *நேர்முகப்பேட்டி*, நாள் 15.05.2020
64. திரு. S.A. ரெத்னதாஸ், குருசடி, *நேர்முகப்பேட்டி*, நாள் 16.05.2020

K. மரிய ஜாண் ஜோசப் மேற்குறிப்பிட்ட சொத்தையும் கெபியையும் நமது ஆலயத்திற்குத் தானமாகக் கொடுத்தார்.[65] அந்தத் தானப் பத்திரத்தில் எந்த நிபந்தனையும் சொல்லப் படவில்லை.



திரு. K. மரிய ஜாண் ஜோசப்

நமது பங்குத்தந்தை அருள்பணி. பிரான்சிஸ் M. போர்ஜியா முயற்சியால் பள்ளவிளையில் புதிய ஆலயம் கட்ட 2019ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ரூ. 2,73,036 நமது பங்கு மக்களால் நன்கொடையாக வழங்கப்பட்டது.[66]

## கொரோனா வைரஸ் தொற்று

2020ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இந்தியாவில் கொரோனா வைரஸ் தாக்கத் தொடங்கியது. படிப்படியாக இந்தியாவில் அதன் தாக்கம் அதிகரித்தது. இதனால் 22.03.2020 அன்று இந்தியா முழுவதும் 1 நாள் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனவே 22.03.2020 அன்று மக்கள் அனைவரும் வீடுகளில் இருந்தனர். பின்னர் 25.03.2020 முதல் 14.04.2020வரை 21 நாட்கள் இந்தியா முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் விமானம், இரயில் மற்றும் பேருந்துப் போக்குவரத்துகள் முற்றிலும் நிறுத்தப்பட்டன. அத்தியாவசியப் பொருட் களுக்கான மருந்துக்கடை, பால், மளிகைக்கடை, காய்கறிக் கடைகள் மட்டும் திறக்க அனுமதிக்கப்பட்டன. மக்கள் அனைவரும் வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர். இதனால் மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களையும் வருவாயையும் இழந்தனர். பின்னர் 15.04.2020 முதல் 03.05.2020 வரை 19 நாட்களுக்கு ஊரடங்கு நீட்டிக்கப்பட்டது. இதனால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். முகக்கவசம் அணிந்து வெளியில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். 22.03.2020 முதல் 31.08.2020 வரை நமது ஆலயங்களில் மக்கள் அனுமதிக்கப்படவில்லை. இந்தியாவிலும் இந்நோயினால் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இறந்து போயினர். வழிபாடுகள் அனைத்தும் அருள்பணியாளர் மற்றும் ஆலயப் பணியாளர்களால் மட்டும் நடத்தப்பட்டது. 05.04.2020 அன்று குருத்தோலை திருவிழா நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அந்த வாரம் புனித வாரச் சடங்குகள் நடைபெற்றன. இதிலும் மக்கள் பங்கேற்க அனுமதிக்கப் படவில்லை. சில ஆலயங்களில் வழிபாட்டு நிகழ்ச்சிகள் உள்ளூர் தொலைக்காட்சியில் நேரலையாக ஒளிபரப்பப்பட்டன. நமது ஆலயத்திலும் புனித வாரச் சடங்குகள் மற்றும் ஞாயிறு மற்றும் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற திருப்பலிகள் உள்ளூர் தொலைக்காட்சிகளில் நேரலையாக ஒளிபரப்பப்பட்டன. மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்து மிகவும் சிரமப்பட்டனர். எனவே நமது பங்கு நிர்வாகம் சார்பில் நமது பங்கிலுள்ள ஏழை மக்களுக்குக் கடனுதவி செய்ய முன்வந்தனர். அதன்படி 276 குடும்பங்களுக்கு தலா ரூபாய் 2000 வீதம் வட்டியில்லா கடன் கொடுக்கப்பட்டது. அந்தத் தொகையைப் பெற்றவர்கள் 31.10.2020க்குள் திருப்பிச் செலுத்தக் கேட்டுக் கொள்ளப் பட்டார்கள். மிகவும் வறுமையில் வாடும் 28 ஏழைக் குடும்பங்களுக்கு தலா ரூபாய் 2000 வீதம் இலவசமாகக் கொடுக்கப்பட்டது.[67] கொரோனா வைரஸ் தொற்றுக் காலத்தில் இப்பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் நிர்வாகிகள் சிறப்பாகச் செயல்பட்டுள்ளனர். ஒவ்வோர் ஆண்டும் மே மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுவந்த ஊர்கூடி அசனம் 2020ஆம் ஆண்டு நடைபெறவில்லை. பின்னர் 01.09.2020 முதல் திருப்பலியில் பங்கேற்க 100 நபர்கள் அனுமதிக்கப்பட்டனர். எனவே ஞாயிறு காலைத் திருப்பலியை இரண்டு அன்பியங்களும் மாலைத் திருப்பலியை இரண்டு அன்பியங்களும் சிறப்பித்தன. 20.12.2020 முதல் ஞாயிறு காலைத்

65. *ஆவண எண். 3166/2018,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்
66. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை, குருசடி, *தீர்மானம்,* நாள் 01.09.2019
67. திரு. S.A. ரெத்னதாஸ், குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 16.05.2020

திருப்பலியை மூன்று அன்பியங்களும் மாலைத் திருப்பலியை மூன்று அன்பியங்களும் சிறப்பித்தனர். சில நாள்கள் கழித்து ஞாயிறு காலைத் திருப்பலியை நான்கு அன்பியங்களும் மாலைத் திருப்பலியை நான்கு அன்பியங்களும் சிறப்பித்தனர். இந்நிலையில் 2021ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் கொரோனா வைரசின் இரண்டாம் அலை நாடு முழுவதும் பரவத் தொடங்கியது. இதனால் 25.04.2021 முதல் ஆலயத்தில் திருப்பலியில் பொதுமக்கள் அனுமதிக்கப்படவில்லை. பங்குத்தந்தையும் ஆலயப் பணியாளர்களும் மட்டும் திருப்பலி நிறைவேற்றினர். 11.05.2021முதல் 07.06.2021வரை முழு ஊரடங்குப் பிறப்பிக்கப் பட்டது. 08.06.2021முதல் தளர்வுகளுடன் கூடிய ஊரடங்குப் பிறப்பிக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டு வழக்கமாக நடைபெறும் ஊர்கூடி அசனம் நடைபெறவில்லை. புனித அந்தோனியாரின் தேதிப்படியான திருவிழாவான ஜூன் 13 அன்றும் திருப்பலியில் பொதுமக்கள் அனுமதிக்கப்படவில்லை. அந்தத் திருப்பலி நேரலையாக ஒலிபரப்பப்பட்டது. பின்னர் 05.07.2021முதல் மீண்டும் திருப்பலியில் 50 நபர்கள் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

## தொல்லவிளை சொத்தும் நீதிமன்ற வழக்குகளும்

குருசடித் திருச்சிலுவைக் கல்லூரி அருள்சகோதரிகளுக்கு வெளிநாட்டிலிருந்து ஏழை மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க நிதி உதவி கிடைத்தது. எனவே 1973ஆம் ஆண்டு தொல்லவிளைச் சொத்தில் சபையார் அனுமதியுடன் அருள்சகோதரிகள் ஐந்து வீடுகள் கட்டி, அங்கு ஐந்து கத்தோலிக்கக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. தொல்லவிளையில் குடியிருப்பதில் கத்தோலிக்க மக்களுக்கு பல பிரச்சினைகள் ஏற்பட்டதால், அவர்கள் அந்த வீடுகளை இந்து சமயத்தைச் சார்ந்தவர்களுக்கு ஆலய நிர்வாகத்திற்குத் தெரியாமல் கைமாற்றம் செய்து கொடுத்து விட்டனர். இவ்வாறு கைமாற்றம் செய்து வாங்கியவர்கள் ஆலயத்திற்கு வீட்டுவாடகை செலுத்தி வந்தனர். நாளடைவில் அவர்கள் அங்கு கூடுதல் இடங்களை ஆக்கிரமிக்கத் தொடங்கினர். இதனால் ஆலய நிர்வாகத்திற்கும் வாடகைக்குக் குடியிருப்பவர்களுக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது. எனவே வாடகைக்கு குடியிருந்த திரு. லோகநாதன், திரு. ஜாண்சன், திரு. கணேசன் ஆகியோர் தாங்கள் குடியிருக்கும் வீடு மற்றும் அதைச் சார்ந்த 19 சென்ட் நிலத்திலிருந்து தங்களைச் சட்டப்பூர்வமான வழிகளில் அல்லாமல் வேறு வழியில் வெளியேற்றக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி நாகர்கோவில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.408/2006இல் ஆலயத்திற்கு எதிராகவும், அப்போதைய பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை துணைத்தலைவர் திரு. A. முத்தையாவிற்கு எதிராகவும் வழக்கு தொடர்ந்தனர். இவ்வழக்கு சில ஆண்டு காலம் நடந்து வந்தது. அதில் நமது ஆலயத்தின் சார்பாக அப்போதைய பங்குத்தந்தை அருள்பணி. W. ஜார்ஜ் வின்செண்டும் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவைத் துணைத் தலைவர் திரு. D. அமலராஜாவும் சாட்சியம் அளித்தனர். இவ்வழக்கில் 15.12.2009 அன்று மேற்படி மூன்று நபர்களைச் சட்டப்பூர்வமான வழிகளில் அல்லாமல் வெறியேற்றக் கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளைப் பிறப்பிக்கப்பட்டது. பின்னர் அருள்பணி. L. தார்சியுஸ் ராஜ் 2013ஆம் ஆண்டு பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்றவுடன் இப்பிரச்சனையைக் கையாள ஒரு சிறப்புக் குழு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவினர் சட்டப் பூர்வமான வழிகளில் அந்த ஐந்து குடும்பங் களையும் வெளியேற்ற முயற்சி செய்தபோது, இரு தரப்புக்கும் சமரச உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி அவரவர் குடியிருக்கும் வீடு மற்றும் தலா சுமார் 1.5 செண்ட் நிலத்தை அவர்களுக்கு விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டது. அவர்களுக்குத் தெற்குப்பக்கமுள்ள தெருவிற்குச் செல்ல 9 அடி அகல பாதையும் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி சிலர் விலைத் தொகையை முழுவதையும் கொடுத்தனர். சிறிது தொகை கொடுத்து விட்டு மீதமுள்ள தொகையை செலுத்தச் சிலர் கால அவகாசம்

கேட்டனர். இந்நிலையில் 2016ஆம் ஆண்டு அருள்பணி. L. தார்சியுஸ் ராஜ் மாற்றப்பட்டு, அருள்பணி. பிரான்சிஸ் M. போர்ஜியா பொறுப்பேற்றார்.

கிரய ஆவணம் எழுதிக் கொடுக்க முயற்சி செய்தபோது, பதிவுத் துறையின் விதிமுறைகளால் சில பிரச்சனைகள் ஏற்பட்டு, கிரய ஆவணம் எழுதிக் கொடுக்க முடியவில்லை. இந்நிலையில் வீடுகளில் குடியிருந்தவர்களுள் சிலர் வீட்டை இடித்து புதிய வீடு கட்ட ஆட்சேபனை இல்லையென்று குடிசை மாற்று வாரியத்திற்கு கடிதம் கேட்டுப் பங்குத்தந்தை பிரான்சிஸ் M. போர்ஜியாவை அணுகினர். பங்குத் தந்தையும் ஆட்சேபனை இல்லையென்று சான்று கொடுத்தார். இதனால் திரு. கணேசன் தான் குடியிருந்த வீட்டின் ஒரு பகுதியை இடித்துவிட்டு புதிய வீடு கட்டினார். அதன் பிறகு ஏற்கெனவே வழக்குத் தொடர்ந்த மூவரும் வழக்கில் சம்மந்தப்பட்ட சுமார் 19 சென்ட் நிலத்தைச் சுற்றிப் பலாத்காரமாக இரும்பு முள்வேலி அமைத்தனர். இதனால் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் துணைத் தலைவர், செயலர், துணைச் செயலர் மற்றும் பொருளாளர் ஆகியோர் தங்களைக் கலந்து ஆலோசிக்காமல் பங்குத்தந்தையால் வீடு கட்டுவதற்கு ஆட்சோபனை இல்லையென கடிதம் கொடுக்கப் பட்டதாகவும் இதனால் பங்கிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மறைமாவட்ட ஆயருக்கு புகார் கொடுத்தனர். மறைமாவட்ட ஆயர் நசரேன் சூசை பங்குத்தந்தையையும், மற்ற நிர்வாகிகளையும் அழைத்து விசாரணை செய்தார். ஆயர் இப்பிரச்சனைக் குறித்து வழக்கறிஞர்கள் கருத்துருவும் பெற்றார். அச்சொத்தை ஆக்கிரமிப்பிலிருந்து தடுத்துச் சொத்தை மீட்க வேண்டி, தொல்லவிளைச் சொத்தை பங்குத்தந்தை பிரான்சிஸ் M. போர்ஜியாவின் நிர்வாகப் பொறுப்பிலிருந்து விடுவித்து, மறைமாவட்ட சொத்துக்களின் கண்காணிப்பாளராகப் பொறுப்பிலிருந்த அருள்பணி. P. பென்சிகரை தொல்லவிளைச் சொத்தின் நிர்வாகியாக 10.10.2020 அன்று நியமித்தார்.[68] அவர் 13.10.2020 அன்று கோட்டாறு வட்டார முதன்மைப் பணியாளர் அருள்பணி. L. மைக்கிள் ஏஞ்சலூஸ் முன்னிலையில் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அருள்பணி. P. பென்சிகருக்கு உதவியாக பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை நிர்வாகிகள் மற்றும் இப்பிரச்சினையை ஏற்கெனவே கையாண்ட முந்தைய பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் நிர்வாகிகளும் சிறப்புக் குழு உறுப்பினர்களும் செயல்பட்டனர். அருள்பணி. P. பென்சிகர் தலைமையில் சில கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டத்தில் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை நிர்வாகிகள் மற்றும் முந்தைய பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் சிறப்புக் குழு உறுப்பினர்களான திருவாளர்கள் D. அமலராஜா, P. லீனஸ் ராஜ், F. அமிர்தராஜ், S. ராஜன், S. கிங்ஸ்லி ஜெகன் ஆன்றனி, S. சிசில் கான்ஸ்டன்டைன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்கள் சொத்தில் வாடகைக்கு குடியிருக்கும் ஐந்து குடும்பங்களையும் அழைத்துப் பேசினார்கள். இதற்கிடையே வாடகைக்கு குடியிருப்பவர்களில் நான்கு நபர்கள் நாகர்கோவில் முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் O.S.Nos.287/2020, 309/ 2020, 310/2020, 323/2020இல் தங்களுக்கு விற்பனை செய்ய ஒத்துக் கொண்ட நிலத்திற்குக் கிரய ஆவணம் எழுதித் தர வேண்டுமென்று "ஏற்றதை ஆற்றுக" பரிகாரம் கோரி ஆலயத்திற்கு எதிராகவும், பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை துணைத் தலைவர் திரு. D. மரிய ஜாண் கென்னடிக்கு எதிராகவும் வழக்குத் தொடர்ந்தனர். இவ்வழக்கில் பங்குத் தந்தை பிரான்சிஸ் M. போர்ஜியாவுக்கு நீதிமன்றத்தி லிருந்து அழைப்பாணை வந்ததால், மறைமாவட்ட ஆயரின் வாய்மொழி உத்தரவின் படி அவரும் திரு. D. மரிய ஜாண் கென்னடியும் வழக்கை நடத்தினர். மறைமாவட்ட நிர்வாகம் சுட்டிக் காட்டிய வழக்கறிஞர் திரு. E. ஹரிகரன் ஆலயத்திற்காக ஆஜரானார். பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை துணைத் தலைவர்

68. ஆயரின் உத்தரவு No. Ch - 115/20 - 10.10.2020

திரு. D. மரிய ஜாண் கென்னடி நீதிமன்றத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தார். இந்நிலையில் பங்குத்தந்தை அருள்பணி. பிரான்சிஸ் M. போர்ஜியா 10.07.2021 அன்று மாற்றப்பட்டு அருள்பணி. M. பெர்பெச்சுவல் ஆன்றனி பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார். மேலும் தொல்லவிளைச் சொத்தின் நிர்வாகியாக ஏற்கெனவே நியமிக்கப்பட்டிருந்த அருள்பணி. P. பென்சிகரும் 10.07.2021 அன்று அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு அருள்பணி. M. பெர்பெச்சுவல் ஆன்றனி தொல்லவிளைச் சொத்தின் நிர்வாகியாக நியமிக்கப்பட்டார்.[69] தற்போது சொத்தில் வாடகைக்கு குடியிருக்கும் ஐந்து குடும்பங்களையும் வெளியேற்ற சட்ட முறைப்படியான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

**ஒவ்வொரு பங்கு மேய்ப்புப்பணிப் பேரவைக்கும் ஊர்கூடி அசனம் நடத்துவதும், ஆலயத் திருவிழா நடத்துவதும் முக்கியமான பணிகளாகும். அவற்றை விரிவாகக் காண்போம்.**

**ஊர்கூடி அசனம்**

ஆண்டு தோறும் மே மாதம் மாதா வணக்கமாகக் கொண்டாடப்படுகிறது. மே மாதம் தினமும் மாலையில் மாதா வணக்கமும், அதனைத் தொடர்ந்து மாலை ஆராதனையும் நடைபெறும். மே மாதம் கடைசிச் சனிக்கிழமை மாலையில் அலங்கரிக்கப்பட்ட மாதா சுரூபம் ஊர்வலமாக ஆலயத்தைச் சுற்றியுள்ள தெருக்களில் பவனியாக எடுத்து வரப்படுகிறது. கடைசி ஞாயிற்றுக்கிழமை ஊர்மக்கள் அனைவரும் இணைந்து ஊர்ஒற்றுமையை பறைசாற்றும் வண்ணம் ஊர்கூடி அசனம் நடத்தப்படும். திரு. மனோன்மணி ஸாரதி செல்வராஜ் எழுதிய *"பஞ்சவங்காடு வரலாறு"* என்ற புத்தகத்தில் 1952ஆம் ஆண்டு முதல் ஊர்கூடி அசனம் நடைபெறுவதாகக் குறிப்பிட்டுள்ளார். தொடக்க காலத்தில் மாலை 7.00 மணிக்கு ஊர்கூடி அசனம் நடைபெற்றது. ஒவ்வொரு குடும்பமும் குறிப்பிட்ட அளவு அரிசியும், ரூபாயும் கொடுக்க வேண்டும் என்று நடைமுறை இருந்தது. ஒவ்வொரு குடும்பத்தினரும் பாத்திரங்கள் கொண்டு வந்து அவர்களுக்குரிய உணவைப் பெற்றுச் சென்றார்கள். 1985ஆம் ஆண்டு பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை அமைக்கப்பட்ட பிறகு அரிசி கொடுக்கும் நடைமுறை மாற்றப்பட்டு, குறிப்பிட்ட தொகை மட்டும் வரியாக வசூலிக்கப்பட்டது. பின்னர் மாலை நேரம் நடைபெற்ற ஊர்கூடி அசனம் நண்பகல் வேளைக்கு மாற்றப்பட்டது. பின்னர் சமூகநலக் கூடம் கட்டப்பட்டபிறகு சமபந்தியாகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

## ஆலயத் திருவிழா

**புனித அந்தோனியார் வரலாறு**

நமது பாதுகாவலரான பதுவைப் பதியர் புனித அந்தோனியார் கோடி அற்புதர், புதுமை வள்ளல், அற்புத போதகர், ஏழைகளின் நண்பன், மறைவல்லுநர், காலத்தின் அறிகுறிகளைத் தெரிந்து திருமறைக் காத்த இறைவாக்கினர், நற்செய்தியைச் சொல்லாலும் செயலாலும் அறிவித்த இறைத்தூதர் எனப் பலவாறு புகழப்படும் இவர் போர்ச்சுக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பன் நகரில் 1195ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் பிறந்தார். இவரது தந்தை பெயர் மார்ட்தின் திபியோன். தாயார் பெயர் தேவரா தெரசம்மாள். இவர் 1210ஆம் ஆண்டு புனித அகஸ்தினார் துறவுஅவையில் சேர்ந்தார். 1219ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்றார். அந்தோனியாருக்குப் பிரான்சிஸ்கு துறவுஅவையின்மீது அதிக மதிப்பும் பற்றுதலும் ஏற்பட்டது. பிரான்சிஸ்குத் துறவுஅவையைச் சார்ந்த ஐந்து துறவிகள் மொராக்கோ நகர் தெருக்களில் நற்செய்தி அறிவித்ததால் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் நடைபெற்றது 16.01.1220. அந்த ஐந்து மறைசாட்சிகளையும் லிஸ்பனிலுள்ள மறைமாவட்ட ஆலயத்தில் நல்லடக்கம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. அவர்களின் இறுதி ஊர்வலம் அந்தோனியார் தங்கியிருந்த திருச்சிலுவை மடத்தருகே வந்தவுடன், ரதம்

69. *ஆயரின் உத்தரவு No. Ch - 101/21,* நாள் 30.06.2021

தடைபட்டு நின்று விட்டது. நின்ற நிலையை விட்டு ஓர் அடிகூட நகர முடியவில்லை. ஆகவே மறைசாட்சிகள் முன்னமே கூறியுள்ள இறைவாக்கு நினைவுக்கு வரவே திருச்சிலுவை மடத்திலேயே நல்லடக்கம் செய்தனர். அந்தோனியார் இந்த அற்புதமான நிகழ்வுகளை யெல்லாம் எண்ணி, பிரான்சிஸ்கு மடத்து துறவிகள்மீது மதிப்பும், பற்றுதலும் அதிகமாகக் கொண்டார். தாமும் ஒரு மறைசாட்சியாக ஆக வேண்டுமென்று பிரான்சிஸ்கு அசிசியார் துறவற சபையில் சேர்வதென தீர்மானித்தார். 22.09.1220 அன்று அந்தோனியார் பிராசிஸ்கன் சபையில் சேர்ந்தார். அங்குதான் பெர்தினாந்து எனும் தனது இயற்பெயருக்குப் பதிலாக அந்தோனியார் என்ற பெயர் சூட்டப்பட்டார்.[70]

அந்தோனியார் ஓர் இறையியல் வல்லுனர். அந்தோனியாருடைய பேச்சு வன்மையையும், ஞானத்தையும் மறையியல் அறிவையும் தவ ஒழுக்கத்தையும் கேள்வியுற்ற அசிசியார் "எனது சபையில் ஒரு மறை ஆயர் தோன்றியுள்ளார், கடவுள் பெயர் போற்றப்படுவதாக" என மகிழ்ச்சியோடு கூறினார். ஒரு நாள் அந்தோனியார் தன் நண்பரான டீசோ பிரபுவின் வீட்டில் தங்க வேண்டியிருந்தது. அவருக்கு ஒரு தனி அறை கொடுக்கப்பட்டிருந்தது. அன்று இரவு அந்தோனியார் தனி அறையில் வெகுநேரம் கண் விழித்துச் ஜெபித்துக் கொண்டிருந்தார். திடீரென ஒரு பேரொளி அந்த அறையை நிரப்பியது. இயேசு அழகும் அருளும் கொண்ட ஒரு குழந்தை வடிவில் அங்கே தோன்றினார். குழந்தை இயேசுவைக் கையில் ஏந்தி விளையாடி மகிழ்ந்தார். இன்று அந்த இடத்தில் பழைமை வாய்ந்த ஆலயம் இருக்கிறது. அந்த ஆலயத்தின் ஜெபக் கூடத்தில் மேற்கூறிய நிகழ்ச்சி பற்றிய சித்திரமும், எழுத்தும் வரையப்பட்டுள்ளன.[71] 1228ஆம் ஆண்டு அந்தோனியார் பதுவை நகருக்கு முதன் முறையாகப் போனார். அவர் அங்குச் செல்வதற்கு முன்பே அவரது பெயரும் புகழும் அங்கு பரவியிருந்தன. பதுவை நகரில் அநியாய வட்டி வாங்குதல் அதிகரித்து வந்தது. அசலையும் வட்டியையும் சேர்த்துக் கொடுக்க முடியாமல் ஏழைகள் திண்டாடினர். அந்தோனியார் இவர்கள்மீது மிகவும் இரக்கப்பட்டு, அரசு அதிகாரிகளைச் சந்தித்து ஏழைகளின் கடன் நிவாரணம் பற்றி பேசினார். இதன் காரணமாக 1231ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தோனியார் ஏழைகளின் நண்பராக இருந்தார். 1231ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13ஆம் தேதி இறந்தார். ஜூன் 17ஆம் தேதி பதுவா நகரில் அவர் அடக்கம் செய்யப்பட்டார். 30.05.1232 அன்று அந்தோனியாருக்கு புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது. அந்தோனியார் இறந்த 32ஆம் ஆண்டில் அவரது கல்லறைத் திறக்கப்பட்டது. அவரது உடல் மண்ணோடு மண்ணாகிப் போயிருந்தாலும் நாக்கு மட்டும் அழியாமல் உயிருள்ள நாவுபோல் ஈரப்பதத்துடன் காணப்பட்டது. இவர் லிஸ்பன் நகரில் பிறந்திருந்தாலும் இத்தாலி நாட்டிலுள்ள பதுவை நகரில்தான் தமது கடைசி நாட்களைக் கழித்து அதிகமான அருஞ்செயல்கள் புரிந்துள்ளார். இவர் இறந்ததும் அடக்கம் செய்யப்பட்டதும் அங்குதான். ஆகவேதான் இவர் "பதுவைப் பதியர்" என அழைக்கப்படுகிறார்.[72]

புனிதர்களிடையே புனித அந்தோனியாருக்குத் தனிச் சிறப்பு உண்டு. புனித அந்தோனியாரைப் பாதுகாவலராகப் பெற்றது நமக்குப் பெரும் பேறாகும். குருசடி மற்றும் அதன் கிளைப் பங்கு மக்கள் நமது பாதுகாவலர்மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். இதன் வெளிப்பாடே இவ்வாலயத்திற்குப் பல ஏக்கர் சொத்துக்களை மக்கள் தானமாகக் கொடுத்துள்ளனர். நமது பாதுகாவலர் திருவிழாவின்போது முன்னாள் கிளைப்பங்கு மக்கள் தற்போதும் பெருந்திரளாகக் கலந்துகொள்கின்றனர். பக்கத்து கிராமங்களைச் சார்ந்த இந்து சகோதரர்களும் பெருமளவில் கலந்து கொள்வது சிறப்பு ஆகும். ஜனவரி மாதம் பாதுகாவலர் திருவிழா 10 நாட்கள் நடைபெற்றாலும், ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 13ஆம் நாள் தேதிப்படியான திருவிழாவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

70. சூ. ஜெயபாண்டியன், *பதுவை அந்தோனியாரின் அற்புத வரலாறு* (நாகர்கோவில்: நாஞ்சில் பதிப்பகம், 2007) ப. 19 - 20
71. மேலது, ப. 43
72. மேலது, ப. 9

**திருவிழாக் கொண்டாட்டம்**

சபையாரால் நடத்தப்பட்டு வந்த நமது ஆலயத் திருவிழா பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை ஏற்படுத்தப்பட்ட பிறகு பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையால் நடத்தப்படுகிறது. திருவிழா ஒவ்வொரு வருடமும் பொங்கல் விடுமுறையை உள்ளடக்கி நடைபெறுகிறது. திருவிழாவிற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு ஊர் பொதுக்குழுக் கூட்டம் நடத்தி மக்களின் கருத்துக்கள் கேட்கப்படுகின்றன. ஒலி ஒளி அமைத்தல், தேர் அலங்காரம், பந்தல் அமைத்தல், ஆலயத்திற்கு வர்ணம் பூசுதல் போன்ற பணிகளுக்கு ஊர் பொதுக்குழுக் கூட்டத்தில் பகிரங்க ஏலம் விடப்படுகிறது. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையில் பல குழுக்கள் அமைத்து திருவிழா சம்பந்தமான அனைத்துப் பணிகளும் செயல்படுத்தப்படுகின்றன. பங்குத் தந்தையும் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை நிர்வாகிகளும் பொறுப்பாகச் செயல்பட்டு திருவிழா சிறப்பாக நடத்தப்படுகிறது. 10 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் ஏதாவது ஒரு நாள் மறைமாவட்ட ஆயர் கலந்து கொள்வதும் இன்னொரு சிறப்பு ஆகும். நமது ஆலயத் திருவிழாவில் 9ஆம் திருவிழா இரவும் 10ஆம் திருவிழா மாலையிலும் தேரோட்டம் நடைபெறுகிறது. இந்து மதத்தைச் சார்ந்த சகோதரர்கள் பலர் தேரில் காணிக்கை செலுத்துவது சிறப்பானதாகும். ஆலய வளாகத்தின் முன்பக்கத்தில் பல தற்காலிகக் கடைகள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. 2020ஆம் ஆண்டு திருவிழாவிலிருந்து கடைகள் அனைத்தும் ஆலயத்தின் பின்பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளன. இதனால் திருவிழா மேலும் சிறப்பாக நடந்து வருகிறது.

**நமது ஆலயத் திருவிழாவைச் சிறப்பிப்போர் விவரம். (2020 ஆண்டு நிலவரப்படி)**

| | | |
|---|---|---|
| 1ஆம் திருவிழா | - | கத்தோலிக்க சேவா சங்கம், கத்தோலிக்கச் சங்கம், புனித வின்சென்ட் தே பவுல் சபை |
| 2ஆம் திருவிழா | - | அன்பியங்கள் |
| 3ஆம் திருவிழா | - | மறைக்கல்வி மன்றம் |
| 4ஆம் திருவிழா | - | அருள்சகோதரிகள், கிராமப் பெண்கள் முன்னேற்ற சங்கம், பெண்கள் பணிக்குழு, மரியன்னைக் குழு, குடும்பநலப் பணிக் குழு |
| 5ஆம் திருவிழா | - | புனித அந்தோனியார் தொடக்க மேல்நிலைப் பள்ளிகள் |
| 6ஆம் திருவிழா | - | மரியாயின் சேனை, கிறிஸ்தவ வாழ்வு சமூகம், பிரான்சிஸ்கள் மூன்றாம் சபை |
| 7ஆம் திருவிழா | - | பாலர்சபை, சிறுவழி இயக்கம், இளம் கிறிஸ்தவ மாணாக்கர் இயக்கம், இளைஞர் இயக்கம், இந்திய கிறிஸ்தவ மறுமலர்ச்சி இயக்கம் |
| 8ஆம் திருவிழா | - | புனித அன்னை தெரசா கிறிஸ்தவத் தொழிலாளர் இயக்கம் |
| 9ஆம் திருவிழா | | |
| காலை திருப்பலி | - | முதல் திருவிருந்து பெறும் மாணவ மாணவியர் |
| மாலை ஆராதனை | - | திருவழிபாட்டுக் குழு, பாடகர் குழு, பீடச் சிறார் |
| 10ஆம் திருவிழா | - | பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை |
| காலை 4.30 மணி | - | தேரில் திருப்பலி |
| காலை 6.30 மணி | - | திருவிழா ஆடம்பரத் திருப்பலி |
| காலை 9.00 மணி | - | திருப்பலி - திருமணமாகி வெளியூர்களில் வாழும் நம் மண்ணின் சொந்தங்கள். (இத்திருப்பலி ஆலயத்திற்குச் சொத்துக்கள் தானமாக வழங்கியவர்களுக்காக நிறைவேற்றப்படுகிறது) |

10ஆம் திருவிழா காலை 4.30 மணிக்கு நடைபெறும் திருப்பலி ஆலயத்தில் நடைபெற்று வந்தது. அருள்பணி. பிரான்சிஸ் M. போர்ஜியா பொறுப்பேற்ற பின்பு 2018ஆம் ஆண்டு முதல் இத்திருப்பலி தேரின் முன்பாக வைத்து நடைபெறுகிறது.[73]

குருசடிப் பங்கில் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை 1985ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு, இதுவரை 12 பங்கு மேய்ப்புப்பணிப் பேரவைகள் செயல்பட்டுள்ளது. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவைகளின் ஒட்டு மொத்தச் செயல்பாடுகளைப் பார்வையிடும்போது, குருசடிப் பங்கின் ஆன்மீக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை முக்கிய காரணம் என்பது புலப்படும். இதற்கு காரணம் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையில் அனைத்து மக்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டு, ஜனநாயக முறையில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த அமைப்பில் பெண்களின் பிரதிநிதித்துவமும் உறுதி செய்யப்பட்டுள்ளது. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையினர் தங்கள் பணிக்காலமாகிய 3 ஆண்டுகளில் மிகச் சிறப்பாகவே செயல்பட்டுள்ளனர்.

73. பங்கு மேய்ப்புப்பணி பேரவை, குருசடி, *தீர்மானம்,* நாள் 10.12.2017

# அருள்பணி. எலியாஸின் சமூகப் பணி

அருள்பணி. எலியாஸ் குருசடி பங்கு மக்களை மிகவும் நேசித்தார். 1906ஆம் ஆண்டு குருசடி ஊரில் அனந்தன் கால்வாய் வெட்டப்பட்டது. அதற்கு முன்பு நமது பகுதியில் வயல் வெளிகள் கிடையாது. எனவே மக்கள் மானாவாரி விவசாயத்தை மட்டுமே நம்பி இருந்தனர். இதனால் பல மக்கள் வறுமையால் வாடினர். 1865ஆம் ஆண்டுக்கு முன்பே மங்களூரில் கிறிஸ்தவ நிறுவனங்கள் வெளிநாட்டிலிருந்து ஒடு தயாரிக்கும் இயந்திரத்தை இறக்குமதி செய்து பேஸ்லி மிஷன் டைல் ஒர்க்ஸ் (Basle Mission Tile Works, Mangalore) என்ற பெயரில் கூரை ஓடுகள் தயாரித்தனர். நமது பகுதிகளிலும் சில அரசாங்க கட்டிடங்களில் அந்த கூரை ஓடுகள் பயன்படுத்தப்பட்டன. நாளடைவில் கொல்லத்தில் அருள்சகோதரிகள் வெளிநாட்டில் இருந்து ஓடு தயாரிக்கும் இயந்திரத்தை இறக்குமதி செய்து ஓடு தொழிற்சாலையை சிறப்பாக நடத்தினர். அப்போது நாகர்கோவிலில் கையால் செய்யப்படும் சிறிய "நாழி" ஓடுகள் மட்டுமே இருந்தன. எனவே அருள்பணி. எலியாஸ் குருசடிப் பங்கிலுள்ள வசதிவாய்ப்புகள் உள்ளவர்களை அணுகி நீங்கள் பணம் கொடுத்தால் வெளிநாட்டிலிருந்து ஓடு தயாரிக்கும் இயந்திரம் வாங்கித்தரலாம் என்றும், நாகர்கோவிலில் ஓடு தொழிற்சாலை தொடங்கலாம் என்றும் இதனால் பல மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்றும் ஆலோசனை வழங்கினார். பின்னர் கீழராமன்புதூரைச் சார்ந்த திருவாளர்கள் இன்னாசி நாடார், வியாகப்பன் நாடார், மிக்கேல் நாடார், மேலராமன்புதூர் D. தேவசகாயம் முடுதோம் ஆகிய நால்வரும் இயந்திரம் வாங்கப் பணம் கொடுத்தனர். இயந்திரம் வெளிநாட்டிலிருந்து வர ஒரு வருடம் ஆனது. அப்போது இராமன்புதூர், புன்னைநகர், தளவாய்புரம் ஆகிய ஊர்களிலிருந்து பல நபர்கள் கொல்லம் ஓடு தொழிச்சாலைக்கு அனுப்பப்பட்டு தொழில் கற்றுக் கொண்டனர். பின்னர் 1887ஆம் ஆண்டு இயந்திரங்கள் வந்ததும் நாகர்கோவிலில் ஓடு தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. மூவர் செட்டிக்குளம் சந்திப்பில் ஓடு தொழிற்சாலை நிறுவினர். திரு. D. தேவசகாயம் முடுதோம் வில்லுக்குறியில் ஓடு தொழிற்சாலையை நிறுவினார். நாளடைவில் தொழிற்சாலையைச் செட்டிக்குளம் சந்திப்புக்கு மாற்றினார். இதனால் பல கத்தோலிக்கக் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்தது. இதில் அருள்பணி. எலியாஸ் அவர்களின் பணி பாராட்டத்தக்கது. நாகர்கோவிலில் தயாரிக்கப்பட்ட ஓடுகள் கொல்லம் ஓடுகளுக்கு இணையாக இருந்தன. இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் 06.02.1905 அன்று மும்பையில் நடைபெற்ற சுதேசி பொருட்களின் பொருள்காட்சியில் திரு. D. பிரான்சிஸ் முடுதோம் தன்னுடைய ஓடு தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட கூரை ஓடுகளைப் பார்வைக்கு வைத்து சான்றிதழ் மற்றும் பதக்கம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## குருசடிப் பங்கின் கிளைப் பங்குகளுக்குச் சொத்துக்கள் பகிர்ந்து கொடுப்பது சம்பந்தமாக கோட்டாறு மறைமாவட்ட ஆயர் 07-11-1986 அன்று பிறப்பித்த உத்தரவு

November 7, 1986.

Rev.Fr.Benjamin
Parish Priest
St.Antony's Church
Kurusady
Nagercoil 629 004

Dear Rev.Fr.Benjamin,

After deep reflections and wide consultations I have a fresh decision to settle the property disputes between Kurusady and its past and present sub-stations.

We arrived at a settlement in 1984 for the same issue. Accordingly four pieces of lands belonging to St.Antony's Church, Kurusady were entrusted to me for disposal and the proceedes from the sale of these lands were to be distributed as gifts to some of the past and present sub-stations of Kurusady based on their needs as and when they arise. Since these lands are not selling for reasonable price as expected I have decided that these lands are returned to Kurusady parish, instead a sum of Rupees Five lakhs and fifty thousand (5,50,000) is entrusted to me within a reasonable period of time. The following pieces of lands entrusted to my care are returned to you:

1. Vattakarai Odai Thattu (வட்டக்கரை ஓடைத் தட்டு) area: 78 cents
2. Vattakarai Manthattu (வட்டக்கரை மணற் தட்டு) area: 54 cents
3. Kutti Thattu (குட்டித் தட்டு) area: 16 cents
4. Thollavilai (தொல்லவிளை) area: 115 cents

This sum of money will be distributed to the following churches as gifts from the Diocese. Muravankudyiruppu, Malaramanputhoor, Thalavaipuram, Vedanagar and Anandanpalam. Some other sub-

RT. REV. M. AROKIASAMY
Bishop of Kottar

BISHOP'S HOUSE
NAGERCOIL

stations of Kurusady are already in possession of certain lands of Kurusady. The title of those lands will be transferred to them in the names of their respective churches at their own costs. The following are the churches and the lands:

1. Maravankudiyiruppu - Primary School and the premises covering 31 cents
2. Vattakarai - 75 cents where the chavadi and other buildings are constructed
3. Konam - 25 cents where the Nursery School storage room for nutrition programme are constructed.
4. Punnaikattuvilai - The 6 cents where the Kurusady is already constructed and the adjacent plot of another six(6) cents.

I hereby state that the present and the past sub-stations of Kurusady have no claims over its movable and immovable property, no right over Kurusady church administration and the celebration of its feasts.

Kindly keep this as a document in your parish file for references.

With my cordial blessings,

Fraternally yours in Christ,

+ M. Arokiasamy

Bishop of Kottar.

DIOCESE OF KOTTAR
VICAR GENERAL
NAGERCOIL

**குருசடிப் பங்கின் கிளைப்பங்குகளுக்கு சொத்துக்கள் பகிர்ந்து கொடுப்பது சம்பந்தமாகக் கோட்டாறு மறைமாவட்ட ஆயர் 07-11-1986 அன்று பிறப்பித்த உத்தரவின் தமிழாக்கம்.**

மேதகு M. ஆரோக்கியசாமி
கோட்டாறு ஆயர்

ஆயர் இல்லம்,
தபால் பெட்டி எண். 17
நாகர்கோவில் - 629001
தென் இந்தியா.

நவம்பர் 7, 1986

பெறுநர்

அருள்பணி. பெஞ்சமின்,
பங்குத் தந்தை,
புனித அந்தோனியார் ஆலயம்,
குருசடி,
நாகர்கோவில் - 629 004.

அன்புள்ள அருள்பணி. பெஞ்சமின்,

குருசடிக்கும் அதன் முன்னாள் மற்றும் இந்நாள் கிளைப்பங்குகளுக்கிடையே சொத்து சம்பந்தமான பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஆழ்ந்த சிந்தனையோடும் விரிவான ஆலோசனைகளுக்குப் பிறகும் புதிய தீர்வுக்கு நான் வந்துள்ளேன்.

இதே பிரச்சினைக்காக 1984ஆம் ஆண்டு ஒரு முடிவுக்கு வந்தோம். அதன்படி குருசடி புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் சொந்தமான நான்கு நிலங்களை விற்பனைச் செய்வதற்காகவும், விற்பனைத் தொகையைக் குருசடியின் முன்னாள் மற்றும் இந்நாள் கிளைப்பங்குகளுக்கு அதனதனுடைய தேவையைப் பொருத்துப் பகிர்ந்துக் கொடுப்பதற்காகவும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அந்த நிலங்கள் எதிர்பார்த்தபடி நியாயமான விலைக்குச் செல்லாததால், அந்த நிலங்களை மீண்டும் குருசடிப் பங்கிற்குத் திருப்பிக் கொடுக்க முடிவு செய்துள்ளேன். அதற்குப் பதிலாக ஒரு நியாயமான காலத்திற்குள்ளாக ரூ.5,50,000த்தை என்னிடம் ஒப்படைக்க வேண்டும். என்னிடம் ஒப்படைக்கப்பட்ட கீழ்க்குறிப்பிடும் நிலங்களை நான் குருசடிப் பங்கிற்குத் திருப்பிக் கொடுக்கிறேன்.

1. வட்டக்கரை ஓடைத்தட்டு : 78 சென்ட்
2. வட்டக்கரை மாந்தட்டு : 54 சென்ட்
3. குட்டித் தட்டு : 16 சென்ட்
4. தொல்லவிளை : 115 சென்ட்

அந்தத் தொகை மறவன்குடியிருப்பு, மேலராமன்புதூர், தளவாய்புரம், வேதநகர் மற்றும் அனந்தன்பாலம் ஆகிய ஆலயங்களுக்கு மறைமாவட்டத் திலிருந்து நன்கொடையாகப் பகிர்ந்துக் கொடுக்கப்படும். வேறு சில கிளைப் பங்குகள் குருசடிக்குச் சொந்தமான சில நிலங்களை தன்வசம் வைத்துள்ளன. அந்த நிலங்களின் உரிமைகள் அந்தந்த ஆலயங்களின் பெயரில் அவரவர் செலவில் மாற்றிக் கொடுக்கப்படும். அந்த ஆலயங்களும், நிலங்களும் கீழ்க்காண்பவையாகும்.

(1) மறவன்குடியிருப்பு ஆரம்பப் பள்ளியும், அது அமைந்துள்ள 31 சென்ட் நிலமும்

(2) வட்டக்கரை சாவடி மற்றும் இதர கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ள 75 சென்ட் நிலம்

(3) கோணத்தில் சத்துணவுக் கூடம் மற்றும் அதன் பொருட்கள் வைக்கும் அறை கட்டப்பட்டுள்ள 25 சென்ட் நிலமும்

(4) புன்னக்காட்டுவிளையில் ஏற்கனவே குருசடி கட்டப்பட்டுள்ள 6 சென்ட் நிலமும், அதை ஒட்டியுள்ள மற்றொரு 6 சென்ட் நிலமும்

குருசடியின் இன்னாள் மற்றும் முன்னாள் கிளைப்பங்குகளுக்குக் குருசடி ஆலயத்தின் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள்மீது எந்த உரிமையும் இல்லையென்றும், குருசடி ஆலய நிர்வாகத்திலும், திருவிழா கொண்டாட்டங்களிலும் கிளைப் பங்குகளுக்கு உரிமையில்லை என்பதையும் இதன்மூலம் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதனை உங்கள் பங்குக் கோப்பில் ஒரு ஆவணமாகப் பாதுகாத்து வைத்துக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பான வாழ்த்துக்களுடன்
கிறிஸ்துவில் உங்கள் சகோதர உறவுடன்
ஆயர் ஆரோக்கியசாமி (ஒப்பம்)
கோட்டாறு ஆயர்.

## வடகாட்டுவிளையை அரசாங்கம் கையகப்படுத்தியதற்காக 19-08-1993 அன்று நாகர்கோவில் கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு

240 241

Return of lands acquired under the Land Acquisition Act (to be forwarded to the Registration Department) +Contd.

| [illegible]ure of the interest in immovable property [illegible]sferred, the purpose etc., | | | | Name and Description of person to whom the property belonged. | | | | | Name and description of the person to whom the property has been transferred | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| [illegible]re of [illegible] interest [illegible] immovable [illegible]erty [illegible]sferred | The purpose for which the transfer was made. | The nature of compensation awarded | Amount of value of compensation awarded. | Name(including rank and title) | Father's name in the case of males and the husband's name in the case of females, when a person in usual described as those of his mother when his mother's name | Residence | Profession. | Caste | | |
| 4(a) | 4(b) | 4(c) | 4(d) | 5(a) | 5(b) | 5(c) | (5d) | 5(e) | 5(f) | 6. |
| [illegible]quid [illegible]pulsion [illegible]stem Centre, [illegible]ernment of India, [illegible]ivandrum | For construction of staff quarters | Cash | Rs.43,68,249/- | St.Antony's Church, Kurusady, Nagercoil. | - | - | - | - | Construction Engineer, Liquid Propulsion System Centre, Government of India, Trivandrum. | |

[illegible]:- A copy of this return should be sent to every Sub Registrar in whose sub-district any portion of the property referred to in the award is situated.

Sd./- K. Karuppan,
Revenue Divisional Officer.

/true copy/by order/

[signature] 15/3/94

P.A. to Revenue Divisional Officer.

2444

A2.1514/91

5765/94 30.4.94 239 242

Return of land acquired under the Land Acquisition Act (to be forwarded to the Registration Department)

| Name and designation of the officer who made the award | Date of award | Name and Description of proper acquired | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Names of the sub district and Village | Name of the land, if any. | Survey number or sub-number or letter or paimash number | Boundaries North | East | South | West | Extent | Classification of land as Government or inam or zamindari and as wet, dry or garden | Houses, building, trees if any, situated on their description, street and door number given in the case of property. |
| (1) | (2) | 3(a) | 3(b) | 3(c) | 3(d) | 3(e) | 3(f) | 3(g) | 3(h) | 3(i) | 3(j) |
| Thiru K. Karuppan, B.A., Revenue Divisional Officer, Nagercoil. | 1/93-94 19.8.93 | Agasteeswaram Taluk Nagercoil Village | - | T.S.No. H3/12-1 | T.S.No. H3/6 and H3/5 | T.S.No. H3/14 and H3/13 | T.S.No. H3/12-2 | T.S.No. H3/11 and H3/10 | H.A. 4.06.09. 366 | Dry | Coconut trees Yielding<br>Coconut trees Young<br>Well |

Note:- A copy of this return should be sent to every Sub Registrar in whose sub-district any portion of the property referred to in the award situated

n.t.

## குருசடிப் பங்கிற்கும் அதன் கிளைப் பங்குகளுக்குமிடையே சொத்துக்கள் பகிர்ந்து கொள்வது சம்பந்தமாக பிரச்சினைகள் முடிந்துவிட்டதாக கோட்டாறு மறைமாவட்ட ஆயர் 11-09-1998 அன்று பிறப்பித்த உத்தரவு

**DIOCESE OF KOTTAR** Bishop's House, P. B. No. 17, Nagercoil - 629 001, Tamilnadu, India.
Tel: (04652) 33343 & 33453 Fax: (91-4652) 25170

BISHOP LEON A THARMARAJ

No: O.L. 25/98

11-09-1993

07-11-1986 தேதியிட்ட கோட்டாறு மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு ஆரோக்கியசாமி ஆண்டகையின் ஆணைப்படி கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டிருந்தன:

குருசடி புனித அந்தோனியார் கோயில் சொத்துக்களுக்கு உரிமை கோரி, அதன் முன்னாள், இந்நாள் கிளைச் சபைகள் விடுத்த வேண்டுதல்களுக்கு ஒரு நிரந்தர முடிவு காணப்பட்டது. அதன்படி குருசடி பங்கானது ரூபாய் 5,50,000-ஐ ஆயர் இல்லத்தில் செலுத்திடவும், இத்தொகையை அதனதன் தேவையை மனத்தில் கொண்டு, மறவன்குடியிருப்பு, மேலராமன்புதூர், தளவாய்புரம், வேதநகர் மற்றும் அனந்தம்பாலம் ஆகிய ஊர்களுக்கு ஆயர் இல்லத்திலிருந்து இனாமாக வழங்கி விட முடிவு செய்யப்பட்டது.

மேலும், குருசடிச் சொத்திலிருந்து நான்கு ஊர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கீழ்க்காணும் சொத்துகளுடைய உரிமையை உரிய காலத்தில் அவரவர் செலவிலேயே அவரவர்களுக்கு உரிமை மாற்றம் செய்திடவும் முடிவு செய்யப்பட்டது. அவை:

1. மறவன்குடியிருப்பு - ஆரம்பப்பள்ளியும் அதன் சுற்றிலுமுள்ள 31 செண்ட் பூமி.
2. வட்டக்கரை - சாவடியும் மற்றும் கட்டிடங்களும் கட்டியுள்ள 75 செண்ட் அடங்கிய பூமி.
3. கோணம் - சத்துணவுக் கூடமும், அதன் பொருள் வைப்பு அறை அடங்கிய 25 செண்ட் பூமி.
4. புன்னக்காட்டுவிளை - குருசடி அமைந்துள்ள 6 செண்ட் பூமியும் அதைத் தொட்டுள்ள 6 செண்ட் பூமியும்.

முன்னாள் ஆயரின் முடிவுப்படி ரூ. 5,50,500-ஐ குருசடி நிர்வாகம் இன்றுடன் செலுத்தி முடித்து விட்டது. அதோடு மேற்கண்ட சொத்துக்களை அந்தந்த ஊர்கள் அவரவர் பெயருக்கு உரிமை மாற்றம் செய்ய முன் வரும்போது அவற்றுடன் முழுமையாய் ஒத்துழைக்கும் எனவும் குருசடி நிர்வாகம் வாக்களிக்கிறது. எனவே குருசடிப் பங்குக்குக் கீழ் முன்போ, தற்போதோ உள்ள கிளை சபைகளுக்கு அதனுடைய அசையும், அசையாப் பொருள்கள், ஆலய நிர்வாகம், விழாக் கொண்டாட்டம் ஆகியவற்றின் மேல் எந்த உரிமையும் இல்லை என்ற முன்னாள் ஆயரின் ஆணையை உறுதி செய்கிறேன்.

இவண்
கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள

\+ Leon A. Tharmaraj

ஆயர் லியோன் அ. தர்மராஜ்
கோட்டாறு ஆயர்

# 7 கோட்டாறு மறைமாவட்டமும் குருசடிப் பங்கும்

கொல்லம் மறைமாவட்டத்திலிருந்து பிரிந்து கோட்டாறு மறைமாவட்டம் 26.05.1930 அன்று உதயமானது. குருசடிப் பங்கின் வளர்ச்சியில் கொல்லம் மறைமாவட்டத்திற்கும் கோட்டாறு மறைமாவட்டத்திற்கும் முக்கிய பங்கு உண்டு. கொல்லம் மறைமாவட்டத்தின்கீழ் குருசடிப் பங்கு இருந்தபோது ஐரோப்பிய அருள்பணியாளர்கள் மட்டுமே பங்குத்தந்தையராக இருந்தனர். கோட்டாறு மறைமாவட்டம் உதயமானபிறகு இந்திய அருள்பணியாளர்கள் பங்குத்தந்தையராக நியமிக்கப்பட்டனர். ஒவ்வொரு பங்கிற்கும் பங்குத்தந்தையை மறைமாவட்ட ஆயர் தன்னுரிமையுடன் நியமிக்கிறார். 1936இல் கோட்டாறு பங்கிலிருந்து குருசடிப் பங்கு பிரிந்து தனிப் பங்கு ஆகியது. எனினும் நமது ஊரிலுள்ள சிலர் குருசடி புனித அந்தோனியார் ஆலயம் சில காலங்கள் வடக்கன்குளம் பங்குடன் இணைந்திருந்ததாகக் கூறுவதைக் கேட்டுள்ளேன். ஆனால் அந்தக் கூற்றில் உண்மையில்லை. காரணம் 08.07.1936இல் திருச்சிராப்பள்ளி (திருச்சி) மறைமாவட்டம் உதயமானது.[1] வடக்கன்குளம் திருச்சிராப்பள்ளி மறைமாவட்டத்தின்கீழ் இருந்தது. 12.06.1923இல் திருச்சிராப்பள்ளி மறைமாவட்டத்திலிருந்து பிரிந்து தூத்துக்குடி தனி மறைமாவட்டமாக உதயமானது.[2] அதன் பிறகு தூத்துக்குடி மறைமாவட்டத்தின்கீழ் வடக்கன்குளம் பங்கு உள்ளது. 1872ஆம் ஆண்டு வாக்கில் வடக்கன்குளம் பங்கைச் சார்ந்த வெள்ளாளர் சமுதாயத்தினருக்கும் நாடார் சமுதாயத்தினருக்கும் இடையே இருந்த பிரச்சினைகளுக்காக வெள்ளாளர் சமுதாயத்தினர் அப்போதைய திருச்சிராப்பள்ளி மறைமாவட்ட ஆயர் J. M. பர்த்தேக்கு எதிராக வழக்கு தொடர்ந்தனர்.[3] மேற்கண்ட வழக்கின்

---

1. *History of Diocese of Trichy* (Published in the Diocese of Trichy-website)
2. *History of Diocese of Tuticorin* (Published in the Diocese of Tuticorin-website)
3. Kattalai Michael Pillai and others Vs. Rt. Rev. J.M. Barthe S.J. Bishop of Trichinopoly and others - 1916, *Indian Law Reporter 39 Madras* 1056. வடக்கன்குளம் பங்கிலிலுள்ள கத்தோலிக்க வெள்ளாளர் மற்றும் முதலியார் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு ஒரு ஆலயமும் நாடார் சமுதாயத்தை சார்ந்தவர்களுக்கு ஒரு ஆலயமும் கட்டவேண்டுமென்றும், இரு ஆலயத்திலிருந்துப் பார்த்தாலும் தெரியும்படி ஒரே பீடம் அமைக்க வேண்டுமென்றும், இரு ஆலயத்திற்குமிடையே தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்றும், வெள்ளாளர் சமூகத்தினரின் ஆலயத்திற்குள் மற்றும் தெருக்களில் நாடார்கள் செல்லக் கூடாது என்றும், ஆலயத்தின் புனிதப் பொருள்கள் வெள்ளாளார் சமூகத்தினர் வசம் இருக்கவேண்டுமென்றும் 1854ஆம் ஆண்டு இரு சமூகத்தினரும் பங்குத்தந்தை அருள்பணி. கிரகோரி முன்னிலையில் ஒப்பந்தம் செய்துகொண்டு ஆலயம் கட்டப்பட்டது. அந்த ஆலயம் 1872ஆம் ஆண்டு புனிதப்படுத்தப்பட்டது. ஆலயம் கட்டி முடிக்கப்பட்டபிறகு நாடார் சமூகத்தினர் இரு ஆலயங்களுக்குமிடையே உள்ள சுவரை இடிக்க வேண்டுமென்று திருச்சிராப்பள்ளி மறைமாவட்ட ஆயர் மேதகு அலெக்ஸிஸ் கனோஸ் (Rt. Rev. Alexis Canoz S.J) அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர். மறைமாவட்ட ஆயரும் சுவரை இடித்து விட 1877ஆம் ஆண்டு உத்தரவிட சுவரும் இடிக்கப்பட்டது. இந்நிலையில் 02.12.1888 அன்று ஆயர் அலெக்ஸிஸ் கனோஸ் காலமானார். அவரைத் தொடர்ந்து J. M. பர்த்தே S.J. (Rt. Rev. J.M. Barthe S.J) ஆயராக நியமிக்கப்பட்டார். சுவரை மீண்டும்

அடிப்படையில் பார்க்கும் போது 1836ஆம் ஆண்டு முதல் வடக்கன்குளம் பங்கு திருச்சிராப்பள்ளி மறைமாவட்டத்துடன் இருந்துள்ளது. குருசடிப் பங்கு எக்காலத்திலும் திருச்சிராப்பள்ளி மறைமாவட்டத்தின்கீழ் இருந்தது இல்லை. குருசடி பங்கு தொடக்கத்தில் கொச்சி மறைமாவட்டத்தின் கீழும் அதனைத் தொடர்ந்து கொல்லம் மறைமாவட்டத்தின் கீழும் இருந்தது.

1603ஆம் ஆண்டு கோட்டாறில் சுவாமி அந்திரேயாஸ் புச்சேரியோ என்ற இயேசு சபை அருள்பணியாளர் முதல் ஆலயத்தை உருவாக்கினார்.[4] 1603ஆம் ஆண்டு முதல் கோட்டாறில் ஆலயம் இருப்பதால் நமது ஆலயம் தொடக்கத்திலிருந்தே கோட்டாறு ஆலயத்துடன் இணைந்திருந்தது. 1930ஆம் ஆண்டு கோட்டாறு மறைமாவட்டம் உதயமானபோது, கோட்டாறு மறைவட்டத்தின்கீழ் கோட்டாறு, கன்னியாகுமரி, மணக்குடி, ஆசாரிபள்ளம், காரங்காடு, மாடதட்டுவிளை, மாங்குழி, முளகுமூடு, மணலிக்கரை, மாத்திரவிளை மற்றும் இராஜாவூர் ஆகிய 11 பங்குகள் இருந்துள்ளன (காண்க பக்கம் 182). நமது ஆலயம் புனிதப்படுத்தபட்ட பிறகு குருசடியைத் தனிப் பங்காக உயர்த்தவேண்டுமென்று முடுதோம்களும், சபையாரும் மற்றும் நமது ஆலயத்தைச் சார்ந்த பல ஊர் மக்களும் கொல்லம் மறைமாவட்டத்திற்கு கோரிக்கை மனுக்கள் கொடுத்தனர். ஆனாலும் தனிப்பங்காக உயர்த்தப்படவில்லை. இதற்குக் காரணம் அருள்பணியாளர்கள் பற்றாக்குறையாகும். 1922ஆம் ஆண்டு கார்மல் பள்ளி தொடங்கப்பட்ட பிறகு அதில் மேலாளராகவும், தலைமை ஆசிரியராகவும் பொறுப்பிலிருந்த அருள்பணி யாளர்கள் நமது ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றினர். இதனால் எல்லா நாட்களும் நமது ஆலயத்தில் திருப்பலி நடைபெற்றது. இந்நிலையில் நமது ஆலயத்துடன் இணைந்திருந்த இராஜாவூர் 25.11.1926 அன்று தனிப்பங்காக உயர்த்தப்பட்டது. இதனால் கோட்டாறு பங்கிலிருந்து குருசடியைப் பிரித்து தனிப்பங்காக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையைக் கொல்லம் மறைமாவட்ட ஆயரிடம் முடுதோம்களும், சபையாரும் மீண்டும் வலியுறுத்தினர். ஆனால் கொல்லம் மறைமாவட்டம் நமது பங்கை தனிப்பங்காக உயர்த்தவில்லை. நமது ஆலயம் கோட்டாற்றுக்குப் பக்கத்தில் இருப்பதால் நமது கோரிக்கையைக் கொல்லம் மறைமாவட்டம் ஏற்றுக் கொள்ளவில்லை (காண்க பக்கம் 180, 181).

இந்நிலையில் கோட்டாறு மறைமாவட்டம் உதயமான பிறகு நமது ஆலயம் கோட்டாறு பங்கிலிருந்து பிரிந்து 1936ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தனிப் பங்காகியது.[5] ஆனால் 1940ஆம் ஆண்டுதான் குருசடிக்குத் தனிப் பங்குத்தந்தை நியமிக்கப்பட்டர் (காண்க பக்கம் 183). 1790ஆம் ஆண்டு குருசடி ஊரில் ஓலைக் கூரையிலான சிறிய ஆலயம் தோன்றியபோது பங்குத்தந்தையாக இருந்தது அருள்பணி. அலெக்ஸ் என்று முன்னர் கண்டோம். அருள்பணி. அலெக்ஸ் 1823ஆம் ஆண்டு வரை கோட்டாறு பங்குத் தந்தையாக இருந்துள்ளார். அவரைத் தொடர்ந்து 1885ஆம் ஆண்டுவரை யார் யார் பங்குத்தந்தையராக இருந்தார்கள் என்பதை அறிய முடியவில்லை. குருசடி கோட்டாறு பங்குடன் இணைந்திருந்த

கட்ட வேண்டுமென்று வெள்ளாளர் மற்றும் முதலியார் சமூகத்தைச் சார்ந்தவர்கள் சார்பாகக் கட்டளை மைக்கேல் பிள்ளை என்பவர் திருச்சிராப்பள்ளி மறைமாவட்ட ஆயர் J. M. பார்த்தேக்கும் மற்றும் நாடார் சமூகத்தினருக்கும் எதிராக திருநெல்வேலி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். வழக்கில் ஆயர் மற்றும் நாடார்களுக்குச் சாதகமான தீர்ப்புக் கிடைத்தது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் கட்டளை மைக்கேல் பிள்ளை மேல்முறையீடு செய்தார். மேல்முறையீட்டில் 25.01.1916 அன்று தீர்ப்பு வந்தது. அதன்படி கட்டளை மைக்கேல் பிள்ளையின் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த தீர்ப்பைச் சென்னை உயர்நீதிமன்றத்தின் பிரபல நீதிபதியும் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்தவருமான மாண்புமிகு நீதியரசர் திரு. நேப்பியார் மற்றும் மாண்புமிகு நீதியரசர் திரு. சதாசிவ ஐயர் ஆகியோர் எழுதியுள்ளார்கள்.

4. அருட்திரு. எஸ். வெனான்சியுஸ், *திருத்தலம் கோட்டாறு* (பெங்களூர்: தூய மரியன்னை அச்சகம்) ப. 24

5. J.M. Villavarayan, *The Diocese of Kottar,* p. 42

போது 1885ஆம் ஆண்டு முதல் நியமிக்கப்பட்ட கோட்டாறு பங்குத்தந்தையர்களின் பட்டியலை தருகிறேன்.

1790 - 1823 - அருள்பணி. அலெக்ஸ்

1885 - 1892 - அருள்பணி. எலியாஸ் OCD

1892 - 1898 - அருள்பணி. மார்ட்டின் OCD

1898 - 1903 - அருள்பணி. உபால்டு OCD

1903 - 1908 - அருள்பணி. எலியாஸ் கர்மேலோ OCD

1908 - 1916 - அருள்பணி. பெர்னார்டின் OCD

1916 - 1929 - அருள்பணி. பயஸ் OCD

1929 - 1931 - அருள்பணி. பால் OCD

1931 - 1932 - அருள்பணி. ஜாண் பெரைரா

1932 - 1935 - அருள்பணி. வின்சென்ட் பெர்னாண்டஸ்

1935 - 1940 - அருள்பணி. அம்புறோஸ் பெர்னாண்டஸ்

நமது பங்கு கோட்டாறு பங்குடன் இணைந்திருந்தபோது மறைமாவட்டத்தில் போதிய அளவு அருள்பணியாளர்கள் இல்லாததால் 1929முதல் 1931வரை பங்குத்தந்தையாக இருந்த அருள்பணி. பால் OCD மற்றும் 1931 மற்றும் 1932ஆம் ஆண்டுகளில் பங்குத்தந்தையாக இருந்த அருள்பணி. ஜாண் பெரைராவும் கோட்டாறு மறைமாவட்ட முதன்மைப் பணியாளர்களாவும் (Vicar General) கோட்டாறு பங்குத்தந்தை யாகவும் பணியாற்றினர்.

1940ஆம் ஆண்டு குருசடிக்குத் தனி பங்குத்தந்தை தரப்பட்டது. 1940முதல் நியமிக்கபட்ட குருசடி பங்குத்தந்தையர்களின் பட்டியல் பின்வருமாறு:

| | | | | |
ஆண்டுதோறும் தவக்கால உண்டியல் அன்பியங்கள் வாரியாகப் பிரிக்கப்பட்டு அது ஏழை மாணவர் கல்வி நிதிக்காக வைப்பு நிதியாக வைக்கப்பட்டு, ஏழை மாணவர்களின் கல்விக்காகச் செலவிடப்படுகிறது.[13]

வாரத்தில் ஏதாவது ஒருநாள் ஒவ்வொரு அன்பியத்தின் கூட்டம் அந்தந்த அன்பிய எல்கைக்குள் நடைபெறுகிறது.

---

8. திரு. S. மரிய பன்னீர் தாஸ் லியோ, குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 20.05.2020
9. *ஜூபிலி 2000 சிறப்பு மலர்,* குருசடி, ப. 19
10. *நூற்றாண்டு விழா சிறப்பு மலர், 1911 - 2011,* குருசடி. ப. 29
11. *ஜூபிலி 2000 சிறப்பு மலர்,* குருசடி, புனித அந்தோணியார் தேவாலயம். ப.19
12. *நூற்றாண்டு விழா சிறப்பு மலர், 1911 - 2011,* குருசடி. ப. 29
13. *நூற்றாண்டு விழா சிறப்பு மலர், 1911 - 2011,* குருசடி. ப. 30

மாதம் ஒருமுறை அன்பிய ஒருங்கிணைப்புக் கூட்டமும் அன்பிய ஒருங்கிணைப்புச் செயற்குழுக் கூட்டமும் நடைபெறுகிறது.

## III. திருத்தூதுக் கழகங்கள்

திருஅவைச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட திருத்தூது கழகங்கள் பல நமது பங்கில் செயல்பட்டு வருகின்றன. அவற்றைப் பற்றி விரிவாகக் காண்போம்.

### (1) மரியாயின் சேனை

1921ஆம் ஆண்டு செப்டம்பர் 7ஆம் நாள் அயர்லாந்து நாட்டில் டப்ளின் மாநகரில் சகோ. பிராங்க் டஃப் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட இல்லறத் திருத்தூது இயக்கம் மரியாயின் சேனை. தன்னை அர்ச்சித்தல், பிறரை அர்ச்சித்தல் என்ற பணிகளை ஜெபமும், சேவையும் என்ற உயரிய சிந்தனையின் அடிப்படையில் செய்து வருவது மரியாயின் சேனை. 1931ஆம் ஆண்டு மெக்கன்ஸி ஸ்மித் என்ற பெண்மணியால் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டது. இது கத்தோலிக்கரை மட்டும் கொண்ட ஒரு அமைப்பு. 1937ஆம் ஆண்டு ஆண்களையும் பெண்களையும் கொண்ட கலப்புப் பிரசீடியமாக நமது பங்கில் ஆரம்பிக்கப்பட்டது. நமது மறைமாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதல் பிரசீடியம் இதுவே.[14] 18.02.1962 அன்று அப்போதைய பங்குத்தந்தை அருள்பணி. R. அந்தோனிமுத்து அவர்களால் கியூரியா என்ற மேல்சபை நமது பங்கில் தொடங்கப்பட்டது.[15] பிரசீடியங்களின் எண்ணிக்கை பெருகவே 15.05.1969 அன்று பாலர் கியூரியா ஆரம்பிக்கப்பட்டது.[16] தற்போது நமது பங்கில் வடக்குக்கோணம், வட்டக்கரை, பொன்னப்பநாடார் காலனி ஆகிய பங்குகளை உள்ளடக்கிய அன்புக்கரசி கியூரியா செயல்படுகிறது. நமது பங்கில் லூர்துநாயகி ஆண்கள் முதியோர், சமாதானத்தின் இராக்கினி பெண்கள் முதியோர், வேதசாட்சிகளின் இராக்கினி ஆண்கள் பாலர், எஸ்கலின்மாதா பெண்கள் இளையோர், அப்போஸ்தலர்களின் இராக்கினி பெண்கள் பாலர், உபகாரமாதா பெண்கள் முதியோர் என ஆறு பிரசீடியங்களில் சுமார் 150 உறுப்பினர்களைக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. நமது பங்கைச் சார்ந்த திரு. M. கிரகோரி ஜேசுரெத்தினம் மற்றும் திரு. M. மைக்கிள் ஆன்றனி ஆகியோர் கோட்டாறு மறைமாவட்ட கொமித்தீசிய செயலராகவும், தலைவராகவும் பணியாற்றி நம் பங்குக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.[17] மேலும் நமது பங்கைச் சார்ந்த திரு. M. ஜேசு மரிய ராஜன் கோட்டாறு ரீஜியாவின் துணைத்தலைவராக பணியாற்றி நமது பங்குக்குப் பெருமை சேர்த்துள்ளார்.[18]

**சில முக்கியப் பணிகள்**

1) இல்லத்தில் நோயாளிகளைச் சந்தித்தல்
2) மருத்துவமனையில் நோயாளிகளைச் சந்தித்தல்
3) குடும்பங்களைச் சந்தித்துச் செபம் செய்தல்
4) கல்லறைத் தோட்டத்தைச் சுத்தம் செய்தல்
5) பிறருக்கு உதவி செய்தல்
6) இரத்ததானம் செய்தல், ஊக்குவித்தல்
7) ஆலயத்தைச் சுத்தப்படுத்துதல்
8) இதர பங்குகளில் இல்லங்களைச் சந்தித்தல்

நமது பாதுகாவலர் திருவிழாவில் 6ஆம் திருவிழாவை மற்ற சில இயக்கங்களுடன் இணைந்து சிறப்பிக்கின்றனர்.

### (2) கிறிஸ்தவ வாழ்வு சமூகம்

15.08.1951 அன்று நம் பங்கில் பெண்களின் சபையாக கிறிஸ்தவ வாழ்வு சமூகம் மரியாயின் மாசற்ற இதயத்தைப் பாதுகாவலியாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது அதன் இயக்குநராக இருந்தவர் நமது பங்குத்தந்தை அருள்பணி. D.C. ஆன்றனி.

14. J.M. Villavarayan, *The Diocese of Kottar,* p. 67
15. *ஜுபிலி 2000 சிறப்பு மலர்,* குருசடி. ப. 22
16. மேலது
17. திரு. M. மைக்கிள் ஆன்றனி, குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 21.05.2020
18. திரு. M. ஜேசு மரிய ராஜன், குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 21.05.2020

தொடக்கத்தில் திருமதி. மரியதங்கம் ஆசிரியை தலைவியாகவும், திருமதி. கிறிஸ்டீனம்மாள் ஆசிரியை செயலராகவும் டாக்டர். திரேசம்மாள் பொருளாளராகவும் பணியாற்றினர். தொடக்கத்தில் நிர்வாகிகள் உட்பட 15 பேர் அங்கத்தினர்களாக இருந்தனர். 31.05.1971 முதல் மாதா சபை என்று அழைக்கப்பட்ட இச்சபை இப்போது கிறிஸ்தவ வாழ்வு சமூகம் என்று அழைக்கப்பட்டு வருகிறது.[19]

### முக்கியப் பணிகள்

ஏழை மாணவர்களுக்கு, விதவைகளுக்கு, படிப்புக்கு, திருமணத்திற்கு உதவி செய்தல், ஊனமுற்றவர்களுக்கு உதவுதல், அனாதை இல்லங்களைச் சந்தித்து உணவளித்தல்.

### கொண்டாடும் விழாக்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி | 01 | - இறைவனின் அன்னை |
| பிப்ரவரி | 02 | - காணிக்கை அன்னை திருவிழா |
| மார்ச் | 25 | - கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு |
| ஆகஸ்ட் | 15 | - மரியன்னையின் விண்ணேற்பு |
| செப்டம்பர் | 08 | - மரியன்னையின் பிறப்பு |
| அக்டோபர் | 07 | - ஜெபமாலை அன்னை திருவிழா |
| டிசம்பர் | 08 | - அமலோற்பவ அன்னை திருவிழா[20] |

நமது பாதுகாவலர் திருவிழாவில் 6ஆம் திருவிழாவை மற்ற சில திருத்தூதுக் கழகங்களுடன் இணைந்து சிறப்பிக்கின்றனர்.

### (3) புனித பிரான்சிஸ்கன் மூன்றாம் சபை

21.06.1939 அன்று நமது பங்கில் அருள்பணி. பர்ணபாஸ் தலைமையில் 12 உறுப்பினர்களைக் கொண்டு தொடங்கப்பட்டது. திருமதி மரியதங்கம், திருமதி கிறிஸ்டீனம்மாள், திரு. அந்தோணிமுத்து, திருமதி ஊர்சுலம்மாள், திருமதி றோணிக்கம், திருமதி அன்னமரியாயி, திருமதி கனிகூர்ந்தம்மாள், திரு. இன்னாசிமுத்து, திரு. சீமோன், திருமதி சூசன்னாள், திருமதி ஞானசௌந்தரி, திருமதி அன்னம்மா ஆகியோர் தொடக்கச் சபையின் 12 உறுப்பினர்கள் ஆகும். இந்தச் சபை நமது மறைமாவட்டத்தில் முதன்முதலாகத் தொடங்கப்பட்டது குருசடிப் பங்கில்தான். எனவே இச்சபையின் பவள விழா (1939 - 2014) நமது பங்கில் வைத்து மறைமாவட்ட அளவில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு பவள விழா சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.[21]

### நோக்கம்

நற்செய்தியின்படி வாழ்வது, இயற்கையை நேசிப்பது என்பன முக்கிய பணிகளாகும். ஏழைகள், ஊனமுற்றோர், நோயாளிகளைச் சந்தித்தல் மற்றும் உதவியும் செய்கிறார்கள்.[22]

நமது பாதுகாவலர் திருவிழாவின்போது 6 ஆம் திருவிழாவை மற்ற சில பக்த சபையினருடன் இணைந்து சிறப்பிக்கின்றனர்.

### (4) கத்தோலிக்க சேவா சங்கம்

கோட்டாறு மறைமாவட்டத்தில் கத்தோலிக்க சேவா சங்கம் அருள்பணி. C. M. ஹிலரி அவர்களால் 1941ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. 1955ஆம் ஆண்டு குருசடிப் பங்கில் தொடங்கப்பட்ட இச்சங்கம் காலம்சென்ற திரு. தாசன் போன்றோரால் வழி நடத்தப்பட்டது. பின்னர் சிறிது காலம் செயல்படாத நிலையில், 1980ஆம் ஆண்டு அன்றைய பங்குத்தந்தை அருள்பணி. S. M. மரியதாசன் அவர்களால் புதுப்பிக்கப்பட்டது. தலைவராக திரு. S. பிலிப் நியமனம் பெற்றார். தற்சமயம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனியே இரண்டு தொகுதிகள் உள்ளன. சுமார் 50 உறுப்பினர்கள் உள்ளனர்.

குருசடி ஊரைச் சார்ந்த திரு. S. பிலிப் சேவா சங்கத்தின் பொன்விழா காலத்தில் (1991) சங்கத்தின் மறைமாவட்டத் தலைவராக

19. *நூற்றாண்டு விழா சிறப்பு மலர்,* 1911 - 2011, குருசடி. ப. 31
20. மேலது
21. *ஆயர் பங்குச் சந்திப்பு அறிக்கை,* நாள் 28.08.2016. ப. 32
22. *நூற்றாண்டு விழா சிறப்பு மலர்,* 1911 - 2011, குருசடி. ப. 32

இருந்து நம் பங்கிற்கு பெருமை சேர்த்துள்ளார். மேலும் குருசடியைச் சார்ந்த திரு. G. மரிய ஜாண், திரு. M. ஜாண்சன் பால்ராஜ் மற்றும் திரு. S. பிரான்சிஸ் ஆகியோர் மத்திய பேரவை உறுப்பினர்களாகவும், வட்டார, மறைமாவட்ட அளவில் நிர்வாகிகளாகவும் இருந்துள்ளார்கள்.[23]

**நோக்கம்**

1) அனைத்தையும் கிறிஸ்துவில் புதுப்பித்தல் அதாவது உப்பாக (மத்.5:13) புளிகாரமாக (மத்.13:33) இருந்து நற்செய்தியை அறிவித்து, மக்களைப் புனிதப்படுத்தி, கிறிஸ்தவ மனச்சாட்சியை உருவாக்கி உலகை ஊடுருவி நிறைவு செய்தல்,

2) பரிசுத்த ஆவியின் கனிகளையும் அருங்கொடைகளையும் பெற்று அடிப்படை கிறிஸ்தவ வாழ்வு வாழுதல்.

**முக்கியப் பணிகள்**

குருசடிப் பங்கில் களப்பணி செய்தல், இல்லங்கள் சந்தித்தல், பிடி அரிசித் திட்டம், நோயாளிகளைச் சந்தித்தல், வட்டியில்லாக் கடன் கொடுத்தல், ஆதரவற்றோருக்கு உணவு உடை வழங்குதல், உயர்கல்வி பயில்வோருக்கு உதவுதல்.

நமது பாதுகாவலர் திருவிழாவில் 1ஆம் நாள் திருவிழாவை இச்சங்கத்தின் மற்ற சில அமைப்புகளுடன் சேர்ந்து சிறப்பிக்கின்றனர்.

**(5) புனித வின்சென்ட் தே பவுல் சங்கம்**

குருசடி பங்கில் புனித வின்சென்ட் தே பவுல் சங்கம் 05.05.1996 அன்று ஆரம்பிக்கப் பட்டது.[24]

**நோக்கம்**

வறுமையிலும் துன்பத்திலும் வாழும் கிறிஸ்துவின் சாயலான ஏழைகளுக்குப் பணியாற்றுவதன் வாயிலாக, கிறிஸ்துவின் பேரிரக்க அன்பிற்குச் சான்று பகர்வதே இச்சபையின் நோக்கமாகும்.

இச்சபையின் உறுப்பினர்கள் இல்லங்களிலும், மருத்துவமனைகளிலும் நோயாளிகளைச் சந்திக்கின்றார்கள். ஏழைகளுக்கும் கைம்பெண்களுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் ஏழை மாணவர்களுக்கும் இவர்கள் உதவி செய்கிறார்கள். ஆண்டுதோறும் அணைக்கரை கருணை இல்லம் போன்ற வெவ்வேறு இல்லங்களுக்கு சென்று ஊனமுற்றவர்களையும், மூளை வளர்ச்சி குன்றியவர்களையும் சந்தித்து ஆறுதல் கூறுவதோடு மதியம் உணவும் வழங்கி வருகிறார்கள். பல மருத்துவ முகாம்கள் நடத்தியுள்ளனர். இதில் கலந்து கொண்டு பலர் பயன் பெற்றுள்ளனர்.

ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் 27ஆம் நாள் புனித வின்செண்ட் தே பவுல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றார்கள்.[25]

நமது பாதுகாவலர் திருவிழாவின் 1ஆம் திருவிழாவை மற்ற சில அமைப்பினருடன் சேர்ந்து இவர்கள் சிறப்பிக்கின்றனர்.

**(6) பாலர் சபை**

இச்சபை நற்செய்தி அறிவிப்புப் பணியில் சிறாரை இணைத்துத் தகுந்த பயிற்சிதரும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டதாகும்.[26] 5ஆம் வகுப்பு வரைப் படிக்கும் மாணவ மாணவியர்க்கு பாலர் சபையில் உறுப்பினராகும் தகுதி உண்டு.

பாலர் சபையில் உள்ள சிறார்களின் திறமைகளை வளர்க்க பல போட்டிகளும் பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன.

நமது ஆலயப் பாதுகாவலர் திருவிழாவில் 7ஆம் நாள் திருவிழாவை மற்ற அமைப்பினருடன் இணைந்து சிறப்பிக்கின்றனர்.

**(7) சிறுவழி இயக்கம்**

குழந்தை இயேசுவின் புனித தெரசாளை வழிகாட்டியாகக் கொண்டு அவர் காட்டிய வழியில் அன்பினால் அவனியை ஆட்கொள்வதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.[27]

---

23. *நூற்றாண்டு விழா சிறப்பு மலர், 1911-2011*, குருசடி. ப. 33
24. *ஜூபிலி 2000 சிறப்பு மலர்,* குருசடி. ப. 23
25. *நூற்றாண்டு விழா சிறப்பு மலர், 1911-2011*, குருசடி. ப. 35
26. *கோட்டாறு மறைமாவட்டப் பவள விழா மலர், 1930 - 2005* ப. 37
27. மேலது

நமது பங்கில் ஆண்கள் சிறுவழி இயக்கம், பெண்கள் சிறுவழி இயக்கம் என இரு அமைப்புகள் உள்ளன. 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்க்கு உறுப்பினர்களாகச் சேரத் தகுதி உண்டு.

**செயல்பாடுகள்**

உறுப்பினர்களின் திறமைகளை வளர்க்க பலவித போட்டிகள் நடத்திப் பரிசு வழங்குதல் ஒவ்வொரு கூட்டத்திலும் ஒரு குறிப்பிட்ட தலைப்பின் அடிப்படையில் சிறிய கதைகள், நிகழ்வுகள் மூலம் கருத்துரைகள் வழங்கி உறுப்பினர்களைச் செயல்பட வைத்தல்.

நமது பாதுகாவலர் திருவிழாவில் 7ஆம் திருவிழா மற்ற சில இயக்கங்களுடன் இணைந்து சிறப்பிக்கின்றனர்.

## IV. இயக்கங்கள்

### (1) அன்னை தெரசா கிறிஸ்தவ தொழிலாளர்கள் இயக்கம்

இந்த இயக்கமானது 2002ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி அப்போதைய பங்குத்தந்தை அருள்பணி. சேகர் மைக்கிள் அவர்களின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

மறைமாவட்ட அங்கீகாரம் இல்லாமல் 5 ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்த இந்த இயக்கத்திற்கு 2007ஆம் ஆண்டு மறைமாவட்டத்தின் அங்கீகாரம் கிடைத்தது.

“இருப்பவரிடம் கேட்போம் இல்லாதவரிடம் கொடுப்போம்” என்ற விருதுவாக்குடன் ஏழைகளுக்கு உதவுவதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இந்த இயக்கம் செயல்பட்டு வருகிறது.

**இயக்கத்தின் பணிகள்**

வாழ்க்கையில் நலிவடைந்தவர்களையும், கைவிடப்பட்டவர்களையும், ஆதரவற்றவர்களையும் சந்தித்து உதவிகள் செய்வது.

வருடத்திற்குக் குறைந்தது இரண்டு முறையாவது ஆதரவற்றோர் இல்லங்களுக்குச் சென்று முடிந்தவரை உதவிகள் செய்வது.

நமது பள்ளியில் பயிலும் 10 மற்றும் 12ஆம் வகுப்பில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் மாணவ, மாணவியருக்குப் பரிசுகள் வழங்கி ஊக்கப்படுத்துவது.[28]

இவ்வியக்கத்தினர் அன்னை தெரசாவின் பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். 2009, 2010, 2011 மற்றும் 2012 ஆகிய நான்கு ஆண்டுகள் சமபந்தி விருந்து நடத்தப்பட்டது. அன்னை தெரசாவின் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளது.[29]

நமது பங்கைச் சார்ந்த திரு. S.M.S. செல்வராஜ் கோட்டாறு மறைமாவட்ட தொழிலாளர் இயக்கத்தின் தலைவராகப் பணியாற்றி வருவது நமது பங்கிற்குச் சிறப்பாகும்.

நமது பாதுகாவலரின் திருவிழாவில் 8ஆம் திருவிழாவை இச்சங்கத்தினர் சிறப்பிக்கின்றனர்.

### (2) பெண்கள் கிராம முன்னேற்றச் சங்கம்

குருசடி பெண்கள் கிராம முன்னேற்றச் சங்கமானது கோட்டாறு சமூக சேவை சங்கத்தின் கிளை நிறுவனமாகிய கிராமிய விழிப்புணர்வு திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது.

இச்சங்கமானது 2000ஆம் ஆண்டு டிசம்பரில் 60 உறுப்பினர்களைக் கொண்டு தொடங்கப்பட்டது. தற்போது நான்கு சங்கங்களாக 150 உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

**பணிகள்**

சமூக மாற்றத்திற்காகவும், பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் பலவிதமான விழிப்புணர்வு பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகிறது. முக்கியமாகத் தலைமைப் பண்பு, சமூகப் பகுப்பாய்வு, பெண்களின் அடிப்படை உரிமைகளும் கடமைகளும், குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு, தொழில் சம்பந்தமான

---

28. *நூற்றாண்டு விழா சிறப்பு மலர், 1911-2011,* குருசடி. ப. 39
29. *ஆயர் பங்குச் சந்திப்பு அறிக்கை,* நாள் 28.08.2016, ப. 50

பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. சேமிக்கும் பழக்கம் ஊக்குவிக்கப்படுகிறது.

சங்க உறுப்பினர்கள் மக்கள் நலன் கருதி ஆண்டுதோறும் கல்விக் கடன், உயர்கல்விக் கடன், தொழிலாளர் கடன், வீடு பழுது பார்க்கக் கடன் கொடுத்து பல நல்ல திட்டங்களைச் செய்து வருகிறார்கள்.

அரசு நலத் திட்டங்களைத் தெரிந்து நல வாரியங்களில் சேர்ந்து திருமண உதவித் தொகை, கல்வி உதவித்தொகை, பேறுகால உதவித் தொகை தேவைப்படுவோர்களுக்கு வாங்கிக் கொடுக்கப்படுகிறது.[30]

சாதி, மத பாகுபாடின்றி குருசடிப் பங்கு மக்கள் மட்டுமல்லாமல் பக்கத்து ஊர்களான மந்தங்காடு, மேலசூரங்குடி, கூத்தன்காடு பகுதிகளை சார்ந்த பல மக்களும் இச்சங்கத்தில் இணைந்துச் செயல்பட்டு வருகின்றனர்.[31]

நமது பாதுகாவலர் திருவிழாவில் 4ஆம் திருவிழாவை இச்சங்கத்தினர் வேறு சில அமைப்புகளுடன் இணைந்துச் சிறப்பிக்கின்றனர்.

### (3) கத்தோலிக்கச் சங்கம்

குருசடி கத்தோலிக்கச் சங்கம் 18.03.2001 அன்று அப்போதையப் பங்குத்தந்தை அருள்பணி. ஹிலரியால், மறைமாவட்ட இயக்குநர் அருள்பணி. A. வலேரியன் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டது.

#### நோக்கம்

அரசியலில் இலட்சியத் தெளிவும் அர்ப்பண உணர்வும் கொண்ட தலைவர்களை உருவாக்குவதும், அத்தலைவர்கள்வழி உறுப்பினர்களுக்கும், கிறிஸ்தவ மக்களுக்கும் சரியான அரசியல் விழிப்புணர்வை உருவாக்குவதுமே இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

#### பணிகள்

அரசியல் சார்பான நிகழ்வுகளில் கலந்து கொள்வது, அரசியல் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவது, தேர்தல் நேரத்தில் அது சார்பான பணிகளை முன்னின்று நடத்துவது ஆகும்.[32]

பல சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற தேர்தலில் மறைமாவட்டத்தின் நிலைப்பாட்டை மக்களுக்குத் துண்டுப்பிரசுரம் மூலம் இச்சங்கத்தால் தெரியப்படுத்தப்பட்டது.

சங்கத்தின் உறுப்பினர் வழக்கறிஞர் திரு. P. லீனஸ் ராஜ் தேசிய செயலாளராகப் பணியாற்றி யுள்ளார். தற்போது கோட்டாறு மறைமாவட்ட கத்தோலிக்க சங்கத் தலைவராகப் பணியாற்றி நம் பங்கிற்குப் பெருமை சேர்த்து வருகிறார்.

நமது பாதுகாவலர் திருவிழாவில் 1ஆம் திருவிழாவை இச்சங்கத்தினர் வேறு சில சங்கத்தினருடன் இணைந்து சிறப்பிக்கின்றனர்.

### (4) இந்தியக் கிறிஸ்தவ மறுமலர்ச்சி இயக்கம் (CRMI)

இரண்டாம் வத்திக்கான் சங்கம் காட்டிய மறுமலர்ச்சியை உலகிலும், திருஅவையிலும் கொண்டு வர வேண்டுமெனில் அதற்குப் புதிய பார்வை, புதிய கண்ணோட்டம், புதிய அணுகுமுறை, புதிய செயல்திட்டம் போன்றவைகளைத் தன்னகத்தே கொண்ட முற்றிலும் பொதுநிலை யினரால் சுதந்திரத்தோடும் குழுவாகவும் இணைந்து திட்டமிட்டு, தீர்மானம் எடுத்துச் செயல்படும் அமைப்புத் தேவை என்பதை உணர்ந்து சுவாமி அமலோற்பவதாஸ் அவர்களால் உருவாக்கப்பட்ட இயக்கம்தான் இந்திய கிறிஸ்தவ மறுமலர்ச்சி இயக்கம்.

நமது பங்கில் 12.08.2007 அன்று அப்போதைய பங்குத்தந்தை அருள்பணி. M. பெஞ்சமின் லடிஸ்லாஸ் அவர்கள் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டது.

#### முக்கிய பணிகள்

1) உறுப்பினர்களுக்கு பயிற்சிகள் வழங்குவது.
2) முதியோர் இல்லம் சந்தித்து உணவு, உடைகள், பணம் முதலியவைகளைக் கொடுத்து உதவுவது
3) நமது ஊரிலுள்ள 11 முதியவர்களுக்கு மாதம் ரூபாய் 300 வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

---

30. *நூற்றாண்டு விழா சிறப்பு மலர், 1911 - 2011*, குருசடி, ப. 38
31. *ஆயர் பங்குச் சந்திப்பு அறிக்கை, நாள் 28.08.2016*, ப. 42
32. *நூற்றாண்டு விழா சிறப்பு மலர், 1911 - 2011,* குருசடி, ப. 36

4) கண்தானம் பற்றி விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி இறந்தவர்களில் சுமார் 50 நபர்களுடைய கண்கள் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.[33]

நமது பாதுகாவலர் திருவிழாவில் 7ஆம் நாள் திருவிழாவை மற்ற சில இயக்கங்களுடன் இணைந்து இவ்வியக்கத்தினர் சிறப்பிக் கின்றனர்.

## V. பணிக்குழுக்கள்

### (1) பெண்கள் பணிக்குழு

இக்குழு மறைமாவட்டப் பெண்கள் பணிக்குழுவின் ஒரு கிளையாகும். குருசடி பங்கில் இக்குழு 1992ஆம் ஆண்டு அப்போதைய மறைமாவட்டச் செயலரான செல்வி அல்போன்சாள் என்பவரால் தொடங்கி வைக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் மாதத்திற்கு ஒரு முறை இக்குழுக் கூட்டம் நடத்தப்பட்டது. தற்போது வாரம்தோறும் வெள்ளிக்கிழமை கூட்டம் நடைபெறுகிறது.[34]

#### நோக்கம்

தனிமனித, சமூக, அரசியல், பொருளாதார சமய, கலாச்சார அடிப்படையில் பெண்களை அடிமைப்படுத்துகின்ற அமைப்பு முறைகளை மாற்றுவது; ஒத்தக் கருத்துள்ள இயக்கங்களோடு இணைந்து செயல்பட்டு, துணிச்சலோடு பெண் விடுதலைக்காக உழைத்து, இறையரசைக் கட்டி எழுப்புவது.

#### செயல்பாடுகள்

1) பெண்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கின்ற அமைப்புமுறைகளைப் பற்றிய விழிப்புணர்வு கொடுத்தல்
2) பெண்களை ஒருங்கிணைத்தல்
3) பெண்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினை களில் அவர்களுக்குத் தகுந்த ஆலோசனை களை வழங்கி, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வழிகாட்டுதல்
4) மார்ச் 8 அகில உலகப் பெண்கள் தினத்தைப் பங்கில் சிறப்பித்தலும், மறைமாவட்டச் செயல்பாடுகளில் பங்கேற்றலும்
5) காலத்தின் தேவைக்கேற்ப அதிகக் கவனம் செலுத்தவேண்டிய சுற்றுப்புறச் சூழல் பராமரிப்பு, அரசியல் ஈடுபாடு, அரசு சலுகைகள் மக்களுக்குச் சென்றடைய முயற்சித்தல்
6) பெண்களின் திறமைகள், சக்திகள் ஆகியவற்றை வெளிக்கொணர்ந்து அவர்களை ஆற்றல்படுத்தும் விதத்தில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சிறப்புக் கூட்டங்கள் நடத்துதல், சுதந்திர தினவிழா, கிறிஸ்து பிறப்பு விழா, பெண்கள் தினவிழா போன்ற விழாக்களை நடத்துதல், பல்வேறு போட்டிகளை நடத்துதல், கலைநிகழ்ச்சிகள் தயாரித்து வழங்குதல்.[35]

நமது பாதுகாவலர் திருவிழாவின் 4ஆம் திருவிழாவை இவ்வமைப்பினர் மற்ற சில அமைப்புகளுடன் இணைந்து சிறப்பிக்கின்றனர்.

### (2) மரியன்னைத் தலித் குழு

மரியன்னை தலித் குழுவானது 06.08.2003 குருசடி புனித அந்தோனியார் ஆலயத்தில் வைத்து அப்போதைய பங்குத்தந்தை அருள்பணி. M. பெஞ்சமின் லடிஸ்லாஸ் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

#### நோக்கம்

காலங்காலமாக ஒடுக்கப்பட்ட தலித் மக்களை ஒருங்கிணைத்து மனித மாண்புடன் வாழ விடுதலைக்காகப் போராடி இறையாட்சியை மலரச் செய்தல்.

நமது பங்கில் ஆங்காங்கே சிதறிக் கிடந்த ஒடுக்கப்பட்ட மக்களைக் குழுவாக ஒருங்கிணைத்ததன் மூலம் நல்ல உறவு வளர்ந்திருக்கிறது.[36]

நமது பாதுகாவலர் திருவிழாவின் 4ஆம் திருவிழாவை இக்குழுவினர் மற்ற சில

33. *ஆயர் பங்குச் சந்திப்பு அறிக்கை, நாள் 28.08.2016,* ப. 45 - 46
34. *ஜூபிலி 2000 சிறப்பு மலர்,* குருசடி, ப. 26
35. *நூற்றாண்டு விழா சிறப்பு மலர், 1911 - 2011,* குருசடி, ப. 34
36. *நூற்றாண்டு விழா சிறப்பு மலர் 1911 - 2011,* குருசடி, ப. 40

அமைப்புகளுடன் சேர்ந்து சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

**(3) புனித அந்தோனியார் இளைஞர் இயக்கம்**

1985ஆம் ஆண்டு அகில இந்திய கத்தோலிக்க கல்லூரி மாணவர் பேரவை நமது பங்கில் முடிவுக்கு வந்த பிறகு இளைஞர்கள் புனித அந்தோனியார் இளைஞர் இயக்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தி சுமார் 15 ஆண்டுகள் நடத்தினர். அந்த அமைப்பு கோட்டாறு மறைமாவட்ட இளைஞர் பணிக்குழுவுடன் இணைக்கப்படவில்லை.[37] பின்னர் 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் அப்போதைய பங்குத்தந்தை அருள்பணி. A.M. ஹிலரியால் இளைஞர் இயக்கம் முறைப்படி தொடங்கப்பட்டு கோட்டாறு மறைமாவட்ட இளைஞர் பணிக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்கென்று ஒரு கிளையும், பெண்களுக்கென்று ஒரு கிளையுமாகத் தனித்தனியே செயல்படுகிறது. 18 வயது முதல் 30 வரையுள்ளவர்கள் இவ்வியக்கத்தில் உறுப்பினராக இருக்கத் தகுதி உண்டு. எனினும் இவ்வயதிற்குள் திருமணமாகிவிட்டால் இவ்வியக்கத்தில் உறுப்பினராக இருக்க முடியாது.

**செயல்பாடுகள்**

1) இரத்த தானம் மற்றும் கண்தானம். மருத்துவ முகாம் பலமுறை நடத்தப்பட்டது.

2) ஊரிலுள்ள குடிநீர்த் தொட்டிகளை அவ்வப்போது சுத்தம் செய்வது

3) 2018ஆம் ஆண்டு நமது ஆலயப் பாதுகாவலர் திருவிழாவை முன்னிட்டு “The Joseph” என்ற குறும்படம் நம்மூர் இளைஞர்களால் தயாரிக்கப்பட்டுத் திருவிழா முடிவடைந்தவுடன் திரையிடப்பட்டது.

4) நம்மூர் இளைஞர்களால் தயாரிக்கப்பட்ட “The Dark Book” என்ற குறும்படம் 2020ஆம் ஆண்டு திருவிழா முடிவடைந்தவுடன் திரையிடப்பட்டுப் பொதுமக்கள் பாராட்டைப் பெற்றது.

5) இவ்வியகத்தினர் 2008ஆம் ஆண்டு முதல் கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவை முன்னிட்டு ஆலய வளாகத்தில் லூர்து அன்னை கெபி சமீபம் இயற்கை அழகுடன் குடில் அமைக்கின்றனர். கிறிஸ்து பிறப்பின் நிகழ்ச்சிகளைத் தத்ரூபமாக எடுத்துக்காட்டும் விதத்தில் அதை அமைத்து பொதுமக்களின் பாராட்டைப் பெற்று வருகிறார்கள்.[38]

நமது பாதுகாவலர் திருவிழாவில் 7ஆம் திருவிழாவை இளைஞர் இயக்கத்தினர் மற்ற சில அமைப்புகளுடன் இணைந்து சிறப்பிக்கின்றனர்.

**(4) இளம் கிறிஸ்தவ மாணவர் இயக்கம்**

நல்ல மதிப்பீடுகளின் அடிப்படையில் தம்மையும், பிறரையும் உருவாக்கி இறைவன் விரும்பும் புதிய சமுதாயம் படைத்தல் என்ற நோக்கத்தைக் கொண்டது.[39]

9 முதல் 12ஆம் வகுப்பு வரைப் படிக்கும் மாணவ மாணவியர்க்கு இந்த இயக்கத்தில் உறுப்பினராகும் தகுதி உண்டு.

நமது பாதுகாவலர் திருவிழாவின் 7ஆம் நாளை வேறு சில இயக்கங்களுடன் இணைந்து இவர்களும் சிறப்பிக்கின்றனர்.

**(5) குடும்ப நலப் பணிக்குழு**

குருசடிப் பங்கில் 09.08.2014 அன்று அப்போதைய பங்குத்தந்தை அருள்பணி. L. தார்சியுஸ் ராஜ் அவர்களால் இது ஆரம்பிக்கப்பட்டது. “குடும்பங்களை உருவாக்க, உறவாக்க” என்றும் விருதுவாக்குடன் செயல்படும் அமைப்பாகும்.

**நோக்கம்**

இளம் உள்ளங்களுக்குக் குடும்ப வாழ்வைப்பற்றிப் போதியத் தெளிவை உருவாக்குவதும், குடும்பப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதும், மனநோய், மதுநோய்

37. திரு. D. அமலராஜா, குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 23.05.2020
38. திரு. J. ஆன்றோ ஸ்தனிஸ் (சந்தோஸ்), குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 23.05.2020
39. *கோட்டாறு மறைமாவட்டப் பவள விழா மலர், 1930 - 2005,* ப. 37

போன்றவற்றிற்கு ஆற்றுப்படுத்தலும் மற்றும் சிகிச்சை மூலம் குணமடைய வழிசெய்து நல்ல குடும்பங்களைக் கட்டியெழுப்புதலும், வாழ்க்கைக் கல்வி வழங்குவதும் இதன் நோக்கங்களாகும். இந்த பணிக்குழுவில் திருமணம் ஆனவர்கள் மட்டுமே உறுப்பினராக இருக்க முடியும்.

**முக்கிய பணிகள்**

1) இல்லங்களைச் சந்தித்து குடும்ப ஜெபம் செய்ய வைத்தல்.

2) கருத்து வேறுபாடால் பிரிந்திருக்கும் குடும்பங்களை ஒன்றிணைத்தல்.

3) திருமணமாகி 25 மற்றும் 50 ஆண்டு களானத் தம்பதிகளைக் கௌரவிக்கும் வண்ணம் ஒவ்வொரு ஆண்டும் திருக்குடும்ப விழா திருப்பலியில் பங்கேற்க வைத்துப் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசும் வழங்குதல்.[40]

நமது பாதுகாவலர் திருவிழாவில் 4ஆம் திருவிழாவை மற்ற சில அமைப்பினருடன் இணைந்து இக்குழுவினர் சிறப்பிக்கின்றனர்.

**(6) திருவழிபாட்டுக் குழு**

பங்கிலுள்ள திருவழிபாடுகளை அர்த்தமுள்ள விதத்தில் நடந்திட உதவும் வகையில், ஒவ்வொரு பங்கிலும் திருவழிபாட்டுக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நமது பங்கிலும் திருவழிபாட்டுக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**பணிகள்**

திருப்பலியின் மையக்கருத்துக்கள் தேர்ந்தெடுத்தல், திருப்பலிக் கொண்டாட்டங்கள் குறித்து திறனாய்வு செய்தல் முக்கிய பணிகள் ஆகும்.

ஒவ்வொரு அன்பியத்திலிருந்தும் ஒருவர் இக்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். பக்தசபை மற்றும் இயக்கத்திலிருந்தும் தலா ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். பங்கிலுள்ள அருட்சகோதரிகள் இல்லங்களிலிருந்து தலா ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

ஞாயிறு திருப்பலியின் மையச் சிந்தனையானது பீடத்தில் எழுதி ஒட்டப்படுகிறது. அதனடிப்படையில் முன்னுரை, வாசக முன்னுரை மற்றும் மறையுரை அமைகிறது.[41]

நமது பாதுகாவலர் திருவிழாவின் 9ஆம் நாள் திருவிழாவின் மாலை ஆராதனையை இக்குழுவினர் வேறு சில அமைப்புகளுடன் இணைந்து சிறப்பிக்கின்றனர்.

## VI. மறைக்கல்வி

குருசடி புனித அந்தோனியார் ஆலயம் பழம்பெரும் ஆலயம் என்பதால் இங்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே மறைக்கல்வி வகுப்புகள் நடைபெற்றன. தொடக்கக் காலத்தில் நாகர்கோவில் ஜோசப் கான்வென்ட் அருள்சகோதரிகள் மறைக்கல்வி பயிற்றுவித்தனர். பின்னர் 1942ஆம் ஆண்டு இராமன்புதூர் சந்திப்பில் புதுவை தூய இதய மரியன்னையின் பிரான்சிஸ்கன் சகோதரிகள் துறவுஅவை அருள்சகோதரிகள் இல்லம் ஏற்படுத்தப்பட்டது. எனவே 1943ஆம் ஆண்டு நமது பங்கில் நடைபெறும் மறைக்கல்வி வகுப்புகளைக் கவனிக்கும் பொறுப்பைப் புதுவை அருள்சகோதரிகளிடம் அப்போதைய பங்குத் தந்தை அருள்பணி. ரிச்சர்டு ரொசாரியோ ஒப்படைத்தார். இராமன்புதூர் அருள்சகோதரிகள் இல்லத்திலிருந்து மூன்று அருள்சகோதரிகள் வந்து பெண்களுக்கான மறைக்கல்வி வகுப்புகளைக் கவனித்தனர். மேலும் திருமணம் செய்துகொள்ளாதப் பெண்களும் மற்றும் பள்ளி ஆசிரியர்களாக இருந்த ஆண்களும் பெண்களும் மறைக்கல்வி பயிற்றுவித்தனர். நமது பங்கைப் பொருத்தமட்டில் குருசடி மற்றும் அதன் கிளைப்பங்குகளைச் சார்ந்தவர்கள் ஆசிரியர்களாகப் பணியாற்றினர். 100 ஆண்டுகளுக்கு முன்பு மறைக்கல்வி நடந்தவிதம் குறித்து விபரங்கள் எதுவும் அறியமுடியவில்லை. எனினும் 1940ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 3.00 மணிக்கு மறைக்கல்வி வகுப்புகள்

40. திருமதி M. மேரி பிரின்சி லதா, தலைவர், குடும்ப நல பணிக்குழு, குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 20.05.2020
41. திருமதி V. கிளிட்டஸ் ராக், தலைவர், திருவழிபாட்டுக் குழு, குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 03.06.2020

தொடங்கி 4.00 மணிக்கு நிறைவுபெறும். மறைக்கல்வி வகுப்புகள் முடிந்தவுடன் நற்கருணை ஆசீர் நடைபெற்றது. இதனால் குருசடியின் கிளைப் பங்குகளாகிய கார்மல்நகர், மேலராமன்புதூர், தளவாய்புரம், புன்னைநகர், வேதநகர், மறவன்குடியிருப்பு, வட்டக்கரை, வடக்குக்கோணம் ஆகிய ஊர்களிலிருந்து மாணவ மாணவியர் குருசடிக்கு நடந்தே வந்தார்கள்.[42] 1943ஆம் ஆண்டு நமது பங்கில் மறைக்கல்வி மன்றம் துவங்கப்பட்டது.[43]

1955ஆம் ஆண்டிலிருந்து கார்மல்நகர், மேலராமன்புதூர், தளவாய்புரம் மற்றும் புன்னைநகரைச் சார்ந்தவர்களுக்கு இராமன்புதூரில் தனியாக மறைக்கல்வி நடைபெற்றது. அதன்படி 1 முதல் 5ஆம் வகுப்பு வரையுள்ள மாணவ மாணவியர்களுக்கு சிறுமலர் தொடக்கப் பள்ளியிலும் 6 முதல் அதற்குமேல் உள்ள வகுப்புகளில் படிக்கும் பெண்களுக்கு சிறுமலர் நடுநிலைப் பள்ளியிலும் 6ஆம் வகுப்புக்குமேல் படிக்கும் மாணவர்களுக்கு கார்மல் பள்ளியிலும் மறைக்கல்வி வகுப்புகள் நடத்தப்பட்டன. அம்மாணவ மாணவியருக்கு ஒழுங்குப் பரிசுகள் கொடுப்பதும், மறைக்கல்வி மன்ற விழாவும் குருசடிப் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவின் போது நடைபெறும். பின்னர் சிறிது காலம் கழித்து மேலராமன்புதூர், புன்னைநகர், தளவாய்புரம் ஆகிய ஊர்களுக்குத் தனித்தனியே மறைக்கல்வி அந்தந்த ஊர்களில் வைத்து நடைபெற்றது.[44] 1969ஆம் ஆண்டு வேதநகர் மறைக்கல்வி மன்றம் குருசடிப் பங்கின் அப்போதைய உதவிப் பங்குத்தந்தை அருள்பணி. S. செர்வாசியுஸ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.[45] அதன் பிறகு வேதநகரைச் சார்ந்த மாணவ மாணவியர் குருசடிக்கு மறைகல்வி கற்க வரவில்லை. 1969ஆம் ஆண்டு மே மாதம் முதல் அப்போதைய குருசடி பங்குத்தந்தை அருள்பணி. R. அந்தோனிமுத்துவால் மறவன்குடியிருப்பில் மறைக்கல்வி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டது.[46] பின்னர் சில காலம் கழித்து வட்டக்கரையிலும் வடக்குக்கோணத்திலும் மறைக்கல்வி ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிறகு குருசடியைச் சேர்ந்த மாணவ மாணவிகள் மட்டுமே குருசடியில் மறைக்கல்வி கற்கின்றனர். தொடக்கக் காலத்தில் பணியாற்றிய ஆசிரியர் மற்றும் ஆசிரியைகளில் திரு. A. அருளப்பன் ஆசிரியர், திருமதி மரியதங்கம் ஆசிரியை, திருமதி ஞானசெல்வம் ஆசிரியை, திருமதி மேரி ஆசிரியை, செல்வி கன்னிகூர்ந்தாள் ஆசிரியை மற்றும் அருட்சகோதரி மரியமதலேனம்மாள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.[47] பின்காலங்களில் பேராசிரியர் S. பிலிப், அருட்சகோதரி ஜெரால்டின் ஜெயம், திரு. S. A. ஜார்ஜ், திரு. D. கலிஸ்டஸ், திரு. M. கிரகோரி ஜேசுரெத்தினம், திரு. S. ஜோசப் ஆன்றனி, திரு. M. ஜாண்சன் பால்ராஜ், திரு. S. பர்ணபாஸ் (தங்கையா) திருமதி. எஸ்தர் கியோனியம்மாள், திருமதி. T. மேரி அபிலா, திரு. V. வெல்வின் சில்வெஸ்டர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**நோக்கம்**

மாறிவரும் சமுதாயத்தில் மனிதன் பல்வேறு தாக்கங்களுக்கு ஆளாகின்றான். காலத்தின் அறிகுறிகளை ஆய்ந்தறிந்து இறை விருப்பத்தையும், இயேசுவின் பணியையும், படிப்பினையையும் சிறார், பதின் பருவத்தினர், இளைஞர்கள், திருமணம் செய்யும் நிலையிலிருப்பவர்கள், பெற்றோர் ஆகியோருக்கு அவரவர் வயதுக்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் வழங்கிப் பயிற்றுவித்து இறையாட்சி மலரச் செய்தல்.

**செயல்பாடுகள்**

1) ஆசிரியர்களுக்கு வருடத்திற்கு இருமுறை பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.

---

42. திரு. G. சிறில்ராஜ், கீழராமன்புதூர், *நேர்முகப்பேட்டி*, நாள் 20.03.2020
43. *மறைக்கல்வி மன்ற 75ஆவது ஆண்டு பவள விழா மலர், 1943 - 2018*, குருசடி
44. திரு. M. ஜோசப் ஜேம்ஸ், கீழராமன்புதூர், *நேர்முகப்பேட்டி*, நாள் 23.03.2020
45. புனித மிக்கேல் முதன்மை வானதூதர் ஆலயம், வேதநகர், *மறைக்கல்வி மன்றம் பொன்விழா மலர், 1969 - 2019*
46. மறவன்குடியிருப்பு மாதா மஹால் திருமண்டப திறப்பு விழா, *சிறப்பு மலர்*, நாள் 03.01.1997, ப. 105
47. *மறைக்கல்வி மன்ற 75ஆவது ஆண்டு பவளவிழா மலர், 1943 - 2018,* குருசடி, ப. 45

2) மன்றக் கூட்டம் வருடத்திற்கு இருமுறை நடத்தப்பட்டு வருகிறது.

3) வருடந்தோறும் விடுமுறை விவிலிய வகுப்புகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

4) வட்டாரத் தேர்வுகளில் அதிகமான மாணவ மாணவிகளைப் பங்கேற்கச் செய்து, பரிசுகளையும் பெற்று வருகிறார்கள்.

5) மாணவர்களுக்குக் காலாண்டு தேர்வு, அரையாண்டுத் தேர்வு, முழு ஆண்டுத் தேர்வு, விவிலியப் போட்டிகள் எனத் திட்டமிட்டு வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது.

6) வட்டாரக் குழுக்களில் ஆசிரியர்கள் பயிற்சியாளராகவும் பணியாற்றி வருகிறார்கள்.

7) மறைக்கல்வி மன்றத்தின் பவள விழாவின் போது (1943-2018) சிறப்பு மலர் வெளியிடப்பட்டது.

நமது பாதுகாவலர் திருவிழாவில் 3ஆம் திருவிழாவை மறைக்கல்வி மன்றத்தினர் சிறப்பிக்கின்றனர்.

## VII. நிறுவனங்கள்

நமது பங்கில் மூன்று அருள்சகோதரிகள் இல்லங்களும், ஒரு தொடக்கப் பள்ளியும், ஒரு மேல்நிலைப் பள்ளியும் உள்ளன. அவற்றைப்பற்றி விரிவாகக் காண்போம்.

### (1) கார்மல் துறவுஅவை அருள்சகோதரிகள் இல்லம்

கார்மல் துறவுஅவை அருள்சகோதரிகள் இல்லம் குருசடிப் பங்கில் 05.05.1985 அன்று தொடங்கப்பட்டது.[48] இவர்கள் நமது பங்கு வளர்ச்சியில் அதிகப் பங்களிப்பைக் கொடுத்தவர்கள். 1986ஆம் ஆண்டு கார்மல் துறவுஅவை அருள்சகோதரிகளிடம் நமது பள்ளி நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டு 1990ஆம் ஆண்டு வரை அருட்சகோதரிகள் தலைமை ஆசிரியைகளாகப் பணியாற்றினார்கள். இவர்கள் தற்போது நமது பங்கில் தினசரி திருப்பலியில் கலந்துகொண்டு நற்கருணை வழங்குவதில் பங்குத்தந்தைக்கு உதவியாக இருக்கிறார்கள். அன்பியங்களைச் சந்திக்கிறார்கள். மறைக்கல்வி மன்றத்திலும் இந்த அருள்சகோதரிகள் சிலர் ஆசிரியைகளாகப் பணியாற்றி வருவது சிறப்பு ஆகும்.

### (2) திருச்சிலுவை அருள்சகோதரிகள் இல்லம்

நம் மாவட்டத்தில் பெண் கல்வியின் இன்றியமையாமையையும், பெண்களுக்கான தனிக் கல்லூரியின் அவசியத்தையும் உணர்ந்து கோட்டாறு மறைமாவட்ட ஆயர் T.R. ஆஞ்ஞிசாமியின் அழைப்பை ஏற்று பிரான்ஸ் நாட்டில் சாவனோவைத் தலைமையிடமாகக் கொண்ட திருச்சிலுவை அருள்சகோதரிகளால் 02.08.1965 அன்று திருச்சிலுவை கல்லூரி ஆரம்பிக்கக்பட்டது.[49] 13.06.1965 அன்று அருள்சகோதரிகள் இல்லம் அப்போதைய கோட்டாறு மறைமாவட்ட ஆயரால் ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது.[50]

கல்விப் பணியுடன் திருச்சிலுவை அருள்சகோதரிகள் குருசடிப் பங்கு மக்களுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளனர். மறைக்கல்வி மன்றத்தில் சில அருள்சகோதரிகள் ஆசிரியைகளாகப் பணியாற்றி வருகின்றனர். அன்பியங்களையும் சந்திக்கிறார்கள்.

(திருச்சிலுவை அருள்சகோதரிகள் பற்றிய கூடுதல் விவரங்கள் 5ஆவது அத்தியாயத்தில் காண்க)

### (3) இயேசுவின் திருஇருதய அருள் சகோதரிகள் இல்லம்

21.06.1952 அன்று தூத்துக்குடி மறைமாவட்டம் அழகப்பபுரத்தில் இயேசுவின் சிறிய சகோதரிகள் என்ற பெயரில் அன்னை ஸ்கொலாஸ்டிக்காவால் இத்துறவுஅவை தொடங்கப்பட்டது.[51] தடைகளின் மத்தியிலும் இலட்சியத்தை நோக்கித் தொடர்ந்து பயணம் செய்து, சபை வளர்ச்சிப் பெற அன்றைய

48. *ஜூபிலி 2000 சிறப்பு மலர்,* குருசடி, ப. 29
49. *ஜூபிலி 2000 சிறப்பு மலர்,* குருசடி. ப. 28
50. *Golden Jubilee Souvenir 1965-2015, Holy Cross College,* p. 42
51. *ஜூபிலி 2000 சிறப்பு மலர்,* குருசடி. ப. 27

கோட்டாறு மறைமாவட்ட ஆயர் T. R. ஆஞ்ஞிசாமியின் ஆசீர் கிடைத்தது. ஏழைகளும் ஆதரவற்றவர்களும், விதவைகள் கைவிடப் பட்டவர்களும் அடைக்கலம் புகும் அரணாகக் குருசடியில் கருணை இல்லம் அப்போதைய பங்குத்தந்தை அருள்பணி. அந்தோணிமுத்துவால் 29.10.1967 அன்று தொடங்கப்பட்டது. 30.10.1969 அன்று அருள்சகோதரிகள் இல்லம் ஆயர் T. R. ஆஞ்ஞிசாமியால் ஆசீர்வதிக்கப் பட்டது.[52] பின்னர் இயேசுவின் சிறிய சகோதரிகள் என்றிருந்த இச்சபையின் பெயர் மாற்றப்பட்டு இயேசுவின் திருஇருதய துறவு அவை என்று அழைக்கப்படுகிறது. இச்சபையின் வளர்ச்சியில் குருசடிப் பங்கிற்கு அதிக முக்கியத்துவம் உண்டு. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்களில், திருஇருதய அருள்சகோதரி களால் நடத்தப்படும் புனித அந்தோனியார் கருணை இல்லம் சிறப்பாகச் செயல்பட்டு கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகத்தின் பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

இத்துறவுஅவை அருள்சகோதரிகள் நமது ஆலயத்தில் திருப்பலியின்போது நற்கருணை வழங்குவதில் பங்குத்தந்தைக்கு உதவியாக இருக்கிறார்கள். அன்பியங்களைச் சந்திக்கிறார்கள். மறைக்கல்வி மன்றத்திலும் இத்துறவுஅவை அருள்சகோதரிகள் சிலர் ஆசிரியைகளாகப் பணியாற்றி வருவது சிறப்பாகும். 30.10.2019 அன்று குருசடி இல்லத்தின் பொன்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. (திருஇருதய அருள்சகோதரிகள் பற்றிய கூடுதல் விவரங்கள் அத்தியாயம் 5ல் கொடுக்கப்பட்டுள்ளது)

## (4) புனித அந்தோனியார் தொடக்க மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்

புனித அந்தோனியார் தொடக்கப் பள்ளி 21.05.1918 அன்று ஆரம்பிக்கப்பட்டது.[53] நமது பங்கின் வளர்ச்சியில் நமது பள்ளிக்கு அதிக முக்கியத்துவம் உண்டு. முதல் மற்றும் இரண்டாம் வகுப்புகள் முதலில் தொடங்கப் பட்டன. 1930ஆம் ஆண்டு 3ஆம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. தொடக்க காலத்தில் முதல் உள்ள தலைமை ஆசிரியர் யார் என்பதை அறிய முடியவில்லை. 1937ஆம் ஆண்டு முதல் திரு. A. அருளப்பன் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். 1954ஆம் ஆண்டு அவர் இறந்ததையடுத்து 1954 முதல் 1963 வரை திரு. S. ஜேசுஅடிமை தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். 1963 ஜூன் முதல் 1986 வரை திரு. S. தார்சியுஸ் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1986ஆம் ஆண்டு பள்ளி நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. பள்ளியானது கார்மல் துறவுஅவை அருள்சகோதரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு அருள்சகோதரி A. அந்தோணி அம்மாள் 1986 முதல் 1988 வரை தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார்.[54] பின்னர் 1987-88ஆம் கல்வியாண்டில் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது. நமது பங்குத்தந்தையும் பள்ளித் தாளாளருமான அருள்பணி. A. ஜோசப்ராஜ் 1990ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளிக்கு அரசு அங்கீகாரம் பெற்றார்.[55] அருள்சகோதரி. மேரி எபேமியா ஜாய்ஸ் அவர்கள் 1988 ஜூன் முதல் 1989 அக்டோபர் மாதம்வரை தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1989ஆம் ஆண்டு நவம்பர் முதல் அருள்சகோதரி. D. தார்சிஸ்மேரி தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் கார்மல் துறவுஅவை அருள்சகோதரிகள் பள்ளி நிர்வாகத்திலிருந்து விலகினர். அதனைத் தொடர்ந்து திரு. M. ஜோசப் மரிய பிரான்சிஸ் தலைமை ஆசிரியராக 1990ஆம் ஆண்டு முதல் பணியாற்றினார்.[56] 1991-92 கல்வியாண்டில் தொடக்கப் பள்ளியும், உயர்நிலைப் பள்ளியும், தனித்தனி நிர்வாகத்தின்கீழ் இயங்க வேண்டுமென்ற அரசின் உத்தரவுக்கேற்ப, தொடக்கப் பள்ளியும்,

---

52. குருசடி திருஇருதய அருள் சகோதரிகள் இல்லம், *கல்வெட்டு*, நாள் 30.10.1969
53. புனித அந்தோனியார் தொடக்கப் பள்ளி, குருசடி, *கல்வெட்டு*, நாள் 03.01.2009
54. திரு. S. தார்சியுஸ், முன்னாள் தலைமை ஆசிரியர், புனித அந்தோனியார் தொடக்கப் பள்ளி, குருசடி, *நேர்முகப்பேட்டி*, நாள் 10.05.2020
55. திரு. A. புஷ்பராஜ், குருசடி, *நேர்முகப்பேட்டி*, நாள் 10.05.2020
56. மேலது

உயர்நிலைப் பள்ளியும் தனித்தனித் தலைமை ஆசிரியர்களின் கீழ் செயல்பட ஆரம்பித்தன. தொடக்கப் பள்ளிக்கு திரு. A. ஜேசு அருள் ராஜ் 1991 முதல் 2000 வரை தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்தார். 2000 முதல் 2002 வரை திருமதி S. அந்தோணி ராஜம்மாள் தலைமை ஆசிரியையாகப் பணிபுரிந்தார்.[57] 2002ஆம் ஆண்டுமுதல் தொடக்கப் பள்ளி திருஇருதய துறவுஅவை அருள்சகோதரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு அருள்சகோதரி A. ரோசரி 2002-2003 கல்வியாண்டு முதல் 2008-2009 கல்வியாண்டு வரை தலைமை ஆசிரியையாகப் பணியாற்றி வந்தார். 2009-10 கல்வியாண்டுமுதல் 2016-17 கல்வியாண்டுவரை அருள்சகோதரி S. மேரி ஸ்கொலாஸ்டிக்கா தலைமை ஆசிரியையாகப் பணியாற்றினார். 2017-18, 2018-2019 கல்வியாண்டுகளில் அருள்சகோதரி P. லீனா மர்செல்லா ராணி தலைமை ஆசிரியையாகப் பணியாற்றினார்.[58] 2019-20 கல்வியாண்டுமுதல் அருள்சகோதரி A. ரோசரி தலைமை ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார்.

உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் திரு. M. ஜோசப் மரிய பிரான்சிஸ் 1999 ஆம் ஆண்டு ஓய்வுப் பெற்றார். 1999-2000 கல்வியாண்டுமுதல் உயர்நிலைப் பள்ளி திருஇருதய துறவுஅவை அருள்சகோதரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு அருள்சகோதரி A. அன்னம்மாள் 1999 முதல் 2012 வரை தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். 2000-2001ஆம் கல்வியாண்டு முதல் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது.[59] 2012-13 கல்வியாண்டுமுதல் 2017-18 கல்வியாண்டு வரை அருள்சகோதரி. A. அகஸ்டின் அம்மாள் தலைமை ஆசிரியையாகப் பணிபுரிந்தார். 2018-19 கல்வியாண்டில் அருள்சகோதரி. வின்சென்ட் ராணி தலைமை ஆசிரியையாகப் பணி புரிந்துள்ளார். 2019-20 கல்வியாண்டு முதல் அருள்சகோதரி. பேரின்பபாய் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார்.

நமது பள்ளியில் 11 மற்றும் 12ஆம் வகுப்புகள் சுயநிதிப் பிரிவாக செயல்பட்டு வருகின்றன. நமது ஊரைச் சார்ந்த திரு. S. மைக்கிள் ஆன்றனி சுயநிதிப் பிரிவில் பணியாற்றும் 10 ஆசிரியைகளுக்கு 2010 ஆம் ஆண்டுமுதல் 2020ஆம் ஆண்டு மே வரை ஊதியம் வழங்கினார். 10 ஆசிரியைகளுக்கும் சேர்த்து மாத ஊதியமாக மாதா மாதம் ரூ. 70,000/- வழங்கினார். பின்னர் சுயநிதிப் பிரிவில் பணியாற்றும் ஆசிரியர்கள் தங்கள் குழந்தைகளை இப்பள்ளியில் பயிற்றுவித்தால் மட்டுமே தன்னால் ஊதியம் வழங்க முடியும் என்று திரு. S. மைக்கிள் ஆன்றனி உறுதியாகத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து 2020ஆம் ஆண்டு ஜூன்முதல் நமது பள்ளியில் தங்கள் குழந்தை களைச் சேர்த்த இரண்டு ஆசிரியைகளுக்கு மாதம் ரூபாய் 15,000 வீதமும், திருமணமாகாத ஆசிரியை ஒருவருக்கும், குழந்தைகள் பள்ளிக் கல்வியை முடித்த ஆசிரியை ஒருவருக்கும் மாதம் ரூபாய் 7000 வீதம் ஊதியமாக வழங்கி வருகிறார். மற்ற ஆசிரியைகளுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. அருள்சகோதரி. A. அன்னம்மாள் முயற்சியில் அமெரிக்காவைச் சார்ந்த திரு. ஆலன் ஹனிபால் என்பவர் 2008ஆம் ஆண்டுமுதல் 10 ஆசிரியை களுக்கும் மாதம் ரூபாய் 1000 வீதம் ஊதியமாக வழங்கி வருகிறார். இதனால் நமது பங்கு நிர்வாகத்தால் சுயநிதிப் பிரிவு வகுப்புகளைத் தொடர்ந்து நடத்த முடிகிறது.

தற்போது தொடக்கப் பள்ளியில் 63 மாணவ மாணவியர் கல்வி பயில்கின்றனர். ஒரு தலைமை ஆசிரியையும், நான்கு ஆசிரியைகளும் பணியாற்றி வருகின்றனர்.

மேல்நிலைப் பள்ளியில் 110 மாணவ மாணவியர் கல்வி பயில்கின்றனர். ஒரு தலைமை ஆசிரியையும் இரண்டு அலுவலகப் பணியாளர்களும், 17 ஆசிரியர்களும் பணியாற்றி வருகின்றனர்.

(புனித அந்தோனியார் தொடக்க மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைப் பற்றிய கூடுதல் தகவல்கள் அத்தியாயம் 5 மற்றும் 6 இல் கொடுக்கப்பட்டுள்ளன)

57. மேலது
58. மேலது
59. மேலது

# VIII. இதர அமைப்புகள்

நமது பங்கில் திருஅவைச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள் தவிர வேறு சில அமைப்புகளும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அவற்றைப்பற்றி விரிவாகப் பார்ப்போம்.

## 1) ஜாலி பிரண்ட்ஸ் கால்பந்தாட்டக் கழகம்

நமது ஊர் இளைஞர்களிடையே ஒற்றுமையையும், திறமைகளையும், வளர்க்கும் நோக்குடன் 15.01.1999 அன்று இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.[60] தொடக்கக் காலத்தில் தலைவராக திரு. வளன் பீட்டர், துணைத் தலைவராக திரு. ஸ்மைல்ராஜ், செயலராக திரு. L. C. ராஜா, துணைச் செயலராக திரு. ஆன்றனி ஜோஸ், பொருளாளராக அருள்பணி அருள் யூஜின் ராய், மேலாளராக திரு. ராஜேஷ், பயிற்சியாளராக திரு. ரூபன், கௌரவ ஆலோசகராக திரு. D. மரிய ஜாண் கென்னடி ஆகியோர் செயல்பட்டார்கள்.[61] அதனைத் தொடர்ந்து 2000 ஆண்டுமுதல் 2019ஆம் ஆண்டு மே மாதம்வரை திரு. M. ஜேசு மரிய ராஜன் மேலாளராக பணியாற்றியுள்ளார்.[62] 2019ஆம் ஆண்டு மே முதல் திரு. F. அமிர்தராஜ் மேலாளராகச் செயல்பட்டு வருகிறார்.

திரு. M. ஜேசு மரிய ராஜன் மேலாளராக இருந்தபோது மாவட்ட அளவிலான கால்பந்து விளையாட்டுகளில் பங்கேற்றுப் பல வெற்றிகளை இந்த அணி பெற்றுள்ளது.

திரு. F. அமிர்தராஜ் மேலாளராகப் பொறுப்பேற்றபிறகு பங்கு நிர்வாகம் மற்றும் ஊர் பொதுமக்கள் நன்கொடையில் சுமார் ரூபாய் 2,50,000 செலவில் மைதானத்தைச் சுற்றி 30 அடி உயரத்திற்கு இரும்பு வேலி அமைக்கப் பட்டுள்ளது.[63]

ஆண்டு தோறும் பாதுகாவலர் திருவிழாவின் போது இக்கழகம் சார்பாக கால்பந்து விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இக்கால்பந்தாட்ட கழக உறுப்பினர்கள் சிலர் மாநில அளவிலான கால்பந்து போட்டிகளிலும் கலந்துகொண்டு விளையாடி நமது ஊருக்குப் பெருமை சேர்த்துள்ளனர். நமது மாவட்டத்தில் சிறந்த கால்பந்தாட்ட குழுக்களில் ஜாலி பிரண்ட்ஸ் கால்பந்தாட்டக் குழுவும் ஒன்று என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

## (2) புனித அந்தோனியார் பள்ளிகளின் முன்னாள் மாணவர் மன்றம், குருசடி

நமது பள்ளியில் முன்னாள் மாணவர் மன்றம் ஏற்படுத்த நமது பங்குத்தந்தையும் பள்ளி தாளாளருமான அருள்பணி. பிரான்சிஸ் M. போர்ஜியா மற்றும் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை துணைத் தலைவர் திரு. D. மரிய ஜாண் கென்னடி மற்றும் பொருளாளர் திரு. S. A. ரெத்னதாஸ் ஆகியோர் அழைப்பு விடுத்தனர். அதன்படி 08.12.2018 அன்று ஆலோசனைக் கூட்டம் பள்ளி தாளாளர் அருள்பணி. பிரான்சிஸ் M. போர்ஜியா தலைமையில் நடைபெற்றது. அதில் தற்காலிக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன்படி தலைவராக திரு. S. வற்கீஸ் தங்கராஜ், செயலாளராக திரு. F. அமிர்தராஜ், துணைச் செயலாளராக திருமதி V. ஜாக்குலின், பெருளாளராக திரு. M. ஜுலிபர் யூப்ரின் சேவியர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் 15.01.2019 அன்று முதல் பொதுக்குழுக் கூட்டம் புனித அந்தோனியார் சமூகநலக் கூடத்தில் தற்காலிகத் தலைவர் திரு. S. வற்கீஸ் தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது. அதில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன்படி கௌரவ தலைவராக திரு. S. மைக்கிள் ஆன்றனியும் தலைவராக திரு. S. வற்கீஸ் தங்கராஜ், செயலாளராக திரு. F. அமிர்தராஜ், துணைத் தலைவராக திரு. S. கனகசபாபதி, துணைச்செயலராக திருமதி M. ரோஸ்மேரி லாரன்ஸ், பொருளாளராக திரு. M. ஜுலிபர் யூப்ரின் சேவியர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர். செயற்குழு உறுப்பினர்களும்

60. *ஜுபிலி 2000 சிறப்பு மலர்,* குருசடி. ப. 25
61. மேலது
62. திரு. M. ஜேசு மரிய ராஜன், குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 12.05.2020
63. திரு. F. அமிர்தராஜ், குருசடி, *நேர்முகப்பேட்டி,* நாள் 12.05.2020

தேர்ந்தெடுக்கப்பட்டனர். தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியை அருள்சகோதரி P. லீனா மர்செல்லா ராணியும், மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை அருள்சகோதரி. வின்செென்ட் ராணியும் முன்னிலை வகித்தனர்.[64]

2019-20ஆம் கல்வியாண்டில் தொடக்கப் பள்ளிக்கு சுமார் ரூபாய் 77,000 செலவில் ஸ்மார்ட் கிளாஸ் (Smart Class) ஏற்படுத்தி யுள்ளனர். மேலும் தொடக்கப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிக்கு ரூ. 1,50,000 செலவில் பல நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. கௌரவ தலைவர் திரு. S. மைக்கிள் ஆன்றனி மற்றும் முன்னாள் மாணவர் மன்றம் இணைந்து பள்ளி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் 2019-20ஆம் கல்வியாண்டில் 6 மாதகால ஆங்கிலப் பேச்சுத்திறன் வளர்த்தல் பயிற்சி ரூ.1,49,000 செலவில் கொடுக்கப்பட்டது.[65] நமது பள்ளிகளின் வளர்ச்சிக்கு முன்னாள் மாணவர் மன்றம் பக்கபலமாக உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

திருத்தூதுக் கழகங்கள் மற்றும் இயக்கங்கள் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு பல முன்னாள் பங்குத்தந்தையர் சிறப்பாகச் செயல்பட்டு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துள்ளார்கள். பொதுநிலையினர்களும் அர்பண உணர்வுடன் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுள்ளார்கள். தொடர்ந்து பணி சிறக்க வாழ்த்துக்கள்.

64. குருசடி, புனித அந்தோனியார் பள்ளிகளின் முன்னாள் மாணவர் மன்றம், *பொதுக்குழு அறிக்கை*, 2019-20
65. மேலது

# புனித மிக்கேல் கெபி

குருசடிப் பங்கில் புனித தோமையார் அன்பியத்தைச் சார்ந்த மக்கள் தங்களுக்குச் சொந்தமான நிலத்தில் புனித மிக்கேல் கெபியைக் கட்டினர். அதனை கோட்டாறு மறைமாவட்ட ஆயர் மேதகு. பீட்டர் ரெமிஜியுஸ் 01.01.2010 அன்று பங்குத்தந்தை அருள்பணி. W. ஜார்ஜ் வின்சென்ட் முன்னிலையில் புனிதப்படுத்தினார். ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் ஒன்றாம் தேதி மாலையில் சிறப்புத் திருப்பலி நடைபெறுகிறது. புனித தோமையார் அன்பியத்தின் கூட்டமும் இந்த கெபியின் முன்பு வைத்து நடைபெறுகிறது.



## திரு. D. பிரான்சிஸ் முடுதோம் எழுதிய 1906ஆம் ஆண்டு நடைபெற்ற தென்திருவிதாங்கூர் உரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ சங்க கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள்

Proceedings of a meeting of the South Travancore Roman Catholic Christian Association held at Kuruzady on 12th Nov 06 at 3 P.M. under the presidency of Very Rev. Fr. Elias Carmelo O.C.M. A. Vicar Provincial Kottar.

There were 37 Members present.

That an application be sent with a forwarding letter requesting the Dewan Peishcar Southern Division to plead the Government to allow the Association to depute a member to the ensuing session of the Sri Mulam Popular Assembly

Proposed by T. Gnanamany

Seconded by Ty. Joseph.

Carried unanimously

Fr. Elias Carmelo Vicar Provincial

President

Proceedings of a meeting of the South Travancore Roman Catholic Christian Association held at Kuruzady on 14th Dec 1946 at 8 A.M. under the presidency of J. P. Devasagayam Vice President of the Association.

There were 28 members present

**திரு. D. பிரான்சிஸ் முடுதோம் எழுதிய 1906ஆம் ஆண்டு நடைபெற்ற தென்திருவிதாங்கூர் உரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ சங்க கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பின் தமிழாக்கம்**

மாகாணத் தலைவர் பதிலாள், கோட்டாறு, அருள்பணி. எலியாஸ் கர்மேலோ தலைமையில் 06 நவம்பர் 12-ம் தேதி பிற்பகல் 3 மணிக்கு குருசடியில் நடைபெற்ற தென் திருவிதாங்கூர் உரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவ சங்கக் கூட்டத்தின் நடவடிக்கை அறிக்கை.

37 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நடைபெறவிருக்கும் ஸ்ரீமூலம் பாப்புலர் சட்டமன்றத்தின் அடுத்த கூட்டத்திற்குச் சங்கம் ஒரு உறுப்பினரை அனுப்புவதற்கு அனுமதிக்குமாறு அரசாங்கத்தை கேட்க ஒரு விண்ணப்பத்தை பரிந்துரைக் கடிதத்துடன் தெற்கு கோட்டத்தின் திவான் பேஷ்காருக்கு அனுப்ப வேண்டும்.

முன் மொழிந்தவர் - Y. ஞானமணி

வழி மொழிந்தவர் - Y. ஜோசப்

ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அருள்பணி. எலியாஸ் கர்மேலோ
மாகாணத் தலைவர் பதிலாள்
தலைவர்

சங்கத்தின் துணைத் தலைவர் T. P. தேவசகாயம் அவர்கள் தலைமையில் 1906 டிசம்பர் 14 ஆம் தேதி முற்பகல் 8 மணிக்கு குருசடியில் நடைபெற்ற தென் திருவிதாங்கூர் உரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவ சங்கக் கூட்டத்தின் நடவடிக்கை அறிக்கை.

28 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# 9 ஆலய நூற்றாண்டு விழா

குருசடியில் தற்போது இரட்டைக் கோபுரங்களுடன் கம்பீரமாக இருக்கும் புனித அந்தோனியார் ஆலயம் 06.01.1911 அன்று புனிதப்படுத்தப்பட்டது. அதன் நூற்றாண்டு 2011 ஆம் ஆண்டு நிறைவடைந்தது. 100 ஆண்டுகளுக்கு முன்பு 21 ஆண்டுகளாய்க் கட்டிய இவ்வாலயத்தின் கூரை தகர ஷீட்டுகளால் வேயப்பட்டிருந்தது. தகர ஷீட்டுகள் வழியாக மேற்கூரையிலிருந்து மழைநீர் ஒழுக ஆரம்பித்தது. சுவர்களில் ஆங்காங்கே பழுதுகள் ஏற்பட்டன. ஆலயத்தில் உள்புறம் தரைக்குச் சாதாரண தரை ஓடுகள் பயன்படுத்தப் பட்டிருந்தன. அவைகளும் மோசமான நிலையில் இருந்தன. 1973ஆம் ஆண்டு மாற்றி யமைக்கப்பட்ட ஆலயப் பீடமும் இந்தப் பிரம்மாண்டமான ஆலயத்திற்குப் போதுமானதாக இல்லை என்றும் மக்கள் உணர்ந்தனர். எனவே ஆலயத்தைச் சீரமைக்க வேண்டுமென்ற உணர்வு பங்கு மக்கள் மத்தியில் ஏற்பட்டது.

12.01.2007 அன்று நமது ஆலயத்தின் 8 ஆம் திருவிழா நடைபெற்றது. பிறந்த ஊரை மறவாமல் பிற ஊர்களில் வாழும் குருசடி இறைமக்கள் அன்று காலை 10.00 மணிக்கு குருசடியில் கூடிட அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அழைப்புப் பெற்றவர்கள் ஒன்று சேர்ந்தனர். வெளியூர் வாழ் குருசடி இறைமக்கள் சங்கமாக இணைந்தனர். ஆலயத்தைச் சீரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதென முடிவெடுத்தனர். திரு. S. மைக்கேல் ஆன்றனி, திரு. S. மனோகரன், திரு. S. சேவியர், ஆகியோர் அதிகளவில் நிதியுதவி செய்வதாக வாக்களிக்கவே, சங்கத்தின் தீர்மானம் அன்றைய பங்குத்தந்தை அருள்பணி. பெஞ்சமின் லடிஸ்லாசுக்குத் தெரிவிக்கப்பட்டது. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் ஒப்புதலோடு புனித அந்தோனியார் ஆலயச் சீரமைப்புக் குழுவும் உருவானது. இருபது உறுப்பினர்களைக் கொண்ட அதன் முதற்கூட்டம் 01.05.2007 அன்று நடைபெற்றது. குழுவின் தலைவராக பங்கு மேய்ப்புப்பணிப் பேரவைத் துணைத் தலைவர் திரு. M. ரெஸ்கின் பீட்டரும், துணைத் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளராக வெளியூர் வாழ் குருசடி இறைமக்கள் சங்கத்தின் தலைவர் திரு. K. ஜாண் போஸ்கோ, செயலாளர் திரு. S. A. ரெத்னதாஸ், பொருளாளர் திரு. S. மனோகரன் ஆகியோர்களும் முறையே தேர்ந்தெடுக்கப்பட்டனர். துணைச் செயலாளராகப் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் செயலாளர் திரு. G. ஜேசுரெத்தினம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அருள்பணி. பெஞ்சமின் லடிஸ்லாஸ் முன்னிலையில் ஐந்து கூட்டங்கள் நடைபெற்றன. கட்டிடவியல் வல்லுநர்கள் மூவர் வரவழைக்கப்பட்டு ஆலயத்தின் நிலைஉறுதித் தன்மையும், செங்கல், சாந்து ஆகியவற்றின் உறுதியும் ஆய்வு செய்யப்பட்டன. கட்டிடம் குறைந்த பட்சம் இன்னும் 50 ஆண்டு காலம்வரை எவ்வித குறைபாடும் இன்றி நீடித்து நிற்கும் என்றும் தகுந்த சீரமைப்புப் பணிகளைச் செய்தால் மேலும் பல நூறு ஆண்டுகள் அது உறுதியாக இருக்கும் எனவும் அவர்கள் அறிக்கை வழங்கினர். தொடர்ந்து செய்ய வேண்டிய பணிகள் யாவும் கலந்தாலோசிக்கப் பட்டுப் பட்டியலிடப்பட்டன.

2008ஆம் ஆண்டு புதிய பங்குத்தந்தையாக அருள்பணி. W. ஜார்ஜ் வின்சென்ட் பொறுப்பேற்ற பின் 2009ஆம் ஆண்டு புதியப் பங்கு மேய்ப்புப்

பணிப் பேரவையும் பொறுப்பேற்கவே, ஆலயச் சீரமைப்புக் குழுவின் தலைவராக பங்குத்தந்தையும். துணைத் தலைவராகப் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் துணைத் தலைவர் திரு. D. அமலராஜாவும், செயலாளராக முந்தைய செயலாளர் திரு. S. A. ரெத்னதாசும், துணைச் செயலாளராகப் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை செயலாளரான திருமதி Y. ஆல்பின் ராணியும், பொருளாளராக முந்தைய பொருளாளர் திரு. S. மனோகரன் அவர்களும் பொறுப்பேற்க, ஆர்வமுள்ள புதிய உறுப்பினர்களுடன் சீரமைப்புப் குழு புதிய வடிவம் பெற்றது. ஆலய சீரமைப்புக் குழுவின் முதல் கூட்டம் 08.03.2009 அன்று நடைபெற்றது. தொடர்ந்து மாதத்துக்கு ஒருமுறை ஜூலை 2010 வரை 12 கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஆகஸ்ட் 2010 முதல் இரண்டு வாரத்திற்கு ஒருமுறை கூட்டம் நடத்தப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மொத்தம் 25 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. கூட்டங்கள் யாவும் அமைதியாகவும் ஆக்கப்பூர்வமாகவும் நடைபெற்றன.

**திட்டங்கள்**

- ❖ ஆலயத்தின் மேற்கூரையை மாற்றி புதிய தரம் வாய்ந்த உலோகக் கலவையிலானத் தகடுகளைப் பொருத்துவதோடு அதற்குக் கீழ் அலங்காரக் கூரை அமைத்தல், புதிதாக ஆலயத்தின்முன் 60 அடி நீளமும் 32 அடி அகலமும் உள் அளவு கொண்ட அழகிய முன்மண்டபம் அமைத்தல்.
- ❖ கோபுரங்களையும் அனைத்து சுவர்களையும் உள்ளும், புறமும் கொத்திப் பூசி வண்ணமடித்தல்.
- ❖ பீடத்தை முற்றிலும் மாற்றி புதிய எழிலோடு தேக்குமரப் பீடம் அமைத்தல்.
- ❖ புதிதாகக் கதவு, ஜன்னல்கள் அமைத்தல்.
- ❖ ஆலயத் தரைக்கு மார்பிள், உட்சுவர்களுக்குக் கீழிருந்து பத்தடி உயரம் வரை கண்ணாடி ஓடுகள் பதித்தல்.
- ❖ ஒலி, ஒளி சாதனங்கள், மின்விசிறி ஆகியவற்றை முற்றிலும் மாற்றி புதிதாக அமைத்தல்.
- ❖ நேர்நிலையிடத்தை மாற்றி மேடைக்குப் பக்கத்தில் தெற்கு நோக்கி புதிய நிலையிடம் கட்டுதல்.
- ❖ ஊரில் கிழக்கு நுழைவாயிலில் நூற்றாண்டு நினைவுவளைவு அமைத்தல்.
- ❖ ஆலய மதில்களை மாற்றி. எல்கைகளை அகலப்படுத்தி புதிய மதில் சுவர்களும், வாயிற் கதவுகளும் அமைத்தல்.

மேற்குறிப்பிட்ட முக்கியப் பணிகளுடன் பயனுள்ள பணிகள் பல செய்திடத் திட்டம் தீட்டப்பட்டு அவற்றுக்கான கால அளவு, நிதியாதாரம் போன்றவையும் கலந்தாலோசிக்கப் பட்டன. மறைமாவட்ட ஆயரின் அனுமதியும் பெறப்பட்டது.

**நிதி**

அனைத்துப் பணிகளின் மொத்த மதிப்பீடு ரூபாய் 65,00,000/- என முதலில் நிர்ணயிக்கப் பட்டிருந்தது. பணிகளை நன்கொடையாகச் செய்து தருவோர், நன்கொடைப் பணம் வழங்குவோர், நன்கொடையாகப் பொருட்களை வழங்குவோர் ஆகியோரின் விபரங்கள் சேகரிக்கப்பட்டன. இதற்கு அன்பியங்கள் பெரிதும் உதவின. பெரும்பாலான முக்கியப் பணிகளை நன்கொடையாளர்களே செய்து தருவதாக வாக்களித்ததால், குடும்பத்துக்கு ரூபாய் 1000 மட்டுமே வரி வசூலித்தால் போதுமென பங்கு மேய்ப்புப்பணிப் பேரவைக்குப் பரிந்துரைக்கப்பட்டது. நன்கொடையாளர்களின் பேராதரவால் பணிகள் முடிந்தபின் அவற்றின் மொத்த மதிப்பு ரூபாய் 2 கோடிக்கும் அதிகமாகி விட்டது. மிகவும் தாராளமாகவும், வேலைப்பாடுகள் நிறைந்ததாகவும் அதிகத் தரத்துடன் வேலைகள் அனைத்தும் நன்கொடையாளர்களால் செய்து கொடுக்கப்பட்டதே இதற்கு காரணமாகும்.

**பணிகள்**

12.04.2009 அன்று உயிர்ப்புப் பெருவிழா நள்ளிரவு திருப்பலி முடிந்ததும் முன்மண்டபம் கட்டும் பணி பங்குத்தந்தை அருள்பணி. W. ஜார்ஜ் வின்சென்ட் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டது. ஜனவரி 2010இல் ஆலயத் திருவிழாவிற்குமுன் மண்டப உட்பணிகள் ஓரளவு நிறைவுப் பெற்றன. 2010

ஆம் ஆண்டு திருவிழா முடிந்ததும் ஆலய மேற்கூரைகளைக் கழற்றும் முதற்பணி ஆரம்பமானது. எனவே வழிபாட்டு நிகழ்ச்சிகள் முன்மண்டபத்திலேயே நடத்தப்பட்டன. தொடர்ந்து அனைத்துப் பணிகளும் மிகவும் சிறந்த முறையில் நடைபெற்றன. பெருமழைப் பெய்தபோதும், பருவநிலை மாறிய போதும் சீரமைப்புப் பணிகள் எவ்விதத் தொய்வும் இன்றித் தொடர்ந்து நடைபெற்று 31.12.2010 அன்று முடிவு பெற்றன. இறையாசீர் நம்மோடு இருந்ததே இதற்குக் காரணமாகும்.[1]

**நன்கொடையாளர்களால் செய்து தரப்பட்ட பணிகள்**

1. திரு. S. சேவியர் த/பெ. S. சைமன் ஆலயத்தின் பழைய பீடத்தை முற்றிலும் மாற்றி, பரப்பளவைச் சற்று அதிகமாக்கி, புதிதாக வடிவமைத்து மிகவும் அழகாகக் கட்டியெழுப்பி, ஏறத்தாழ 1000 கன அடி அளவுள்ள தேக்கு மரத் தூண்களாலும் பலகைகளாலும் செய்து, தரைக்கு கிரானைட் கல் பதித்தும், திருவுருவங்களையும் (பாடுபட்ட திருவுருவமும், அந்தோனியார் திருவுருவமும் தவிர) புதிதாகச் செய்து தந்தும் பீடத்துக்குப் பின்புறம் உள்ள திருப்பொருட்கள் அறையையும் அழகுற அமைத்துக் கொடுத்துள்ளார். இவற்றின் மதிப்பு ஏறக்குறைய ரூபாய் 42 இலட்சம்.


திரு. S. சேவியர்

2. ஆலயத்தின் முன்மண்டபம், அதிலுள்ள மின் வேலைகள், மின் விளக்குகள், விசிறிகள், ஓவியங்கள் திருவுருவங்கள் அனைத்தையும் திரு. S. மனோகரன், த/பெ. J. சிலுவைராயன் சுமார் ரூபாய் 36 இலட்சம் செலவில் உறுதியாகவும், தரம் வாய்ந்ததாகவும், கலை நயத்துடனும் செய்து கொடுத்துள்ளார்.


திரு. S. மனோகரன்

3. ஆலயத்தின் இரண்டு கோபுரங்களையும் முகப்புச் சுவரையும் சீரமைத்துக் கொடுத்தவர் திரு. S. மைக்கிள் ஆன்றனி த/பெ. சிலுவைராயன். உட்புறமும் வெளிப்புறமும் கொத்திப் பூசப்பட்டுள்ளன. இரண்டு கோபுரங்களிலும் மேலே ஏணிகள் வைக்கப்பட்டுள்ளன. பளிச்சிடும் தரமிக்க அழகிய வெள்ளைநிற வண்ணக் கலவை அடிக்கப்பட்டு ஆலயம் அழகுடன் காட்சியளிக்கின்றது. இப்பணிகளின் மொத்த மதிப்பு ரூபாய் 19 இலட்சம்.


திரு. S. மைக்கிள் ஆன்றனி

4. ஆலயத் தரைக்கும், படிகளுக்கும், அழகுற மார்பிள் பதித்து மெருகூட்டியவர் திரு. A.V.M. லயன் ராஜன் த/பெ. A. விக்டர் முத்தையா. இதன் மொத்த மதிப்பு ரூபாய் 6 இலட்சம்.


திரு. A.V.M. லயன் ராஜன்

5. ஆலயத்தில் ஏற்கனவே இருந்த வண்ணக் கண்ணாடிகள் பதிக்கப்பட்டிருந்த ஜன்னல்களை மாற்றிவிட்டு நல்ல காற்றோட்டம் பெற பத்தடிக்கு கீழ்மட்டத்தில் புதிய ஜன்னல்களை தேக்கு மரத்தில் அழகாகச் செய்து தந்தவர் திரு. K. மரிய ஜாண் ஜோசப் த/பெ. M. காவல் அந்தோணிமுத்து. இவற்றின் மொத்த மதிப்பு ரூபாய் 4 இலட்சம்.


திரு. K. மரிய ஜாண் ஜோசப்

6. ஜிப்சம் போர்டினால் அலங்காரக் கூரை வேய்ந்து அதைக் கட்டம் கட்டமாக அணி செய்து பார்டர் வேலை செய்து, அதில் விலை உயர்ந்த CFL மின் விளக்குகளைப் பொருத்தியதோடு, மேற்கூரைக்கும்


திரு. M. கிரகோரி ஆசிரியர்

1. *குருசடி நீரோடை* மாத இதழ், ஜனவரி - பிப்ரவரி 2011. ப. 41- 43.

அலங்காரக் கூரைக்கும் இடையே முகப்புச் சுவரிலிருந்து பின்சுவர் வரை நடந்து செல்ல தண்டவாளம் போல் இரும்பு ஏணியையும் கைப்பிடியோடு செய்து கொடுத்து ஆலயத்துக்கான குழல் விளக்குகளையும் வழங்கியவர் திரு. M. கிரகோரி ஆசிரியர் குடும்பத்தினர். இதன் மதிப்பு ஏறக்குறைய ரூபாய் 6 இலட்சம்.

7. ஆலயத்தின் பழைய தகரக் கூரையை மாற்றி, துருப் பிடிக்காத உலோகக் கலவையிலான புதிய தகடுகளை வாங்கி வேய்ந்து கொடுத்துள்ளதோடு ஒலிக் கருவிகளையும், வழங்கியவர் திரு. M. ஜேம்ஸ் த/பெ மரிய ரெத்தினம். இதன் மதிப்பு ரூபாய் 5 இலட்சம் 50 ஆயிரம்.


திரு. M. ஜேம்ஸ்

8. ஆலயத்தின் ஆறு கதவுகளையும் தேக்கு மரத்தில் உறுதியாக செய்து கொடுத்ததோடு அதன் கல்நிலைகளையும் தேக்கு மரப் பலகைகளால் அழகுறப் பொதிந்து கொடுத்தவர்கள் திரு.தேவசகாயம் மகன்களான திருவாளர்கள் D. புஷ்பராஜ், D. கென்னடி ஆகும். இதன் மதிப்பு ரூபாய் 4 இலட்சம்.


திரு. D. புஷ்ப ராஜ்


திரு. D. கென்னடி

9. ஆலய உட்சுவர்களில் தரைமடத்திற்குமேல் பத்தடி உயரம்வரை தரமிக்க அழகிய கண்ணாடி ஓடுகளை வாங்கி ஒட்டிக் கொடுத்தவர் திருமதி A. திரேசம்மாள் சிங்கராயன் குடும்பத்தினர். இதன் மதிப்பு ரூபாய் 2 இலட்சம்.


திருமதி A. திரேசம்மாள் சிங்கராயன்

10. தேர் நிலைநிறுத்தும் மண்டபத்தைப் பிரமாண்டமாகவும் உறுதியாகவும் எழிலுடன் கட்டியெழுப்பியவர்கள் திரு. லாரன்ஸ் மகன் திரு. L. C. ராஜா, திரு. லேனார்டு மகன் திரு. L. பிரைட் லியோ, திரு. ஏசுதாசன் மகன் திரு. Y. ஆல்வின் ஆகியோர். இதன் மதிப்பு ஏறக்குறைய ரூபாய் 9 இலட்சம்.


திரு. L.C. ராஜா


திரு. L. பிரைட் லியோ


திரு. Y. ஆல்வின்

11. மின்கம்பிக் கருவிகளை வாங்கி வயரிங் பண்ணிக் கொடுத்ததும், ஒரு ஒலிக் கலவைக் கருவியையும் (Sound Mixer) வாங்கித் தந்தவர் திரு. Y. மோகன்தாஸ் குடும்பத்தினர். இவற்றின் மதிப்பு ரூபாய் 2 இலட்சம் 50 ஆயிரம்.


திரு. Y. மோகன்தாஸ்

12. ஆலயத்தைச் சுற்றியுள்ள மதிற்சுவர் வாயில்களுக்கு 5 கம்பிக் கதவுகள் (gate) செய்யவும், சிலுவைப் பாதையின் 14 உருவப்படங்கள் வாங்கவும் ரூபாய் 2 இலட்சம் வழங்கியவர் திருமதி ஞான செல்வம் க/பெ J. சிலுவைராயன்.


திருமதி ஞானசெல்வம்

13. ஆலய முன்மதிலை அழகுற அமைத்து அதில் S.S. பைப்புகளால் அணி செய்து கொடுத்தவர் திருமதி ராஜம்மாள் றைமண்ட் குடும்பத்தினர். இப்பணியின் உத்தேச மதிப்பு ரூபாய் 2 இலட்சம்.


திருமதி ராஜம்மாள் றைமண்ட்

14. ஆலய உட்சுவர்களில் மட்டியடித்து வெள்ளை வண்ணக் கலவையால் அழகுப்படுத்திக் கொடுத்தவர் திரு. S. அருள்ஜோதி, த/பெ. S. சைமன். இதன் மதிப்பு ரூபாய் 2 இலட்சம்.


திரு. S. அருள்ஜோதி

15. ஆலய வெளிப்புறச் சுவர்களை அழகுப் படுத்துவதற்காக primer emulsion ஆகியவற்றை வாங்கிக் கொடுத்தவர்கள் திரு. A. செல்வம் அவர்களின் மகன்களான திருவாளர்கள் S. காமராஜ் மற்றும் S. பால்துரை. இதன் மதிப்பு ரூபாய் 2 இலட்சம்.


திரு. S. காமராஜ்


திரு. S. பால்துரை

16. ஆலய வளாகத்தின் முன்நுழைவாயிலில் நூற்றாண்டு வளைவினை தரமிக்க எழிலுடன் அமைத்துக் கொடுத்தவர்கள் திரு. S. தேவசகாயம் மகன் திரு. D. மரிய ஜாண் கென்னடி மற்றும் திரு. M. குருசந்தோணி மகன் திரு. K. அருள் பவுலின் ஆகியோர். அதன் மதிப்பு ரூபாய் 3 இலட்சம்.


திரு. D. மரிய ஜாண் கென்னடி



திரு. K. அருள் பவுலின்

17. ஆலயத்துக்குத் தேவையான இருபது தொடர் இருக்கைகள் தேக்கு மரத்தில், திறமிக்க வேலைப்பாடுகளுடன் தரம் வாய்ந்ததாக சுமார் ரூபாய் 6 இலட்சம் 50 ஆயிரம் செலவில் செய்து கொடுத்தவர்கள் திரு. சிலுவைமுத்து மகன் திரு.S.பீட்டர்பால், திரு. சூசைமரியான் மகன் திரு.S.ராஜா, திரு. S. தனிஸ்லாஸ் உபதேசியார் மகன் திரு. S. பவுல் இஸ்பிரிஸ்து, திரு.லூயிஸ் ஜாண் மகன் திரு. L. ஆன்றோ ஜோ ஆகியோர்.


திரு. S. பீட்டர் பால்


திரு. S. ராஜா


திரு. S. பவுல் இஸ்பிரிஸ்து


திரு. L. ஆன்றோ ஜோ

18. கொடிமரத்தை சுமார் ரூபாய் 50 ஆயிரம் செலவில் சீர்ப்படுத்தியவர் திரு. ஜேசு அடிமை மகன் திரு. J. சிறில் செல்வராஜ்.


திரு. J. சிறில் செல்வராஜ்

19. ஆலயத்துக்கு ரூபாய் 2 இலட்சம் 75 ஆயிரம் செலவில் 15 KVA திறன் உள்ள மின்இயக்கி வாங்கித் தந்தவர் சகோ. S. பீட்டர் பால்ராஜ்.


சகோ. S. பீட்டர் பால்ராஜ்


திரு. S. லெனின்

20. ஆலயத்துக்கு ரூபாய் 1 இலட்சம் செலவில் அதிகப் பலமிக்க மின் விசிறிகளை வாங்கிக் கொடுத்தவர் திரு. சிங்கராயன் மகன் திரு. S. லெனின்.

21. வடக்குக்கோபுரத்தில் இருந்த பழைய மணியை மாற்றி புதிதாகச் செய்ய ரூபாய் 1,21,000 வழங்கியவர் திரு. கிறிஸ்டோபர் மகன் திரு. C. ஜஸ்டின் கிருபாகரன்.


திரு. C. ஜஸ்டின் கிருபாகரன்


22. தெற்குக்கோபுரத்தில் இருந்த இரண்டு மணிகளை மாற்றிப் புதிதாகச் செய்ய ரூபாய் 1 இலட்சம் வழங்கியவர் S. செல்வராஜ் த/பெ. சைமன்.


திரு. S. செல்வராஜ்

**நன்கொடை மற்றும் வரிப்பணத்தால் செய்யப்பட்ட பணிகள்**

1. ஆலயச் சுவர்களின் உள்ளும் புறமும் கொத்திப் பூசப்பட்டுள்ளன; உடைந்துபோன பின்சுவர் கான்கிரீட்டால் உறுதிப்படுத்தப் பட்டுக் கட்டப்பட்டுள்ளது.
2. சுவரில் உள்ள வளைவுகளும் பிள்ளைக் கோபுரங்களும் புதிதாக செய்து உறுதியாகப் பொருத்தப்பட்டுள்ளன.
3. ஆலயத்தின் மேல்நிலை ஜன்னல்கள் மாற்றப்பட்டு வேங்கை மரத்தால் புதிய ஜன்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன.
4. 17 டன் சவுக்குக் கம்புகள் வாங்கப்பட்டு மேல்மட்டப் பணிகளுக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன.
5. கூரையைத் தாங்கும் உத்திரங்கள் பழுது பார்க்கப்பட்டு வண்ணமடிக்கப்பட்டுள்ளன.
6. ஆலயத்தின் வடபுறமும், தென்புறமும் நின்ற மதில் கவர்கள் இடிக்கப்பட்டு விரிவுப் படுத்திக் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் புதிய படிகளும் அமைக்கப்பட்டுள்ளன.
7. புதிதாகக் கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன.
8. ஆலயத்தைச் சுற்றிலும் உள்ள தரை சமன்படுத்தப்பட்டு, கடல் மணலால் அழகுப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் பணிகளுக்குக் குருசடிப் பங்கு மக்கள் வழங்கிய வரியும் தாராள நன்கொடையும் பயன்படுத்தப்பட்டன. இப்பணிகளுக்கு திரு. S. மைக்கேல் ஆன்றனி ரூபாய் 6 இலட்சம் 75 ஆயிரமும் திரு. M. மரியந்தோனி ஆசிரியர் ரூபாய் 5 இலட்சமும் வெளியூர் வாழ் குருசடி இறைமக்கள் சங்கம் ரூபாய் 1 இலட்சத்தி 20 ஆயிரமும்,


திரு. M. மரியந்தோனி ஆசிரியர்

திரு. S.A. ரெத்னதாஸ் ரூபாய் 1,11,111மும்,


திரு. S.A. ரெத்னதாஸ்

திரு. J. டென்னிஸ் ஆன்றனி குடும்பத்தினர் ரூபாய் 1,05,000மும்,


திரு. J. டென்னிஸ் ஆன்றனி

திரு. S.ஜெய பாண்டியன் குடும்பத்தினர் ரூபாய் 1,00,000மும்,


திரு. S. ஜெய பாண்டியன்

திரு. S. பிலிப் ரூபாய் 1,00,000மும்,


திரு. S. பிலிப்

திரு. J. அருள் ஜாண் கென்னடி ரூபாய் 1,00,000மும்,


திரு. J. அருள் ஜாண் கென்னடி

திருமதி ராஜம்மாள் மரிய சவரிமுத்து ரூபாய் 1,00,000மும் வழங்கியது குறிப்பிடத்தக்கது.


திருமதி. ராஜம்மாள் மரிய சவரிமுத்து

இப்பணிகள் அனைத்தையும் திரு. F. அருளப்பன் தினமும் உடனிருந்து பொறுப்புடன் கவனித்துக் கொண்டார். அனைத்து வளைவு வேலைகள், அலங்கார கோபுரங்கள் ஆகியவற்றை வடிவமைத்து உடனிருந்து உழைத்த திரு. M. F. ஜோசப் அவர்களின் பணியும் மகத்தானது.[2]

நமது ஊரைச் சார்ந்தவர்களிடமிருந்து மட்டுமே நன்கொடைப் பெறப்பட்டது என்பது தனிச் சிறப்பாகும். அயலூராரும் வியந்து பாராட்டும் வண்ணம் பணிகள் செய்யப்பட்டன. நமது ஊரைச் சார்ந்த தொழிலாளர்கள் தொடர்ந்துப் பணிபுரிந்தது நமக்கும் பெருமையே. முன்மண்டபம் தவிர மற்றப் பணிகளை ஓராண்டிற்குள் முடித்திருப்பது நமது சாதனையே. ஊர் மக்களின் ஒத்துழைப்பும் ஆர்வமும் உதவியும் மிகவும் பாராட்டும் வண்ணம் அமைந்திருந்தன. பங்குத்தந்தை அருள்பணி. W. ஜார்ஜ் வின்செண்ட் அவர்களின் பணிகள் பாராட்டத்தக்கவை. சீரமைப்புக் குழுப் பொருளாளர் திரு. S. மனோகரன் நெல்லையிலிருந்து அடிக்கடி இங்கு வந்து எல்லாப் பணிகளையும் திட்டமிட்டபடி செயல்படுத்திய விதம் மிகவும் அருமையானது, பாராட்டுக்குரியது. சீரமைப்புக் குழு செயலாளர் திரு. S.A. ரெத்னதாஸ், பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை நிர்வாகிகளின் செயல்பாடுகளும் பாராட்டுக்குரியன.

ஆலய சீரமைப்பை முன்னிட்டு ஆலய மணிகள் மூன்றும் புதிதாகச் செய்யப்பட்டன. தெற்குப்புறக் கோபுரத்தில் 2 மணிகளும் வடக்குப்புறக் கோபுரத்தில் ஒரு மணியுமாகத் தொங்க விடப்பட்டன. தெற்குப்புற கோபுரத்திலுள்ள மணிகள் கோபுரப் படிக்கட்டுகள் வழியாகத் தூக்கிக் கொண்டு போய்த் தொங்கவிடப்பட்டன. வடக்குப்புற கோபுரத்திலுள்ள மணி லிப்ட்(lift) மூலம் மேலே கொண்டு செல்லப்பட்டு, கோபுர மணிக் கூண்டின் மேற்குப்புற ஜன்னலை இடித்து அகலப்படுத்தி கோபுரத்திற்குள் கொண்டு செல்லப்பட்டது. மணிகளைக் கோபுரத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு முன்பாக மணிகள் அப்போதைய பங்குத்தந்தை அருள்பணி. W. ஜார்ஜ் வின்செண்ட் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டன.

நமது ஆலய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒரு ஏழைக் குடும்பத்திற்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி பள்ளத்துத் தெருவில் சர்வே எண்.J-6/24-ல் சுமார் 600 சதுர அடி பரப்பளவு உள்ள கான்கிரீட் போட்ட வீடு கட்டப்பட்டு, ஆலயம் புனிதப்படுத்தப் பட்ட அன்று வீட்டுச் சாவி திரு. P. சகாயதாஸ் என்பவரிடம் கொடுக்கப்பட்டது.



சீரமைக்கப்பட்ட ஆலயத்தை ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ் திறந்து வைக்கிறார்



ஆலய பீடம் புனிதப்படுத்தப்படுதல்

2. *நூற்றாண்டு விழா சிறப்பு மலர்*, குருசடி, ப. 66-70

புதுப்பிக்கப்பட்ட ஆலயம் 01.01.2011 அன்று கோட்டாறு மறைமாவட்ட ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ் அவர்களால் புனிதப்படுத்தப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டு நூற்றாண்டு விழாவாகக் கொண்டாடப்பட்டது. ரூபாய் ஒரு இலட்சமும் அதற்கு அதிகமாக நன்கொடை கொடுத்தவர்கள் ஆயரால் கௌரவிக்கப்பட்டனர். பின்னர் பங்கு மக்கள் மற்றும் விருந்தினர்களுக்கு இரவு உணவு வழங்கப்பட்டது.

குருசடிப் புனித அந்தோனியார் ஆலயப் பங்கு வரலாற்றின் முக்கியமான நிகழ்வுகளில் நூற்றாண்டு விழாவும் ஒன்று. நமது மறைமாவட்டத்திலுள்ள பிற ஆலயங்களுக்கு நமது பணி முன்உதாரணமாக விளங்குகிறது.



நமது ஆலய பீடத்தில் எழில்மிகு தோற்றம்

# அருள்பணி. பயஸின் கல்விப் பணி

அருள்பணி. பயஸ் நமது பங்கில் 1916 முதல் 1929 வரை பங்குத்தந்தையாகப் பணிபுரிந்தார். ஐரோப்பிய அருள்பணியாளரான இவரை நமது பங்கு மக்கள் மிகவும் நேசித்தனர். அவரும் நமது பங்கு மக்களை மிகவும் நேசித்தார். அருள்பணி. பயஸ் பங்குத்தந்தையாக இருந்தபோதுதான் குருசடியில் புனித அந்தோனியார் தொடக்கப் பள்ளியும், இராமன்புதூர் பெண்கள் தொடக்கப் பள்ளியும் தொடங்கப்பட்டன. கார்மல் மேல்நிலைப் பள்ளி தொடங்கப்பட்டதிலும் அருள்பணி. பயஸின் பணி முக்கியமானது. 14 ஆண்டுகள் பங்குத் தந்தையாக அவர் பணியாற்றி மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். அவர் மந்தங்காட்டைச் சார்ந்த இந்து நாடார்களிடம் அதிக அன்பு செலுத்தியவர். இதன்மூலம் சமூக நல்லிணக்கத்தை அக்காலத்திலே பேணினார். மந்தங்காட்டைச் சார்ந்த நிலக்கிழார் திரு. நாராயணபெருமாள் நாடாரிடம் (F. ஸ்டான்லி முடுதத்தின் மாமனார்) அதிக தொடர்பு வைத்திருந்தார். மந்தங்காடு நாராயணபெருமாள் நாடார் தன்னுடைய விளை நிலங்களிலிருந்து கிடைத்த பொருட்களை முதலில் அருள்பணி. பயஸ் அவர்களிடம் கொடுத்து ஆசி பெற்றுக் கொள்வது வழக்கம். நமது பங்கு மக்களும், மந்தங்காட்டைச் சார்ந்த இந்து நாடார்களும் இவரை ஒரு புனிதராகப் பார்த்தனர்.

# 10 முடிவுரை

கன்னியாகுமரி மாவட்டத்தில் கத்தோலிக்கக் கிறிஸ்தவம் புனித தோமையார் காலத்திலேயே வேரூன்றியது என நாம் கருத இடமிருக்கிறது. புனித தோமையார் மலபாரில் வந்து ஏழு ஆலயங்களைக் கட்டியதாகவும் அவற்றுள் ஒன்று திருவிதாங்கோட்டில் உள்ள ஆலயம் என்றும் கூறப்படுகிறது. புனித சவேரியார் கி.பி. 1542ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் தேதி கிழக்கத்திய நாடுகளுக்கான திருத்தந்தையின் பிரதிநிதியாக கோவாவிற்கு வந்தார். பின்னர் அவர் கடல் வழியாக மணப்பாட்டிற்கு வந்து அங்கு தங்கிப் பணியாற்றினார். சவேரியார் மீனவர்களில் ஒரு பகுதியினரான பரவர் குல மக்கள் பலரை மதம் மாறச் செய்தார். பின்னர் முக்குவர்களையும் மனம் திரும்பச் செய்யும் பணியில் ஈடுபட்டார்.

தென்திருவிதாங்கூர் மக்களில் பெரும்பான்மையோர் நாடார் குலத்தவர். 1697ஆம் ஆண்டிலிருந்து நாடார்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாற ஆரம்பித்தனர். நாடார் குல மக்கள் வடக்கன்குளம், மருங்கூர் மற்றும் நேமத்திற்குச் சென்று திருமுழுக்கு பெற்று, கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர். 14.01.1752இல் ஆரல்வாய்மொழி காற்றாடி மலையில் தேவசகாயம் மறைசாட்சியாகக் கொலை செய்யப்பட்டது நாடார்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனால் நாடார்கள் பலர் மனம் திரும்பி கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக் கொண்டனர். இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நான்கு மறை மாவட்டங்கள் இருக்கின்றன. இவற்றில் கோட்டாறு மற்றும் குழித்துறை லத்தீன் கத்தோலிக்க மறைமாவட்டங்களாகும். தக்கலை சீரோ மலபார் மறைமாவட்டமாகும்; மார்த்தாண்டம் மலங்கரை மறைமாவட்டமாகும். நமது மாவட்டத்தில் உள்ள அழகப்பபுரம் பங்கு தூத்துக்குடி மறைமாவட்டத்திலும், திருவனந்தபுரம் உயர் மறைமாவட்டத்தின்கீழ் 8 கடலோர பங்குகளும் உள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் ஆறு இலட்சம் ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். தற்போது கோட்டாறு மறைமாவட்டத்தில் 95 பங்குகளும் 35 கிளைப்பங்குகளும் உள்ளன. புனித சவேரியாரும் அவரைத் தொடர்ந்து நமது பகுதியில் மறைபரப்புப் பணிகளைச் செய்த ஐரோப்பிய அருள்பணியாளர்கள்தாம் மக்கள் பலர் மதம் மாறக் காரணமாக இருந்தனர் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

01.09.1886 அன்று கொல்லம் மீண்டும் தனி மறைமாவட்டமாக உயர்த்தப்பட்டு அதன் முதல் ஆயராக மேதகு. பெர்டினாண்ட் ஒஸி நியமிக்கப்பட்டார். கொல்லம் மறைமாவட்டத்தில் இரண்டாவது ஆயராக சுவிட்சர்லாந்து நாட்டைச் சார்ந்த இறை ஊழியர் அலோசியஸ் மரிய பென்சிகர் 14.09.1905 அன்று பொறுப்பேற்றார். ஆயர் அலோசியஸ் மரிய பென்சிகர் முயற்சியால் 26.05.1930 அன்று கோட்டாறு மறைமாவட்டம் உதயமானது. அதன் முதல் ஆயராக அருள்பணி லாறன்ஸ் பெரைரா நியமிக்கப்பட்டார். கோட்டாறு மறைமாவட்டத்தில் இதுவரை 5 ஆயர்கள் பணியாற்றி உள்ளனர். தற்போது 6வது ஆயராக மேதகு. நசரேன் சூசை 29.06.2017முதல் பணியாற்றி வருகிறார். கோட்டாறு மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்கு அனைத்து ஆயர்களும் மிகவும் உழைத்துள்ளனர்.

குருசடி மற்றும் மந்தங்காடு ஆகிய இரண்டு ஊர்களும் அடங்கிய பகுதிகள் தொடக்கக் காலத்தில் பஞ்சவங்காடு என்று அழைக்கப்பட்டன. பஞ்சவங்காடு சுமார் 90

ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். பிராமணருக்குச் சொந்தமான இந்த பஞ்சவங்காட்டை மந்தங்காட்டைச் சார்ந்த இந்து நாடார்களின் மூதாதையர்களான நைனார் நாடாரும் அவரது தம்பி ரெங்கநாதன் நாடாரும் விலைக்கு வாங்கினர். இதனால் பஞ்சவங்காடு நாடார்களின் கைக்கு வந்தது. பஞ்சவங்காடு நாடார்களின் கைக்கு வந்ததால்தான் இங்கு கிறிஸ்தவம் துளிர்விட முடிந்தது.

பஞ்சவங்காடு இந்து நாடார்களின் கைக்கு வந்த பிறகு, மீன் வியாபாரம் செய்ய கடற்கரை ஊர்களிலிருந்து வந்த பெண்கள் மாலை வேளையில் வீடு திரும்ப முடியாதபோது இரவு நேரங்களில் மங்கம்மாள் சாலையோரம் இருந்த சாலை மண்டபத்தில் தங்கினர். அப்போது இரவு நேரத்தில் தங்கள் அச்சத்தைப் போக்க மங்கம்மாள் சாலையோரம் ஆலமரத்தடியில் சிலுவையை நட்டு விளக்குக் கொளுத்தி ஜெபித்தனர். இதுவே பஞ்சவங்காட்டில் கிறிஸ்தவத்தின் தொடக்கம். அதன் பிறகு இராமன்புதூர், தளவாய்புரம், புன்னக்காட்டு விளை, மறவன்குடியிருப்பு மற்றும் வடக்குக்கோணம் ஆகிய ஊர்களிலிருந்து கிறிஸ்தவ மக்கள் வந்து அந்தச் சிலுவையை வழிபட்டனர். இவ்வாறு பல மக்கள் அந்தச் சிலுவையை வழிபட்டதால் கோட்டாறு பங்குத் தந்தையாக இருந்த அருள்பணி. அலெக்ஸ் என்பவரால் 1790ஆம் ஆண்டு ஓலைக் கூரையிலான ஆலயம் சிலுவை இருந்த இடத்தில் கட்டப்பட்டது. குறுகிய காலத்திற்குள்ளே அங்கு ஒரு சிறிய ஆலயம் செங்கல் மற்றும் சுண்ணாம்புக் கலவையால் கட்டப்பட்டது. அந்த சிறிய ஆலயம்தான் தற்போது கொடிமரத்தின் தென்கிழக்கில் அமைந்துள்ள சிறிய ஆலயம். பின்னர் சிறிது காலம் கழித்து 1825ஆம் ஆண்டு நடப்பில் இன்னொரு ஆலயம் கட்டப்பட்டது. அந்த ஆலயமானது தற்போதைய பெரிய ஆலயத்தின் கிழக்குப் பக்கமும் கொடி மரத்தின் மேற்குப் பக்கமுமாகக் கட்டப்பட்டது.

ஆலயம் மற்றும் அதன் சொத்துக்களை நிர்வாகம் செய்யும் பொருட்டு 'சபையார்' என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. நமது ஆலயத்தின் கீழ் இருந்த 25 ஊர்களிலிருந்தும் ஒருவர் 'சபையார்' என்ற அமைப்புக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் ஒருவர் ஆயரால் முடுதோமாக நியமிக்கப்பட்டார். நாளடைவில் நிர்வாக வசதிக்காக 25 ஊர்களும் வடபகுதி என்றும் தென்பகுதி என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. அதன் பிறகு வட பகுதியிலிருந்து ஒருவரும் தென்பகுதியிலிருந்து ஒருவரும் முடுதோமாக நியமிக்கப்பட்டனர். 1889ஆம் ஆண்டு புதிய ஆலயம் கட்ட அடிக்கல் நாட்டப் பட்டது. 21 ஆண்டுகள் கட்டிடப் பணிகள் நடைபெற்று 06.01.1911 அன்று அப்போதைய கொல்லம் மறைமாவட்ட ஆயர் அலோசியஸ் மரிய பென்சிகரால் ஆலயம் புனிதப்படுத்தப்பட்டது. 1936ஆம் ஆண்டு நமது பங்கு தனிப்பங்காக உயர்த்தப்பட்டு 1940ஆம் ஆண்டு பங்குத்தந்தையாக அருள்பணி. ரிச்சர்டு ரொசாரியோ நியமிக்கப்பட்டார். பங்குத்தந்தைத் தலைமையில் முடுதோம்களும் சபையாரும் சிறப்பாக நிர்வாகம் செய்து பங்கை வழிநடத்தினர். அக்காலக் கட்டத்திலேயே நமது ஆலய முடுதோம்கள் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் திறமைப் பெற்றிருந்ததால் ஐரோப்பிய அருள்பணியாளர்களுடன் இணைந்து சிறப்பாகப் பணியாற்ற முடிந்துள்ளது.

நமது ஆலயத்துடன் இணைந்திருந்த 26 ஊர்கள் தற்போது 17 தனிப் பங்குகளாக உள்ளன. எட்டாமடை, மாத்தால், சீதப்பால், திட்டுவிளை, தேவசகாயம் மவுண்ட், இராஜாவூர், இராமனாதிச்சன்புதூர் (தெற்கு), அமராதிவிளை, கார்மல்நகர், மேலராமன்புதூர், தளவாய்புரம், புன்னைநகர், வடக்குக்கோணம், அனந்தன்நகர், வேதநகர், மறவன்குடியிருப்பு மற்றும் வட்டக்கரை ஆகிய 17 பங்குகளுக்கு தாய் பங்காக உள்ளது பெருமைக்குரிய செய்தியாகும்.

பெரும்பாலான கிளைப்பங்குகள் பிரிந்து சென்ற பிறகு 1985ஆம் ஆண்டு "சபையார்" என்ற அமைப்பு ஆயரால் கலைக்கப்பட்டு பங்கு மேய்ப்புப்பணி பேரவை ஏற்படுத்தப்பட்டது. தற்போது ஆலயமும் அதன் சொத்துக்களும் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையால் நிர்வாகம் செய்யப்படுகின்றன. 1985ஆம் ஆண்டு பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை ஏற்படுத்தப்பட்டபோது நமது பங்கிற்கு 5 கிளைப்பங்குகள் இருந்தன. ஆனால் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையில் கிளைப் பங்குகளுக்கு பிரதிநிதித்துவம்

கொடுக்கப்படவில்லை. எனவே குருசடி ஊர் மக்களால் பங்கு நிர்வாகம் நடத்தப்படும் சூழ்நிலை ஏற்பட்டது. பங்கு மேய்ப்புப்பணி பேரவை ஏற்படுத்தப்பட்ட பிறகும் குருசடிப் பங்கு வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

நமது பங்கின் பொருளாதார வளர்ச்சியைப் பொருத்தமட்டில் தொடக்க காலத்தில் பொருளாதார பற்றாக்குறை இருந்துள்ளது. தற்போது குருசடிப் பங்கு பொருளாதாரத்தில் ஓரளவு தன்னிறைவுப் பெற்றுள்ளது. இதற்கு முக்கிய காரணம் பல நபர்கள் தங்கள் சொத்துக்களை ஆலயத்திற்குத் தானமாகக் கொடுத்ததேயாகும். தானம் கொடுத்தபோது பல நிபந்தனைகள் சொல்லப்பட்டிருந்தாலும், தற்போதைய சூழ்நிலையில் அனைத்து நிபந்தனைகளையும் நிறைவேற்ற இயலாது. தானம் கொடுத்தவர் இறந்த பிறகு வருடந்தோறும் தான் இறந்த தினத்தன்று நினைவுத் திருப்பலி நிறைவேற்றப்பட வேண்டுமென்று பெரும்பாலான தானப் பத்திரத்தில் நிபந்தனை சொல்லப்பட்டுள்ளது. தற்போது நமது ஆலய 10ஆம் திருவிழாவில் காலை 9.00 மணிக்கு நடைபெறும் திருப்பலி ஆலயத்திற்குச் சொத்துக்கள் தானமாக வழங்கியவர்களுக்காக நிறைவேற்றப்படுவது எல்லோராலும் போற்றப்படுவதாக இருக்கிறது. ஆனால் சொத்து தானம் கொடுத்தவர்களின் பெயர்கள் சொல்லி திருப்பலி நிறைவேற்றப் படுவது இல்லை. இந்நிலை மாறி சொத்து தானம் கொடுத்தவர்களின் பெயர்களைச் சொல்லி திருப்பலி நிறைவேற்றப்பட்டால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

தற்போது நமது ஆலயத்திற்கு சொந்தமாக 29 ஏக்கர் 16.5 செண்ட் நிலம் உள்ளது. அதன் விவரம் வருமாறு.

| வ. எண். | சொத்துவிவரம் | ஏக்கர் | சென்று |
|---|---|---|---|
| 1. | ஆலய வளாகம் | 7 | 35.5 |
| 2. | மாதாதோப்பு | 1 | 19 |
| 3. | தொல்லவிளை நிலம் | 1 | 12 |
| 4. | கார்த்திகைவடலி வயல் | 0 | 13 |
| 5. | கோணம் கிணற்றடி தோப்பு | 0 | 22.5 |
| 6. | கோணம் பெரிய தோப்பு | 0 | 65 |
| 7. | கோணம் ஆற்றுக்கு மேல்பக்கம் தோப்பு | 0 | 05 |
| 8. | கூத்தன்காடு நிலம் | 0 | 46 |
| 9. | இராமனாதிச்சன்புதூர் நிலம் | 6 | 60 |
| 10. | ஆரல்வாய்மொழி நிலம் | 10 | 26 |
| 11. | மறுகால்தலைவிளை தோப்பு (புனித அந்தோனியார் தோப்பு) | 1 | 12.5 |
| | மொத்தம் | 29 | 16.5 |

பெரும்பாலான நிலங்கள் பராமரிப்பின்றிக் கிடக்கின்றன. எல்லா நிலங்களையும் நன்றாகப் பராமரித்தால் ஆலயத்திற்கு நல்ல வருவாய்க் கிடைக்க வாய்ப்புள்ளது.

நமது பங்கின் ஆன்மீக வளர்ச்சிக்கு திருத்தூதுக் கழகங்கள் (பக்த சபைகள்), இயக்கங்கள் பெரிதும் உழைத்துள்ளன. மறைமாவட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட திருத்தூது கழகங்கள் மற்றும் இயக்கங்களில் பெரும்பாலானவை நமது பங்கில் செயல்படுகின்றன. சில திருத்தூதுக் கழகங்கள் நமது மறைமாவட்டத்தில் முதலில் நமது பங்கில்தான் தொடங்கப்பட்டன என்பது சிறப்பு ஆகும்.

நமது ஆலயத்தின் நூற்றாண்டு விழா 01.01.2011 அன்று கொண்டாடப்பட்டது. நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆலயம் புதுப்பிக்கப்பட்டது. இந்தப் பணிகளுக்கான செலவுகளை பல நல் உள்ளங்கள் நன்கொடையாகச் செய்து கொடுத்தார்கள். சுமார் இரண்டு கோடி மதிப்பில் ஆலயம் புதுப்பிக்கப்பட்டது. குருசடிப் பங்கு மக்களிடம் மட்டுமே நன்கொடைகள் வசூலிக்கப்பட்டது ஒரு சிறப்பு ஆகும்.

நூற்றாண்டு விழாவிற்குப் பிறகும் குருசடிப் பங்கு அனைத்துத் துறைகளிலும் நல்ல வளர்ச்சியைப் பெற்றுள்ளது. தற்போது குருசடிப் பங்கில் 744 குடும்பங்கள் உள்ளன. வழிபாடுகளைப் பொருத்தமட்டில் ஞாயிறு காலை 6.30 மணிக்கு திருப்பலியும், மாலை 5.00 மணிக்கு திருப்பலியும் நடைபெறுகிறது. செவ்வாய்கிழமை மாலை 5.30 மணிக்கு ஜெபமாலையும் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து புனித அந்தோனியார் நவநாள் மன்றாட்டுகளும் நடைபெறுகின்றன. மற்ற நாட்களில் காலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறுகிறது. எல்லா நிலைகளிலும் நமது பங்கு ஆக்கமுடன் செயல்பட்டு மறைமாவட்ட வழிகாட்டுதலுக்கேற்ப வீறுநடை போடுகிறது. தொடர்ந்து குருசடிப் பங்கு வளர்ச்சிப்பாதையில் பயணிக்கட்டும். வாழ்த்துக்கள்.

“குருசடிப் பங்கின் வரலாறு” என்னும் எனது நூலுக்கு ‘முற்றுப் புள்ளி’ வைக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறேன். எல்லாவற்றிற்கும் ஒரு காலம் உண்டு. தொடங்க ஒரு காலம் உண்டு. முடிக்கவும் ஒரு காலம் உண்டு.

தமிழகத்திற்கு தன்னால் தினையளவு நன்மை கிடைத்தால், தான் சாகும் நாள் திருநாளாகும் என்று பாடியுள்ளார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்  
தனையீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்  
தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்  
செத்தொழியும் நாள் எனக்கு திருநாளாகும்.

**குருசடிப் பங்கின் வரலாறு** என்ற இந்நூலின் வாயிலாகக் குருசடிப் பங்கிற்கு என்னால் தினையளவு நன்மை செய்ய முடிந்துள்ளது என நம்புகிறேன். அதை எண்ணி மனநிறைவுடன் இறைவனுக்கு நன்றி கூறி இந்நூலை நிறைவு செய்கிறேன்.

# துணைநின்ற ஏடுகள்


**(A) நூல்கள்**

1. *திருஅவைச் சட்டம்,* திருச்சிராப்பள்ளி : தூய பவுல் இறையியல் கல்லூரி, தேடல் வெளியீடு, 2005 (தமிழாக்கம்).
2. டேவிட் அப்பாத்துரை ச., *மறவன்குடியிருப்பு, வேர்களும் விழுதுகளும்,* பாளையங்கோட்டை: முத்துலட்சுமி பிரிண்டர்ஸ், 2005.
3. Gopalakrishnan *M, Kanyakumari District Gazetteer,* Madras: Madras Printers Industrial Co-operative Society, 1995.
4. ஜெயபாண்டியன் சூ., *பதுவை அந்தோனியாரின் அற்புத வரலாறு,* நாகர்கோவில்: நாஞ்சில் பதிப்பகம், 2007.
5. Kavitha R., (Register No: 5110028, Department of History, South Travancore Hindu College), *Mudutham D. Francis-A Study,* Nagercoil 629002, 2006
6. *Kottar News Letter,* December 2020.
7. குருசடி *நீரோடை மாத இதழ்,* ஜனவரி - பிப்ரவரி 2011
8. Marieli Benziger, *Arch Bishop Benziger Carmelite in India,* Attadona, California, 1977.
9. மனோன்மணி ஸாரதி செல்வராஜ், *பஞ்சவங்காடு வரலாறு,* நாகர்கோவில்: நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், 2002.
10. Narchison J.R. & Others, *Called to Serve : A Profile of the Diocese of Kottar,* Nagercoil : Assisi Press, 1983.
11. *Travancore Land Revenue Manuel,* Vol. III, Code of Instruction
12. அருள்திரு. வெனான்சியுஸ் எஸ்., *திருத்தலம் கோட்டாறு,* பெங்களூர்: தூய மரியன்னை அச்சகம்.
13. Villavarayan J.M., *The Diocese of Kottar: A Review of its Growth,* 1956.

**B. விழா மலர்கள்**

1. கோட்டாறு மறைமாவட்டம், *முத்திபேறு பெற்ற மறைசாட்சி தேவசகாயம் பிள்ளை வரலாற்று மலர்,* 02-12-2012.
2. எட்டாமடை பங்கு, *அன்பிய ஒருங்கிணைப்பு ஆண்டு மலர்,* 2014.
3. *Golden Jubilee Souvenir, 1965 - 2015, Holy Cross College (Autonomous),* Nagercoil: Print Point, 2015.
4. *கோட்டாறு மறைமாவட்டப் பொன்விழா மலர், 1930 - 1980.*
5. *கோட்டாறு மறைமாவட்டப் பவளவிழா மலர், 1930 - 2005.*
6. குருசடி புனித அந்தோனியார் தேவாலயம், *ஜுபிலி 2000 சிறப்பு மலர்.*
7. குருசடி, கோடி அற்புதர் தூய அந்தோணியார் ஆலயம், *நூற்றாண்டு விழா சிறப்பு மலர், 1911 - 2011,* (unpublished)
8. குருசடி, *மறைக்கல்வி மன்ற 75-வது ஆண்டு பவளவிழா மலர், 1943 - 2018.*
9. மறவன்குடியிருப்பு, *மாதா மஹால் திருமண்டப திறப்பு விழா சிறப்பு மலர்,* நாள் 03-01-1997.
10. மறவன்குடியிருப்பு, *புனித மரியன்னை தொடக்கப் பள்ளி நூற்றாண்டு விழா மலர், 2008.*
11. மாத்தால், *தூய பிரான்சிஸ் அசிசி ஆலயப் பவளவிழா மலர்,* 1936 - 2011.
12. மேலஆசாரிபள்ளம், புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம், *நூற்றாண்டு விழா சிறப்பு மலர்.*
13. மேலராமன்புதூர், *பரிசுத்த திருக்குடும்ப புதிய ஆலய அர்ச்சிப்பு & தனிப்பங்கு உதய வெள்ளிவிழா மலர்.*
14. வடக்குகோணம், தூய அன்னாள் ஆலயம், *50-வது ஆண்டு பொன்விழா மலர்,* 1964 - 2014.
15. புன்னைநகர், நாகர்கோவில், புனித லூர்து அன்னை ஆலயம், *பொன்விழா சிறப்பு மலர், 2005.*
16. புன்னைநகர், நாகர்கோவில்-4, புனித லூர்தன்னை ஆலயம், *தனிப்பங்கு தொடக்க விழா மலர்,* 23-11-2008.
17. புன்னை நகர், R.C. தொடக்கப் பள்ளி, *150ஆவது ஆண்டு விழா மலர்,* 2015.
18. தளவாய்புரம், *புனித ஜார்ஜியார் புதிய ஆலய அர்ச்சிப்பு விழா சிறப்பு மலர்*

19. வட்டக்கரை, *புனித சூசையப்பர் ஆலயம் பவளவிழா மலர், 1942-2017.*

20. வேதநகர், தூய மிக்கேல் அதிதூதர் ஆலய *அர்ச்சிப்பு விழா மலர், 20-05-2007.*

21. வேதநகர், புனித மிக்கேல் முதன்மை வானதூதர் ஆலயம், *மறைக்கல்வி மன்றம் பொன்விழா மலர், 1969 - 2019.*

**(C) ஆவணங்கள்**

1. கொல்லம் மறைமாவட்டம் தன்னுடைய வலைதளத்தில் வெளியிட்டுள்ள *கொல்லம் மறைமாவட்டத்தின் வரலாறு.*
2. *History of the Diocese of Kottar* ( Published in the Diocese of Kottar - website)
3. *History of Diocese of Trichy* (published in the Diocese of Trichy - website)
4. *History of Diocese of Tuticorin* (published in the Diocese of Tuticorin - website).
5. மந்தங்காடு குருசடி அர்ச்சிஸ்ட் அந்தோனியார் கோயிலுக்கு தானம் கொடுத்தவர்களுக்கு ஷை கோவிலிருந்து எழுதிக் கொடுத்த மொழி மாறா எதிர் கச்சீட்டு.
6. குருசடி ஆலய கட்டுமானப்பணி சம்பந்தமாக முடுதோம் திரு. V. தொம்மையப்பன் தலைமையில் 19 ஊர் மக்கள் இணைந்து கொல்லம் ஆயர் பெர்டினாண்ட் ஒஸிக்கு கொடுத்த மனு, தேதி 21-04-1901.
7. திரு. D. பிரான்சிஸ் முடுதோமாக நியமிக்கப் பட்ட ஆணை, தேதி 01-06-1904.
8. திரு. G. மரியந்தோனி முடுதோமாக நியமிக்கப்பட்ட ஆணை, தேதி 01-06-1904.
9. பங்குச் சந்திப்புக்காக குருசடிக்கு வருகை தந்த கொல்லம் மறைமாவட்ட ஆயருக்கு குருசடி ஆலய இறைமக்கள் சார்பாக திரு. D. பிரான்சிஸ் முடுதோம் வாசித்து அளித்த வரவேற்புரை, தேதி 11-05-1906.
10. திருவிதாங்கூர் சமஸ்தானம் வெளியிட்ட நாகர்கோவில் வருவாய் கிராமத்தின் நிலவரித்திட்ட பதிவேடு, தேதி 01-04-1907.
11. குருசடி புனித அந்தோனியார் ஆலயத்தை புனிதப்படுத்த வருகை தந்த கொல்லம் மறைமாவட்ட ஆயருக்கு குருசடி ஆலய இறைமக்கள் சார்பாக திரு. D. பிரான்சிஸ் முடுதோம் வாசித்து அளித்த வரவேற்புரை, தேதி 05-01-1911.
12. குருசடி ஆலயம் புனிதப்படுத்தல் விழா நிகழ்ச்சி நிரல், தேதி 05-01-1911, 06-01-1911.
13. குருசடி ஆலய முடுதோம் திரு. D. பிரான்சிஸ் கொல்லம் மறைமாவட்ட ஆயருக்கு எழுதிய கடிதம், தேதி 08-03-1911.
14. குருசடிப் பங்குத்தந்தை அருள்பணி. பெர்னார்டின் கொல்லம் மறைமாவட்ட ஆயருக்கு எழுதிய கடிதம், தேதி 08-04-1911.
15. இராமனாதிச்சன்புதூர் நிலத்தைத் தானமாகக் கொடுத்த திரு. தைனேசி மரியான் இறந்தவுடன் குருசடிப் பங்குத்தந்தை அருள்பணி. பெர்னார்டின் கொல்லம் மறைமாவட்ட ஆயருக்கு எழுதிய கடிதம். தேதி (?)
16. இராமன்புதூரில் கார்மல் ஆங்கிலப் பள்ளியை தொடங்கியதற்குக் கொல்லம் மறைமாவட்ட ஆயருக்கு நன்றி தெரிவித்து முடுதோம்கள் திரு. D. பிரான்சிஸ், திரு. G. மரியந்தோனி ஆகியோர் தலைமையில் குருசடி சபையார் எழுதிய கடிதம், தேதி 15-06-1922.
17. குருசடி ஆலயச் சபையார் கொல்லம் மறைமாவட்ட ஆயருக்கு கொடுத்த மனு தேதி 27-12-1925
18. குருசடியைத் தனிப்பங்காக உயர்த்த வேண்டுமென்று புன்னைக்காட்டுவிளையைச் சார்ந்த குருசடி சபையார் கொல்லம் மறைமாவட்ட ஆயருக்கு கொடுத்த மனு, தேதி 08-03-1926
19. குருசடி ஊரில் இருந்த தொடக்கப் பள்ளியில் 3ஆம் வகுப்பை தொடங்க குருசடி பங்குத்தந்தைக்குக் கொல்லம் மறைமாவட்ட முதன்மை அருள்பணியாளர் பெர்னார்டின் கொடுத்த அனுமதிக் கடிதம், தேதி 12-03-1930.
20. முடுதோம்கள் திரு. D. பிரான்சிஸ் மற்றும் G. மரியந்தோனி ஆகியோர் 1904முதல் 1934 வரையுள்ள 30 ஆண்டுகளில் செய்த சில நன்மைகளை இறைமக்களுக்கு எடுத்துக்கூற குருசடி சபையாரில் சிலர் வெளியிட்ட துண்டு பிரசுரம், தேதி 25-01-1935.
21. குருசடிப் பங்குத்தந்தை அருள்பணி. அம்புரோஸ் பெர்னாண்டஸ் மற்றும் முடுதோம்கள் திரு.D. பிரான்சிஸ் மற்றும் G. மரியந்தோனி ஆகியோர் 1938ஆம் ஆண்டு தயாரித்த குருசடி ஆலயத்தின் சொத்துக்கள் மற்றும் கடன்கள் பட்டியல்.

22. மந்தங்காடு திரு.N. பெரியநாடார் மற்றும் மூவர் தானத்தை மீண்டும் பெற கோட்டாறு மறைமாவட்ட ஆயருக்கு கொடுக்க தயாரித்த மனு, தேதி 4-06-1115 M.E.

23. முடுதோம்கள் திரு. F. ஸ்டான்லி மற்றும் திரு. M. மரிய லூயிஸ் தலைமையில் குருசடி சபையார் மறை மாவட்ட ஆயருக்கு கொடுத்த மனு தேதி 27-06-1954.

24. இராமன்புதூர், கீழராமன்புதூர், இடச்சிவிளை, வடலிவிளை, தளவாய்புரம், புன்னக்காட்டு விளை ஆகிய ஊர்களைக் குருசடிப் பங்கிலிருந்து நிதி வாரியாகப் பிரித்து மறைமாவட்ட ஆயர் பிறப்பித்த உத்தரவு, தேதி 07-09-1955.

25. 1930ஆம் ஆண்டு கோட்டாறு மறைமாவட்டம் உதயமானபோது கோட்டாறு பங்கின்கீழ் குருசடி இருந்தது என்பதைக் காட்டும் ஆவணம் (கோட்டாறு மறைமாவட்ட முதன்மை அருள்பணியாளர் J.M. வில்லவராயன் எழுதிய *கோட்டாறு மறைமாவட்டம்* என்ற புத்தகத்தில் 56வது பக்கம்.)

26. 1936ஆம் ஆண்டு குருசடி தனிப்பங்காகியது என்பதை காட்டும் ஆவணம் (கோட்டாறு மறைமாவட்ட முதன்மை அருட்பணியாளர் J.M. வில்லவராயன் எழுதிய *கோட்டாறு மறைமாவட்டம்* என்ற புத்தகத்தின் 55வது பக்கம்.)

27. குருசடி ஆலயத்திற்குச் சொந்தமான சில நிலங்களை 1965ஆம் ஆண்டு அரசாங்கம் கையகப்படுத்தியதற்குப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு.

28. குருசடி ஆலயத்திற்குச் சொந்தமான சில நிலங்களை 1965ஆம் ஆண்டு அரசாங்கம் கையகப்படுத்தியதாற்காகக் கிடைத்த இழப்பீட்டுத் தொகையை பெற்றுக்கொள்ள குருசடிப் பங்குத்தந்தை அருள்பணி. R. அந்தோனிமுத்துவிற்கு மறைமாவட்ட ஆயர் அனுமதி அளித்த கடிதம், தேதி 08-03-1965.

29. கோட்டாறு மறைமாவட்ட ஆயர் ஆரோக்கிய சாமிக்கு வரவேற்பும், குருசடிப் பங்குத்தந்தையும் வேலூரின் புதிய ஆயருமான R. அந்தோனி முத்துவிற்கு வழியனுப்பு வாழ்த்து இதழ், தேதி 11-04-1971.

30. குருசடி ஊர் நிர்வாகத்தினர் அதன் தலைவர் திரு. M. மரியந்தோனி ஆசிரியர் தலைமையில் கிளைப்பங்குகளுக்குச் சொத்துக்கள் பகிர்ந்து கொடுப்பது சம்பந்தமாக மறைமாவட்ட ஆயருக்கு சமர்ப்பித்த பரிந்துரைகள், தேதி 20-12-1984.

31. குருசடிப் பங்கின் கிளைப்பங்குகளுக்குச் சொத்துக்கள் பகிர்ந்து கொடுப்பது சம்பந்தமாக கோட்டாறு மறைமாவட்ட ஆயர் ஆரோக்கியசாமி பிறப்பித்த உத்தரவு, தேதி 07-11-1986.

32. வடகாட்டுவிளையை அரசாங்கம் கையகப் படுத்தியதற்காக நாகர்கோவில் கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு, தேதி 19-08-1993.

33. குருசடிப் பங்கிற்கும் அதன் கிளைப் பங்குகளுக்கிடையே சொத்துக்கள் பகிர்ந்து கொள்வது சம்பந்தமான பிரச்சினைகள் முடிந்துவிட்டதாக கோட்டாறு மறைமாவட்ட ஆயர் லியோன் தர்மராஜ் பிறப்பித்த உத்தரவு, தேதி 11-09-1998.

34. *குடும்பக் கையேடு*, புனித அந்தோனியார் ஆலயம், குருசடி 2021 - 2030.

**(D) சொத்து சம்பந்தமான ஆவணங்கள்**

1. *ஆவண எண். 3360/1059 M.E.* சார்பதிவாளர் அலுவலகம், அகஸ்தீஸ்வரம் (தற்போது இடலாக்குடி சார்பதிவாளர் அலுவலகம்.)

2. *ஆவண எண். 1624/1091 M.E.* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

3. *ஆவண எண். 1760.1091 M.E.* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

4. *ஆவண எண். 1525/1106 M.E.* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

5. *ஆவண எண். 2348/1110 M.E.* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

6. *ஆவண எண். 631/1113 M.E.* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

7. *ஆவண எண். 4756/1124 M.E.* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

8. *ஆவண எண். 2462/1962,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

9. *ஆவண எண். 3453/1962,* சார் பதிவாளர் அலுவலகம், விளவங்கோடு (தற்போது மாவட்ட பதிவாளர் அலுவலகம், மார்த்தாண்டம்)

10. *ஆவண எண். 2758/1964,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

11. *ஆவண எண். 1784/1967,* சார் பதிவாளர் அலுவலகம், தோவாளை.

12. *ஆவண எண். 1397/1970,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

13. *ஆவண எண். 2874/1976,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

14. *ஆவண எண். 1695/1977,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

15. ஆவண எண். 292/1984, மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

16. *ஆவண எண். 2687/1986,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

17. அருட்பணி. பெஞ்சமின் மற்றும் நான்கு நபர்கள் செய்துகொண்ட கிரய உடன்படிக்கை, தேதி 16-07-1987.

18. *ஆவண எண். 941/1990,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

19. *ஆவண எண். 785/1990,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்

20. *ஆவண எண். 797/1990,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்.

21. *ஆவண எண். 2521/1991,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

22. *ஆவண எண். 2522/1991,* மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

23. ஆவண எண். 2523/1991, மாவட்ட பதிவாளர் அலுவலகம், நாகர்கோவில்.

24. *ஆவண எண். 115/1992,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்.

25. *ஆவண எண். 2212/1992,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்

26. *ஆவண எண். 1249/1994,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்

27. அருட்பணி. S. வின்செண்ட் மற்றும் நான்கு நபர்கள் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கை, தேதி 26-04-1997.

28. *ஆவண எண். 2811/2004,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்.

29. *ஆவண எண். 3556/2006,* சார் பதிவாளர் அலுவலகம், இடலாக்குடி

30. *ஆவண எண். 1385/2009,* சார் பதிவாளர் அலவலகம், தோவாளை

31. *ஆவண எண். 1770/2010,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்

32. *ஆவண எண். 540/2015,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்.

33. *ஆவண எண். 3166/2018,* சார் பதிவாளர் அலுவலகம், இராஜாக்கமங்கலம்.


**(E) கூட்ட நடவடிக்கை அறிக்கைப் புத்தகம்**


1. தென் திருவிதாங்கூர் உரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ சங்கத்தின் கூட்ட நடவடிக்கை அறிக்கை, தேதி 12-11-1906.

2. தென் திருவிதாங்கூர் உரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ சங்கத்தின் கூட்ட நடவடிக்கை அறிக்கை, தேதி 14-12-1906.

3. தென் திருவிதாங்கூர் கத்தோலிக்க சங்கத்தின் கூட்ட நடவடிக்கை அறிக்கை, தேதி 14-12-1913.

4. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை, குருசடி, தீர்மானம் தேதி 03-01-2016.

5. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை, குருசடி, தீர்மானம், தேதி 10-12-2017.

6. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை, குருசடி, தீர்மானம், தேதி 01-09-2019.

7. குருசடி புனித அந்தோனியார் பள்ளிகளின் முன்னாள் மாணவர் மற்றும் பொதுக்குழு அறிக்கை, 2019-20.


**(F) நீதிமன்றத் தீர்ப்புகள்**


1. Kattalai Michael Pillai and others Vs Rt. Rev. J.M. Barthe S.J. Bishop of Trichinopoly and others -1916. *Indian Law Reporter 39,* Madras 1056 dated 25-01-1916.

2. Judgment in O.S. No. 313/1974 of Principal District Munsif, Nagercoil, dated 19-12-1975.

3. Judgment in A.S. No. 474/1976 of the Subordinate Judge, Nagercoil, dated 26-07-1977.

4. Judgment in Second Appeal No: 2398/1977 of Honourable High Court of Madras, dated 02-01-1978.

5. Order in LAOP No: 1/1996 of Principal Subordinate Court, Nagercoil, dated 10-03-2008.

6. Judgment in O.S. No: 211/1999 of Principal District Munsif, Nagercoil, dated 14-12-2000.
7. Judgment in A.S.No. 37/2001 of Additional District Court, Nagercoil, dated 21-10-2002.
8. Jedgment in O.S.No. 408/2006 of Ist Additional District Munsif, Nagercoil, dated 15-12-2009.

**(G) நாள் குறிப்போடு**

1. திரு. D. பிரான்சிஸ் முடுதோத்தின் நாள் குறிப்பேடு, 1904.

**(H) நாளிதழ்**

The *Travancore Times*, dated 24-11-1936.

**(I) கல்வெட்டுகள்**

1. குழித்துறை பழைய பாலம், *கல்வெட்டு,* 1915
2. குருசடி, திருஇருதய அருள்சகோதரிகள் இல்லம், *கல்வெட்டு,* நாள். 30-10-1969.
3. புனித அந்தோனியார் மேல்நிலைப் பள்ளி, குருசடி, *கல்வெட்டு,* நாள் 15-08-1986.
4. புனித அந்தோனியார் நலவாழ்வு மையம், குருசடி, *கல்வெட்டு,* நாள் 17-01-1997.
5. புனித அந்தோனியார் சமுகநலக் கூடம், *கல்வெட்டு,* நாள் 07-04-2002.
6. புனித அந்தோனியார் சமூக நலக்கூடம், *நன்கொடையாளர்கள் பட்டியல் கல்வெட்டு.*
7. புனித அந்தோனியார் கலையரங்கம், குருசடி, *கல்வெட்டு,* நாள் 25-12-2004.
8. புனித அந்தோனியார் தொடக்கப் பள்ளி, குருசடி, *கல்வெட்டு,* நாள் 03-01-2009.
9. பங்கு மேய்ப்புப்பணிப் பேரவை அலுவலகம், குருசடி, *கல்வெட்டு,* நாள் 02-08-2009.
10. குருசடி, புனித அந்தோனியார் ஆலயம் கொடிமரம், *கல்வெட்டு,* நாள் 05-01-2018.

**(J) உத்தரவுகள்**

1. ஆயரின் உத்தரவு No. Gen-9/2012, 14-03-2012.
2. ஆயரின் உத்தரவு No. Ch-115/20, 10-10-2020
3. ஆயரின் உத்தரவு No. Ch-101/21, 30-06-2021.

**(K) பதிவேடுகள்**

1. கோட்டாறு மறைமாவட்டத்தால் பராமரிக்கப்படும் *குருசடிப் பங்கின் பதிவேடு.*
2. *உறுதிபூசுதல் பதிவேடு,* குருசடி.

**(L) அறிக்கை**

ஆயரின் பங்குச் சந்திப்பு அறிக்கை, நாள் 28-08-2016.

**(M) குருசடிப் பங்கு நிர்வாகத்தால் கோட்டாறு மறைமாவட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட திரட்டுக் கணக்குகள்.**

1. 1932ஆம் ஆண்டின் திரட்டுக் கணக்கு
2. 1942ஆம் ஆண்டின் திரட்டுக் கணக்கு
3. 1962ஆம் ஆண்டின் திரட்டுக் கணக்கு
4. 1975ஆம் ஆண்டின் திரட்டுக் கணக்கு
5. 1980ஆம் ஆண்டின் திரட்டுக் கணக்கு
6. 1985ஆம் ஆண்டின் திரட்டுக் கணக்கு
7. 01-04-2005முதல் 31-03-2006வரையுள்ள திரட்டுக் கணக்கு
8. 01-04-2017முதல் 31-03-2018வரையுள்ள திரட்டுக் கணக்கு

# குருசடிப் பங்கின் வரலாறு

## P. லீனஸ் ராஜ்



ஆசிரியர் திரு. P. லீனஸ் ராஜ்

பஞ்சவங்காடு என்ற குருசடி மண்ணில் பிறந்து வளர்ந்து கோட்டாறு மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி பேரவையின் இணைத் துணைத் தலைவராக ஐந்து ஆண்டுகள் சிறப்பாக செயல்பட்டார். மேலும் தற்போது கோட்டாறு மறைமாவட்ட சட்ட ஆலோசகராகவும், கத்தோலிக்க சங்கத் தலைவராகவும் பணியாற்றுகின்றார். கன்னியாகுமரி மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பஞ்சவங்காடு என முந்தைய காலத்தில் அழைக்கப்பட்ட குருசடி பங்கின் வரலாற்றுத் தடங்களை ஓலைக்கூரை வேய்ந்த சிற்றாலயம் இம்மண்ணில் கட்டப்பட்ட 1790 ஆண்டு முதல் ஜூலை 15, 2021 வரை மிகத் துல்லியமாகப் பதிவிட்டிருப்பதால் இப்புத்தகம் வெற்றி பெறுகிறது. இப்புத்தகத்தில் நிரம்பி வழியும் வரலாற்றுக் குறிப்புகளும் தரவுகளும் வாசிக்கும் நமக்கு ஒருபுறம் வியப்பை ஏற்படுத்த, மற்றொருபுறம் ஆசிரியரின் கடின உழைப்பு மலைப்பை ஏற்படுத்துகிறது. பல நுண்ணிய தரவுகளையும் தேவைப்படும் இடங்களில் நுணுக்கமாகக் கையாண்டு, அவற்றுக்கான விபரங்களை அடிக்குறிப்புகளில் ஆசிரியர் தந்திருப்பது தனிச்சிறப்பு. வழக்குரைஞர் லீனஸ் ராஜ் அவர்களின் பெருமுயற்சியாலும் கடின உழைப்பினாலும் உருவாகியுள்ள இவ்வரலாற்றுப் புத்தகம் குருசடி பங்கிற்கு அவர் வழங்குகின்ற அரிய கொடை அல்லது செல்வம் என்றே சொல்வேன்.

- மேதகு ஆயர் முனைவர் நசரேன் சூசை

இந்த நூலின் ஆசிரியர் குருசடிப் பங்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக கடந்து வந்த பாதையை நமக்குத் திரையிட்டுக் காட்டுகிறார். பஞ்சவங்காட்டில் கிறிஸ்தவம் யாரால் தோன்றியதை அவர் சுட்டிக்காட்டுகிறார். இப்பகுதியில் முடுதோம்களும் சபையாரும் ஆற்றியப் பணி அளப்பரியது என்பதை இந்நூலை படிக்கும் அனைவரும் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள். பங்குப் பேரவைக் காலத்தில் பங்குத்தந்தையர்களும் இறைமக்களும் எவ்வாறு இணைந்து பணியாற்றினார்கள் என்பதைத் திறம்பட பட்டியலிடுகிறார். எனக்குத் தெரிந்த அளவு குருசடிப் பங்கிற்கு அனைத்து வரலாற்றுக் குறிப்புக்களையும் தாங்கிவரும் ஒரே நூல் இதுதான்.

- அருள்பணி. முனைவர் L. தார்சியுஸ் ராஜ்

ஏனைய பங்குகளுக்கும் பாதை காட்டக்கூடிய முற்போக்கான குருசடி பங்கின் வரலாற்றை இந்நூலின் வடிவில் நமக்கு வரைந்தளித்துள்ளவர் திரு. P. லீனஸ் ராஜ். அவர் குருசடிப் பங்கின் மண்ணின் மைந்தரும் அதன் முன்னாள் முடுதோம் திரு. D. பிரான்சிஸின் கொள்ளுப் பேரனும் ஆவார். இவர் படைத்தளிப்பது செவிவழிச் செய்திகளும் கற்பனையும் கலந்த புராணம் அல்ல. மாறாக, இது ஆவணங்களின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்ட தரவுகளைத் தொகுத்தளிக்கும் வரலாற்றுக் கருவூலம். இந்த ஆவணங்களைத் தேடிக் கண்டுபிடிக்க இவர் செய்துள்ள பயணங்கள் பல, முயற்சிகள் பெரியன, எதிர்கொண்ட சிக்கல்கள் கடினமானவை, வெற்றிகள் போற்றுதற்கு உரியவை. இவரது இந்த அரியப் படைப்பிற்காக இவரை நான் உளமாரப் பாராட்டுகிறேன். இதற்காகக் குருசடி மக்கள் இவருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளனர்.

- அருள்பணி. முனைவர் தே. அல்போன்சு

சுமார் 250 ஆண்டுகளுக்கு மேலான தொன்மை வாய்ந்த இவ்வாலயத்தின் வரலாற்றைத் தொகுத்து "குருசடிப் பங்கின் வரலாறு" என்ற தலைப்பில் நூலை எழுதி அரசு வழக்கறிஞர் திரு. P. லீனஸ் ராஜ் அவர்கள் வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். சுமார் 10 ஆண்டுகள் மிகவும் சிரமப்பட்டு பல இடங்களுக்கு சென்று ஆவணங்களைத் திரட்டி இந்நூலை எழுதியுள்ளார். அவருடைய விடாமுயற்சியை பெரிதும் பாராட்டுகிறேன். மேலும் குருசடிப் பங்கு மற்றும் அதன் முன்னாள் கிளைப்பங்குகளின் வரலாற்றையும் இந்நூலில் ஆசிரியர் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார்.

- திரு. என். சுரேஷ்ராஜன்

நாஞ்சில் ஆப்செட், நாகர்கோவில். (04652) 233853